# திரு.வி.க.

## தமிழ்க்கொடை- அறிமுகம்

*ஆசிரியர்*

**இரா. இளங்குமரனார்**

தமிழ்மண் பதிப்பகம்

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **திரு.வி.க. தமிழ்க்கொடை –அறிமுகம்** |
| ஆசிரியர் | : | **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2006 |
| தாள் | : | 18.6 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 176 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 90/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | இ. இனியன் |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர்,<br>சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030 |

# பதிப்புரை

*தமிழுக்குத் தென்றலாகவும், தமிழர் எழுச்சியின் திறவு கோலாகவும், தமிழகம் கண்ணாரக் கண்ட காந்தியாகவும், வள்ளலாரின் மீள் பிறப்பாகவும், தன்னலம் கருதாப் பிறர்நலம் பேணும் பெற்றிய ராகவும் தேவைக்கு மேல் தேடிக் குவியா வாழ்வினராகவும், மாந்தப் பண்பின் மாளிகையாகவும், தமிழுலகச் சிற்பியாகவும் தமிழ் வாழ்வு வாழ்ந்து மறைந்தவர்* ***தீந்தமிழ் அந்தணர் திரு.வி.க.*** *ஆவார். இவர் வாழ்வியல் பொதுமையையும், சன்மார்க்கப் பொதுமையையும், பொருளியல் பொதுமையையும், அரசியல் பொதுமையையும், பெண்ணின் பெருமையையும், தமிழியக் கொள்கைகளையும், தொழிலாளர் மேன்மையையும் உள்ளடக்கி 54 நூல்களை வெளியிட்டுள்ளார்.* ***திரு.வி.க. தமிழ்க்கொடை*** *எனும் தலைப்பில் இதனை 24 தொகுதிகளாகத் தமிழ் கூறும் உலகிற்கு ஒரே நேரத்தில் வைரக் குவியலாகத் தந்துள்ளோம்.*

*கழகக் காலச் சான்றோர் வரிசையில் வைத்துப் போற்றத்தக்க வரும், பழந்தமிழ்ச் சொல்லாய்வில் பாவாணர் வழி நிற்கும் பெருந் தமிழ் அறிஞரும், இலக்கண, இலக்கியத்தில் ஆழங்கால் பட்டவரும், தமிழ் மொழியின் தொன்மையையும், தமிழரின் பெருமையையும் ஆய்ந்தறிந்து காட்டும் ஆழ்ந்த புலமையரும், தொல்காப்பியப் பெருஞ் செல்வத்தை உள்வாங்கிக் கொண்ட உரைப்பெரும் புலவரும், வள்ளுவ நெறிக்கு வாழும் காலச் சாட்சியாகத் திகழ்பவரும், அகவாழ்விலும் புறவாழ்விலும் சிறந்தோங்கி வாழ்பவருமான முதுபெரும் புலவர்* ***செந்தமிழ் அந்தணர் இரா.இளங்குமரனார்*** *அவர்கள் ஒவ்வொரு நூலுக்கும் கொடையுரை அளித்துப் பெருமை சேர்த்துள்ளார். அனைத்தையும் தொகுத்துத் தனியொரு நூலாகத் தந்துள்ளோம். இம் மாளிகையுள் நுழையுங்கள். இதன் அழகோவியத்தைக் கண்டு மகிழுங்கள்.*

**கோ. இளவழகன்**
**பதிப்பாளர்**

# திரு.வி.க. தமிழ்க்கொடை – அறிமுகம்

*தமிழன்னை, தன் முன்மை முதன்மை, வியன்மை விரிமை, செம்மை செழுமை முதலியவற்றுக்கு உரிய தகுதியை உலகில் பெற்றிலள் எனினும், அவற்றுக்கு* **ஆக்கமாம் மக்களை** *அவ்வப் போது பெற்றுக் கொண்டுளாள் என்பது மகிழ்வுக்குரியது.*

*1901 இல் வள்ளல்* **பாண்டித்துரையார்,** *பழந்தமிழ்ச் சங்க மிருந்த மாமதுரையில்* **நான்காம் தமிழ்ச்சங்கம்** *நிறுவினார். நிறுவிய போதே வள்ளுவச் சீர்களெனத் தமிழுக்கு ஆக்கமாம் எழுவகைத் துறைகளை அமைத்து வழுவிலாத் தொண்டு சிறக்க ஆற்றினார். ஏடு தொகுத்தல், ஆய்ந்து வெளியிடல் அவற்றுள் இருதுறைகள். சங்கப்பணி கல்லூரியுடன் சிறக்கிறது.*

*1909 இல் பெருந்தகை* **உமாமகேசுவரர், கரந்தையில்** *சங்கம் கண்டு தமிழ்வளர்த்தலில் ஊன்றினார். கல்லூரி, இதழ், நூல் வெளியீடு எனச் சிறந்தன அவர் தொண்டால்; அப்பணி தொடர்கிறது.*

*1921 இல் நெல்லைத்* **திருவரங்கனாரும், தாமரைத்திரு. சுப்பையாவேளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக** *மெனக் கூட்டுப்பங்கு நிறுவனம் தோற்றுவித்து, அரசோ பல்கலைக் கழகங்களோ ஆற்றவும் அரியபல துறைவாரி நூல் வெளியீட்டில் ஊன்றி ஈராயிரத்திற்கு மேலாம் நூல்களை வெளியிட்டனர். அவர்தம் மருகர் தொடர்கிறார்.*

*பதிப்புச் செம்மல்* **பேராசிரியர் மெய்யப்பனார்** *தேர்ந்து தேர்ந்து, தமிழ்வளமாம் நூல்களைத் தம்* **மணிவாசகர் நூலகம்** *வழியாகவும் தம் ஆய்வு அறக்கட்டளை வழியாகவும் மடைதிறந்த வெள்ளமென வெளியிட்டார். அவர் மகனார் தொடர்கிறார்.*

*தமிழ்ப்போராளியாக விளங்கி, தமிழ்த் தோன்றலாக வளர்ந்து* **தமிழ்மண் பதிப்பகம்** *கண்ட* **திருவாளர் கோ. இளவழகனார்,** *எடுத்த எடுப்பிலேயே எவரும் எடுத்துப் பதிப்பிக்கத் துணியாத* **கருணாமிர்தசாகரத்தை** *எடுத்துப் பதிப்பித்துச் சூடுபட்டாலும், சுடர் கொண்டு கிளர்ந்தார்.*

*பலவேறு காலத்தில் பலவேறு வகையில் வெளிப்பட்ட* **பாவாணர்** *நூல்கள் - கட்டுரைகள் அனைத்தையும், ஒரு மொத்த மாக வெளியிட்டார். ஐம்பான் ஆண்டுக் கொடையை ஒருமுகமாகத் தந்த கொடை அதுவென்றால், நூற்றைம்பது ஆண்டுகளாகத்*

*தமிழகந் தந்த* ***தொல்காப்பியக் கொடைகளை****யெல்லாம் ஒரு மொத்தமாகத் தமிழுலகம் கொள்ள வழங்கினார் இளவழனளார்.*

*ஈழம் தந்த அயராத் தொண்டர்* ***ந.சி.கந்தையா****, தமிழ்மண் வளமாகவே வாழ்ந்த பன்மொழிப்புலவர்* ***கா.அப்பாத்துரையார்****, கலைவாழ்வைத் தலைவாழ்வாய்ப் போற்றிய* ***சாத்தன்குளம் அ.இராகவனார்*** *கொடைகளை எல்லாம் 'குவை குவை' யாகத் தொடர்ந்து வழங்கினார் இளவழனளார்.*

*இலக்கணக் கடல் மனனமாமணி முதுபெரும்புலவர்* ***தி.வே.கோபாலர்*** *தொகுத்த* ***இலக்கணப்பேரகராதியை*** *(17 தொகுதிகள்) ஒன்றாய் வழங்கினார்.*

*எளியேன் 75ஆம் அகவைக் கொடையாக, என் நூல்கள் 65ஐ ஒருமுகமாக வழங்கினார்.*

*165 ஆண்டுகளுக்கு முற்பட்டதாம்* ***யாழ்ப்பாண அகராதி*** *முதல் பல்லபல அகராதிகளை ஒரே மூச்சில் வழங்கினார்.*

*தமிழ்த்தென்றல்* ***திரு.வி.க.*** *அவர்கள் வெளியிட்ட 54 நூல்களையும் 24 தொகுதிகளாக இதுகால் வழங்குகிறார். இவ் வளவினும் மிகுதலாய்த் திரு.வி.க. வரைந்த கட்டுரைத் தொகுதிகளும் வெளிப்பட உள்ளன.*

*அரசியல் வரலாற்றுப் பேரறிஞர் வெ.சாமிநாதர், நற்றமிழ் வல்ல ந.மு.வே. பகுத்தறிவுப் பெரும்புலவர் பாவலர்* ***குழந்தை*** *ஆகியோர்* ***நூல்கள்*** *அனைத்தும் ஒரு மொத்தமாக வெளிவரல் அணித்தே உள்ளன.*

*பாரிய '****பழமொழித் திரட்டு****' உருவாக்க முறுகின்றது!*

*தமிழ்மொழி - தமிழ் இனம் - தமிழ் நிலம் குறித்த ஆக்க நூல்கள் எவ்வெவை எனினும், அவ்வவற்றை வழங்கும் திட்டத்தில் ஆழ்ந்து கடனாற்றுகிறார்* ***இளவழகனார்!***

*உலகளாவிய தமிழர் உள்ளங்களிலெல்லாம் 'தமிழ்மண் பதிப்பகம்' தன் முத்திரை பதித்துத் தன்பெயர்ச் சிறப்பை நிலை நாட்டி வருகின்றது.*

*முருகன் அல்லது '****அழகு****' வரைந்த திரு.வி.க., '****இளமை****' விருந்தும் படைத்தார். அந்த* ***இளமை****யும்* ***அழகு****ம் இணைந்த பெருமைப் பெயரர்* ***இளவழகனார்****, உலகளாவிய அளவில் 'தமிழ்த்தென்றல் கொடை வளம்' உலாவரச் செய்யும் இவ்வேளையில், தமிழ்ப்பற்றாளர் முழுதுறு பாராட்டுக்கும் அவர் உரிமை பூணுதல் வெளிப்படை.*

*'வினையே ஆடவர்க் குயிர்' என்பதை மெய்ப்பிக்கும் வாழ்வு* ***இளவழகனார்*** *வாழ்வு!*

*அவ்வாழ்வு மேலும் மேலும் சிறப்பதாக!*

***இன்ப அன்புடன்***

**இரா. இளங்குமரன்**

# பொருளடக்கம்


பதிப்புரை 3

தமிழ்க்கொடை – அறிமுகம் 4

**தமிழ்க்கொடை – 1**

நா. கதிரைவேற் பிள்ளை சரித்திரம் 9

நாயன்மார் வரலாறு 11

**தமிழ்க்கொடை – 2**

மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் 12

**தமிழ்க்கொடை – 3**

பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை 16

**தமிழ்க்கொடை – 4**

உள்ளொளி 24

முடியா? காதலா? சீர்திருத்தமா? 30

**தமிழ்க்கொடை – 5**

திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் 1 33

**தமிழ்க்கொடை – 6**

திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் 2

**தமிழ்க்கொடை – 7 –11**

பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும் 36

**தமிழ்க்கொடை – 12**

பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும்
பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும் 38

காரைக்கால் அம்மையார் திருமுறை – குறிப்புரை 41

**தமிழ்க்கொடை – 13**

திருக்குறள் – விரிவுரை (பாயிரம்) 43

**தமிழ்க்கொடை – 14**

திருக்குறள் விரிவுரை (இல்லறவியல்) 49

**தமிழ்க்கொடை – 15**

| | |
|---|---|
| தேசபக்தாமிர்தம் | 55 |
| என் கடன் பணிசெய்து கிடப்பதே | 61 |
| தமிழ்நாட்டுச் செல்வம் | 65 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து | 67 |
| தமிழ்க்கலை | 71 |

**தமிழ்க்கொடை – 16**

| | |
|---|---|
| தமிழ்த்தென்றல் (அ) தலைமைப் பொழிவு | 74 |

**தமிழ்க்கொடை – 17**

| | |
|---|---|
| தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்திரட்டு 1 | 77 |
| இன்ப வாழ்வு | |

**தமிழ்க்கொடை – 18**

| | |
|---|---|
| தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு 2 | 80 |

**தமிழ்க்கொடை – 19**

| | |
|---|---|
| இந்தியாவும் விடுதலையும் | 85 |

**தமிழ்க்கொடை – 20**

| | |
|---|---|
| சைவ சமய சாரம் | 91 |
| நாயன்மார் திறம் | 92 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் | 94 |
| சைவத்தின் சமரசம் | 96 |
| முருகன் அல்லது அழகு | 98 |

**தமிழ்க்கொடை – 21**

| | |
|---|---|
| கடவுட் காட்சியும் தாயுமானாரும் | 100 |
| இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் | 102 |
| தமிழ்நூல்களில் பௌத்தம் | 106 |
| சைவத் திறவு | 109 |
| நினைப்பவர் மனம் | 111 |
| இமயமலை அல்லது தியானம் | 113 |
| ஆலமும் அமுதமும் | 115 |

**தமிழ்க்கொடை – 22**

| | |
|---|---|
| சமரச சன்மார்க்க போதமும் திறவும் | 118 |
| சமரச தீபம் | 121 |
| சித்த மார்க்கம் | 123 |
| பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி | 125 |

**தமிழ்க்கொடை – 23**

| | |
|---|---|
| உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல் | 130 |
| முருகன் அருள் வேட்டல் | 133 |
| திருமால் அருள் வேட்டல் | 137 |
| பொதுமை வேட்டல் | 141 |
| கிறிஸ்துவின் அருள் வேட்டல் | 145 |
| புதுமை வேட்டல் | 149 |
| சிவனருள் வேட்டல் | 152 |

**தமிழ்க்கொடை – 24**

| | |
|---|---|
| கிறிஸ்து மொழிக்குறள் | 154 |
| இருளில் ஒளி | 157 |
| இருமையும் ஒருமையும் | 161 |
| அருகன் அருகே அல்லது விடுதலை வழி | 164 |
| பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும் | 166 |
| சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல் | 168 |
| முதுமை உளறல் | 172 |
| வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் | 174 |

# சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் சரித்திரம்

இவ்வரலாற்று நூல் 1908இல் வெளிவந்தது. திரு.வி. க. வரைந்த முதல் நூல் எனப்படுவது. அதன் அச்சீடு, 'அச்சுக்கூடம் அம்மை வார்த்தது' என்று திரு. வி. க. தம் வாழ்க்கைக் குறிப்பில் வருந்தி எழுத அமைந்தது. அதன் இரண்டாம் பதிப்பு 1968இல் வெளிவந்தது. இராயப்பேட்டை இளைஞர் கழகம், யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை தொடர்பால் பால சுப்பிமரணிய பக்தசன சபையாக உருக் கொண்டது. திரு. வி. க. கதிரைவேலர் மாணவர்; அணுக்கர்; தொண்டர்; கதிரைவேலர் வரலாற்று நூல் ஆசிரியர். திரு.வி. க. வின் நூல்களைக் கற்றோர், இவ்வரலாற்று நூலை அவர்தாம் எழுதினார் என்பதை எளிதில் நம்பார்.

'பண்டித நடை' என்று திரு.வி. க. தள்ளிய நடையில் எழுதப் பட்ட நூல். மணிப்பவழ நடையது; எதுகை மோனை கருதிய அடுக்குமொழி கொண்டது. புராணப் போக்கினது. நூன்முகம் முதல் தொடரையும், நூல்முதல் தொடரையும் கண்ட அளவானே நூல் நடை - பொருட்போக்கு - புலனாகி விடும்.

ஈழ நாட்டு மேலைப்புலோலியூர் நாகப்ப பிள்ளை மகனாராகக் கதிரைவேலர் 1860 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் (பிரசோற்பதி மார்கழி 3 ஆம் தேதி குருவாரம்) தோன்றினார். சைவ வித்தியா சாலையில் பயின்று பதினெட்டாம் அகவையில் பண்டித ராயினார். வடிவாம்பிகை என்பாரை மணந்தார். சிவஞானம்பிகை என்னும் பெயருடைய மகவொன்று பெற்றார்.

சென்னைக்குக் கதிரைவேலர் வந்து சபாபதி நாவலர் அவர் களிடம் சிவஞானபாடியம் பாடம் கேட்டார். சோமசுந்தரநாயகர் நட்புற்றார். நூல்கள் சில இயற்றினார். அகராதி ஒன்று செய்தார். 'மாயாவாத தும்ச கோளரி' என்னும் விருது பெற்றார். ஆரணி அரசின் அவைக்களப் புலவராகச் சிறந்தார். பழனிப் புராணத்திற்கு உரைவரைந்து அச்சிட்டு ஆங்கேயே அரங்கேற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கப் புலமைத் தேர்வாளராகத் திகழ்ந்தார். 'புத்தமதக் கண்டனம்' என்னும் நூல் இயற்றினார்.'வேளாளர் வைசியர் அல்லர்' என்பதையும், நால்வர் பாடல்களே அருட்பா என்பதையும் விளக்கியுரைத்தார். வழக்குமன்றம் ஏறியும் நின்றார். கருவூரில் வாழ்ந்த

கிளைடன்துரை என்பார்க்குத் தமிழ் கற்பிக்கும் கடனேற்றார். பல்வேறு இடங்களில் அவதானம் (கவனகம்) செய்தார். நூறு அவதானம் செய்யும் வல்லாராகத் திகழ்ந்தார். தில்லை, திருவையாறு முதலிய திருத்தலங்களுக்குச் சென்றார். அலுவல் பொருட்டாக நீலமலைக்குச் சென்ற கதிரைவேலர் அக்குளிர் ஏற்காமையால் பராபவ பங்குனி 13இல் (1907) இயற்கை எய்தினார்.

இது கதிரைவேலர் வரலாற்றுச் சுருக்கத்தில் சுருக்கம். ‘அருட்பா - மருட்பா’ போர், கிளர்ந்தவகை இச்சுவடியால் புலப்படுதல் ஒரு தெளிவை ஆக்குகின்றது. நால்வர் பாடல்களை அருட்பா எனக் கொள்ளார் சிலர் கிளர்த்திய முரண்பாடே, வள்ளலார் பாடலை மருட்பா என வாதிடத் தூண்டுவதாயிற்று என்பது அவ்வுண்மையாம். பேரறிவினரையும் பிளந்து எதிரிடச் செய்து விடும் சிறுமையை ஆக்கவல்ல குறும்பர் - உட்பகைஞர் - உண்டு என்பதைக் காலம் கடந்தேனும் எண்ணிப் பார்த்து விழிப்புற இவ்வரலாற்றுக் குறிப்பு உதவும்!

சன்மார்க்கமே என் மார்க்கம் என வாழ்ந்த வள்ளலார் மீள் பிறப்பாக வாழ்ந்த திருவி.க. பின்னே செய்த அருட்பாத் தொண்டுக்கு ஒப்பாக எவரைச் சுட்டிக் கூறக் கூடும்.

சமய ஆய்வர்க்கு வாய்த்த ஆவணம் திரு.வி.க. வரைந்த கதிரைவேலர் வரலாறு என்பது சாலும்!

# நாயன்மார் வரலாறு

நாயன்மார் வரலாறு, முன்னுரை, சேக்கிழார், அறுபத்து மூவர், திரு நட்சத்திரம், உள்ளுறை என்பவற்றை முற்படக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

நாயன்மார் வரலாறு (பெரிய புராணத்தைத் தழுவியது) என்னும் பொறிப்புடையது. தோற்றுவாய், நூலின் முதலும் வழியும் கூறுகிறது. அடுத்தே நாட்டுப்படலம், நகரப் படலம் இரண்டையும் இணைத்து 'நாடு - நகரம்' எனத் தொடர்ந்து திருக்கூட்டம் என்பதனுடன் நிறைகிறது.

'சுந்தர மூர்த்த சுவாமிகள்' முதலாகக் கொண்டு அவர் வரலாற்றை முழுவதாகத் தருகிறார். அதன்பின்னர்த் தில்லை வாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார் என இசைஞானியாருடன் நூலை நிறைவிக்கிறார்.

திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணசாரம் என்பவற்றை முன்வைத்தே நாயன்மார் வரலாற்றை வரைகிறார்.

பாடலால் அமைந்த மூலநூலைத் தழுவி வரலாற்றுநூல் வரைய வேண்டும். எனின், அதன் நடையும் தொடரும் பொருளமைவும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாம் நூல் ஒன்று வேண்டின், அதற்குச் சான்றாகத் திரு.வி. க. இயற்றிய நாயன்மார் வரலாற்றைக் கூறலாம். அத்தகு தெளிவும் திறமும் ஓட்டமும் சுவையும் ஒருங்கே கொண்டது அது. விடுபாடு இல்லாத கருத்து; இடரிலா நடை; சிறு சிறு தொடர்; சிக்கலற்ற சொல்லாட்சி; அவர்க்கே இயல்பாக அமைந்த மொழி ஆளுமை இன்னவை, உரைநடை எழுதப் புகுவார்க்குப் பார்வைநூலாக வைக்கத்தக்க பான்மையில் அமைந்தது.

குறுந்தலைப்புகளைத் தொடர்ந்து பார்த்தாலே வரலாற்றுத் தொடர்பு தானே அமையும் சீர்மையும் உடையது.

# மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

நூல் இரு கூறுபட்டது என்பது நூற்பெயராலேயே வெளிப்படப் புலப்படும். முதற்பகுதி மனித வாழ்க்கை. அடுத்த பகுதி காந்தியடிகள்.

விரிவுமிக்க பெருநூலாகிய இந்நூல் ஒருகட்டுரையாகக் கிளர்ந்து, ஐம்பது பக்கச் சுவடியாக வளர்ந்து, ஐந்நூறு பக்கம் தாண்ட விரிந்தது. கட்டுரை கொண்டது 1920. நூல் விரிவுற்று வெளிப்பட்டது 1946.

திரு.வி.க. தம் நூல்களிலே தமக்கு மிக விருப்புடையதாக இந்நூலைச் சுட்டுவார். அதன் காரணம் இந்நூலில் "மனிதமும் உண்டு; வாழ்வும் உண்டு" என்பார். 'துன்பத்திற்கு மருந்து காந்தியம்' எனக்கொண்ட திரு.வி.க. 'மனிதன் எவன்', 'ஒருவன் மனிதனாக எத்தகைய வாழ்க்கையை நடத்த வேண்டும்', 'மனித வாழ்க்கைக்கு இலக்கியர் மகாத்மா காந்தி' என்னும் முப்பொருள் பொதுள இந்நூலை யாத்துள்ளார்.

"உயிரும் உடலும் ஒன்று படுங்காலத்து அறிவு விளக்கம் பெறுகிறது. அறிவு அறுவகைப்படுகிறது. ஆறாம் அறிவு மன அறிவு; மன அறிவு உடையவன் மனிதன். அவன் தன்னுயிர் போல் மன்னு யிரையும் பார்ப்பன். இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டு நிலவும்; இரக்கமில்லாதவர் மக்கள் ஆகார். மாக்கள் அவர்" என்பது மனிதன் பற்றியது.

"மனிதப் பிறவியின் நோக்கம் அருள் நெறியில் வாழ்தல். அதற்கு இறைவனால் அருளப்பட்டது இயற்கை; அவ்வியற்கையோடு இணைந்த வாழ்வால், தன்னலங் கருதா வாழ்வினன் ஆகிறான்; சான்றோனாகத் திகழ்கிறான்." என்பது வாழ்க்கை பற்றியது.

வாழ்க்கை விளக்கத்திற்குக் கீதையையும், திருக்குறளையும் எடுத்துக்காட்டாக்குகிறார்.

காந்தி வாழ்வைப் பண்படுத்தியது கீதை; அதனால் முதற்கண் அதனைக் கொண்டதாக உரைக்கிறார். கீதையின் திரண்ட பொருள், "உலகத்தில் மனிதன் தன்னலங்கருதாது பிறர்நலம் கருதி வாழ வேண்டும் என்பது" என்கிறார்.

"தன்னலம் கருதாது பிறர்நலம் கருதி வாழ்வோரே இருபிறப்பாளர்; தம் பொருட்டு உலகில் வாழும் சிலரை இருபிறப்பாளர் என்பது பெரும்பிழை" "அருச்சுனன் மறு பிறப்புற்றான் தன் கடனாற்றினான்" என்கிறார்.

திருக்குறள் அதிகாரமுறை வைப்பே, "மனிதன் பிறர்நலம் கருதும் அருளாளனாக வாழ்தல் வேண்டும்" என்னும் உண்மையை அறிவுறுத்து கிறது என்பதை விளக்குகிறார். காந்தியடிகளுக்கு விருப்பான நூல் திருக்குறள் என்பதால் கொள்ளப்பட்டது என்கிறார். பிறர்பொருட்டு வாழ்தல் என்பது இயற்கை வாழ்வு; தேவைக்கு மேல் தேடிக்குவியா எளிய வாழ்வு; இனிய இல்லறம், தூய துறவு, உடலோம்பல் என்பவற்றை விளக்குகிறார். வாய்மை, மெய்யறிவு, பொறுமை முதலியவற்றை யுரைத்து, 'சாதுநிலை' சாற்றுகிறார். மெய்யறிவால் மாந்தன் அன்பன் ஆகிறான்; அருளன் ஆகிறான்; தெய்வம் ஆகிறான்; மெய்யறிவாளன் பொறுமைப் பேற்றாளன். பொறுமைப் பயிற்சியே அரிய பயிற்சி. அப்பயிற்சியே அஃதுடையானை அறப்போராளி யாக்குகிறது. அவ்வறப்போர் உலகுக்குப் புதுமையன்று; அப்போராளி யாகத் தோன்றியவர் காந்தியடிகள் என வாழ்க்கைப் பகுதியை நிறைவு செய்கிறார். காந்தியடிகளைத் தொடர்கிறார்.

"கடவுளருளால் செயற்கரிய செய்பவர் மகாத்மா" என மகாத்மாவுக்குப் பொருள் தருகிறார். "பண்டை முனிவரர் இயல்பு களையெல்லாம் கொண்டமையால் அடிகள்" ஆவார் என்கிறார்.

புத்துலகப் பேறாக வாய்க்கப் பெற்றவர் இருவர். ஒருவர் கார்ல்மார்க்ஸ்; இன்னொருவர் காந்தியடிகள் என்று தொடக்கம் செய்து அடிகளின் பிறப்பு, கல்வி முதலாக வரைகிறார்.

அடிகள் வருணாசிரம தருமத்தை ஏற்றுப் பிறப்பு உயர்வு தாழ்வு போற்றாமையையும் கொள்கிறார். அதனை, 'வைதிகரும் கொள்வதில்லை; சீர்திருத்தக் காரரும் ஏற்பதில்லை" என்னும் திரு.வி.க. 'பிறப்புவழி வருணாச்சிரமம் இயங்க வேண்டும்" என்று. அடிகள் கூறுவது விளங்கவில்லை என்கிறார். "அரிசனம் எனப் பெயர் மாறியதேயன்றிப் பொருள் மாறவில்லை; அதனால் ஆதி திராவிடர் ஏற்க விரும்பவில்லை" என்கிறார்.

கல்விப்பகுதியில் தாய்மொழிவழிக் கல்வியே இயற்கை வழிக் கல்வி என்பதை அடிகள் வழியாகப் பெருவிளக்கம் புரிகிறார் திருவி.க., "இந்தியத் தலைவருள் தாய்மொழி வளத்துக்குப் பாடுபட்ட பெருமை மகாத்மா காந்திக்கு உண்டு" என்கிறார்.

"தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவை உணர்ந்த ஒருவன் வீடு பேற்றையும் காதலியான். அவனுக்கு வீடுபேறு தமிழ்மொழி இன்பமேயாம். அவன் மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டில் தமிழனாகப் பிறந்து தமிழ்ச்சுவை மாந்தி இன்புறவே விரும்புவன்" என்று தம் விருப்பைப் பதிவு செய்கிறார் திரு.வி.க. காந்தியடிகள் காட்டிய தமிழ்ப் பற்றை விரித்துரைக்கிறார்.

தியாகம் என்பதில், "காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா செல்லல் நேர்ந்தது. அங்கே காந்தியடிகள் மனிதரானார்" என்கிறார்.

ஆபிரிக்கத் தொண்டே அவரை 'மகாத்மா' ஆக்கிற்று! இல்லையேல் இந்திய நாட்டாருள் ஒருவராக இருந்திருப்பார்! உலகவர் ஆகியிரார்!

ஆபிரிக்கத் தியாக வாழ்வே அடிகளை இயற்கை வாழ்வின ராக்கியதை விரித்துரைக்கிறார். உடலோம்பல், புலனடக்கம் முதலாயவற்றை விரித்துரைக்கும் திரு.வி.க. கைத்தொழில் - நூற்றல் - நெய்தல் பற்றி விரியக் கூறுகிறார். மார்க்சியத்தையும் காந்தியத்தையும் எண்ணுகிறார். தம்நிலையைச் சுட்டுகிறார்:

"மார்க்ஸியத்துக்கும் காந்தியத்துக்கும் உள்ள ஒற்றுமையும் எனக்கு விளங்குகிறது. வேற்றுமையும் எனக்கு விளங்குகிறது. இரண்டுக்கும் அடிப்படையாயுள்ள கொள்கையில் பெரிதும் வேற்றுமை இல்லை என்பதும் கொள்கையை நிறைவேற்றும் முறையில் வேற்றுமை உண்டு என்பதும் எனது ஆராய்ச்சியில் தோன்றும் உண்மையாகும்" என்கிறார்.

அகிம்சை என்பது பிறர்க்குத் துன்பம் செய்யாமை மட்டுமன்று; தமக்குத் துன்பம் செய்தார்க்கும் தாம் துன்பம் செய்யாமை என்று விளக்குகிறார் திரு.வி.க.; இன்னா செய்தார்க்கும் இனியவே செய் யாக்கால் என்ன பயத்ததோ சால்பு என்னும் குறள் விளக்கம்போல், "அஹிம்சை என்பது பிறரை ஹிம்சியாதிருத்தல் மட்டுமன்று; தன்னைப் பிறர் ஹிம்சிக்கும்போது அவர் மீது காழ்ப்புக் கொள்ளாது, அக் கொடுமையினின்றும் அவரைக் காக்க வேண்டி, அவர்பால் அன்பு கொண்டு துன்பம் பொறுத்தலும் அஹிம்சையின் பாற்பட்டது" என்கிறார். அருளறமாம் அகிம்சையைப் பேணுதற்கு இந்நாளில் இருவர் தோன்றியுளர்; ஒருவர் டால்ஸ்டாய்; மற்றவர் காந்தியடிகள் என்கிறார். அதிலும் "முன்னவர் பேச்சளவில் - எழுத்தளவில் - தம்மளவில் வளர்த்துச் சென்றார். காந்தியோ தம்பால் அவ்வறத்தை வேரூன்றச் செய்து உலகிலும் அதை நிலைபெறுத்த முயன்று வருகிறார்" என்கிறார். இன்னா செய்யாமை நோக்கில் அடிகள் கொண்ட உண்ணாநோன்புகளை உரைக்கும் திரு.வி.க. பிறரைத் துன்புறுத்தும் நோக்கில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் படவில்லை என்கிறார்.

"அன்புடையாரைத் திருத்தவே உண்ணா நோன்பு பெரிதும் ஏற்கப்படல் வேண்டும் என்றும், ஒருவரது உரிமையை அநியாய மாகப் பிடுங்க எவரும் உண்ணா நோன்பைப் பயன்படுத்தல் ஆகாதென்றும், தந்தையின் குடியை நிறுத்த மைந்தன் உண்ணாமை கொள்ளலாம் என்றும், தாம் கொள்ளும் உண்ணாமை அவ்வியல் பினதென்றும், தாம் பம்பாயிலும் பர்தோலியிலும் உண்ணா நோன்பு கொண்டது தம்மாட்டு அன்புடையார் பொருட்டே என்றும், ஜெனரல் டையர் போன்றாரைத் திருத்த அந்நோன்பைத் தாம் கொள்வதில்லை என்றும், தன்னலம் நாடிப்பிறரை அநியாய

மாகத் துன்புறுத்தும் நோக்குடன் உண்ணாமை ஏற்றல் அறமாகா தென்றும் பல இடங்களில் பேசியும் எழுதியும் இருக்கிறார்'' என்கிறார்.

“வெறிநாய்களைக் கொல்லுமாறு ஆணையிட்டதும், ஆசிரமத்தில் நோய்வாய்ப்பட்ட ஒரு கன்றைக் கொல்லுமாறு செய்ததும், அகிம்சையோ? என்கின்றனர். இவ்வினைகளை அடிகள் அருள்கனிந்த நெஞ்சம் கொண்டு நிகழ்த்தினரா, வன்கண் படிந்த உளங்கொண்டு நிகழ்த்தினரா என்பதை ஆராய்ந்துணரல் வேண்டும் என்பது என்கருத்து என்கிறார். சோம்பர் சிலர் சந்நியாசிகள் - சாமிகள் - என்னும் பெயரால் பிச்சை எடுத்தே வாழ்க்கை நடாத்து கிறார். இவர்க்கு உதவி செய்வது அறமா? மறமா? என வினா எழுப்பி, “நேரிய முறையில் உழைத்து உண்ணக்கூடிய நல்லுடல் உடை யார்க்கு அன்ன தானம் செய்வதை எனது அஹிம்சா தர்மம் ஏற்றுக்கொள்ளாது. எனக்கு அதிகாரமிருந்தால் ஒவ்வொரு சதா வர்த்தியையும் நிறுத்திவிடுவேன்'' என்று அடிகள் முழங்குவதாகக் குறிக்கிறார்.

அடிகளின் சுதேசியம், சத்தியாக்கிரகம், சமயவாழ்வு என்பவற்றைத் திரட்டித் திரட்டித் தந்தாலும் ஆய்வுக் கண் கொண்டே செய்கிறார் திரு.வி.க.

“சேவையை வெறுத்துத் தனித்து வாழ விரும்புவது சாது நிலையாகாது'' எனச் சாது நிலையில் குறிப்பிடுகிறார்.

“தம்மால் செய்ய இயலாததை அடிகள் உலகுக்குச் சொல்வதில்லை'' என்னும் திரு.வி.க. அடிகள் போதனைகளைத் திரட்டித் தருகிறார். அடிகள் மேல் பாடிய ஓரகவல் பாவுடன் நூலை நிறைக்கிறார்.

சத்தியசோதனையையும் அவர்தம் பிறதொகைகளையும் ஒருங்கே நிறுத்தி ஆய்ந்து ஆய்ந்து தோய்ந்த கலைத்திறத்தொடு கட்டப்பட்ட கவின்மாளிகை எழில் நிழலில் தங்கிய இன்பம் தவழ வாய்த்த நூலென இலங்குவது மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்.

# பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை

*கல்வி எத்தகு விழுமியது? கண்ணொப்பது என்பதே காட்டும். கண் இருப்பின் ஒளி கிளரும்! உள்ளொளியொடு புற வொளியும் சிறக்கும்! கண்ணுடைய அனைவரும் கற்றோராதல் வேண்டும் என்பதற்கே, கல்வியை நம் முந்தையர் கண்ணொடும் ஒப்பிட்டனர்.*

*பெண்கல்வி சிறந்தோங்கிய பெருமைத் தமிழகம், இடைக் காலத்தும், பிற்காலத்தும் பெண்கல்வியைச் சிதைத்தது! அழித்தது!*

*ஆங்கிலவர் ஆட்சிப் பின்னாளில் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டுத் தொடக்க முதல் பெண்கல்வி படிப்படியே வளர்ந்து இதுகால் ஏறத்தாழ ஒத்தநிலையை எய்தியுள்ளது. மகளிர் கல்வித் தேர்ச்சியிலும் பணிச்சிறப்பிலும் ஆடவரை விஞ்சித் திகழ்தலும் கண்கூடு.*

*பெண்கள் மருத்துவம், பொறியியல், ஆசிரியம் என எவ்வெத் துறைக் கல்வி கற்பாராயினும் கற்க; எவ்வெத்துறைப் பணி செய் வாராயினும் செய்க. அவர்கள் தமிழ்வழிப் பிறவியர், தமிழ் கற்றவர் என்னின், அவர்கள் கட்டாயம் கற்றிருக்க வேண்டும் நூல் ஒன்று உண்டு எனின் அதன் பெயர் பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை என்னும் இந்நூலாம். தாம் பெண் பிறப்புற்ற பேற்றைத் திறமாக அறிந்து வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ நிலையை ராய்த் திகழ வாய்த்த அருமைத் திருமறைநூல் இஃதாம்.*

*திரு.வி.க. பெண்மையைத் தோல், எலும்பு, தசை, குருதிப் பிறப்பாகக் கண்டாரல்லர். அன்பு அருள் அறம் அழகு பொறுமை முதலாம் பண்புச் சால்புகளாக் கண்டார். ஆண்மைப் பிறப்பும், இப்பெண்மைப் பண்பை அடையாக்கால் வீடுபேறு எய்தாது என்றும் குறித்தார்.*

*பெண்ணின் பெருமையும் பெற்றிமையும் பேசிய அவரைப் 'பெண் பிறவியர்' என எள்ளினாரும் உளர். அதற்கு அவர் எழுதிய மறுமொழி என்ன?*

*"ஆண்மை அரக்கனாக வாழ்வதனினும் பெண்மைத் தெய்வ மாகவே வாழ விரும்புகிறேன்" என்றார்.*

*பருவுடல் ஆய்வு, நுண்ணுடல் ஆய்வுக்குத் தலை வணங்கியே ஆகும் நிலை உண்டாயது!*

'பெண்ணின் பெருமை' வெளிப்பட்டபின், நாட்டில் ஏற்பட்ட நன்னிலைகள் எவை?

எட்டாம் பதிப்பின் முன்னுரையில் இதற்கு விடை பகர்கிறார் திரு.வி.க.:

முதற்பதிப்புத் தலைக் காட்டியபோது எதிர்ப்புப் பெரிதும் எழுந்தது. இப்பொழுது எதிர்ப்பு மறைந்த விட்ட தென்று கூறலாம்.

இந்நூல் வெளிவந்த பின்னைத் தென்னாட்டில் பெண் ணுரிமைக்கெனத் தோன்றிய இயக்கங்கள் பல; சங்கங்கள் பல; முயற்சிகள் பல; மேலும் கலப்பு மணங்களும் கைம்மையர் மணங் களும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. சட்டங்கள் செய்யவும் நாடு முனைந்து நிற்கிறது; இளைஞருள் ஒருவிதப் புத்துணர்வு தோன்றியிருக்கிறது. மூலை முடுக்குகளிலும் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது. பெண்ணுலகம் விழித்துக் கொண்டது என்று சுருங்கச் சொல்லலாம். இந்நூல் இன்னும் பல நலன்களைச் செய்யும் என்றே நம்புகிறேன்." என்பது அது. 1927இல் பெண்ணின் பெருமை முதற்பதிப்பு வெளிப்பட்டது. எட்டாம் பதிப்பு 1953இல் வெளிப் பட்டது. இவ்விருப்பத் தாறாண்டு இடைவெளிக் காலத்தில் பெண்ணின் பெருமை வழி நிகழ்ந்த ஆக்கப் பணிகள் இவை எனின், இந்நூற் சிறப்புக்கு வேறென்ன வேண்டும்.

வித்திய உழவன் விளைவுகண்டு பொங்கல் விழா எடுக்கும் பூரிப்பு அல்லவோ இப்பூரிப்பு!

திரு.வி.க. பெண்ணின் பெருமையை அருவியாய்க் கொழிக்க ஊற்றுக் கண்ணாக இருந்தது எது?

நூற்பெயரீடே விளக்கும், 'பெண்ணின் பெருமை' என்னும் பெயரீடு மட்டுமா? அல்லதும் விளக்கும். அது 'வாழ்க்கைத்துணை'

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' என்னும் குறளையும், அக்குறளமைந்த "வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரப் பெயரையும் நினைக. திரு.வி.க. தம் திருக்குறள் விரிவுரையில் 'வாழ்க்கைத் துணை' என்றே அதிகாரப் பெயரைக் குறிக்கிறார். மேலும் திருக்குறள் விரிவுரையின் அணிந்துரையில், "எனது குறட்காதல் முன்னே 1927ஆம் ஆண்டில் 'பெண்ணின் பெருமை', என்னும் நூலாகத் திரண்டது" என்பதும் கருதுக.

பெண்ணின் பெருமைக்கு வள்ளுவம் எவ்வாறு ஊற்றுக் கண்ணாக அமைந்ததோ அவ்வாறே பாவேந்தர் பாடிய குடும்ப விளக்குக்கும் மூலமாக அமைந்ததைப் பாவேந்தர் அந்நூற்குப் படைத்த முன்னுரையால் அறிக.

ஒன்றன் நிறை காண்பார் - நிறை காண விழைவார் - என்ன செய்வார்? அவர் ஆழ்ந்து ஆய்ந்து குறையும் காண்பார். குறை களைதல் வளர் பயிர்க்கு - விளைபயிர்க்குக் -களை களைதல் ஒப்பது.

ஆதலால், பெண்ணுரிமை சிறந்தோங்கிச் செழிக்க அவாவும் திரு.வி.க. பெண்ணுலகில் காணப்படும் ஏறுமாறான இருகுறைகளைச் சுட்டு கிறார்:

இந்நாளில் பெண்ணுலகில் பலதிறக் குறைபாடுகள் தோன்றி யுள்ளன. அவற்றுள் இரண்டு சிறப்பாகக் குறிக்கத் தக்கன.

"ஒன்று, சிறிதும் நாகரிகமின்றிச் சில இடங்களில் பெண் இருளில் மூழ்கிக் கிடப்பது; மற்றொன்று, 'பழுத்த நாகரிகம்' என்னும் பேய்க்குச் சில இடங்களில் பெண் இரையாகி வாழ்வையே குலைத்துக் கொள்வது. இருசாராரும் ஒழுங்கு பட்டுப் பெண்மை யுடையராய் உலகிற்குப் பயன்படல் வேண்டும்" என்பது அது (முன்னுரை)

"பெண்பிறவியின் விழுமிய நோக்கம், அன்பால் ஒருவனை மணந்து ஒழுங்குபட்ட இல்வாழ்க்கை என்னும் இயற்கை வாழ்வு நடாத்துவதில் நிறைவேறும் என்பது நூலின் திரண்ட பொருள்" என்பது, பெண்ணின் பெருமை நூலின் பிழிவு (முன்னுரை).

திரு.வி.க.வின் இவ்வுட்கிடை வெளிப்படும் வகையால் நூலைப் பதின்மூன்று தலைப்புகளில் நூற்றுள்ளார்.

பெண் ஆண் பகுப்பு ஓரறிவு உயிரிமுதல் ஒன்றியிருத்தலைப் பல்வேறு விளக்கங்களாலும் அறிஞர்தம் உரைகளாலும் விளக்கி, 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருப்பு' உலகம், என்பதைப் பெண் ஆண்' என்னும் முதல் தலைப்பில் குறிக்கிறார். பெண் ஆண் சேர்ந்த ஒன்றே முழுமையம்' என நிறைக்கிறார்.

பெண் ஆண் ஆகிய இருமையும் கூடிய முழுமையில், பெண்ணின் முதன்மையை, அடுத்தே தெளிவிக்கிறார். உலகியக்கம் பெண்ணால் நிகழ்வதைத் திருமூலர் தொடர்வழியாகக் காட்டி ஆய்வு நிகழ்த்து கிறார்.

பெண்மையாவது யாது? என வினாவி, "அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும்" என்று கூறி விளக்குகிறார். இப்பண்புகள் இன்பம் செய்பவை ஆதலின் இவற்றையுடைய பெண்மை, இன்பநிலைக்களமும், தெய்வத்திருவடிவுமாம்"என்கிறார். பெண்பிறவி நோக்கு ஆக்கமேயன்றி அழிவன்று என்றும் அதற்கு அப்பெண்மையின் தாய்மைத் தொண்டும் தியாகமும் சான்று என்றும் அறுதியிடுகிறார்.

கல்வி, திரு முதலியவற்றை நம்முந்தையர் பெண்ணெனக் கொண்ட நுட்பத்தை எடுத்துக் கூறும் அவர், கடவுளின் பெண் கூற்றை முன்னர்க் குறித்தே, பின்னர் ஆண்கூற்றைக் குறிக்கும் வழக்கை (வள்ளி மணாளன்) வைக்கிறார். பெண் தெய்வத்தை முதன்மைப் பொருளாகப் போற்றுகிறேன். பெண்ணே முதன்மை

யுடையாள் என அப்பகுதியை முடிக்கிறார். மூன்றாம் பகுதி, 'பெண்ணுரிமை' என்பது.

"உரிமை என்பது ஒருவர் கொடுப்பதுமன்று; மற்றொருவர் வாங்குவதுமன்று. அஃது எவரிடத்தும் எல்லாவிடத்தும் இயல்பாய் அமைந்து கிடப்பது" என்று உரிமை விளக்கும் திருவி.க." அஃறிணை உலகில் பெண்ணுரிமைக்குப் பழுது நிகழ்ந்ததில்லை. பாழான ஆறறிவுடைய உயர்திணை உலகிலேயே பெண்ணுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கிறது" என்கிறார்.

பெண்ணடிமைப்பட்ட நிலையை உரைக்கும் திரு.வி.க. "பெண்ணுரிமை கடிந்து கூறும் ஸ்மிருதிகளையும் அவைகளை யொட்டிப் பின்னை எழுந்த நூல்களையும் நோக்குழிப் பெண்ணுரி மையை அரிக்கும் அநியாயக் கட்டுப்பாடுகளை அவைகளிற் காணலாம். அவைகளை எழுதிய ஆண்மக்கள் நெஞ்சம் கல்லோ இரும்போ அறிகிலேன்" என்கிறார்.

"பெண் உற்ற வயதடைந்து பகுத்தறிவு பெறா முன்னம் ஒருவனை மணத்தல், கைம்மை எய்தினால் மொட்டையடித்து அவளை மானபங்கம் செய்தல், அவளைப் பசியால் மெலி வித்தல், பல பெண்கள் ஒருவனை மணத்தல், பெண் விபசாரத் திற்கு மட்டும் தண்டனை விதித்தல், ஆடவன் எச்சிலைத் தின்னுமாறு மகளிரை வலியுறுத்தல் இன்னோரன்ன கட்டுப் பாடுகள் பெண்ணுலகின் உயிர்நாடியைப் போக்கிவிட்டன. இக்கட்டுப்பாடுகள் ஆணுலகிற்கு உண்டோ? இல்லை! அந்தோ! என்ன கொடுமை! எனக் குமையும் அவர், பெண் தவறுதலுக்கு விதிக்கப் பெற்றுள்ள தண்டனைகள், ஏன், ஆண் தவறுதலுக்கும் விதிக்கப்படவில்லை என்பதே என் கேள்வி" என்கிறார்.

"பெண்ணுரிமை என்பது ஆண்மக்களைப் பகைத்து, அவர்கள் பதவிகளைப் பெற மூர்க்க நெறியில் நின்று, அவர்களைத் தாக்கு வதன்று. மேல்நாட்டுப் பெண்மக்கள், உரிமை என்னும் பெயரால் வாழ்வையே குலைத்து வருகிறார்கள்" என்று அல்லது கடியும் திருவி.க. "ஓருயிர் ஈருடல் எனப் பெண், ஆணுடன் ஒன்றி, வாழ்வு நடாத்தி, உலகை வளர்ப்பாளாக . இது பெண்ணின் பெருமை" என நிறைக்கிறார்.

"ஒப்புரிமையே பெண் ஆண் பெருமை! இல்லறப் பெருமை! " என்பது இதன் முடிவாம்.

பெண்வளர்ப்பு என்பது நான்காம் பகுதி. நற்பிள்ளைப் பேற்றுக்காகத் தாய் தந்தையர் தம் உடலையும் இயல்பையும் நலமுறப் பேணல் வேண்டும். உலகோம்புமாறு கடவுள் தந்த கொடை பெண்பிறவி எனக் களிப்புறல் கடன்; குழந்தைகளின் மனமொழி மெய்களில் எக்காரணம் பற்றியும் தீமை படியாவாறு பெற்றோர் காத்தல் வேண்டும். குழந்தைமையில் பெண் ஆண் வேற்றுமை

உணர்வு தோன்றா வகையில் வளர்த்தல் வேண்டும். பெண்ணின் இளமை கல்வித் துறையில் கழிதல் வேண்டும்; திருடன் கதை, கொலைஞன் கதை, குடியன் கதை, பேய்க்கதை, அச்சமூட்டுங்கதை முதலிய ஆபாசக் கதைகளைக் குழந்தைகட்கு எவரும் சொல்லுதல் கூடாது; இளம்பெண்கள், தீய எண்ணங் களை ஊட்டவல்ல களிக்கதைகளை - போலி நாவல்களை - மறக்கதைகளை இன்னோரன்ன பிறவற்றைக் கேட்டலுமாகாது; அவைகளைக் கையால் தொடுதலுமாகாது; உடற்கூற்று நூல்கள் செவ்வனே பெண் மக்கட்குப் போதிக்கப் படல் வேண்டும். சமயக் கல்வி உயிர் போன்றது; பெண்ணிற்குள்ள பெருமை எல்லாம் கற்பில் அடங்கியிருத்தல் உணரற் பாலது; நண்பரை அதிலும் ஆண் நண்பரைத் தெரிந்தெடுப்பதில் பெருங்கவலை செலுத்துதல் வேண்டும்; எதைச் செய்தாலும் பெண்மக்களும் ஆண்மக்களும் கூட்டம் கூட்டமாகக் கூடிச் செய்யின் வேறு எண்ணத்துக்கு இடம் பெரிதும் நேராது; நோய் போக்க வல்லது நோன்பன்றி மருந்தன்று; உண்டியைச் சுருக்குதல் நலம்; உப்பை நீக்க முயல்வது சிறப்பு; மன்பதைக்குப் புலால் பொருந்தாததேயாம்; மிளகாய்க்குப் பதில் மிளகைப் பயன்படுத்தலாம்; கள்ளுக்கும் காப்பிக்கும் பெரும் வேற்றுமை இல்லை; உடையில் சுமையும் இறுக்கமும் பிணிப்பும் வேண்டா; நகைப் பித்து பெண்ணின் இயற்கைக் குணமாகிய இரக்கத்தைச் சிதைக்கிறது; ஒத்த நலனும் ஒத்த கல்வியும் பிறவும் உடைய ஒருவனுடன் ஒருத்தி வாழ்ந்து தாய்மைப் பேறு பெற்று அன்பு நிலையைக் காண்டல் அறிவுடைமை; இது பெண்ணின் பெருமையுமாம் என்பவற்றை விரிய விரியக் காட்டும் பகுதி ஈதாம்.

உலகக் குப்பைகளையெல்லாம் வீட்டுள் கொட்டிச் சாய்க்கடை யாக்கி வரும் தொலைக் காட்சியே தஞ்சமாகிக் கிடக்கும் பெற்றோரும் பிள்ளைகளும் திருவிக. கூறும் பெண்ணின் பெருமையை எண்ணிப்பார்த்தால் என்ன செய்தல் வேண்டும்? அதனை நினைந்து கடனாற்றுவாராக.

இறைவழி என்பது ஐந்தாம் பகுதி.

ஒருத்தியும் ஒருவனும் அன்பால் ஒன்றி வாழ்வது இறைவழி நிற்பதாகும். அவ்வழி வாழாது ஒழிவது இறைவழி நிற்பது ஆகாது என்று அறுதியிடும் திரு.வி.க "துறவு துறவு என்று ஒதுங்கும் பெண்மகளும் ஆண்மகனும் யாண்டிருந்து முளைத்தனர்? அவர் தாய் தந்தையரின்றியோ முளைத்தனர்? அன்னார் உடல்தாங்கி இவ்வுலக வாழ்வை அடைந்தது போல மற்ற உயிர்களும் அவ்வாழ்வை அடைதல் வேண்டாவோ? அதற்குத் தடையாக நிற்பது அறிவுடைமையா?" என வினாக்களை அடுக்குகிறார்

ஆறாம் பகுதியாகிய இயற்கையறம் விரிவுமிக்கது. இறைக் குரிய வழி இயற்கை; இயற்கையே" எனக்காணும் திரு.வி.க., "இயற்கையை விடுத்து இறை இன்பத்தை எங்ஙனம் நுகர்தல் கூடும்?

இயற்கையை நீத்து எங்ஙனம் உலகில் வாழ்தல் கூடும்?" என வினாவிப் புகுகிறார். இயற்கை வாழ்வை விரிக்கும் திரு.வி.க. இயற்கைக்கு மாறாம் செயற்கைக் கேடுகளைப் பொருட் பெண்ணிர், காமுகர் ஈட்டம். நோய்க்குழு, முட்டிமைதுனம், மருந்துண்ணல், புலனடக்கம், வாளாகிடத்தல் என்னும் குறுந்தலைப்புகளில் குமுகாயப் புற்றுநோய்க்கு மருத்துவக் கடமையாய்க் கண்டு அறிவுறுத்துகிறார். புலனடக்கச் செயற்கையை அரிய வகையில் தெளிவிக்கிறார். நீத்தல் என்பது அரிய விளக்கம் பெறுகிறது. இல்வாழ்வால் தன்னலம் கெடுதல், பொதுநலம் விரிதல், பிள்ளைப் பேற்றால் தியாகம் பெருகல், ஆன்மநேயம் பரவல் என்பவற்றை விளக்கிப் போலித் துறவையும் அதன் கேட்டையும் விரிக்கிறார். இல்லறவழி ஏற்பட்ட துறவே இயற்கையறம் என நிறைக்கிறார்.

திருமணம் என்பது ஏழாம்பகுதி

"திருமணம் என்பது வெறும் விளையாட்டன்று. ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வரூஉம் இரண்டு உயிர் ஒன்றி முழுத்தன்மை எய்திக் கடனாற்றுதற்கு, அவைகளை அன்புக் கயிற்றால் இயற்கை பிணிப்பது திருமணம்" என விளக்கம் தருகிறார். இக்கால மணம், சடங்கு, போலி மணம், இளமை மணம், கிழமணம், மறுமணம், பொருந்தாமணம் என்பவற்றைக் கூறும் திரு.வி.க. ஒத்த மணம் குறித்து விரித்துரைக்கிறார். நாயகனைத் தெரிந்தெடுக்கும் உரிமை கட்டாயம் நாயகிக்கு இருத்தல் வேண்டும் என்பதைப் பல்கால் - பல்வகையால் - வலியுறுத்துகிறார்.

"நாயகனைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு எவருடையதாய் இருத்தல் வேண்டும்? தாய் தந்தையர் பெண்ணுக்குரிய நன்னாய கனைத் தெரிந்தெடுப்பதில் துணை புரியலாம்: கவலை செலுத்தலாம். ஆனால் ஆர்ந்த பொறுப்பு பெண்ணினுடைய தாகவே இருத்தல் வேண்டும்" என வலியுறுத்துகிறார்.

"திருமணம் என்பது நகையா? இசையா? பந்தரா? மாலையா? கூட்டமா? விருந்தா? மனம் ஒன்றாத இடத்திலே மணமேது? மகிழ்வேது? நாயகன் நாயகி மனம் ஒன்றுவதே மன்றலாகும்" என்றும்,

"மனம் ஒன்றப் பெறும் ஒருத்தியும் ஒருவனும் விருப்பவழி மணமுடித்தலைத் தடுக்கும் கட்டுப்பாடுகள் இயற்கைச் செந்நெறிக்கு அரண் செய்வன ஆகா. அவைகளை உடைத் தெறிய வேண்டுவது அறிஞர் கடமை" என்றும் அறுதியிட் டுரைக்கிறார்.

இன்பவாழ்வு என்பது எட்டாம் பகுதி.

"திருமணத்தால் அந்தணநிலை எய்தும்" என்றும், "ஒழுங்கு பட்ட இல்லறமே வீடு பேறு" என்றும் கூறும் திருவிக., "பெண்ணில்லா வீடு வீடா? அது காடு; சுடுகாடு; நரகம். வீட்டை இன்ப ஒளிவீசுமாறு செய்யும் தெய்வமணி விளக்கல்லளோ பெண்? அவ்விளக்கில்லா இடத்தில் துன்ப இருளன்றோ சூழ்ந்து கிடக்கும்? அத்தகைய

பெண்ணின் பெருமையை என்னென்று பேசுவது?" என்று வினாக்களை அடுக்குகிறார். அவ்வின்ப வாழ்வை, "தலைவி, தலைவனைக் கடவுளாக் கோடலும், தலைவன் தலைவியைக் கடவுளாக் கோடலும் காதலாகும்" என்கிறார். கட்டற்ற காமத்தைக் கடியும் திருவி.க,

"பறவைகளில் சில தமது சிறகை விரித்துக் காட்டுவதால் காதல் குறிப்பை உணர்த்தும். சில இனங்கள் சுழற்சியால் தங்கள் வேட்கையைப் புலப்படுத்தும். இவ்வழியில் இவைகள் தங்கள் பெண்ணினங்களை அன்பு வயப்படுத்துகின்றன. வலிந்து புணர்தலை அவ்வுயிர்களிடத்தில் காண்டல் அரிது. வலிந்து கூடலும் இயற்கை நிகழ்ச்சி ஆகாது. வலிந்து கூடும் மனிதர் மாக்களினும் இழிந்த வராவர்" என வெறுத்துரைக்கும் திரு.வி.க. " ஒரே படுக்கையில் இருவர் உறங்குவது வெறுக்கத் தக்கது" என்கிறார்.

பெண், "தாயுமாவள்; உடன்பிறந்தவளுமாவள்; மகளு மாவள்; கடவுளுமாவள்; எல்லாம் அவள்" என்றும், அவள் 'அந்தண நிலையள் ' என்றும் தெளிவிக்கிறார்.

அடுத்த கட்டுரை (9) பிள்ளைப்பேறு என்பது.

தாய் தந்தையர் அன்பினின்றும் பிறக்கும் ஆரமுதம் குழந்தை என்னும் திரு.வி.க. "தாய் கருவுற்ற காலத்தில் அச்சம் - ஐயம்- கவலை - பொறாமை- வெகுளி முதலிய கனல்கள் மனைவி மனத்தில் மூளா வண்ணம் நாயகன் நடந்துவரல் நன்மை பயக்கும்" என்கிறார்.

பிள்ளைப்பேற்றின் சிறப்பை, "வாழ்வில் சோர்வு தோன்றி இன்பம் மறையும் வேளையில், பிள்ளை பிறந்து, சோர்வைப் போக்கி, இன்பத்தை நிலைபெறுத்துகிறது" என்றும்,."புறத்தே வேலை செய்து வரும் தலைவனின் சோர்வையும், அகத்தே வேலை செய்து அயரும் தலைவியின் சோர்வையும் போக்கும் அமிழ்தம் குழந்தை" என்றும்,

"பிணக்கு பிள்ளையில்லா வீட்டில் வளரும் பிள்ளை யுள்ள வீட்டிலோ அது ஞாயிறு முற்பட்ட பனிப்படலம் போல் ஒழியும்" என்றும்,

"மைம்மாறு கருதாக் கடவுட் டொண்டு பெற்றோரிடம் வளர்ந்து வரப் பிள்ளைப் பேறு துணை செய்கிறது" என்றும் திரு.வி.க. திருவாய் மலர்கின்றார்.

பத்தாம் பகுதி 'பெண்ணலன்' என்பது. உடல்நல னோம்பல். இயற்கையோடியைந்த வாழ்வு, நோன்பு என்பவற்றை உரைத்துப் பெண்ணலன் ஓம்பக் கூறுகிறார்.

பதியிலார் என்பதும் கைம்மை என்பதும் 11, 12ஆம் பகுதிகள்.

"பெண்ணுலகம் ஒரு தெய்விகமானது. அதன் கண்ணும் ஒரு கறை படிந்திருக்கிறது. அக் கறை ஒழியும் நாள் எந்நாளோ தெரியவில்லை. ஆணுலகம் தூய்மையுறும் நாளே அந்நாள் என்க"

என்னும் பதியிலார் முகப்பே, இவ்விரண்டன் கேட்டின் மூலத்தையும் தீர்வையும் சுட்டிவிடுகின்றது என்க.

"கைம்மை நிலை பெண்ணுலகிற்கும் ஆணுலகிற்கும் பொதுவானது" என்கிறார்.

- ஒப்புமா உலகம்? ஒப்பவேண்டும் அல்லவோ!

"சாத்திரம் எது? இயற்கை நெறிக்கு மாறுபட்டு எழுதப் பட்டன எல்லாம் சாத்திரங்கள் ஆகுமா? ஆகா! சாத்திரம் என்பதன் பொருள் என்னை? 'இதைச் செய்', 'இதைச் செய்யற்க' என்பது. இயற்கைக்கு உரியதைச் செய்தல் வேண்டும். இயற்கைக்கு மாறு பட்டதைச் செய்தல் ஆகாது . இதை மனச் சான்று அவ்வப்போது உணர்த்தி வரும். இதுவே சாத்திரம்.

"தின்று கொழுத்துப் பிறரை அடக்கியாள, இயற்கைக்கு முற்றும் அரண் செய்யாத பொருள் பொதிய, முரடர் சிலர் எழுதிய ஏடுகள் யாவும் சாத்திரங்கள் ஆகா". இதனைப் போலிச் சாத்திர மூடர் ஏற்பரா? தக்கோர் ஏற்கச் செய்வரா?

நிறைவுத் தலைப்பு - 'பெண்மை - தாய்மை - இறைமை ' என்பது. நூலின் திரட்டு இதுவே. பெண்ணின் பெருமை யுணர்ந்து பேணிப் போற்றுதல் ஆண் பிறவிக்கடன் என்பதை, "ஆண்மக்களே! உங்கள் பெருமை பெண்ணுடன் பொருந்தி நிற்பது; உங்களைப் பெற்றவள் பெண்; உங்களை வளர்ப்பவள் பெண்; நீங்கள் பெண்ணாகாது, அதாவது பெண்மை நிலை பெறாது, அதாவது அமைதி நிலை எய்தாது, விடுதலை யடைதல் இயலாது. பெண்ணால் நலனடையும் நீங்கள் அப்பெண் ணுலகையா வெறுப்பது? துறப்பது? நன்றி கொல்லாதே யுங்கள்; தாய் நன்றி கொல்லாதேயுங்கள்" என எச்சரிக்கிறார்.

அவர்கண்ட பெண்ணின் பெருமையைப், பெண்ணுலகம் கொள்ளுமா? போலி நாகரிகமும், தற்செருக்குத் தலைதூக்கலும், வீடு வந்து கேடுசூழும் ஊடகப்பாடும் உதவுமா?

ஆணுலகும் பெண்ணுலகும் ஒருங்கே எண்ணி உய்யுநெறி காண வேண்டிய காலக் கட்டாயம் ஈதாம்!

# உள்ளொளி

திவான்பகதூர் **தெய்வசிகாமணியார்** மணிவிழாப் பொழிவாக வெளிப்பட்டு, நூலாக்கம் பெற்றது உள்ளொளி.

திரு.வி.க.வின் முழுதுறு ஈடுபாடு மட்டும் உள்ளொளிப் பொருள் அன்று. மணிவிழா நாயகரும், மணிமணியான கருத்துகளைக் கூர்ஞ் செவிகளுக்கு விருந்தாகக் கொள்ளத் தேங்கிக் கிடந்த பெரு மக்களும் காரணர் ஆவர். இந்நாள் இப்படியொரு பொழிவு மணிவிழா மேடையில் நிகழின், செவிதருவார் ஓரைவர் ஒருபதின்மரேனும் ஒன்றி உளங்கூர்ந்து இருப்பரோ? பெரிய பெரிய ஆய்வரங்குகளில் தானும் இத்தகு செய்தி பொழிவுப் பொருளாய் அமைந்து ஆய்வு வல்லேம் என்பாரும் கேட்கும் நிலையைக் காணவும் இயலுமோ? திரு.வி.க. பேறுபெற்றவர்!

ஏழுநாள் பொழிவு ஏற்பாடாம் மணிவிழாவுக்கு. அவ்வேழு நாள் பொழிவுகளில் **முப்பொழிவு** திருவிக. பொழிவாம். அம்முப்பொழிவுகளும், **உள்ளமும் உருவமும், உள்ளுணர்வும் வழிபாடும், உள்ளொளி** என்பனவாம்! இம்மூன்று பொருளும் வெவ்வேறல்ல; ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன; பொருள் வைப்புள்ள இடம் உள்ளொளியே எனத் தோற்றுவாயில் இத்தலைப்புகளின் இயைபை விளக்குகிறார் திரு.வி.க.

உள்ளொளியே உயிர்; அதற்குக் கரணம் உள்ளுணர்வும் வழிபாடும்; அதன் உடல் உள்ளமும் உருவமும் என்றும் தெளிவிக்கிறார்.

உள்ளம் என்பது பலபொருள் ஒருசொல்; இங்கே உள்வதன் மேலது. உள்வது - நினைப்பது. உள்ளம் எது? “மனம்” என்பது உள்ளம் என்பதன் பொருள் விளக்கம்.

மனம் எங்கே இருக்கிறது? எனின் நெஞ்சத் தாமரையைக் காட்டுவர். ஆனால் மேல்நாட்டு அகத்திணையர் ஆய்வு, ‘மனம் மூளையில் இருக்கிறது’ என்கிறது. மூளையில் ஏற்பட்ட கலக்கம் மனத்துக்கும் ஏற்படுகிறது. கவலையால் நரம்புத் தளர்ச்சியுறுவதுண்டு, அது மூளைக்கும் மனத்துக்கும் உள்ள தொடர்பையும் தளர்ச்சியுறச் செய்யும். மூளைக் கோளாறு மனக் கோளாறு ஆகும். ஆகவே மூளை ஒழுங்கும், நரம்பு ஒழுங்கும், மன ஒழுங்கும் வாழ்வுக்கு இன்றியமையாதன என்பதை விளக்குகிறார்.

மனத்தின் கூறுகளை மேல் - நடு - அடி என்று மூன்றாகவோ, புறம் அகம் என்று இரண்டாகவோ கொள்ளலாம் என்னும் திருவி.க. மேல், நடு, அடி மனவியல்புகளைச் சாட்டுகிறார்.

பொல்லாத **புறமனம்** குவிந்து குவிந்து நடுமனமாகும். குறும்புச் சேட்டைகளினின்று படிப்படியே விடுதலையடையும்.

**நடுமனம்** நல்வழியில் செல்லச் செல்ல அதற்குப் புறத்தாக்குதல் படிப்படியே அற்றுப் போகும். நாளடைவில் அஃது அடிமன மாகும்.

**அடிமனம்** அரும்பும்போதே அஃது அறத்தின் உறையு ளாகும். எல்லா நலன்களும் முளையும் இடம் அதுவே.

"புறமனம் பொறி புலன்களின் கலப்புடையது. அதனால் அது கட்டு உடையதாகிறது. நடுமனமோ பொறி புலன்களின் கலப் பில்லாதது. அதனால் அதை எப்பொறியும் எப்புலனும் கட்டுப்படுத்து வதில்லை. மனவிளக்கம் எல்லார்க்கும் ஒருவிதமாக உறுவதில்லை. விளக்கமே உறாத பிறவிகளும் உண்டு" என்கிறார்.

நடுமன எழுச்சியை நல்வழியில் பயன்படுத்தினால் அடிமனம் முகிழ்க்கும்; அகக்கண் திறக்கும்; மானதக் காட்சி கூடும். பேத உணர்வு அருகும்; பொதுமை உணர்வு பெருகும்; பிறர்க்குத் தீங்கு நினைத்தல் அற்றுப் போகும்; உயிர்கட்குப் பயன் கருதாத் தொண்டு செய்வதில் ஊக்கம் பிறக்கும்.

ஒருவர் ஒரு மொழியில் வல்லவராய் ஒரு நாட்டில் இருப்பர். மற்றொருவர் வேறுமொழியில் வல்லவராய் இன்னொரு நாட்டில் இருப்பர். இருவர் உள்ளத்திலும் ஒரே கருத்துப் படிந்து அவரவர் மொழியில் அது வெளிவரும். காரணம் இருவர் அகக் கண்ணும் திறக்கப் பெற்றமையாகும். அகக் கண்ணர்க்கு மொழி வேற்றுமையு மில்லை. பிற வேற்றுமைகளும் இல்லை. அற்புதங்கள் செய்வாரைத் தெய்வீகர் என உலகம் மயங்குவதைச் சுட்டி திரு.வி.க. எச்சரிக்கிறார். அற்புதத்தை மதிக்கும் பேதைமை, உலகை விட்டு அகலுதல் வேண்டும். அற்புதம் சிறந்ததா? போதனை சிறந்ததா? போதனையே சிறந்ததாம். அற்புதங்களைக் கொண்டு பெரியோர்க்கு உலகம் மதிப்பளித்தலைக் கண்ட பௌராணிகம் அற்புதக் கதைகளைப் பெருக்கிவிட்டது. எனக்குத் தெரிந்த அளவில் பதினொருவர் தம்மை இராமலிங்க சுவாமிகள் என்று கரந்து கரந்து சொல்லித் திரிகின்றனர். அற்புதங்களுக்கு மதிப்பளித்தல் ஆன்ம ஞான முயற்சிக்குக் கேடு சூழ்வதாகும்.

அடிமனம் மலர மலர, காமன் எரியுண்பான்; காலன் உதை யுண்பான்; பொய்யாயின எல்லாம் பொய்யாகும்; மெய்யாயின வெல்லாம் மெய்யாகும். அடங்கிய மனம் வறுக்கப்பட்ட நெல்லைப் போலவும் நஞ்சற்ற பாம்பைப் போலவுமாகும். அந்நிலையில் மனம்

நல்லதாய்க் குரு போல உள்ளொளிக்குத் துணையும் செய்வதாகும் என மும்மன ஆய்வை முடிக்கும் திரு.வி.க. எண்ணம் உலகியலில் பாய்கிறது. இப்பொழிவு நிகழ்ந்த காலத்தில் அணுகுண்டு காணப்பட வில்லை என்பது எண்ணத்தக்கது. திருவி.க. கூறுகிறார்:

“தற்கால உலகம் எப்படி இருக்கிறது? அந்தோ! சொல்ல நா எழவில்லை. என்றும் காணாத கொடிய கொலைப் போரை உலகம் காண்கிறது; படாதபாடு படுகிறது; இன்னும் சின்னாளில் நாமெல்லாம் எங்கே இருப்போமோ? உற்றார் உறவினர் எங்கிருப்பரோ? வீடு வாசல்களும் கன்று காலிகளும் எந்நிலை அடையுமோ? எறிகுண்டுக் கலையும் பீரங்கிக் கலையும் நீர்மூழ்கிக் கலையும் அல்லவோ பெருவிவிட்டன? இவைகள் எல்லாம் தீய எண்ணங்களின் பரிணாமம்” என்று இரங்குகிறார்.

அலையும் உள்ளத்திற்கு ஒரு கொழு கொம்பு தேவை. கொழு கொம்பு எது?

உருவம்! உருவம்! உருவம்! என்று கூறி உருவ ஆய்வு செய்கிறார்.

உருவம் என்றதும் சிலர்க்கு எரி உண்டாகும். உருவம், அஞ்ஞானம் துக்கம் என்போர், தமக்குக் கை கால் கண் மூக்கு வாய் உண்டா இல்லையா என்று சிந்திப்பாராக என்று பலபல விளக்கம் தரும் அவர், ‘உருவமற்ற ஒன்றை உணர்வதற்கும் உருவத் துணை தேவை என்கிறார். அறிவு அழகு காதல் முதலியன தன்தன் இருப்பை வெளிப்படுத்த உருவங்களை அவாவுதலைத் தெளியச் சொல்கிறார்.

உள்ளுணர்வும் வழிபாடும் என்னும் பகுதியே முப்பகுதி களில் விரிவுடையதாகும். உள்ளமும் உருவமும் ஒருநிலையில் மறைந் தொழிவன. அவைகளின் கூட்டுறவால் எழும் உள்ளுணர்வோ அவை களுடன் மறைந்தொழிவதன்று என உணர்வின் சிறப்பை உரைக் கிறார். உள்ளுணர்வு வெளிப்பாடு வழிபாடு. உள்ளுணர்வு வளர்ச்சிக்கு ஒளி போன்றது வழிபாடு என்கிறார்.

கடவுள் உருவும் அருவும் அருவுருவும் ஆயது. இம்மூன்றும் உருவமுடையதே. சட உலகங்களை இயக்கும் ஒன்று சடமாக இருத்தல் ஆகாது. அது சடத்துக்கு மாறுபட்ட சித்து (அறிவு) ஆகும். இயற்கை கடவுளின் உடல். அதற்குள் கடவுள் உயிராக நின்று இயக்குகின்றது. உடலை விடுத்து உயிரை உணர்தல் இயலுமா? கடவுள் உயிர்; இயற்கை உடல். இயற்கை வழிபாடு நாளடைவில் செயற்கைச் செக்குகள் ஆயின. பொருளற்ற வெறுங்கிரியைகள் இயற்கை வழிபாட்டைச் செயற்கையாக்கின.

புறவழிபாடு, அகவழிபாட்டுக்குத் துணையாவது; அகவழிபாட்டில் ஏறும் ஏணி அன்னது. அகவழிபாடே இறையோடு ஒன்றுவிப்பது. ஒன்றல் தனித்த ஒன்றில் நிகழாது. ஒன்றலுக்கு இரண்டு தேவை. ஒன்றுடன் ஒன்றலே ஒன்றல் என்னும் பொருளுடையதாகும்.

மனம் அடங்க யோகத்தில் தலைப்பட்டார், மூச்சைப் பிடிப் பதால் மனம் அடங்கக் கண்டனரோ? வலிந்து மூச்சைப் பிடித்தல் முதலிய யாவும் மூர்க்கத்தின் பாற்படும். பிராணாயா மத்திற் கென்று தனிமுயற்சி வேண்டுவதில்லை. நறுங்காற்று வீசுமிடத்தில் உலவி வந்தால் போதும்; அமர்ந்தால் போதும்; இயற்கை தன் கடனை முறை முறையே ஆற்றும்.

மனம் நினையாமல் வாய் மொழியாது; கை கும்பிடாது. மொழிக்கும் மெய்க்கும் அடிப்படை மனம்.தொடக்கத்தில் மனத்தை நிலைபெறுத்த, வாயும் மெய்யும் தொடர்ந்து வழிபாடு செய்தல் வேண்டும். நாளடைவில் வாயும் மெய்யும் ஓய்வு பெறும். மனம் ஒன்றே வழிபாட்டில் ஈடுபடும். இதுவே தியான யோகம் என்பது. இதற்கு ஒரு குறி வேண்டும். அக்குறி இறையை உணர்த்தும் தத்துவமுடையதாய் இருத்தல் வேண்டும். இதற்கு இயற்கையை அடைவோமாக" என விளக்கும் திரு.வி.க. எடுத்துக் காட்டுகள் பலப்பல காட்டுகிறார்.

வேண்டும் சீர்திருத்தங்களுள் தலையாயது கோயில் சீர்திருத்தம் எனக் கூறும் திரு.வி.க. "கோயில் சீர்திருத்தத்தில் இறங்குவோர் அன்பராய்த் தொண்டராய்த் தன்னல மற்றவராய் இருத்தல் வேண்டும்" என்கிறார்.

என்னென்ன சீர்திருத்தம் வேண்டும் என்பதை, "உத்தியோகஸ் தரை வரவேற்றுத் தனிச்சிறப்புச் செய்யும் இழிவு, கோயிலினின்றும் அகலப் பெறல் வேண்டும். 'நான்' பலியாகும் இடத்திலா 'நான்' அந்தோ! அந்தோ! கோயிலுள் மரியாதை செய்யப்படுவதை அறவே ஒழிக்க முயல்வது பெருந்தொண் டாகும்.

அர்ச்சனையின் அடியில் என்ன இருத்தல் வேண்டும்? அன்பிருத்தல் வேண்டும்! ஆனால் என்ன இருக்கிறது? பணம்! பணம்! பணம் பட மெடுத்து ஆடுகிறது! பணம் கொடுக்கும் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருபோது தனித்தனியே அர்ச்சனை செய்யப்படவேண்டும் என்னும் நியதி யாண்டுள்ளது? எந்த ஆகமத்தில் உள்ளது?

ஓவிய உருவைத் துப்புரவு செய்து, மலரணிந்து, குறித்த வேளையில், தூபதீப வழிபாடு மந்திர வழிபாடு முதலியன செய்து, பின்னைப் பட்டர் ஒருபக்கத்தில் அமர்ந்து ஒழுங்கு முறைகளைக் காத்து வர வேண்டுவது அவர்தம் கடமை. அன்பர்கள் மலராலோ பாட்டாலோ மனத்தாலோ எப்படியோ வழிபாடு நிகழ்த்திச் செல்வது முறைமை. இது பண்டைய வழக்கு. இடைநாளில் இவ்வழக்கு வீழ்த்தப்பட்டது. பணப்பேய் நன்முறையை வீழ்த்தியது. அன்பர்கள் நேரே வழிபாடு செய்யும் முறைமை மீண்டும் புதுப் பிக்கப்பட்டால், கோயில் பலவழி யிலும் சீர்பெறும்.

நிதி நடமாடுமிடத்தில் நீதி நடமாடுதல் அரிது. பொருட் பெருக்கு கோயில்களில் களியாடல்களைப் பெருக்குகிறது. ஊழியர்

களைக் கள்ளராக்குகிறது. ஒழுக்க ஈனராக்குகிறது. சொத்துகளை என்ன செய்வது? அவைகள் பறிமுதல் செய்யப்படல் வேண்டும்.

கோயில் பணிக்கென்று எவரும் பொருள் திரட்ட வேண்டிய தில்லை. கோயில் பணிகள் கூலிகளால் செய்யபட லாகாது. அவைகள் அன்பர்களால் செய்யப்படல் வேண்டும்.

தர்மகர்த்தர்களையும் மடாதிபதிகளையும் மற்றவர் களையும் கெடுப்பது எது? கோயிலா? மடமா? கோயிலுமன்று, மடமுமன்று, அவர்களைக் கெடுப்பது சொத்து.

ஏழைகள் நிலைகண்டு, இரக்கம் கொண்டு அவர்கட்கு உணவு உடை இடம் முதலியன அளித்தல் தொண்டாகக் கருதப்பட்டு வந்தது. இனி அக்கருத்து மாற்றமுறுவது நல்லது. தொண்டு என்று ஏழைக் கூட்டத்தைப் பெருக்கலாகாது. ஏழைக் கூட்டத்தைப் பெருக்கு வதைப் பார்க்கிலும், ஏழ்மையைப் போக்க முயல்வது சிறந்த தொண்டாகும்; இது காலத்துக்கு ஏற்றதுமாம். உருவ வழிபாடு உயிர்கள் வழிபாடாக விரிவது என்று கூறும் திரு.வி.க. பிறவி தோறும் பயன்கருதாப் பணி செய்யும் பேற்றை யான்பெற ஆண்டவனை வேண்டுகிறேன் என இரண்டாம் பொழிவை நிறைவு செய்கிறார்.

உருவங்களை அடியார்கள் தொட்டு வழிபடும் பழமுறை தென்னகக் கோயில்களில் தந்நலக் கூட்டத்தாரால் ஒழிக்கப் பட்டாலும், வடநாட்டில் அனைவரும் வழிபடும் உரிமை இருப்பதைக் கண்டேனும் கண்ணுடையார் திருந்தமாட்டாரா?

* * * *

கோயிலுக்கு வரும் செல்வரையும் பணவரையும் பதவியரையும் ஓடிஓடிப் பல்லிழித்து நெளிந்தும் வளைந்தும் அருச்சகரும் அறங் காவலரும் வரவேற்கும் இழிமை - மானக்கேடு - சிறப்பிப்பா? தம் கேடு கெட்ட செயல்களை யெல்லாம் மறைப்பிக்கும் சூழ்ச்சியா? சிந்திப்பார் சிந்திக்க வேண்டாமா?

* * * *

அமிர்த சரசு பொற்கோயில் துடைப்பார் - கூட்டுவார் - கழுவுவார் எவர்? அவரவரே தம் பொறுப்பில் செய்வதை உணரமுடியாதா?

* * * *

ஐந்தாண்டு ஆட்சியைப் பற்றி வீற்றிருக்கத் தொண்டா அடிப்படை? தூய்மையா அடிப்படை? அள்ளி அள்ளி இலவயங் களை வழங்குவது எம் கொள்ளையை நடத்த முன்பணம் என்பது புரியவில்லையா?

* * * *

பசியாற்றல் உயர்வே; ஆனால் அப்பசியை அவரே மாற்றிக் கொள்ளும் வகையில் உழைப்புத் தருதல் உரிய மான முறை என்பதை,

***"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை***
***மாற்றுவார் ஆற்றலின் பின்"***

என்னும் வள்ளுவம் இந்த மண்ணின் அறவர் கொடையல்லவா!

* * * *

திரு.வி.க. வேண்டிய சீர்திருத்தங்கள் அவர்காலத்திலும், இக்காலத்தில் ஒரு நூறுமடங்கு கட்டாயத் தேவையாம் என்க.

நிறைவுப்பொழிவு, 'உள்ளொளி' என்பது.

உடல் நலம் பெறின் உள்ளம் தூயதாகும். தியான யோகத்துக்குத் தூய உள்ளம் தேவை. தூய உள்ளத்தால் இயற்கைக் கூறுகளையாதல், அவைகளின் நுட்பங்கள் அடங்கிய ஓவிய உருவங்களையாதல் தியானம் செய்யச் செய்யப் பலதிற ஒளிகள் படிப்படியே தோன்றித் தோன்றி, மறைந்து மறைந்து, இறுதியில் வாடாத உள்ளொளி விளங்கப்பெறும். உள்ளொளி நெஞ்ச மலரில் கோயில் கொள்ளும்; எங்கும் கோயில் கொள்வதாகும்.

மாசற்ற மனம் தீயொழுக்கத்துக்கு இரையாகாது. அது பிறர்குற்றத்தைப் பாராட்டும் நீசத்தைப் போக்கும். தன் குற்றத்தைக் கருதிக் கருதி அழச்செய்யும். அவ்வழுகையே முறையீடு என்பது. முறையீடு தியான யோகத்தின் உயிர்நாடி (தியானம் -உள்ளுகை) பாவஞ்செய்த இரும்பு மனம் - வன்னெஞ்சம் - மாண்டு போயிற்று. புதிய அன்புமனம் - அறநெஞ்சம்-தோன்றியது. பழைய ஆள் மாண்டான்; புதிய ஆள் பிறந்தான்.

ஒரே இறை ஒரே நெறி என்பது சன்மார்க்கம். ஒவ்வொரு சமயமும் சமரச சன்மார்க்கம் என்பது எனது வாழ்க்கையில் செவ்வனே விளங்கியது என்கிறார் திரு.வி.க.

சன்மார்க்கம் வேறு உலகமார்க்கம் வேறு என வாழ்வு நடத்துவது தவறு. சன்மார்க்கத்தில் அனைவரும் சேரவாரும் என்னும் வேண்டுகையுடன் பொழிவை நிறைவிக்கிறார்.

'சித்தம் திருந்தல் புதுப்பிறவி' என்பதை விளக்குவது திருவிகவின், 'சித்தம் திருந்தல் அல்லது செத்துப்பிறத்தல்' என்னும் நூலாம் என்பதை நினைவில் கொள்க. 'நினைப்பவர் மனம்' என்பதும் அவர்தம் நூல்களுள் ஒன்றே.

# முடியா? காதலா? சீர்திருத்தமா?

திரு. வி. க. நூல்களில் இது தனித்தன்மையது. அரசியல் நூலா? காதல் நூலா? சீர்திருத்தநூலா? என்றால் மூன்றும் பொதுளிய நூல்.

அரசியல், காதல், சீர்திருத்தம் ஆகிய மூன்றும் பற்றிய விளக்க நூல்கள் பலப்பல இயற்றியவர் - பொழிந்தவர் - திரு. வி. க. ஆனால், இம்மூன்றையும் இணைத்துக் கண்ட இனியநூல் இந்நூல்.

அரசியல் வரலாற்று வகையிலும் புதுமை! காதல் வகையிலும் புதுமை! சீர்திருத்த வகையிலும் புதுமை! இந்நூல்.

மணவிலக்கு, மறுமணம் என்பவை ஆண்பால், பெண்பால் ஆகிய இருபாலுக்கும் பொதுமையுற்றது மேலைநாட்டு வழக்கமும் - சட்டமும்! அம்முறை நம் நாட்டுப்பார்வையில் மதிப்பு இழந்தவை. ஆதலால் நம்மவர் பார்வையில் மேலைநாட்டவர் பார்வை மதிப்புக் குரியதாய் இல்லை. மேலை நாட்டவர் பார்வையில் நம் நாட்டவர் பார்வை இழிமைக்குரியதாய் எண்ணப் படுகின்றது.

இதற்குத் தீர்வு என்ன?

திரு.வி. க. ஓர் அருமையான - முறையான - தீர்வு காண் கிறார். "அவ்வந்நாட்டவர் வழக்கம், சட்டம் ஆகியவற்றைக் கொண்டே, அவ்வந்நாட்டவர் வாழ்வு நெறியை மதிப்பீடு செய்ய வேண்டும்" என்பது அது.

அளவை வகைகள் எத்தனை? அளக்கப்படும் பொருள் சார்ந்ததல்லவோ அளவைக் கருவி? ஆகவே அளவைக் கருவி ஈதெனக் கொண்டு, முறையான முறைமன்ற நடுவர் பார்வையில் ஆய்ந்து முடிவுரைக்கும் நூலாக அமைந்துள்ளது இந்நூல்.

நூலின் தோற்றுவாயில், "1936 ஆம் ஆண்டின் இறுதியில் உலகில் ஒரு பெரும் நிகழ்ச்சி உற்றது. அஃதென்னை? ஒரு பெரிய சாம்ராஜ்யத்துக்குத் தலைமை பூண்டிருந்த ஒருவர், அத்தலைமைப் பதவியை நொடிப் பொழுதில் துறந்தமையாகும்" என்கிறார்.

ஒரு பெரிய சாம்ராச்சியம் என்பது பிரிட்டிசுப் பேரரசு. தலைமை பூண்டிருந்தவர் எட்டாம் எட்வர்ட்டு. தலைமைப் பதவியை இழந்ததன் காரணம், "அவர் காதலித்த பெண்ணை மணந்தால் அவர்க்கு அரசுரிமை இல்லை" என்னும் தடை. காதலிக்கப்பட்டவர் எவர்? வின்சர் கோமகளார்! தடுக்கப்பட்டது ஏன்? அவர் இருவரை மணந்து விலகியவர் என்பது தடை.

*மணம் என்பது அவரவர் விருப்பத்தினின்றும் எழுவது. "எட்வர்ட்டு மன்னர் தம் மனம் பற்றிய ஒரு மங்கையை மணக்க விரும்பினார். அதைத் தடுக்கும் உரிமை எவர்க்கு உண்டு? இறைவனுக்கும் அவ்வுரிமை இல்லை. இறைவன் இயற்கைவழி கடனாற்றுவோன். இயற்கைக்கு மாறுபட்டு இறைவனும் நடப்பதில்லை."*

*"சட்டம் எல்லார்க்கும் பொதுவாக செய்யப்படுகிறது. அதை ஒருவர்க்கு ஒருவிதமாகவும், மற்றொருவர்க்கு இன்னொரு விதமாகவும் பயன்படுத்தலாகாது."*

*"மேல்நாட்டு மணவிலக்கும் மறுமணமும் அந்நாட்டு வழக்க ஒழுக்கங்களின்றும் அமைந்தவை. அவ்வழக்க ஒழுக்க சட்ட திட்டச் சூழலிடைப் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் ஒருவர் மனம் எம்மய மாகும்? அம்மணக்கண் கொண்டே அவரது நடைமுறையை நோக்குதல் வேண்டும்."*

*"வின்ஸர் கோமகளார் மேல்நாட்டு நாகரிகம் என்னும் தடத்தில் பூத்த ஓர் அழகிய மலர். அம்மலரில் எம்மணம் கமழும்? அவர்தம் நாட்டு வழக்க ஒழுக்க மணமே கமழும்."*

***- என்கிறார் திரு.வி. க.***

*மணவிலக்கு, மறுமணம் என்பவை மேலைநாட்டு முறைப்படி முறையானவை ஆதலால் அதனைக் காட்டி அரசுரிமையைப் பறித்தல் ஆகாது என்கிறார்.*

*சிம்சன் "நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார்" என்பதும், "அமெரிக்கப் பெண்மணி" என்பதும் எட்வர்ட் கோமகனார் மணத்தடையாகவும், முடிசூடல் தடையாகவும் உள்ளமையைப் பொருளற்ற பொறுப் பற்ற உரையென விளக்குகிறார். அவர்கள் வின்சர் கோமகனார், வின்சர் கோமகளார் இருவர் சால்புகளையும் அவர்கள் காதற் சிறப்பையும், எட்வர்ட் முடிதுறப்பையும் விரித்துரைக்கும் திரு.வி.க:*

*"சகோதரர்களே! உலகை நோக்குங்கள். பதவி இன்பத்தைச் சிந்தியுங்கள்! ஒரு பெரும் சாம்ராஜ்யத் தலைவருக்குத் தாம் விரும்பிய நங்கையை மணம் செய்து கொள்ளும் உரிமை இல்லை! இவ்வுரிமை காட்டில் விலங்கொடு வாழும் மலைவாணனுக்கும் உண்டு . ஒரு பெரும் மன்னர் மன்னருக்கு அவ்வுரிமை இல்லை! என்னே உலகம்! இங்கிலாந்து உரிமை நாடாம்! என ஏங்குகிறார்.*

*மக்கள் எதையும் பறி கொடுக்கலாம். ஆனால் உரிமையை மட்டும் பறி கொடுத்தலாகாது. உரிமையில் சிறந்த உரிமை காதல் உரிமை என்று கூறும் திரு.வி. க. "உலக சரித்திரத்தில் எட்வர்டின் தியாகத்தைப் போன்றதொரு தியாகம் இல்லை" என்கிறார்.*

*"முடியா? காதலா? சீர்திருத்தமா? என்பதில் நடுவணதாய்ச் சிங்க நோக்காய் நிற்பது காதல். அஃது ஒருநோக்கால் முடியை*

வீழ்த்தியது. மற்றொரு நோக்கால் சீர்த்திருத்த உலகை எழுப்பியது. இவ்விரண்டனுள் சிறந்தது, சீர்திருத்த உலகை எழுப்பியது ஆகும்'' என நூல் தலைப்பு விளக்கம் தருகிறார். “உரிமை வேட்கை உள்ளம், உலகக்குரல் உள்ளம்'' என்பதன் சான்று திரு.வி. க. வரைந்த இந்நூல்!

திரு.வி.க. நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பயன் பாட்டால் அவர்தம் நூல்கள், கட்டுரைகள் ஆகிய அனைத்துப் படைப்புகளும் **‘திரு.வி.க. தமிழ்க் கொடை’** என்னும் வரிசையில் வெளிப்படுகின்றன.

திரு.வி.க. நூல்களையும் கட்டுரைகளையும் ஒருமொத்த மாகப் பெறும்பேறு இதுகாறும் தமிழ்மண்ணுக்கு வாய்க்க வில்லை. அவர்வாழ்ந்த நாளிலேயே சிலநூல்கள் கிட்டும்; சிலநூல்கள் கிட்டா! ‘தேசபக்தன்’ ‘நவசக்தி’ யில் வந்த கட்டுரைகளுள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றையன்றி முற்றாகப் பெறும் பேறோ அறவே வாய்த்திலது. திருவி.க. வழங்கிய வாழ்த்து, அணிந்துரை முதலியனவும் தொகுத்தளிக்கப் பெறவில்லை. இவற்றையெல்லாம் தனிப்பெருஞ் சீரிய பதிப்பில் ஒருமொத்தமாக வழங்கும் பெருமையைக் கொள்பவர் **தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ.இளவழகனார் ஆவர்.**

பாவாணர் நூல்கள், ந.சி.க.நூல்கள், அப்பாத்துரையார் நூல்கள், இராகவனார் நூல்கள், அகராதிப் பதிப்புகள் எனத் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டு, அவ்வெளியீட்டுத் துறையின் வழியே தமிழ்மொழி, தமிழின மீட்சிப் பணிக்குத் தம்மை முழுவதாக ஒப்படைத்துப் பணியாற்றும் இளவழகனார் திரு.வி.க. தமிழ்க் கொடைத் தொகுதிகளை வெளியிடுதல் தமிழகம் பெற்ற பெரும் பேறேயாம். வாழிய அவர்தம் தொண்டு! வாழியர் அவர்தம் தொண்டுக்குத் துணையாவார்!

# திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்

*திரு.வி.க. என்பதன் விரிவாக்கம் என்ன?*

*"திருவாரூர் விருத்தாசல முதலியார் கலியாணசுந்தரம்" என்பதாம். அவர்தம் 'வரலாற்று நூல்', வாழ்க்கைக் குறிப்புக்கள் எனப்பட்டது ஏன்?*

*"எனது வாழ்க்கை வரலாற்றை எழுதுதல் வேண்டுமெ என்னும் எண்ணம் அணித்தே என்பால் எழுந்தது. அவ் வெண்ணம் முன்னரே எழுந்திருந்தால் நிகழ்ச்சிக் குறிப்புக்களை அவ்வப்போது திரட்டிச் சேமித்து வைத்திருப்பேன். யான் அவற்றைத் திரட்டினேன் இல்லை" என்றும்,*

*"எனது வாழ்க்கை வரலாற்றை முறைமுறையே கிளந்து கூறப் போகின்றேன் இல்லை. அதைக் கிளந்து கூற யான் எண்ணியதே இல்லை. எண்ணியிருப்பேனாயின் நாட்குறிப்பை நிரலே பொறித்து வைத்திருப்பேன். ஆதலின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் இன்றி யமையாத சிலவற்றை மட்டும் கூறு கூறாகக் குறித்துச் செல்ல முயல்கின்றேன்." என்றும்,*

*"நாட்குறிப்பும் பிறவும் ஒழுங்குமுறையில் அமையாத ஒன்றை வரலாறு அல்லது சரிதம் என்று எப்படிக் கூறுதல் கூடும்? அதனால் இந்நூல் 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்னும் தலைப்பைத் தாங்கலாயிற்று" என்றும் திருவிக. அவர்களே நூல்முன்னுரை, தோற்றுவாய் ஆகியவற்றில் குறிப்பிடுவதால் நூற்பெயர்க்குறிப்பு கைவந்த கனியாகப் புலப்படும்.*

*அண்ணல் காந்தியார் தம் வாழ்வைச் 'சத்தியசோதனை' யாக்கினார். அதன் விளக்கமாகவே அவர் வரலாறு அமைந்தது. திரு.வி.க.வும் தம் வாழ்வைச் சோதனை (ஆய்வு)க்கு உட்படுத்து கிறார். அவ்வாய்வின் வெற்றிப்பாட்டு விளக்கமே வாழ்க்கைக் குறிப்புக்கள் ஆதலையும் தெளிவிக்கிறார்.*

*"எவருடைய வாழ்க்கையில் அறிவு படிப்படியே வளர்ந்து, எவ்வுயிரும் பொதுவெனும் தெளிவு தோன்றித் தம் உயிரே பிற உயிரும் என்னும் உணர்வு பொங்கித் தொண்டு செய்யும் அன்புச் செல்வமாகிய அந்தண்மை அமைகிறதோ, அவர்வாழ்க்கை வெற்றி யுடைய தென்றும், மற்றவர் வாழ்க்கை தோல்வியுடைய தென்றும்*

எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அநுபவம் முதலியன எனக்கு உணர்த்துகின்றன. எனது வாழ்க்கையில் அந்தண்மை இடம் பெற்றதா? இல்லையா? இதற்குச் சோதனை வேண்டும். என் வாழ்க்கைக் குறிப்புக் கள் வெளிவரின் சோதனைக்கு வழி ஏற்படும்"

என்று தோற்றுவாயிலே குறிக்கும் திரு.வி.க., வாழ்க்கைக் குறிப்புக்களின் இறுவாயில்,

"என் வாழ்க்கைக் குறிப்புக்கள் சிலவற்றைப் பொதுமக்கள் முன்னே கிடத்தியுள்ளேன். பலதிறத் தொல்லைகளிடை என் வாழ்க்கை வளர்ந்தது. அதனால் அது பொருட் பெருக்கில் புரளாதது ஆயிற்று. தொண்டின் பெருக்கில் புரள்வதாயிற்று. வாழ்க்கையின் அடைவு பொருட் பெருக்காயின் என்னுடையது தோல்வி எய்திய தாகும். தொண்டாயின் அது வெற்றி எய்தியதாகும்.

தொண்டின் சேய் எது? அந்தண்மை.

தொண்டு அந்தண்மை ஊற்றைத் திறந்தது. அந்தண்மை அருவியாய் ஓடுகிறது. அதுவெள்ளமாதல் வேண்டும். எனது வாழ்க்கை ஒரோவழி அந்தணச் செல்வத்தைப் பெற்றது. அவ்வந்தணச் செல்வம் முழுநிலை எய்தும் முயற்சியில் எனது வாழ்க்கையில் எஞ்சிய பகுதியும் ஈடுபடுமாறு ஆண்டவன் அருள் சுரப்பானாக."

என்கிறார்.

திரு.வி.க.வின் வாழ்க்கைப் பிழிவு என்ன?

எந்தப் பிறவியும் பிறக்கும்போதே 'அந்தணப் பிறவி' எனப் பிறப்பது இல்லை. பிறந்து வளரும் வகையாலும் தொண்டாற்றும் திறத்தாலும் ஆருயிர்க்கு இரங்கும் அருளறங்களாலுமே அந்தணச் செல்வத்தைப் படிப்படியே அடைந்து நிலைபேறுற முடியும் என்பதே திரு.வி.க. வின் வாழ்க்கைப் பிழிவு ஆகும். இதன் விரிவாக்கத்தை எம்மால் இயற்றப் பெற்ற **திரு.வி.க. என்னும் தீந்தமிழ் அந்தணர்** என்னும் நூலில் காண்க.

வாழ்க்கைக் குறிப்புக்கள் உயர் பெருங்காவியச் சுவை நல்குவதை அணிந்துரை வழங்கிய திருமபாலசுப்பிரமணியனார்,

"சிற்சில பகுதிகளில் காவியச் சுவை ஊற்றெடுத்தோடுவதையும், சில இடங்களில் வீரச்சுவை மதர்த்தெழுந்தாடுவதையும், வேறுசில இடங்களில் உள்ளம் கனிந்து உருகுவதையும் பன்முறை படித்துப் படித்து அனுபவிக்கலாம். மனைவியோடு தாம் இல்லறம் நடத்திய பகுதியை எவர் படித்தாலும் அவர் தங்கண்ணீர் பெருகுவது திண்ணம்" என்பது உணர்ந்து படிக்கும் எவர்க்கும் உண்மைப் பொருள் என்பது உறுதி.

பிறப்பு, சோதிடம், குழந்தைமை, பள்ளிப்படிப்பு, பிள்ளைமை என்பவற்றில் வளரும் ஆலமரமாகத் திரு.வி.க. வைக் காணும் நாம்,

கல்வி, ஊழியம், அரசியல், தொழிலாளர் இயக்கம், சமயமும் சன்மார்க்கமும், மாதர், சீர்திருத்தம், தொண்டு, உடல் என்னும் பகுதி களில் கிளைகளும் வீழ்துகளும் பரப்பி, அண்ணல்யானை அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர் இருக்கையாய் மன்னும் மாண்பைக் காண முடியும்.

திரு.வி.க. வரலாற்றின் தனிச்சிறப்பு ஒன்று உண்டு. அது, அவர் வரலாற்று நூல் என்று அளவிட்டு அமைய முடியாப் பெருமை சான்றாய், அவர் வாழ்ந்த காலத் தமிழகப் பெருமக்கள் வரலாற்றுக் குறிப்புப் பெட்டகம் எனல் சாலும்! அந்நாளில் அவரொடு தொடர் புடையவராய் எவரெவர் இருந்தாரோ, அவரவரனைவரும் தம் வரலாற்றைத் தாம் எழுதினார் அல்லர் ஆயினும் அவர் வரலாற்றை அழியாப்புகழ் ஆவணம் ஆக்கி வைத்தவர் திரு.வி.க. அவர்களே! மீண்டும் குறிப்பிட்டால் புகழ் ஆவணம்' என்பதை அழுத்திச் சொல்ல வேண்டும். ஏன்?

> ***'பிறர் பிறர் சீரெல்லாம் தூற்றிச் சிறுமை***
> ***புறங்காத்து"***

என்பது அவர்தம் கட்டளை நெறியாய் அமைந்தமையே யாம். கல்விப் பகுதியில் மட்டும் தனித்துக் குறிப்பிடப் பெறுவார் நாற்பத் தொருவர். இவ்வாறே பிற பகுதிகளிலும் இடம் பெறுவர் சிறப்புப் பெயர் அகரவரிசையில் இடம் பெறுபவர் ஏறக்குறைய ஐந்நூற்றுவர்! இப்பேற்றைப் பிறர் வரலாறு வழியாகப் பெறுதல் அரிதே அல்லவோ!

மனத்திற்கு அமைதி வேண்டுமா, துன்பத்திற்குத் துன்ப மாக்கும் துணிவு பெற வேண்டுமா, சால்பு என்பதற்கு எழுதி வைக்கப்பட்ட ஓவியம் ஒன்றை உயிர்ப்போடு கண்ணேரில் காண வேண்டுமா', யான் படிக்கும் போது என்னை நான் அறியேன் ' என்னும் வேட்கையில் ஒரு நூலைக் கற்க வேண்டுமா, திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்களைக் கற்பாராக! என்றும் பார்வைப் பயன் நூலாக வைத்துக் காப்பாராக!

திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் முதற்பதிப்பாக 1944இல் வெளிவந்தது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியாக முப்பதிப்புகள் வெளிவந்தன.

# பெரியபுராணம்
# (குறிப்புரையும் வசனமும்)

*'மாக்கதை' என்றும், 'திருத்தொண்டர்தம்சீர்' என்றும் பாயிரத்து வரும் தொடர்களாலும், திருத்தொண்டர் புராணம் என்பாம் என்னும் நூற்பெயர்ச் சுட்டாலும் இருபெயர் கொள்ளும் ஒரு நூல் இந்நூல் என அறியலாம். மாக்கதை - பெரியபுராணம்.*

*அவை அடக்கப் பாடலில், 'அளவு இலாத பெருமையர்' தெரிவு அரும் பெருமைத் திருத்தொண்டர் என்பவற்றையும் 'செயற்கரிய செய்வார் பெரியார்' என்னும் குறளையும் எண்ணின் பெரியபுராணப் பெயரீடு விளங்கும். "செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம்" என வரும் இயற்பகை நாயனார் புராணத் தொடர் திருக்குறளை ஒன்றி நிற்றலையும், அதனைத் திரு. வி. க. சுட்டுதலையும் (432)கருதுக.*

*இனிப் பெரிய புராணம் சிந்தாமணிக் காவியத்தின் வழக்கை ஒழிக்க எழுதப்பட்ட நூல் என்னும் பின்னவர் கருத்தைத் திரு. வி. க. அருமையாய்த் தம் முன்னுரைக்கண் உரைப்பதை ஏற்றுப் போற்றல் சிவனியர்க்குச் சால்பாம். திரு.வி.க. எடுத்துக்காட்டும் சிந்தாமணிப் பாடல்களை உரையில் கண்டு தெளிக. அளவிலாத பெருமை அடியார் புகழை அளவிலா ஆசை உந்தித்தள்ள இயற்றினேன் என்று சேக்கிழாரடிகளே கூறும் போது (5) பிறர் வேறு காரணம் தேடிக் காட்ட வேண்டுவது இல்லையாம்.*

*சமணச் சான்றோர் சால்புநெறி விடுத்துப் பின்னாளில் அதனை வேட நெறியாகக் கொண்டவர் தம்மையே சேக்கிழார் கடிந்தார் என்னும் தகவுரை திரு. வி. க. வுக்கே உரிமை பூண்டதாம். மெய்ம்மையும் அதுவாம்! பொய்ம்மை எங்கே புகினும் அதனை நெறிகாட்டித் திருத்துதல் பெரிய ஓர் அன்புக்கடல். சேக்கிழார் அன்பர்: அவன் அன்பை நினைந்து நினைந்து அன்பானவர்; அவரிடமிருந்து பிறந்த காவியம் எத்தகையதாய் இருக்கும்? என்பது காப்பிய ஆசிரியர் தகவும், காப்பியத்தகவும் ஒருங்கே வெளிப் படுத்தும் உரையாம். பெரிய புராணப் பதிப்புகளைச் சுட்டுதல் பதிப்பு வரலாற்றுப் பயன்மிக்கது. அச்சு நூலுக்கு உரையும் உரைக் குறிப்பும் எழுதி அமையாமல் ஏட்டுச் சுவடிகளைத் தேடி ஒப்பிட்டுப் பாடங்கண்ட அருமை, பிற்பதிப்புகளுக்குப் பெருநலம் செய்ததாம். இப்பதிப்பு 1934 இல் வெளிப்பட்டது.*

"உரைகாணப் பெறாத அரும்பதம் இல்லை என்று கூறலாம்" என்றும், "பதவுரை இன்றியும் ஆசிரியர் இன்றியும் பெரிய புராணத்தைப் பயிலுதற்குரிய துறைகளில் இப்பதிப்புச் செப்பம் செய்யப்பட்டிருத்தல் சிறப்பாகக் குறிக்கத்தக்கது" என்றும் வருவனவற்றால் முழுதுறும் உரைவிளக்கம் பெற்ற நூலே இஃது என்பது விளங்கும்.

'நாயன்மார் திறம்' என்றொரு நூலும், 'நாயன்மார் வரலாறு'ம் இவற்றின் பொருள் சார்ந்த சில நூல்களும் இயற்றியவர் திரு.வி.க. பெரியபுராண முதற்பதிப்பு நூல்வடிவில் வரவில்லை. இதழ் இதழாகத் உமாபதி குருப்பிரகாச அச்சுக் கூடத்தின் வழி வெளி வந்தது. அதன் மீள் பதிப்பு, "முதற்பதிப்பைப் பல்வழியிலும் திரித்துத் திருத்தி விரித்துச் செப்பம் செய்யப்பட்டு வந்தது." முற்பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் உள்ள வேற்றுமை பெரிது என்கிறார். மேலும் சமண சமயச் சான்றோரிடம் ஆய்ந்த ஆய்வும் பிற்பதிப்புக்குப் பெரும் பயன் செய்ததையும் குறிப்பிடுகிறார் (19. 5. 1934)

இரண்டாம் பதிப்பில் எழுதப்பட்ட வசனத்தை மட்டும் கொண்டு, நூலின் உள்ளுறைக் கேற்ப 'நயன்மார் வரலாறு' என்னும் தலைப்புடன் தனிநூல் 1937 இல் வெளிவந்தது. முதல்நூலில், "பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராண வசனம்" என்னும் பெயரீடு இருந்தது.

'உலகெலாம்' எனத் தொடங்கும் பாடலுக்கு எழுதியுள்ள உரை - விளக்கம் - தொடர்பு - சான்று என்பவை போல எல்லாப் பாடல்களுக்கும் எழுதியிருந்தால் எத்தனை ஆயிரம் பக்கங்களாக விரிந்திருக்கும் என்பதை அளவிட்டு உரைத்தல் அரிது.

குறிப்புரை எனப்பட்டாலும் ஏறத்தாழ உரைத்தொடர்ச்சி பொழிப்புரை போலவே அமைந்து விடுகின்றது. மேற்கோளும் விளக்கமும் விளக்கவுரை எனத் தோற்றம் தருகின்றன. குறிப்புரை, பொழிப்புரை, விளக்கவுரை என மூவுரையும் உடையதே எனத் தோன்றும் பாடல்கள் மிகப்பலவாம்.

# பட்டினத்துப் பிள்ளையார் - திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும்

பட்டினத்தாரும் பத்திரகிரியாரும் துறவியர். குருவர் முன்னவரும் மாணவர் பின்னவரும் ஆயவர். காவிரிப்பூம்பட்டித்துப் பிறந்தவர் 'பட்டினத்தார்' எனப்பட்டார்.

பட்டினம் கடற்கரை சார்ந்த நகர்; பட்டணம் உள்நாட்டு நகர்; இவற்றின் வேறுபாடு அறியார் பட்டினத்தாரைப் பட்டணத்தார் எனவும் வழங்கினர்.

பட்டினத்தார் இயற்றிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள. அவர் பெயரால் திருப்பாடல் திரட்டு என்றும் ஒரு நூலுண்டு. இரண்டன் பொருள், சொல்லாட்சி இவற்றைக் கொண்டு பட்டினத்தார் ஒருவர் அல்லர்; இருவர் என்பர்; "இருவர் என இடமுண்டு; எனினும் தக்க சான்று வேண்டும்" என்று குறிப்பிடு கிறார் திரு.வி.க.

பட்டினத்தார் தம் அன்னையார் இயற்கை எய்திய போது அவலமுற்றுப் பாடிய பதிகத்தை நோக்குவார் அவர் வாய் பெண்மையைக் கடுமையாகப் பழித்திருக்க மாட்டாது என்பதைத் தெளிவர். ஆதலால் பட்டினத்தார் பாடல் தொகுப்பில் பெண்ணைப் பழிப்பது போலும் பாடல்களை ஒருவர் பாடி இணைத்திருக்கக் கூடும் என்பதற்கு இடமுண்டு.

பட்டினத்தாரையும் பத்திரகிரியாரையும் தாயுமானவர் பாராட்டிச் சொல்லி அவர் நிலையை அடைய அவாவி நிற்பதை உணர்வார், அவர்தம் தூய துறவை மதிப்பர். தூயதுறவு பெண்மையைப் பழியாது. இழிமைக்குப் பொறுப்பு, இழிமை ஆக்கிய ஆணுக்கு அல்லவோ சாற்றப்பட வேண்டும்!

பெண்ணின் பெருமையைப் பேசியும் எழுதியும் பாடியும் பாடுபட்டும் திகழ்ந்தவர் திருவிக. அவர் தொடக்க நாளில் கொண்டிருந்த சைவ அழுத்தத்தையும் அகன்று அப்பாலுக்கு அப்பாலாய் உயர்ந்தேறி, வள்ளலார் கொண்ட "சன்மார்க்கம் என்மார்க்கம்; நன்மார்க்கம்" என நாளெல்லாம் உழைத்தவர். பிறப்பிலோ தொழிலிலோ பால்

வேறுபாட்டு நிலையிலோ ஊன்றி ஏற்றத்தாழ்வு எண்ணாத ஒப்புரவாளர். ஆதலால், பின்னை இந்நூலைக் காலம் கடந்து பதிப்பிக்கும் போது "இந்நாளில் எனில் இவ்விருத்தியுரை எழுதும் பொறுப்பைக் கொண்டிரேன். கொண்டிருப்பின் அவ்வுரைப் போக்கு வேறாயிருந்திருக்கும்" என்று சுட்டியிரார்.

பட்டினத்தார் வரலாறும், பத்திரகிரியார் வரலாறும் அவரவர் பாடல் உரைகளுக்கு முன்னால் வேண்டும் அளவால் தரப்பட்டுள. பின்னர் விருத்தியுரை வரையப்பட்டு, பாடல் முதனினைப்பும் தரப்பட்டுள. விருத்தியுரை என்பதற்கு ஏற்ப விரிவாகவே உளது. அக்காலம் அவரை இயக்கங்களும் அமைப்புகளும் நெருக்கடி யாக்காக் காலம். ஆதலால் விருத்தி எழுத வாய்த்தது.

திருக்குறளுக்கு எழுதிய விருத்தியோ எனின், கட்டாயமாக எழுதியாகும் வேட்கையில் செய்யப்பட்டதாகும். வீட்டுக் காவல் காலமுமாகும்.

இவ்விருத்தியின் அமைப்பு பாடல், பொழிப்புரை, விருத்தியுரை என முப்பால் நடையில் பயில்கின்றது. நெடும் பாடலாயின் உரைத் திறத்திற்கு ஏற்ப, பொருளமைவில் பகுத்துக் கொண்டு பகுதி பகுதியாகப் பாடலை அமைத்துப் பொழிப்புரை வரைந்து விருத்தி வரைகிறார்.

பொழிப்புரை, மூலச் சொல் ஒன்றுக்குத் தானும் பொருள் விடுபாடு இல்லாமல் தொடராய் அமைக்கப்பட்டுளது. பாடல் எனினும் பகுதி எனினும் அதனதன் கருத்தும் அடுத்தே சுருக்கமாக உரைக்கப்படுகின்றது.

கோயில் திருவகவல், முதல் மூன்றடிகளுக்கு மூன்று பக்க அளவும் அடுத்த ஈரடிகளுக்கு இருபக்க அளவும் கொண்ட விருத்தி, பாடற்கு ஒருபக்கமாய் அமைந்து, பூரணமாலை 38-க்கு மேல் பெரிதும் பொழிப்புரையாகவே நிற்கக் காண்கிறோம்.

தொடக்கத்துக் கூறிய விருத்தி பிற்பாடல்களுக்குத் தாமே விளக்கமாதல், பிற்பாடல்கள் எளிமை இன்ன சில ஏதுக்களால் பெருவிளக்கம் தேவைப்படாமல் அமைந்தன என்க.

'புலம்பே' தனிமை என்பது தொல்காப்பியம். பத்திரகிரியார் தாமாக மெய்யுணர்வு நிலையில் நின்று பாடிய பாடல்களே மெய்ஞ்ஞானப்புலம்பலாம். "முத்திதருஞான மொழியாம் புலம்பல்" என்றே அவர் தொடங்குதல் நூற்பெயர் சுட்டும்.

***"அத்தி-முக வன்தன் அருள்பெறுவ தெக்காலம்"***

என வினாவித் தொடங்கும் தொடக்கம்,

எக்காலம் என்னும்வினாவாகவே தொடர்ந்து

***"ஐஞ்சு-கரத் தான் அடியிணையைப் போற்றி செய்து***
***நெஞ்சிற் பொருந்தி நிலைபெறுவ தெக்காலம்!"***

என நிறைக்கிறார்.

தொடக்கமும் ஈறும் மூத்த பிள்ளையாரையே முன்னிறுத்திய முறையீடாய் நூல் அமைகின்றது.

பட்டினத்தாரின் முதல் நான்கு அகவல் வைப்பு திருவாசக வைப்புப் போல்வது. ஆனால் பொருள் அமைதியில் இவை நான்கும் நிலையாமையையும் மையல் இயலையும் மிகமிகக் கடிவன. இக்கடிவு களின் உள்ளீடு, "நிலைபெறா உடல்கொண்ட நீ, நிலைபெறு பேற்றை எய்துதல் கடன்" என வலியுறுப்பதாம்.

அகவல், கட்டளைக் கலித்துறை, வெண்பா என நடையிடும் பட்டினத்தார் பாடல் வண்ணம் தாங்கி நின்று தாழிசை கொண்டு கண்ணியால் நிறைகின்றது.

சில பாடல்கள் பழைய பிரதிகளில் இல்லாமல் இப்பதிப்பில் இடம் பெற்றமை கொண்டு ஏட்டொடு ஒப்பிட்டுப் பதித்தமை புலப்படுகின்றது.

திரு.வி.க. வாழ்வியல் வளர்ச்சி, தமிழ்நடை வளர்ச்சி என்பவற்றை ஆய்வார்க்கு இவ்விருத்தியுரை அடிப்படை அலகாக அமையும் திறத்தது. அத் திரு.வி.க. வா இவர் என எண்ணுவாரும், பின்வளர்ச்சிச் சீர்மை முன்னமேயே அரும்பி நின்றமையை உணர்ந்து திளைப் பதற்கும் வாய்ப்பாகிய நூல் இது. ஆசிரியர் கதிரைவேலர் பதிவு இந்நூலும், பெரியபுராணப் பதிப்பு, கதிரைவேற்பிள்ளை சரிதம் என்பனவுமாம் எனச் சுட்டல் தகும்.

விருத்தி நடையிடும் வகைக்கு ஓர் எடுத்துக் காட்டு:

திருவேகம்ப மாலை 9 ஆம் பாட்டு:

***"கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி"***

என்னும் பாட்டும் விரிவுரையும் காண்க.

# காரைக்காலம்மையார் திருமுறை அரும்பதக் குறிப்புரை

*பதினோராம் திருமுறையில் உள்ளதும், காரைக்காலம்மையாரால் பாடப்பட்டதுமாகிய மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பவற்றுக்கு அரும்பதவுரையும் , குறிப்புகளும் எழுதி வெளியிடப்பட்டது இந்நூலாகும். இந்நூலின் ஒருசிறப்பு தமிழறிஞர் மு. அருணாசலம் அவர்களைக் கொண்டு மூலத்தைப் பழைய ஓலைச் சுவடியுடன் ஒப்பிட்டுப் பதிப்பித்ததாகும். பதிப்பு ஆண்டு 1932.*

*சமணமும் சைவமும் ஒருமையுற்று நிற்கும் நிலையையும், பின்னே சமணத்தில் இயற்கை நெறிக்கு மாறுபட்ட உலகை வெறுத்தல், உடலை ஒறுத்தல், பெண்ணைத் துறத்தல், பெண் பிறவிக்கு வீடு பேறு இல்லை என மறுத்தல் என்பவை புகுந்தமையும் பதிப்புரை விளக்குகிறது. பெரிய புராணம் கூறுமாறு காரைக்காலம்மையாரின் வரலாறு வரையப்படு கிறது. பெண் பிறவிக்கு வீடு பேறு உண்டு என்பது மெய்ப்பிப் பாருள் காரைக்காலம்மையார் சீரிய இடம் பெறுதலைச் சுட்டுகிறது பதிப்புரை. காரைக்காலம்மையாரைப் பற்றி விளங்கும் தோத்திரப் பாடல்களை முன் வைப்பாக வைத்து நூல் நடையிடுகிறது.*

*ஓலைச்சுவடியுடன் ஒப்பிட்டுப் பதிப்பித்த பதிப்பு ஆதலால் பல இடங்களில் பாடவேறுபாடு காட்டுகிறார். எ-டு: 4, 17, 42, 53, 126*

*அரும்பதக் குறிப்புரை எனினும் விரி விளக்கமும் செய்கிறார். எ-டு 3, 67*

*அகநானூறு, அப்பர் தேவாரம், கலித்தொகை, குறுந் தொகை, தக்கயாகப்பரணி, திருவாசகம், பிங்கல நிகண்டு, புறநானூறு, பெரிய திருமொழி, மணிமேகலை என்பவற்றை மேற்கோள் காட்டி விளக்குகிறார். 103ஆம் பாடல் கருத்தைப் 'பென்சர்' என்பார் கருத்தொடும் ஒப்பிடுகிறார். நூலில் ஒன்றன் விளக்கமாக ஒன்று வருவதைச் சுட்டுகிறார் (63) பார்க்க என இடம் சுட்டுகிறார் (50) பிறர் உரையை எடுத்துரைக்கிறார் (48) என்னலுமாம், எனினுமாம், என்ற படி என்னும் வாய்பாட்டில் சில குறிப்பிடுகிறார். (8, 109, 82) என்றார்*

என்றும் கூறுகிறார் (7). பொருளுரைப் போரும் உளர் என்கிறார்.(35) அரிதாக இலக்கணம் கூறுகிறார் (24) நல்ல பொருள் விளக்கம் வேண்டும் இடங்களில் புரிகிறார் (1, 14, 21, 65) இவ்வாறு தம் அருங் குறிப்புகளை நடைப்படுத்துகிறார். திரு.வி.க.வின் பதிப்புரை நூற்பொருள் விளக்கம் காணப் பெரிதும் உதவுகின்றது. அருங்குறிப்புகள் பாடற்பொருள் காண நற்றுணை யாகின்றன.

# திருக்குறள் விரிவுரை
# (பாயிரம்)

*திரு.வி.க. பல்வேறு ஆசிரிய நிலைகளில் ஒளி செய்தவர். மாணவர்களுக்குக் கற்பிக்கும் போதக ஆசிரிய நிலை, பொதுமக்கள் ஊடகமாக விளங்கும் இதழாசிரிய நிலை, நூல் இயற்றும் நூலாசிரிய நிலை, நூல் பதிப்பிக்கும் பதிப்பாசிரிய நிலை, நூல் உரைகாணும் உரையாசிரிய நிலை எனப் பல்வேறு ஆசிரிய நிலைகளில் கடமை புரிந்தார். எழுத்தாளும் நிலை போலவே, பொழிவாளும் நிலையும் பெற்றார். பேச்சும் எழுத்தும் ஒருமையாய்த் திகழும் பெற்றியும் பெற்றார். தாம் பொழிவாளராகவும், போதகாசிரியராகவும் திகழ்ந்த சீர்மையால் பொதுமக்கள் நலம் கருதித் திருக்குறள் வகுப்புகளும் நடத்தினார். அவற்றின் பயிற்சியும் உந்துதலும் திருக்குறள் விரிவுரை யாகித் தமிழுலகம் பெருங் கொடையாகக் கொள்ள வாய்த்ததாம்.*

*சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த சபையில் - நக்கீரர் கழகச் சார்பில் நிகழ்ந்த தமிழ் வகுப்பில் நடத்திய திருக்குறள் பாடம் (1915) சென்னைத் திருவல்லிக்கேணி தியோசாபிகல் சங்கக் கிளையில் நடத்திய திருக்குறள் வகுப்பு (1928) ஆகியவற்றைக் கண்டு கேட்ட அன்பர்களின் வேண்டல் திருக்குறள் உரை வரைய வேட்கையை ஆக்கிற்று. தென்காசித் திருவள்ளுவர் கழக விழாவுக்குச் சென்ற காலை (1936) குற்றாலச் சாரல் உரையாடலில் அது தூண்டப்பெற்று, நவசக்தியில் வாரந்தோறும் வரையச் செய்தது.*

*திருக்குறள் உரைவரையத் தொடங்குதற்கு முற்படத் தாம் இயற்றிய பெண்ணின் பெருமையிலே தம் குறட்காதல் வெளிப் பாட்டைச் சுட்டுகிறார் (1927)*

*பெண்ணின் பெருமை திருக்குறளை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஓர் ஆராய்ச்சி நூல். அதன்கண் 'இயற்கை யறம்' என்றொரு பகுதியிருக்கிறது. நூலின் உயிர்நாடி ஓடும் இடம் அப்பகுதியே. அது திருக்குறளின் உள்ளத்தைக் குறிக்கொண்டு நிற்றல் வெள்ளிடை மலை என்று இந்நூல் அணிந்துரையில் வரைந்துள்ளமை காண்க.*

*திருக்குறள் மேல் தமக்குண்டாகிய காதலின் காரணத்தை அணிந்துரையில் குறிக்கிறார் திரு.வி.க.*

1) திருவள்ளுவர் முப்பால் கூறி வீட்டுப்பால் விடுத்தது;
2) அறப்பேற்றுக்கு இல்வாழ்க்கையைக் குறித்தது;
3) பெண்ணை வெறுத்தல் முதலிய போலித் துறவுகளைக் கடிந்தது;
4) மனமாசகற்றலே துறவு என்று இயற்கை நுட்பத்தை விளக்கியது;
5) இயற்கைப் பொது நெறியை அறிவுறுத்தியது; இன்ன பிற என்கிறார்.

திருக்குறளுக்குப் புத்துரை காணவேண்டும் என்னும் வேட்கை தம் முப்பத்தொன்றாம் அகவையில் எழுந்ததென்றும், உரை எழுத வாய்த்தது ஐம்பத்து மூன்றாம் அகவையில் என்றும் குறிப்பிடும் அவர், "யான் அந்நாளைய கலியாண சுந்தரனா யில்லை. அந் நாளைய கலியாண சுந்தரன் பெரிதும் ஏடுகளையே கட்டி அழுதவன்; ஏட்டுப் புழுவாய் இருந்தவன். இப்பொழுது ஏட்டுக்கல்வி அவனை விடுத்து ஒருவுகிறது. இயற்கையின் உள்ளுறையாயுள்ள இறைக் கல்வியை அவன் வேட்டு நிற்கிறான்" என்கிறார் (தோற்றுவாய்).

இதனால் ஏட்டுக் கல்வியால் மட்டும் திருவள்ளுவர் நெஞ்சங் கண்டு உரை வரைய இயலாது என்பதை வெளிப்படுத்துகிறார்! மேலும் ஓர் அரிய குறிப்பை வாழ்க்கைக் குறிப்புக்களில் குறிக்கின்றார்:

"யான் திருக்குறள் படித்தவன். என்பால் பிடிவாதம், வன்மம், முன்கோபம் முதலிய தீக்குணங்கள் துதைந்திருந்தன. வெறுந் திருக்குறள் படிப்புத் தீக்குணங்களை அறவே களைய வில்லை. கமலாம்பிகையின் ( தம் துணைவியாரின்) சேர்க்கை அக்குணங்களைப் படிப்படியே ஒடுக்கியது. அவள் திருக்குறள் படித்தவள் அல்லள். எனக்கு அவளே திருக்குறளாக விளங்கினாள். மனைவாழ்க்கையில் ஈடுபடப் படத் திருக்குறள் நுட்பம் விளங்குவதாகிறது. திருவள்ளுவர் உள்ளத்தை உணர்தற்கு மனை வாழ்க்கை இன்றியமையாததென்பது உள்ளங்கை நெல்லிக் கனியாயிற்று. யான் பின்னாளில் எழுதிய திருக்குறள் விரிவுரைக்கு இல்வாழ்க்கையின் அனுபவம் பெருந்துணையாய் நின்றது." என்பது அது.

ஈரடிக்குறளுக்கு இத்துணைப் பாரிய விரிவுரை வேண்டுமோ என எவரும் வினவார். பனித்துளியில் பனைத் தோற்றமும், பளிங் காடியில் பனிமலையும் அடங்குவதெனத் தேர்ந்துரைக்கப்பட்ட நூல் திருக்குறள். கடுகைத் துளைத்தும் அணுவைத் துளைத்தும் கடலைப்புகுத்தி வைத்த பெற்றியது என்றாரும் உளர். ஈரடி தானே என்று தூய நீரின் ஆழம் காணக் கைவிட்டு ஈராயிரம் அடியாக விருத்தலைக் கண்டு எய்த் தமையை எடுத்துக்காட்டினார் உளர். (முதற்குறள் உவமை)

திரு.வி.க. இவ்வுரை விரிவை நோக்கும் நோக்கு என்ன?

"திருவள்ளுவர் நூல், குறள் வெண்பாக்களால் ஆக்கப் பட்டது. ஒவ்வொரு குறளிலும் ஒவ்வொரு கடலுண்டு என்று கூறல் மிகையாகாது. ஒவ்வொரு பாவில் ஒவ்வொரு கடலைப் புகுத்த

வந்தவர் வெறும் இசை நிரப்புதற் பொருட்டு வெற்றொலியையும் வெற்றெழுத்தையும் வெற்றுச் சொல்லையும் பெய்வரோ? ஒரு போதும் பெய்யார். அவர்தம் வாய்மையினின்றும் பிறந்துள்ள ஒவ்வோர் ஒலியும், ஒவ்வோர் எழுத்தும் , ஒவ்வொரு சொல்லும் பொருளுடையன வாகவே இருக்கும். அவற்றை வெறும் இலக்கிய இலக்கணக் கண் கொண்டு பார்த்தல் மட்டும் போதாது. இயற்கைக் கண்கொண்டும் அவற்றை உற்று நோக்கல் வேண்டும். இயற்கை நோக்குக்கு நுண் பொருள் புலனாகும். அளபெடை அசைநிலை என்று பிறரால் கூறப் படுவன எல்லாம் திருவள்ளுவர் மொழியில் பொருளுடையன வாகவே திகழும்'' என்கிறார். இந்நோக்கே இவ்விரிவுரை மூலமாம்.

முடிக்கல அளவில் (கிரௌன்) பாயிரத்திற்கும் இல்லறவியல் ஆறு அதிகாரங்களுக்கும் ஆக நூறு குறள்களுக்கு எண்ணூறு பக்கம் உரை வரைந்துள்ளார். ஏறக்குறைய ஒரு சீருக்கு ஒரு பக்கம் எனக் குறிக்கலாம். அவர் இவ்விரிவுரை கண்ட நாளில் உரைக் களஞ்சியம், உரைக்கொத்து, உரைவேற்றுமை என்னும் தொகைகள் வரப்பெறவில்லை. திருக்குறள் மேற்கோள், சொல்லடைவு இன்னவகை நூல்களும் எழுந்தில. ஆகவே, இவ்வுரைப் பெருக்கம் திரு.வி.க. அவர்களின் கல்விப்பரப்பு, ஆழிய சிந்தனை, இயற்கை நோக்கு, இல்வாழ்க்கைப் பேறு, பொதுத்தொண்டு, தொழிலாளர் இயக்கம் இன்னவற்றின் திறங்களுக்குச் சான்றாகித் திகழ்கின்றமை புலப்படும்.

இவ்விரிவுரையின் சீர்த்திமைக்கு ஓர் அளவுகோல், இவ் வகையிலேயே காணல் வேண்டும். அதற்கு இரண்டு சான்றுகள் காணலாம். ஒன்று:

இராவ்சாகேப் கு. கோதண்டபாணியார் 'முதற்குறள் உவமை' என்றோர் அரிய நூல் கண்டார். 'அகரமுதல' என்னும் குறளுக்கு 216 பக்க அளவில் உரைவிளக்கம் கண்ட நூல் அது. 1956இல் வெளிவந்தது. வெளியிட்டது சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.

இன்னொன்று: திருக்குறள் மணி விளக்கவுரை. பன் மொழிப் புலவர் கா.அப்பாத்துரையாரால் வரையப்பட்டது. திருக்குறள் முதல் நான்கு அதிகாரங்களுக்கு முடிக்கல அளவில் (கிரௌன்) 960 பக்கம். வெளிவந்த ஆண்டு 1967.

அதன் இரண்டாம் பகுதி இல்வாழ்க்கை முதலாய நான்கு அதிகாரங்கள். 862 பக்கம். ஆண்டு 1968.இச்சான்றுகளைக் காட்டிய நோக்கம் என்னை எனின், திருக்குறள் உரைவிரிவாக்கத் தூண்டல் எவர் வழிப்பட்டது என்பதைக் குறிக்கவேயாம்.

'திருக்குறள் ஒரு சிறந்த அகப்புற நூல்' என்னும் திரு.வி.க. "இந்நூலாசிரியர் அகப்புற ஆராய்ச்சியில் கைபோனவர் என்பது இவர் நூலால் தெரிகின்றது.'' என்கிறார். (கடவுள் 7) தமிழர் பொருளியல் வாழ்வு அகம் புறம் ஆகிய இரு கூறுபட்டு இலங்குதலையும் அவற்றின்

வழியில் திருவள்ளுவர் வாழ்வு இலங்குதலையுக் குறிக்கிறார். புனைவிலா மெய்ம்மை வாழ்வு அஃதாம்.

திருவள்ளுவர் கற்பன கற்றார்; கேட்பன கேட்டார்; அவர், தாம் கற்றனவும் கேட்டனவும் வாழ்வில் ஒன்றப் பெறுதற்கு இல்வாழ்க்கையேற்று இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்தி, அவ்வழியில் நின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பந் துய்த்து நன்மக்களைப் பெற்று, அன்பராய், விருந்தோம்பி, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை எய்தி, மனமாசகன்ற அறவோரால், தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெறுதல் வேண்டித் திருக்குறள் என்னும் தனிநூலை அருளினார்" என்கிறார். இல்வாழ்வைச் சுட்டியது ஏன்? இல்வாழ்வைத் தமிழரும் கற்பாரும் எய்துதல் வேண்டும் என்றும் வேட்கையால் குறித்தாராம். ஆனால் அவர் கண்ட தமிழக நிலை என்ன?

சிறந்த அகப்புற நூலாம் திருக்குறளை ஈன்ற பெருமை வாய்ந்த தமிழ்நாடு. இந்நாளில் எந்நிலை உற்றிருக்கிறது. தற்காலத்தில் தமிழ்நாடு, திருவள்ளுவரின் சொல்லையும் சொற்றொடரையும் உருட்டிக் கொண்டிருக்கிறது. பின்னாளில் தமிழுலகில் நுழைந்த கதை நூல்கள் பலவும் போலித் துறவு நூல்கள் பலவும் நாட்டின் அகக்கண்ணைத் தூர்த்து விட்டன. அதனால் புறக்கண்ணொளியும் மங்கலாயிற்று என அவலமுறுகிறார்.

இவற்றால் திரு.வி.க. திருக்குறள் விளக்கம் எழுதியதன் நோக்கம் தமிழர் அகவாழ்விலும் புறவாழ்விலும் சிறந்தோங்க வேண்டும் என்பதற்கேயாம் என்பது புலப்படும்.

இனி, இவ்விரிவுரை நடையிடும் முறையை அறியலாம். திருக்குறள் விரிவுரைக்கு ஓர் அரிய தோற்றுவாய் வரைகின்றார். அதன் பிழிவு, "திருவள்ளுவர் உலகையே திருக்குறளாக எழுதினார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்" என்பது அது. அதன் விரிவே தோற்றுவாய்.

திருக்குறள் பொது நிலையம் எனக் கூறும் திரு.வி.க. "அதனுள் புக முயல்வோம்; முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்து பட்டாரில்லை; அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக்கிறார். உலகீர்! அவரைக் காண எழுக! எழுக! " என அறைகூவல் விடுக்கிறார்.

தம் நிலையையும் உரைக்கிறார்: " யான் இப்பொழுது ஏட்டுக்கும் இறைக்கும் இடையில் நிற்கிறேன். இறையருள் கூடின் திருவள்ளுவரை நேரே காணும் பேறு பெறுவேன். மற்றவர்க்கும் அவரைக் காட்டுவேன். இறையருள் எனக்குக் கிட்டுமோ? கிட்டாதோ? அறிகிலேன்" என்பது அது.

அடுத்து 'நூல்' பற்றி எழுதுகிறார். முப்பால் விளக்கம் கூறி வீடு பற்றியும் எழுதுகிறார். வீடு என்பது விடுதலை; கட்டற்றது என விளக்கும்

அவர், வீடு என்பது தனியே இருப்பது அன்று என்பதையும், வீடு பற்றித் தனித்த நூல்களால் உலகம் உற்ற அல்லல் போதும்! போதும்! என்பதையும் விரித்தெழுதிப் பாயிரம் வரைகிறார். கடவுள் வாழ்த்தைப் 'பாயிரத்துக்கும் பாயிரம்' என்கிறார்.

நூலுக்கு விரிவுரை வரையும் திரு.வி.க. முதற்கண் அதிகாரப் பெயரைத் தக்காங்குப் பகுத்துக் கொண்டு ஆய்கிறார். அதன் நிறைவில் 'உள்ளுறையும் அமைவும்' என்னும் தலைப்பில் அவ்வதிகாரப் பொருண்மையையும் குறள் வைப்பு முறையையும் தெளிவிக்கிறார். எடுத்துக்கொண்ட குறளுக்கு முதற்கண் பொருள் பொதிந்த தலைப்பு ஒன்றனைக் குறிக்கிறார். பின்னர்க் குறளைப் பொறிக்கிறார். மேலே பொருள், கருத்து, விருத்தி என மும்மை வரன் முறையில் உரை விளக்கம் புரிகிறார். விருத்தியில் சொல்லையும் சொற்றொடரையும் பகுத்தும் தொகுத்தும் விரித்தும் இணைத்தும் ஒப்பிட்டும் ஆய்கிறார். முதற்குறளுக்கு வரைந்த உரைபோல் எல்லாக்குறள்களுக்கும் உரை விளக்கம் வரையப் பெற்றிருப்பின் இந்நூல் இருமடங்கும், மும்மடங்கு மாய்ப் பெருகியிருக்கும்.

இரண்டாம் குறள் கற்றதனால் ஆய என்பதன்றோ! அக்குறள் ஐந்தாம் இடத்தில் கொள்ளப் படுகிறது. ஏன்? திரு.வி.க. கொள்ளும் பொருண்முறை வைப்புமுறை அஃதாம்! மணக் குடவர் வைப்பு முறையைப் பரிமேலழகர் தம் முறைக்குக் கொண்டு சென்றார் அல்லரோ! அதனை நினைக. பிற உரையாசிரியர் வைப்பு முறைகளையும் காண்க.

இவ்வைப்புமுறை மாற்றங்கள் என்ன செய்யும்? திருக்குறள் மூல வைப்பை வரிசையுறக்காண வைக்காது. ஆதலால் பெருகப் பரவியதும், முதற்கண் அச்சீடு பெற்றதுமாம் பரிமேலழகர் வைப்பு முறையையே பலரும் பற்றினர் என்க. உரைநிறைவில் மேலும் சில குறிப்புகளைப் பொறித்தலை மேற்கொள்கிறார். இம்முதற் குறள் நிறைவில், 'பாட்டின் மாண்பு', 'ஓர் இனிய குளிர் தரு' என்பவை. அன்னவை அவை.

ஒருபாடல் நிறைவித்து அடுத்த பாடல் விருத்தி எழுதத் தொடங்குங்கால் முடிந்த பாடல் கருத்தை எடுத்துரைத்துத் தொடர்ச்சிச் சிறப்பை வெளிப்படுத்துகிறார். பொறிவாயில் ஐந்தவித் தான் என்னும் பாடல் விருத்தியில் "முதற்பாட்டு விருத்தியில் கடவுளுக்குரிய மூன்றுநிலை சொல்லப்பட்டன. அவற்றுள் கடவுள் குருவைக் கோயிலாக் கொண்டு கடனாற்றுவது இப்பாட்டிற் குறிக்கப் பெற்றிருக்கிறது" என்கிறார்.

அவித்தல் அழித்தல் அன்று; அடக்கல்; நாவடக்கம், கையடக்கம் போல என விளக்கும் திரு.வி.க. அவித்தான் என்னும் சொல்லை மேலாய்வு செய்கிறார்.

ஐந்தவித்தான் எவன்? இறைவன் என்று சிலர் கூறுப. இறைவனுக்கு ஐந்து உண்டோ?

இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன். உருவம், அருவம், அருவுருவம் முதலிய எல்லாவற்றையும் கடந்தவன். மாற்ற மனம் கழிய நின்றவன். அவனுக்கு ஐம்புலனே இல்லை. புலனே இல்லா ஒருவனைப் புலனை அவித்தவன் என்று எப்படிச் சொல்வது? என வினாவி விளக்கும் திரு.வி.க. கடவுள் நிலைகளுள் ஒன்றான குருவன் நிலையே ஐந்தவித்த நிலை எனத் தெளிவிக்கிறார்.

கோளில் பொறியில் என வரும் பாடலில் உள்ள, எண்குணத் தான் என்பதற்கு, " எண்ணும் குணத்தான்; அன்பன் எண்ணுங் குணங்களையுடையவன்" என்று பொருள் கூறும் திரு.வி.க." எண்குணத்தான் என்பதற்கு எட்டுக் குணங்களை யுடையவன் என்றுங் கூறலாம்" என்று பிறர் உரையையும் குறிக்கிறார்.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்" என்னும் பாடமே பலரும் கொண்டதாம். ஆனால் திரு.வி.க., "ஐந்தவித்தான் ஆற்றற் ககல்விசும்புளார் கோமான்" எனப் பாடம் கொள்கிறார். இப்பாடம் எவருடையது எனச் சுட்டினார் அல்லர்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளியைக் கணப்பொழுதும் காக்க முடியாது என்று உரைகள் பலவும் கூற, திரு.வி.க.

"வெகுளி கணமேயுங்காத்தல் அரிது" என்பது வெகுளி எழாமையை உணர்த்துவது. குணமென்னுங் குன்றேறி நின்றார்க்கு வெகுளி எங்கிருந்து பிறக்கும்? அவர்கட்கு வெகுளி ஏது? வெகுளி யினின்றும் விடுதலை அடைந்தவரே, குண மென்னும் குன்றேறி நின்றவர். அவரே நீத்தார்" என மெய்யுரை காட்டு கிறார்.

"வீழ்நாள் படாஅமை" என்னும் குறளில் வரும் 'வழி யடைக்கும் கல்' என்பதன் பொருளாய்வில் 'வழியமைக்கும் கல்' என்கிறார்.

பழங்காலத்தில் குகைக் குடியிருப்பையும், கொல்லைப் புறத்தையும் கல்லால் அடைத்தல் உண்டு. 'கல்லடார்' என்பது அதன் பெயர். 'வழியடை' என்பது வழியில் வைக்கும் தடுப்பையும், அணைக் கட்டையும் குறிப்பது. ஆக, அடைக்கும் என்பதற்கு அமைக்கும் எனப் பொருள் காட்டிய திரு.வி.க. அவ்வளவில் அமையாராய், "அடைக்கும் என்பதற்கு மூடும், தடுக்கும் என்று பொருள் கூறுவோருமுளர். உண்மை காண அறிஞர் முயல்வாராக" என்கிறார்.

அறத்தாறு இதுவென வேண்டா என்னும் பாடல் விளக்கத்தில், "அறநெறி 'இதுவா, அதுவா' என்று ஆராய்ந்து சொல்ல வேண்டு வதில்லை. அறநெறி 'அதுவாகவும், இதுவாகவும் விளங்கி எங்கும் என்றும் பொதுவாக நிற்கும் தன்மை வாய்ந்தது" என்றும், பல்லக்கைச் சுமந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோராகலாம். பல்லக்கில் ஊர்ந்து செல்வோரும் அறநெறி நின்றால் அறவோராகலாம். அறவோராகும் வாய்ப்பு இருவர்க்கும் உண்டு. ஒருவர்க்கு மட்டும் அவ்வாய்ப்பு இல்லை" என்றும் கூறுகிறார். "உண்மை காண அறிஞர் முயல்வாராக" என்றது போல் திரு.வி.க. இவண் பொறிக்க வில்லை எனினும், உண்மை காணவேண்டியதாகவே உள்ளது.

# திருக்குறள் விரிவுரை
## (அறத்துப்பால் - இல்வாழ்க்கை இயல்)

*திருக்குறள் பாயிர விரிவுரை முதற்பாகமாக அமைய, இரண்டாம் பாகம் ' அறத்துப்பால் இல்வாழ்க்கை இயல்' எனப் பெயர் கொண்டு வெளிப்படுகிறது.*

*இல்லறவியல் இல்வாழ்க்கை முதல் (5) புகழ் ஈறாக (24) அமைந்தது. இல்வாழ்க்கை ஓர் அதிகாரப் பெயராக இருந்ததை, அதனாடும் இனியவை கூறல் காறும் அமைந்த அதிகாரங்களை இணைத்து இயல் பெயர் சூட்டுகிறார்.*

*அறத்துப்பால் முதலாறு அதிகாரங்களில் கருத்தை ஊன்றிச் செலுத்தினால் வழி புலனாகும். 'இல்வாழ்க்கை'யும் 'வாழ்க்கைத் துணை'யும், 'மக்கட்பேறு'ம் அன்பின் ஊற்றைத் திறப்பனவா கின்றன. 'அன்பு', 'விருந்தோம்ப' உந்துவது. விருந்தோம்பலாவது எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை. அந்தண்மையுடைமையை உணர்த்துவது 'இன்சொல்' செந்தண்மையாம் அந்தண்மையில் மனமாசு இருத்தற்கு இடம் ஏது? மனமாசற்ற அந்தண்மையே அறநிலை என்பது" என்றும்,*

*"திருவள்ளுவர் உலகுக்கு அறிவுறுத்திய அறநிலை, அவர்தம் நூல் முழுவதும் விளங்கா நிற்கிறது. சிறப்பாக அறத்துப்பாலில் திகழ்கிறது. மிகச் சிறப்பாக அறத்துப்பால் முதலாறு அதிகாரங்களில் பொலிகிறது- திருவள்ளுவர் உள்ளக் கிடக்கை, அறத்துப்பால் முதலாறு அதிகாரங்களில் திரண்டு நிற்கிறதென்று சுருங்கச் சொல்லலாம்" என்றும்,*

*"அறத்துப்பால் முதலாறும் திருக்குறளின் உயிர்; மற்றவை அதன் உடலுறுப்புக் கருவி கரணங்களாம்' என்றும் கூறுதல் அறிக (முன்னுரை) அவர்தம் அன்பு வாழ்வில் முகிழ்த்த அருள் முளைகள் 'வாழ்க்கைத் துணை நலம்', 'வாழ்க்கைத் துணை' எனவும் இனியவை கூறல் 'இன்சொல்' எனவும் அதிகாரப் பெயரில் மாற்றமுறுகின்றன.*

*பாயிர உரை செல்லும் முறையாலேயே இல்வாழ்க்கை இயலுரையும் செல்கின்றது. இல்வாழ்க்கையின் முதற்குறளாகிய 'இல்வாழ்வான் என்பான்' என்பது ஆறாம் இடம் பெறுகின்றது. இயல்புடைய மூவர் என்பது 'ஊர்மன்றத் தலைவராகிய மூவர்' எனப்*

பொருள் பெறுகிறது. "இங்கே ஒரு சிக்கு உளது. அது "மூவர்க்கும்" என்னும் சொல்லைப் பற்றியது. "மூவர்க்கும்" என்பது பற்றிப் பலவிதக் கருத்துக்கள் வெளிவந்துள்ளன. உண்மை காண அறிஞர் முயலல் வேண்டும். பாடபேத மிருக்குமோ என்றும் யான் ஐயுறுவதுண்டு" என்று உண்மை காணத் தூண்டுகிறார்.

உரையாசிரியர் மயக்கம், வேறு பொருள் எனவும் எழுதுகிறார். "எவர் எப்பொருள் கூறினும் கூறுக. அது தொடர்ந்து வரும் இரண்டு பாக்களின் கருத்துடன் முரண் படலாகாது" என ஆணையிடுகிறார்.

துறந்தார், நீத்தார் என்றும், துவ்வாதார் உழைத்து வாழ இயலா உடற்குறையர் என்றும், இறந்தார். இறந்து மீண்டும் பிறக்கும் நிலையில் இருப்பவர் என்றும் பொருள் காண்கிறார். இவ்விறந்தார் இடம் தென்புலம் என்றும் கூறுகிறார்.

இறந்துபோய்ப் பின்னும் பிறப்ப இருப்பாரைத் தென் புலத்தார் என உரை கொண்டமையால், அடுத்த பாடலில் முன்னிற்கும் தென் புலத்தார் 'குருமார்' எனப் பொருள் காண்கிறார். தென்=அழகு. புலவர் = அறிவுடையோர். இங்கே குருமார் என விளக்குகிறார். தெய்வம்= குருவர் வழியாக அறியப் பெறும் தெய்வம் என்கிறார்.

'இல்வாழ்வான் என்பான்', துறந்தார்க்கும், தென்புலத்தார் என்னும் இம்முப்பாடல் பொருள்களும் திரு.வி.க. நாள் தொட்டு இதுவரை படாப் பாடு பட்டே வருகின்றன. உண்மை கண்டாலும் ஒப்புவார் இலர் என்பதே உண்மை நிலை! ஆதலால் இச்சிக்கல் தொடரவே செய்யும் போலும்.!

வாழ்க்கைத் துணை என அதிகாரப் பெயர் தாம் கொண்ட தற்குரிய காரணத்தைக் கூறுகிறார் அவ்வதிகார முகப்பில்:

அதிகாரத் தலைப்பு வாழ்க்கைத் துணை என்றிருத்தலே சாலும். இவ்வதிகார முதற்பாட்டில் "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான். வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்று ஆசிரியர் அருளியுள்ளார். உரையாசிரியன்மாராகிய மணக்குடவரும் பரிமேலழகரும் வேறுசிலரும் 'வாழ்க்கைத் துணைநலம்' என்று தலைப்புக் கொண்டு பொருள் விரித்துள்ளனர். மூலத்தின் உண்மை விளங்கவில்லை" என்று சொல்லி மேலும் விளக்குகிறார். பெற்றாற் பெறின் பெண்டிர் என்னும் குறள் பெற்றார்ப் பெறின் எனப் பாடம் கொள்ளப்பட்டு உரைவளம் பெறுகிறது. புத்தேளிர் வாழும் உலகு, 'போகபூமி' எனச் சுட்டுகிறார். போக பூமிக்குச் சான்றுகள் பல அடுக்குகிறார். இப்பொருளும் விளக்கமும் திருவள்ளுவர் ஏட்டுப் புலவரல்லர். அவர் இயற்கைப் புலவர். திருவள்ளுவர் இயற்கையிற் படிந்து இயற்கைப் புலம் பெற்றவர்" என்றும்,

"திருவள்ளுவர் பெண்மக்களைச் சிறை செய்து காக்கும் முறைமையைப் பிறர்வாயிலாகக் கேட்டிருத்தல் வேண்டும். அல்லது

அம்முறைமை பிறநாட்டினின்றும் தமிழ்நாட்டிற் குடிபுகுந்ததைக் கண்டிருத்தல் வேண்டும்.திருவள்ளுவர் காலத்திலே பிறநாட்டார் தமிழ்நாடு புகுந்ததைச் சரிதங்களில் காண்க" என்றும் வாழ்க்கைத் துணையில் கூறுவதும் நம்மை எண்ணிப் பார்க்கத் தூண்டுகின்றன.

'தெய்வம் தொழாஅள்' என்னும் குறள் விளக்கத்தில், "பன்னெடுநாள் என்நெஞ்சில் குடிகொண்ட பாக்கள் சிலவற்றுள் இஃதும் ஒன்று பாட பேதம் இருக்குமோ என்று ஐயுற்றநாளும் உண்டு: பண்டையாசிரியர் சிலர் இக்குறளை உள்ளவாறே ஆண்டுள்ளமையால் பாடபேத ஐயப்பாட்டுக்கு இடமில்லை என்ற தெளிவும் ஏற்படுவதுண்டு" என்றும் அவர் "இத் திருக்குறளை உள்ளவாறு கொண்டு பொருள் கூறுவது அறம். காலதேச வர்த்த மானத்துக் கேற்றவாறு மூலத்தை மாற்றப் புகுவது அறமாகாது" என உறுதிமொழிகிறார். 'பெய்யெனப் பெய்யும் மழை என்பதை ஏவற்பொருளில் இல்லாமல் திருவள்ளுவரே உவமைப்பொருளில் ஆண்டுள்ளமை இச் சிக்கிலைத் தீர்த்து விடுகிறது. அக்குறள் இன்பத்துப் பாலில் இடம்பெற்றது.

***"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு***
***வீழ்வார் அளிக்கும் அளி"***

என்பது. 'வாழ்வார் எவர்?' என வினாவின்,

***'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'***

என்பது வள்ளுவ விடை.

நல்ல கணவனுக்கு நல்ல மனைவி அமைவது, விதை தெளித்த உழவனுக்கு மழை பெய்தது போல விளைவின்பம் பெருக்கும் என்பதாம். வள்ளுவத்திற்கு வள்ளுவமே பொருளாகும் போது வேறு தெளிவு வேண்டுவதில்லையே.

மக்கட்பேற்றிலே,

***"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்***
***தந்தம் வினையால் வரும்"***

என்னும் குறள் விருத்தியில், "இப்பாட்டில் பாடபேதம் இருத்தல் வேண்டும். யான் பார்த்த பிரதிகளில் பாடபேதம் கிடைக்க வில்லை" என வரைகிறார் திரு.வி.க. மேலும், "தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை 'தம்பொருள் என்பவே தம் மக்கள் அப் பொருள்- தம்தம் வினையால் வரும்' என்று திருத்தம் செய்துள்ளனர். தேசபக்தர் தாம் செய்த திருத்தத்தைப் பற்றி " அவர்பொருள் தந்தம் வினையால் வரும்' என்பது பொருத்தமான பொருள் ஒன்றையுந்தாராமையால், 'அப்பொருள்' என்பதே ஆசிரியர் பாடம் எனக் கொள்க' என்றொரு குறிப்பும் பொறித்துள்ளார் என்று கூறி மேலாய்வு செய்கிறார். முடிவில், "யான் பார்த்த பிரதிகளிலெல்லாம் அவர் பொருள் என்றே காணப்படுகிறது. வலிந்து பாட பேதம் செய்ய மனமெழவில்லை. மூலத்தை ஒட்டியே

ஒருவாறு கூறலானேன். வேறுவழி புலனாகவில்லை. என் செய்வன்!" என்கிறார். இப்பகுதியில் ஐயம் தரும் சொல் 'அவர்' என்பது. அவர் என்பதற்கு அம்மக்கள் எனப் பொருள் கொள்கின்றனர் உரையாசிரியர். திரு.வி.க.வுக்கோ, 'அப் பெற்றோர்' எனப் பொருள் புலப்படுகிறது. இதுவே சிக்கல்.

தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ் என்பதில் இடம் பெறும் சிறுகை திரு.வி.க.வை விண்ணின்பத்தில் மிதக்க வைக்கிறது:" தம் மக்கள் சிறுகை" பிள்ளை இன்பத்தை ஆரநுகர்ந்தவர் ஆசிரியர். இல்லையேல் சிறுகை அவர்தம் பாட்டில் திகழாது. 'சிறுகை'யை எத்துணைமுறை ஆசிரியர் உற்று உற்று நோக்கினரோ தெரியவில்லை. எத்துணையோ முறை 'சிறுகை' ஆசிரியர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகி யிருக்கும். அவ் விருந்தமிழ்தை ஆசிரியர் உண்டு உண்டு இன்பத்தில் தேங்கித் திளைத்திருப்பர். இன்பத் தேக்கத்தினின்று உவகை பூத்திருக்கும். அவ்வுவகை - கழிபேருவகை - பொங்கி எழுந்து, அவர் வாயிலாகச் சிறுகை என்று எழுத்தோவியமாகி நிற்கிறது. 'சிறுகை' ஓவியம் நெஞ்சைக் கவர்கிறது. சிறுகையின் மாண்பு என்னே! அது காதலின் திரட்சியுறுப்புகளுள் ஒன்றன்றோ!" என உணர்வோவியம் தீட்டுகிறார். இத் தீட்டுதல் நம்மை அவர்தம் வாழ்க்கைக் குறிப்புக்களுக்கு ஈர்த்துச் செல்கின்றது. மண வாழ்க்கையில் ஈடுபடப்படத் திருக்குறள் நுட்பம் விளங்குவ தாகிறது என்று கூறுவதை முன்னர்ச் சுட்டினோம் அல்லமோ! அவர்பெற்ற மகப்பேறு இரண்டு. அவற்றுள் ஒன்று ஆண். கருவிலே சிதைந்தது; மற்றொன்று பெண். அது ஈராண்டளவு வாழ்ந்து மறைந்தது. அதைப்பற்றி வரையும் ஓவியம் வாழ்க்கைக் குறிப்புக்களில் பாருங்கள்! மக்கள் மெய்தீண்டல் என்பதன் பொருளென்ன? மக்கள் பெற்றோர் மெய்யைத் தீண்டுவதா? பெற்றோர் மக்கள் மெய்யைத் தீண்டுவதா? இரண்டும் பொருந்தும் தாமே. ஆனால் மெய்ப் பொருத்தம் எது?

"மக்கள் மெய்தீண்டல் என்பதற்குத், தம் மக்கள் தமது உடம்பினைச் சார்தல் என்று மணக்குடவரும், (ஒருவன்) மக்களது மெய்யைத் தீண்டுதல் என்று பரிமேலழகரும் பொருள் கண்டனர். இவ்விரண்டையும் அநுபவங் கொண்டு ஆராய்ந்து பார்க்க என விருத்தி வரைகிறார் திரு.வி.க.

அவர் சொல் (மக்கள் சொல்) இன்பம் பயப்பது போல, அவர் மெய்தீண்டலும் இன்பம் பயக்கும் என்பதே வள்ளுவ ஆட்சி வழியால் தெளிவாகின்றது அல்லவோ! மெய்க்கு மெய்யுரை காண்கிறார் திருவிக. அரிய சான்றும் காட்டுகிறார்; "உடலுக்கு மெய்யென்றொரு பெயருண்டு. உடல்நிலையுதவி யின்றிப் பொய்யாய்ப் பொன்றுவதென்றும் அப்பொய்யை மெய்யாகக் கூறுவது மங்கல வழக்கென்றும் இலக்கண நூலார் கூறுப.

மெய்யைப் பற்றிப் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் தமது 'பரிபூரணானந்த போத' நூலின் பதிபசுபாசப்படலம் நாற்பத்

தெட்டாம் பாட்டின் விருத்தி உரைக்கண் ஒருவிதக் கருத்தை வெளி யிட்டுள்ளார். அது வருமாறு: திருட்டிக்குப் புலப்படாச் சீவனைப் புலப்படுமாறு காட்டி நிற்பதிவ் வுடம்பேயாகலின் இது மங்கல வழக்கென்பார் கூற்றுத் தள்ளற் பாலதாமன்றிக் கொள்ளற்பாலது ஆகாது" என்று குறிப்பிட்டு, 'மெய் என்பது எப்பொருள் படினும் படுக' எனச் சுட்டிய அளவில் அமைகிறார். பண்டையோர் வழக்கைத் தள்ள முடியாமை எப்பொருள் படினும் படுக என்பதால் வெளிப் படுத்துகிறார். ஒருவர் வாழ்ந்தார் என்பதனை மெய்ப்பிப்பது ஆவி அல்லவே! உடலாம் மெய்தானே! அதன் வழி ஆய்வு கொண்டு தெளிந்தவை தாமே மெய்யறிவு, மெய்யுணர்வு, மெய்ப்பொருள்!

மக்கட்பேறு என்பதில் வரும் மக்கள் இருபாலாரையும் குறிப்பதே. பரிமேலழகரோ மக்கள் என்பதற்கு ஆண்மக்கள் எனப் பொருள் கொள்கிறார். அறிவறிந்த என்ற அதனான் மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது' என்று குறிப்புப் பொறித்துள்ளார். இதனைச் சுட்டும் திரு.வி.க. ஸ்மிருதிகள் பெரிதும் ஆட்சி பெற்றிருந்த காலத்தில் பரிமேலழகர் வதிய நேர்ந்தமை அவரை இக்குறிப்புப் பொறிக்கச் செய் திருக்கும். பேரறிஞரும் சில சமயம் கால தேவதையின் தளை யால் கட்டடப்படுதல் இயற்கை போலும்!" எனப் பரிவு கூர்கிறார்.

சான்றோன் எனக் கேட்ட தாய் என்பதற்குப் பரிமேலழகர் 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய் எனக் கூறினார்' என்பதை எடுத்துக் காட்டி, "இஃது இடைக்காலக் குறும்பு களுள் ஒன்று" என்று கடிகிறார்.ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாயரைப் புறப்பாடல்களைக் கொண்டு அருமையாக நிறுவுகிறார். மேலும்,

"தாய் மகனை ஈன்றபோது உவக்கிறார்.அவ்வுவகையை ஆசிரியர் பெரிதாகக் கொண்டாரில்லை. மகனைப் பிறர் சான்றோ னெனக் கூறத் தாய் கேட்டபோது அவள் அடையும் உவகையையே 'பெரிது' என்கிறார். திருவள்ளுவர் குறிக்கும் தாய் நிலையை ஓர்க. மகன் நிலையையும் ஓர்க. உலகம் சான்றவர் வண்ணமாதல் வேண்டு மென்பது அவர்தம் உள்ளக்கிடக்கை. உலகைச் சான்றவர் வண்ணமாக்க அவர் திருக்குறளை அருளினர். திருக்குறள் சான்றவர் உலகை ஈனும் தெய்வமறை " என்க.

புறத்துறுப்பெல்லாம் என்னும் அன்புடைமைப் பாடல் நிறைவில், மனத்தை அகத்துறுப்பு என்று ஒருமையிலும் மற்ற உறுப்புகளை, புறத்துறுப்பெல்லாம் என்று பன்மையிலும் ஆசிரியர் அருளினர். இஃது அகத்துறுப்பின் மாண்பை உணர்த்துவதாம். மனம் ஒன்று அன்பிலதாயின் எல்லாப் புறத்துறுப்பும் பயனில்லா தொழியும். எல்லாம் என்பது இங்கே இழிவைக் குறிப்பது. வேர் கெட்டால் மரத்தின் உறுப்புக்க ளெல்லாம் பாழ்படுமல்லவோ; அக

அன்பே எல்லாவற்றுக்கும் ஊற்று என்றபடி எனக் குறள்விளக்க வேர் காட்டுவது வாளா உவமை மட்டுமன்று! வாழ்வு விளக்கமே அதுவாம்.

'விருந்து புறத்ததா'' என்னும் குறள் விரிவில் ''பிறப்பை யொட்டி மேல்கீழ் வகுப்புகள் தோன்றிய போது சில இடங்களில் மேல் வகுப்பார் என்பவரிடை விருந்தினரை விடுத்து உண்ணும் வழக்கமும் உடன்தோன்றியிருக்கும். அதைக்கடியும் நோக்குடன் இப்பாட்டை ஆசிரியர் அருளியிருக்கலாம்'' என இக்குறள் தோற்றம் குறித்த கருத்தை வெளியிடும் திருவி.க.'' தாம் உண்ட பின்னர் விருந்தின ரைப் பேணும் வழக்கம் இந்நாளிலும் சிலரிடை இருந்து வருதல் கண்கூடு. தாம் உண்ட பின்னர் விருந்தினரைப் பேணுவது அந்தண்மையை அடிப்படையாகக் கொண்ட விருந்தோம்பல் ஆகாது'' என அந்தண்மை விளக்கமாக வரைகிறார்.

'வித்தும் இடம் வேண்டும் கொல்லோ'' என்னும் குறளுக்கு,

''விற்கக் கூடாதனவும் விற்றுச் செய்வன செய்வார் போல, விதை நெல்லையும் ஆக்கி விருந்து செய்வார் உளர்'' என விருந்தின் மேன்மை கூறுதல் புறப்பாடல் வழிப்பட்ட பொருள். இளையான் குடிமாறர் வரலாறும் சான்று. ஆகவும் இளையான் குடிமாறர் செய்தியை வருவிருந்து வைகலும் ஓம்புவான் என்னும் குறளுக்குக் காட்டி, வித்தும் இடல் வேண்டும் கொல்லோ என்னும் இக்குறளுக்குத் தானே விளையும் என உரை கண்டது ஆய்வுக்குரியதே. 'முகத்தான் அமர்ந்து' என்னும் இன்சொல் அதிகாரப் பாடலில் அரிய நுணுக்கம் காட்டுகிறார். திரு.வி.க. ''இப்பாவிலுள்ள சொல்லமைவும் கருத்து நுணுக்கும் பொருளாழமும் இவைகள் ஈறும் அமைதியும் அகத்திணையர்க்கு விருந்தாவன: முகத்தான் அமர்தல் - மலர்தல். இனிது நோக்கல் - மணங் கமழ்தல் ; இன்சொல் - தேன் பிலிற்றல்; இன்சொல்லினிடத் தாகிய அறம் - சுவைத்தல் இன்சொல் மாண்பென்னே! அதனைத் தமிழ்க் குறளால் ஓதிய ஆசிரியர்திறமென்னே! '' என்பது அது.

எடுத்துக்கொண்ட ஒரு நூலுக்கு எவ்வெத்திறமும் முறையும் தகவும் தனித்திறமும் கொண்டு உரைகாண வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது திரு.வி.க.வின் திருக்குறள் விரிவுரை எனல் சாலும்!

# தேசபக்தாமிர்தம்

தேசபக்தன் அரசியல் நாளிதழ். அது தோன்றிய நாள் 07.12.1917. இதழ் ஆசிரியர் திருவி.கலியாணசுந்தரனார். இதழ் நோக்கம் தெய்வப் பற்று, அரசுப்பற்று, நாட்டுப்பற்று என்னும் மூன்றனையும் வளர்க்க வேண்டும் என்பது. அவ்விதழில் எழுதிய கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து 1919இல் தேசபக்தாமிர்தம் என்னும் பெயரால் வெளி யிட்டார் திரு.வி.க.

நூல் முன்னுரையில் பழந்தமிழ் உரைநடையில் தமக்குள்ள பற்றுமையையும், பிறமொழிக் கலப்பு இல்லாமல் பேசவும் எழுதவும் வேண்டும் என்னும் ஆர்வத்தையும் சுட்டுகிறார். எனினும், "செவ்விய தமிழ்நடை தமிழ்நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படாது என்று கருதித் தேசபக்தனுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரைநடையைக் கொண்டுள்ளேன்" என்று தம் உரைநடை நிலையை வரைகிறார். மேலும், " தேசபக்தாமிர்தம் பெரிதும் மாணாக்கர் பொருட்டாகவே வெளியிடப்படுகிறது" என்னும் குறிப்பையும் பதிவு செய்கிறார்.

சமயப்பெருமை, தமிழ்மொழி மாண்பு, ஒழுக்கம், பரோபகாரம், தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றம், பெண்மக்கள் உரிமை, தொழிலாளர் இயக்கம் முதலிய பொருள்களைக் கொண்டிருக்கிறது என்றும் உள்ளுறை மொழிகிறார். கட்டுரை அளவால் 59 இடம் பெற்றுள்ளன.

இறைவன் ஒருவனே; அவனை அன்பு வழியால் அடையலாம் என்பதன் விளக்கமே 'தெய்வபக்தி' என்னும் முதற்கட்டுரை.

அரசர் நெடுநாள் வாழவேண்டும் என்பதற்காகக் காளிக்குத் தம் தலையைத் தாமே கொய்து தரும் வீரவழக்கு உண்டு என்பதை இராசபக்தியில் குறிப்பிடும் திருவி.க. ஆங்கிலர் ஆட்சிச் சிறப்பை உரைப் பதுடன் ஆங்கில ஆட்சி நீடூழி வாழ்க என்றும் வாழ்த்துகிறார்.

தேசபக்தன் என்னும் இதழின் பெயராலே இடம் பெற்ற கட்டுரையில், "தேசபக்தி என்பது தேசத்திலுள்ள உயிர்களிடத்து அன்பு செலுத்துவது. உயிர்களிடத்து அன்பு செலுத்துவது கடவுளிடம் அன்பு செலுத்துவதாகும்" என்கிறார். தேசபக்தன் என்பது இதழ்ப்பெயர். எனினும் 'ஆண்பால் படுத்தியே' வழங்குகிறார். அவ்வாறே நவசக்தி என்பதைப் பெண்பாலாக்கிக் கூறினார். பழமரபு கொண்ட புதிய ஆட்சியாம் இவை. அன்னிபெசண்ட் அம்மையாரை 'அன்னை பெசண்ட்' என்று வழங்கியவர் திரு.வி.க. தெய்வபக்தியை வளர்க்கும்

வகைபோலத் தேசபக்தியை வளர்த்தல் வேண்டும் என வழிகாட்டு கிறார். 'தேசபக்த சமாஜம்' என ஓர் அமைப்பை ஏற்படுத்தி வளர்க்க வேண்டும் வகையையும் விளக்குகிறார். 'வந்தே மாதரம்' எனக் கட்டுரையை நிறைக்கிறார்.

உலகுக்குச் சமய அறிவை வழங்கியது இந்தியாவே என்று குறிப்பிடும் திரு.வி.க. இறைவனை அன்பு வடிவாக வழிபட்டால் வழிபடுபவன் அன்பு வடிவாகத் திகழ்வான் என்கிறார். சமய ஒழுக்கத்திற்கு மாறான ஐந்து பாவங்கள் இப்பொழுது தருமங் களாகக் கொள்ளப்படுகின்றன என இரங்குகிறார். மாணவர் களுக்குச் சமய ஒழுக்கம் போதிக்கப்படவேண்டும் என வலியுறுத்து கிறார். இந்தியர் சமயம் என்னும் கட்டுரையில், இந்தியர் சமயக் கொள்கையை ஆராய்ந்தால் அவரவர் சமயங்களுக்கு ஏற்றதாகவே அமையும் என்கிறார். பொதுமையாம் சமயக் கொள்கை உரைகாரர், தருக்கர் முதலியவர் கண்ட விளக்கமுறை வேற்றுமையால் பிணக்கு, பிளவு, போர் முதலியவற்றுக்கு இடமாயிற்று. போலிப் பாதிரிமார் இந்தியர் மதம் அஞ்ஞான மதம் என்றனர்; நாத்திகமும் உண்டாகின்றது. ஆங்கில மொழியை வேதமொழியாகக் கொண்ட நம்மவர்களே இந்தியாவைக் கெடுத்தார்கள் என்று வருந்தும் திரு.வி.க. சமரசக் கொள்கை பரப்பப் படவேண்டும் என்கிறார். அன்னை பெசண்ட், அருண்டேல் இயக்க நலத்தைப் பாராட்டுகிறார்.

"உலகத்திலே இன்பவாழ்க்கையில் திளைத்து நில்லாதவர் பேரின்ப வாழ்க்கையில் திளைத்து நில்லார் என்பது" எமது கொள்கை என்று மோட்சானந்தமும் சுய ஆட்சியும் என்னும் கட்டுரையில் கூறுகிறார். "நம்நாட்டில் சுதந்திரம் என்பது சிறிதும் இல்லை; தேசபக்தன் சுயஆட்சி கேட்கிறான்" என அக்கட்டுரையில் வலியுறுத்து கிறார். உலகப்போர் மனித முயற்சி யன்று; தெய்வமுயற்சியால் ஆயது; வேற்றுமை ஒழிந்து உலகம் ஒன்றுபடுமாறே பண்டு தொட்டுப் போர்கள் நிகழ்ந் துள்ளன. போரால் பெற்ற அமைதிப் பாடங்கள் பல என விரித்துக் கூறும் திரு.வி.க. மன்னர் மன்னருக்கு வெற்றி வரவேண்டும் என்கிறார். இவை, மனித முயற்சியோ தெய்வ முயற்சியோ என்னும் கட்டுரைக் குறிப்பு.

உலகப் போரழிவும், இன்புளூயன்சா காய்ச்சல் அழிவும் நிலையாமையை மக்கள் நன்கு உணர்ந்து நன்னெறி போற்றுமாறு இறைவனால் அருளப்பட்டவை என்பது உலகநிலைக் கட்டுரைச் சாரமாம். வேண்டுவது எது? ஆத்மசக்தியா? தேக சக்தியா? என்னும் கட்டுரையில், தேகசக்தி அழிவுக்கே ஆட் படுத்தும்; ஆத்ம சக்தியே ஆக்கம் பெருக்கும்; அவ்வாத்ம சக்தியாகத் திகழ்பவர் காந்தியார் என்கிறார்.

நாகரிகம் என்னும் கட்டுரையில் " தன்னைப் போலப் பிறரை நேசித்து வாழும் சகோதரத் தன்மையை நாகரிகம் என்று கூறலாம்"

என்கிறார். இந்நாகரிகத்தை உலகப்போர் மேலை நாட்டுக்கு உண்டாக்கும் என்னும் திரு.வி.க. "சண்டை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு எந்நாட்டாரும் எக்கருவி களையும் செய்யலாகாது. சண்டைக்குரிய கருவிகள் எவரிடத்தும் மிகுதிப்பட்டிருத்தலாகாது என்றும் பெரியோர் இன்று கூறும் உரையை அன்றே கூறுகிறார். (13.12.1918)

தந்நலம் கருதாது பிறர்நலம் கருதி உலகத்தில் வாழ்வோர் அந்தணர் என்று கூறும் திரு.வி.க. ஜீவகாருண்யப் பெருக்குள்ளோர் அனைவரும் அந்தணரே ஆவர் என்கிறார். பண்டைநாளில் வேள்வியால் அரக்கர்களை அழித்த அந்தணர்போல், வீடு தோறும் பெருகிவரும் அரக்கர்களை அழிக்கும் வேள்வி அந்தணர்களை எதிர்நோக்குகிறார். திரு.வி.க.வின் பின்னை வளர்நிலையில் இவ்வேள்வியையும் சாதிமை அந்தணத் தன்மையையும் கண்டித்தமை முரணன்று. வரலாறும் வாழ்வும் வாய்மையும் வழங்கும் பாடங்களாம்.

"சமயம் கடவுளை அடைதற்குரிய தூயவழி; மனிதனைத் தூய்மைப் படுத்துவது சமயமே" என்னும் திருவி.க. அந்நாளே சமய வேற்றுமை காணாமை அறிய வாய்க்கின்றது. கிறித்துவம், மகமதியம், பௌத்தம், இந்து என்னும் நான்கு சமயங்களையும் ஆயும் கட்டுரை சமயச் சபைகள். சைவ, வைணவ சபைகள் நிறுவிய கல்லூரிகள், மருத்துவ நிலையங்கள் எத்தனை? என வினா எழுப்பி அவற்றின் சண்டையைச் சுட்டுகிறார். சமயசபைச் சீர்திருத்தம் கருதும் கட்டுரை அது.

ஹிந்து தேவாலயங்கள் என மூன்று கட்டுரைகள் வரைந் துள்ளார். ஆலயங்கள் பழைய நாளில் ஐம்புல இன்ப நிலையங்களாக விளங்கியதையும், இடைக்காலத்தில் ஆலயங்கள் அடைந்துள்ள சீர்கேடு களையும், எதிர்காலத்தில் ஆலயத்தில் செய்ய வேண்டும் சீர்திருத்தங் களையும் பற்றிக் கூறுவன அவை. அந்நாளிலும் இந்நாளுக்குத் தேவையான கட்டுரைகள் அவை என்பதைப் பயில்வார் உணர்வர்.

மடாதிபதிகள் என்னும் கட்டுரையில் மடங்களை நிறுவியவர் நோக்கும் அறச்செயல்களும் பாழ்பட்டுக் கிடத்தலைப் பகரும் திரு.வி.க. "பண்டாரச் சந்நிதிகள் சிற்றின்பத் துறையில் எளியரா யினுமாக... ஜனங்களுக்காக உழைக்க அவர்கள் வெளி வரவேண்டும் என்பது எமது வேண்டுகோள்" என்கிறார்.

இந்திய உரிமையை வேரோடு களையும் ரௌலட் சட்டத் தீமையை உணர்ந்து வேதாந்தி, சித்தாந்தி சந்நியாசி என்பார் ஏன் சிறை புகல் ஆகாது எனத் தட்டி எழுப்ப எழுதப் பட்டது, வேதாந்திகள் என்செய்கிறார்கள்? என்னும் கட்டுரை.

இந்தியக் கிறித்துவர் இந்தியர் என்பதை மறத்தல் ஆகாது என்பது இந்தியக் கிறிஸ்தவர் என்னும் கட்டுரை. இந்தியர் என்பதை மறவாது வாழ்வாரைப் பாராட்டுவதும் இக்கட்டுரை. இந்தியாவில்

கல்வி முறைக் கட்டுரையில், " இந்தியக் கல்வி உத்தியோகக் கல்வியாக மாறியதற்குக் காரணர் அரசாங்கத்தாரே"; "இந்தியா அரசாங்க உத்தியோகம் என்னும் அரவால் தீண்டடப்பட்டிருக்கிறது;"என்கிறார்.

நாட்டு உரிமையினும் சீரியது நாட்டுக்கல்விப் பேறு என்பதை வலியுறுத்தும் கட்டுரை நாட்டுக் கல்வியும் நமது கடமையும் என்பது.

"இயற்கை வடிவாக இருந்த கல்வி அறிவு உத்தியோக வடிவாக, அடிமை வடிவாக மாறிவிட்டது அதனை உயிர்ப்பித்தல் வேண்டும்" என்பது பாரத தேவி! உன் கல்வி எங்கே? என்பது. பாஷை வளர்ச்சியே தேசவளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் மூலமாயிருப்பது என்பதை விளக்குவது 'பாஷை வளர்வ தெப்படி?' என்பது. "அரசகாரியம் முழுவதும் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். மொழிவாரி மாநிலம் உருவாக வேண்டும் என்பது எமது கொள்கை." என்பவற்றையும் இக் கட்டுரையில் சுட்டுகிறார். (1918)

நாட்டுக் கல்வி நிதி கொண்டு, " தாழ்ந்த வகுப்பாருக்கென நாட்டுப் பாடசாலைகள் பல ஸ்தாபிக்கப் பயன்படல் வேண்டும்; பெண் கல்விக்கும் அது பயன்படல் வேண்டும் என்பது எம் கொள்கை" என்று நாட்டுக் கல்விநிதி யாருக்குப் பயன்படல் வேண்டும்? என்னும் கட்டுரையில் சுட்டுகிறார்.

(எம்.ஏ., வரை) கட்டாய பாடமாக இருந்த தமிழ் இஷ்ட பாடமாக மாற்றப்பட்டது. இஷ்ட பாடமாக மாற்றப்பட்ட நாள் தொட்டுத் தமிழ் மணங்குன்றத் தலைப்பட்டது. சில கல்லூரித் தலைவர்கள் தமிழ் வகுப்பையே ஒழித்திருக்கிறார்கள். இக் குறை களை ஒழிப்பதற்கு வழிதேட வேண்டுவது நமது கடமை என்பது தாய்மொழி என்னும் கட்டுரை. திராவிட மொழிகள் என்னும் கட்டுரையில் தமிழ் தனிமொழி என்பதை வலியுறுத்துகிறார். வித்துவான் தேர்வுக்கு வடமொழிக் கல்வி தேவையில்லை என்பதையும் குறிப்பிடுகிறார். தமிழ்ப்புலவர்கள் என்னும் கட்டுரையில் பண்டைப் புலவர் சிறப்புகளைப் புகல்கின்றார். தமிழ்நிலை தாழ்வாய பின் தமிழ்ப் புலவர் நிலையும் தாழ்ந்தது. இதுகாலை தமிழ்நாட்டில் ஆங்கிலத் தமிழ் உலவி வருவதைக் காண எமது மனம் புண்படுகிறது என்னும் திரு.வி.க. தமிழ் மக்களும், தமிழ்ப் புலவர்களும் ஈடுபட வேண்டிய எழுச்சியைக் கூறி, " மடாதிபதிகளே! தமிழ் வளர்ச்சிக் காயினும் நீங்கள் முயற்சி செய்யலாகாதா?" என்கிறார்.

தமிழ்ப்பண்டிதர் நிலை, அவர்களிடமுள்ள குறைபாடுகள் ஆகியவற்றை விரித்துரைத்து தமிழ்ப்பண்டிதர் மாநாடு ஒன்று கூட்ட வலியுறுத்துகிறார்.தென்னிந்தியாவின் ஒற்றுமை இன்மையையும் அதன் கேடுகளையும் விரித்துரைத்து ஒன்றுபட ஏவுகிறார். மாணாக் கர்களில் தீயவர் நல்லவர் என்ற பாகுபாடு இல்லை. அவற்றை அறியுமாறே பயிலவந்தனர். ஆசிரியர் குணநலமே மாணவர் குண

நலனாம். 'தேர்வு அச்சம் மாணவர் களைப் பாழ்படுத்துகிறது. சுய ஆட்சியே மாணவர் படும் நோய்க்கு மருந்து என்று கல்வியும் மாணாக்கரும் என்னும் கட்டுரையில் கூறுகிறார்.

சர்வகலாசாலை அரசாங்கத் தொடர்பைப் பெரிதும் கொண்டிருத்தல் ஆகாது. படித்து ஒப்பித்து மறத்தல் என்பதே கல்வியாக உள்ளது. சுதேசக் கல்வி முறைச் சர்வகலாசாலை நிறுவ வேண்டும் எனச் சர்வகலா சாலைக் கட்டுரையில் கூறுகிறார்.

நாடகம் மக்களைப் பண்படுத்த ஏற்பட்டது. அது கேடுகளுக்கு இடமாகிவிட்டது. பள்ளிகள் நாடகசாலையாக மாறிவருகின்றன. நாடகத்தால் விளைந்த தீமை போதும். நாட்டுப் பற்று ஊட்டும் நாடகம் நாட்டுக்குத் தேவை என நாடகக் கட்டுரையில் நவில்கிறார்.

தாழ்ந்தவர்கள் முன்னேற்றத்திற்குக் கைம்மாறு கருதாது சேவை செய்வது கடவுட் சேவை. கிறித்தவராகவும் முகமதிய ராகவும் ஆகிய தாழ்த்தப்பட்டவரை மதிக்கும் உயர்ந்த சாதியார் தம் தெய்வத்தை வணங்கும் தாழ்த்தப்பட்டவரை இழிவாக எண்ணுவது ஏன் என இடிக்கிறார். பஞ்சமர் என்பார் இந்தியப் பழங்குடியினர். அவர்கள் உழைத்த உழைப்பே மேல்சாதியரை உயர்த்தி இருக்கிறது. அதற்குக்கழுவாயாக அவர்களுக்கு உதவுதல் கடமை என்றும் தெளிவிக்கிறார்.

யாருக்காக வாழ வேண்டும் என்னும் கட்டுரையில் பிறருக்காக வாழ்வதே வாழ்வு என்கிறார். பூரண சுய ஆட்சிக்கு உழைப்பதே நம் வேலை என 'நமது வேலை' என்னும் கட்டுரையில் வலியுறுத்து கிறார்.

செல்வத்தைச் செலவளிக்கும் வழி என்னும் கட்டுரையில் காங்கரசுப் பணிக்குப் பயன்படுத்துவதே செல்வத்தைச் செலவழிக்கும் வழி என்கிறார். தொடர்வண்டி மூன்றாம் வகுப்புப் பயணமே 'பூலோக நரகம்' என அப்பெயர்க் கட்டுரையில் வரைகிறார். ஆசார முறையைச் சீர்திருத்த வேண்டுமானால் சமயச் சார்பாக நின்றே செய்ய வேண்டும் என்பதொரு கட்டுரை. ஆசார சீர்திருத்தம் நம் சமய நூல்களின் வழிப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்பதும் அடுத்த கட்டுரை.

பெண்மக்கள் நிலையும் தொழிலாளர் நிலையும் பலப்பல கட்டுரைகளாக வெளிப்பட்டுள. "ஆண்மக்களைப் போலப் பெண் மக்களும் முன்னேற்றம் அடைந்தாலன்றி நமதுநாடு நலமடையாது"

"பெண்டிர் மேலைநாட்டு நாகரிகத்திற்கு அடிமையாதல் ஆகாது"

"ஆடவருடன் பெண்டிரும் சுய ஆட்சிக் கிளர்ச்சியில் தலைப் பட்டு உழைக்க வேண்டும்"

"நம் பெண்மணிகளுக்கு அறிவு, வீரம், கற்பு முதலிய நற்குணங்கள் அமையுமாறு போதிக்கக் கூடிய பாடசாலைகள் பல நிறுவப்பட வேண்டும்"

“இந்தியாவில் ஆண்உலகம் கெட்டு வருவதுபோல் பெண் உலகமும் கெட்டு வரத் தொடங்கியிருக்கிறது”

“பெண்மக்கள் முன்னேற்றத்தை நாடும் ஆடவர்கள் முதலாவது விதவைகளுக்குத் தேசாபிமானம் உண்டாக்க முயல்வார்களாக”

“ஆடவர்களே நீங்கள் பெண்களைப் பெருமைப் படுத்துங்கள்; நீங்கள் பெருமை பெறுவீர்கள் நீங்கள் அவர்களுக்குச் சுதந்திரம் கொடுங்கள்; சுதந்திரம் பெறுவீர்கள்” இன்னன அக்கட்டுரையில் பொதிந்துள்ளன.

“தொழிலாளர் வறுமை என்பது நாட்டின் வறுமை”

“தொழிலாளர்க்கு உழைக்க முன்வராதவர் தேச ஊழியர் ஆகார்”

“தொழிற் சங்கங்கட்கெனத் தனியாகப் பாடசாலைகள், வாசகசாலைகள், வைத்தியசாலைகள் முதலிய அறச்சாலைகள் ஏற்படுத்தல் வேண்டும்”

“தொழிலாளர்கள் முயற்சி செய்து காங்கிரசைத் தாங்கள் வசப்படுத்திக் கொள்ள வேண்டும்”

“செலவிற்கேற்ற வருவாய் இன்றியே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்கின்றனர்”

“தொழிலாளர்கள் தங்கள் கடமையை அன்பு வழி நின்று, ஊக்கம் குன்றாமல், உணர்ச்சி சலியாமல், ஒற்றுமை குலையாமல், உறுதி நெகிழாமல், உண்மை பிறழாமல், நியாயப் போர் முனையில் நின்று முதலாளிகளை எதிர்ப்பார்களாயின் வெற்றி தொழிலாளர்கள் உடையதே”

“தேசத் தொண்டு செய்யப்பலர் கிளம்பியிருப்பது போலச் சுதேசக் கைத்தொழிற்சாலை அமைக்கப்பலர் கிளம்பவேண்டும்”

“அச்சுத் தொழிலாளருக்காக ஒரு தரும பாடசாலை அமைத்தல் வேண்டும்” இன்னன தொழிலாளர் கட்டுரைகளில் உள்ள சில குறிப்புகள். நூல்நிறைவில் அரசியற்பாக்கள் சில இணைக்கப் பட்டுள்ளன.

திரு.வி.க.வின் ‘உரைநடை வளர்நிலை’ குறித்து ஆய்வு செய்வார்க்கு அளவுகோல் நூலாகத் தேசபக்தாமிர்தம் விளங்குதல் ஒருதலை.

சன்மார்க்கத் திரு.வி.க.வின் தோற்றம் இக்கட்டுரை களிலேயே இடம் பெற்றிருத்தல் ஒருதனிச் சிறப்பு நிலையாம்.

# என் கடன் பணி செய்து கிடப்பதே

'நினைப்பவர் மனம்' என்னும் அப்பரடிகள் தொடர் கொண்டு விரிவாக்கம் செய்தது போன்றதொரு நூல் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் இந்நூலாம்.

'தொண்டால் பழுத்த தூயபழம்', 'தொண்டலால் துணையு மில்லை ஐயன் ஐயாற னார்க்கே' என்னும் தொண்டின் வடிவர், தண்டு ஏந்தும் முதுமையிலும் அதனை ஏந்தாது தொண்டேந்திய தோன்றல் அப்பரடிகள் திருவாய் மலர்ந்தருளிய தேன்மொழி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது.

என் கடன் பணி செய்தலால், என்னைப் பேணுதல் என் பணி இல்லை! அப்பணி இறைபணி; என முழுதுறும் ஒப்படைப்புச் செய்துவிட்ட இறைவாழ்வர்- இறையொடும் ஒன்றி உடனாய வாழ்வர் அப்பரடிகள். அவர்தம் வாழ்வுச் சுரப்பாம் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதை முழுதுறக் கொண்டு வாழ்ந்த மூதடியார் திருவிக. "மீண்டும் மீண்டும் பிறவி வேண்டும் தொண்டுக்காக! வீடும் வேண்டா" என்று வாழ்ந்த விழுமிய வாழ்வு திரு.வி.க. வாழ்வு. இப்பொருளாய்வு அப்பரடிகளொடு, திரு.வி.கவும் ஒன்றி உடனாகிய ஆய்வு என்னலாம். இருமை ஒருமையாய்த் திகழும் பெருமையது இஃது என்க.

அப்பரடிகளின் ஓரடியை 'என் - கடன் - பணி - செய்து கிடப்பதே' என நான்கு பகுப்பாக்கி நூலை நூற்கிறார். இந்நான்கு தலைப்புகளுள் எதன்பால் அப்பரடிகளும் திரு.வி.க.வும் குவிந்து குமிழ்விட்டனர் எனினும் இருவர் வாழ்வையும் தோய்ந் துணர்ந்தார் எளிதில் அறிவர். அது 'பணி' என்பதாம். ஆதலால் 'பணி' விரிவே நூல் விரிவெனல் சாலும்.

அப்பரடிகளுக்கு எவரும் எண்ணிப் பாராத விருதை - முடிசூட்டை - பரிசளிப்பை வழங்குகிறார். திரு.வி.க. அது " தமிழ் நாட்டுச் சத்தியாக்கிரகி (அறப்போராளி) ஆகிய அப்பர் சுவாமிகள்.

1919இல் தேசபக்தனில் இடம் பெற்ற கட்டுரை, 1921இல் நூல் வடிவுற்றது. அதுகால், பல பொருளைக் கூட்டியும் புதுக்கியும் மாற்றியும் ஒழுங்கு செய்துள்ளார். "ஏறக்குறைய ஒருபாதி புதிய பொருள் சேர்க்கப்பட்டது" என்கிறார்.

தமிழ்ப்பணி செய்வார் இந்நாளில் மேற்கொள்ள வேண்டும் இன்றியமையாப் பணி ஒன்றனைத் திரு.வி.க. சுட்டுகிறார். தமிழைப்

புறக்கணித்துக் கொண்டு தமிழால் வாழும் திருக் கூட்டத்தார் செவிக்கண் இச் செவ்வுரை ஏறின் நன்றாம். அவர் பிறவி நன்றிப் பிறவியாக வாய்ப்புமாம்!

“பத்திரிகை ஆசிரியனாகி, அரசியல் துறையில் இறங்கிய நாள் தொட்டுத் தமிழ்ப்புலவர் உலகில் யான் வாழ்ந்ததாகக் கருதுவதில்லை; ஆனால் தமிழுலகில் வாழ்வதாகக் கருதுகிறேன். போதகாசிரியனாய் இருந்த போது தமிழ்த் தாயின் கேசமும் மேகலையும் சிலம்பும் என் கண்களுக்குப் புலனாயின. இப்பொழுது தமிழ்த்தாயின் அலமரலும் விம்மலும் அழுகையும் புலனாகின்றன. தமிழ்ப் புலவர்களுக்கு இவை புலப்படுகின்றனவோ என்னவோ தெரியவில்லை. ஆனால் தமிழகத்துக்கு இவை புலப்படா தொழியவில்லை”.

“என்னைத் தொண்டிற்குப் பண்படுத்திவிடுத்த எனது தமிழ் அன்னை - என்னை ஈன்ற அன்னையினும் சிறந்த அம்மை - அலமந்து விம்மி விம்மி அழுது அழுது ஆவிசோரும் வேளையில் அவள் துயர் தீர்க்க முயலாது, அவளைச் செயற்கை அணிகளால் அழகு செய்ய எனக்கு மனம் எழவில்லை.. என் தாய் நாடு உரிமை பெற்றாலன்றி என் தமிழ்த்தாய் அரசு போற்றும் கழகமேறி அரியாசனம் வீற்றிருக்க மாட்டாள். ஆதலால் சிறப்பாக அரசியல் துறை நண்ணிப் பணி செய்தால் தமிழ்த் தாய்க்கு நலம் விளையும் என்றெண்ணி அத்துறையில் இறங்கித் தொண்டு செய்யலானேன்” என்கிறார். (முன்னுரை) ‘என் தாய்நாடு உரிமை’ என்று அவர் சுட்டியது இந்திய விடுதலையை. இந்திய விடுதலை எய்தி அறுபான் ஆண்டு ஓடிய பின்னும் தமிழ்த் தாயின் அவலம் - அழுகை - ஓய்ந்தனவா? அவள் அரசு போற்றும் கழகமேறி வீற்றிருக்கின்றனளா? மனச்சான்றொடும் எண்ணித் தெளிவு கொள்வாராக.

“மேல் நாட்டுப் புறப்பொருள் ஆய்வாளர், சடப் பொருளுக்கு வேறாக ஒருசித்துப் பொருள் உண்டு” என்னும் முடிவுக்கு வந்திருப்பது. கீழ்நாட்டு ஆத்திக நூல்களுக்கு ஆக்கந் தேடுவது” என்கிறார்.

“உள்ளதனின்றும் ஒன்று தோன்றுமேயன்றி, இல்லதனின்றும் ஒன்று தோன்றுவதில்லை” என்பதை விளக்குகிறார்.

கடமை என்பது, உயிர் உடலோடு தொடர்பு கொண்டுள்ள நிலையில் ஏற்படுவது என்றும், என்று கடமை ஏற்பட்டதோ அன்றே பணியும் ஏற்பட்டது. எனவே, மனிதரது கடமை பணியைப் பற்றியே கிடக்கிறது என்று கடன் பகுதியில் உரைக்கிறார்.

பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பவற்றை, கல்வி பயில்வது, அன்பை உணர்வது, கட்டுப்பட்ட அன்பில் நின்று தொண்டு புரிவது, கட்டற்ற அன்பில் நின்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவது என்று பொருள் பொதியக் கூறுகிறார். பணியை விளக்கும் திரு.வி.க. பணியால்

கடவுள் நிலை எய்துவாரும், அஃறிணைப் பொருள் நிலையை அடைவாரும் உளர் என இருவிதப் பணிகளை (நற்பணி, தீப்பணி களைக்) குறிக்கிறார். கடவுட்பணி என்பது கைம்மாறு கருதாதது எனவரம்பிடுகிறார்.

"கடவுளை வழிபடுவதற்கு ஓரிடம் வகுக்கப்படுவது, தன்னமில்லாப் பணியைச் பதியச் செய்ய வேண்டும் என்பதற்கேயாம்" என்கிறார்.

வழிபாட்டு முதிர்வால் 'எல்லா உயிரும் தம்முயிர் போலத் தோன்றும்' அருணிலை அடைதலையும், "யாம் எமது என்னும் பற்றுகளின்றி உயிர்களின் நலத்துக்காக வாழ வேண்டும் என்னும் உறுதியை எய்துதலையும் விளக்குகிறார்.

"கட்டுப்பட்ட அன்பு கடவுள் அன்பு ஆகாது; அது விலங்கு அன்பு" என்றும், " கடவுள் ஒரே இடத்தில் இருக்கிறார் என்னும் கொள்கையுடையாரும் எல்லா உயிர்க்கும் அன்பு செலுத்தும் உயரிய நிலையை அடையமாட்டார்" என்றும் தெளிவிக்கிறார்.

ஆலயங்களின் தற்கால நிலை என்னும் தலைப்பில் திரு.வி.க. கொதிப்புறுகிறார்.

"பணிக்கு நிலைக்களமான ஆலயங்கள், கள்ளர், சோம்பர், வேசையர், சோற்றாட்கள் முதலிய தீயர் உலவும் குகைகளாக மாறியிருக் கின்றன. ஆலயங்களில் பணி செய்வோர் கூலிக்கார ராகவும் வயிற்றுச் சாமிகளாகவும் மாறியிருக்கின்றனர். ஆலய அர்ச்சகர் உள்ளத்தைப் பணமும், பிரசாதமும் பிறபேய்களும் கோயில் கொண்டிருக்கின்றன. ஆலய அர்ச்சகர்க்கும் கல்விக்கும் இடையில் பொருள் மலையும் சோற்றுக் கடலும் நிற்கின்றன. அவர்தாம் பூசை செய்வன 'கல் செம்புதானே' என்று எண்ணிப் பலதிறப் பாவங் களையும் செய்கின்றனர். ஆலய அர்ச்சகரின் நிலை இவ்வாறாயின், ஏனையோர் நிலையைக் கூற வேண்டுமோ?" என்பது அது.

அறிஞர் பலர் உருவ வழிபாட்டை விலக்கி வருவது ஏன்? என வினாவி, "மன அடக்கத்துக்கென ஏற்பட்ட கோயில்கள் மனவிகாரத் துக்கும் விரிவுக்கும் களியாட்டத்துக்கும் உரிய கள்ளர்குகைகளாய மாறினமையே யாகும்" என மறுமொழி தருகிறார்.

தேசப்பணி தெய்வப்பணி என்பவற்றை ஆராயும் திரு.வி.க. "தேசப்பணி என்பது தெய்வப் பணியே" என அறுதியிடுகிறார்.

தேசத்தில் உலவும் (நடமாடும்) கோயில்களுக்குப் பணி செய்யாது, ஒரே இடத்திலுள்ள விக்கிரகங்களுக்குப் பணி செய்வது அறியாமையே யாகும். அண்டை வீட்டு எழை பசியால் வருந்து வதைக் கண்டும் கேட்டும் அவனை நோக்காது, பாலும் பழமும் தேனும் கொண்டுபோய் விக்கிரகத்தின் தலையில் பொழிந்து இன்புறுவோன் பூசையைக் கடவுள் ஏற்றுக் கொள்வரோ? ஒரு போதும் ஏற்றுக் கொள்ளார் என மேலும் விளக்குகிறார்.

தாம் இவ்வாறு சொல்வது சிலரைப் புண்படுத்தும் என்பதை உணரும் திரு.வி.க. "இக்கால அறத்தை வலியுறுத்த வேண்டுமென்று என் உள்ளத் தெய்வ ஆணை (மனச்சான்று) என்னைப் பிடர்பிடித்து உந்துகிறது.அத்தெய்வ ஆணைக்கு மாறுபட்டு நடப்பேனாயின் யான் மனிதப் பிறவி எடுத்தவ னாகேன்" என வஞ்சினம் கூறுகிறார்.

செய்து கிடப்பதே என்பதன் நிறைவில் இறைவனிடம் ஒரு வேண்டுதல் வைக்கிறார். அது திரு.வி.க. தம்பிறவியில் வேண்டும் 'வேட்டல்' தொகுப்பாகும். வேட்டல் நூல்பல எழுதினவர் அவரல்லரோ!

"ஐந்தொழில் புரியும் ஆண்டவனே,

வீட்டின்பம் வேண்டாம்; ஓய்வில் விருப்பமில்லை; மனிதப் பிறவி வேண்டும்; அப்பிறவியை எனதருமைத் தமிழ்நாட்டில் தாங்குதல் வேண்டும்; நின் திருவடியை என்றும் மறவா மனம் வேண்டும்; செல்வ வாழ்வு வேண்டாம்; எளிய வாழ்வு வேண்டும்; பயன் கருதாப் பணியில் நெஞ்சம் பதிதல் வேண்டும்; எனது தமிழ்மொழிக்கும், எனது அன்புச் சமயத்துக்கும், எனது அருமைத் தாய்நாட்டுக்கும் இடையறாத பயன்கருதாப் பணி செய்த வண்ணம் இருத்தல் வேண்டும்; இறக்கும்போதும் நின்திருவடி நினைவும் எனது மொழி சமயம் நாடு இவைகளின் நினைவும் அகலாமல் நிற்றல் வேண்டும்.இவ்வேண்டுதல்களைத் திருவருள் செய்க" என்று வேண்டுகிறார்.

நூல் முடிவில், "இதை வாசிக்கும் நண்பர்கள் பணியில் காதல் பூண்டு, வீட்டையும் விரும்பாது, எத்தகைக் கைம்மாறும் கருதாது, ஆண்டவர் அருட்குணம் பெற்றுப் பணி செய்து கிடப்பார்களாக" என வாழ்த்துகிறார். இவ் வேண்டுகையும் வாழ்த்தும் தத்தமக்கென உரிமை பூண்டார் திரு.வி.க. வினால் தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட பேற்றினர் என்பது உறுதியாம்.

# தமிழ்நாட்டுச் செல்வம்

*தமிழ்நாட்டுச் செல்வம் என்னும் பெயரில் வெளிவந்த சுவடி, காரைக்குடி, இந்து மதாபிமான சங்க வெளியீடு ஆகும். அச்சங்க ஆறாம் ஆண்டு விழாவில் திரு.வி.க. வழங்கிய தலைமையுரையே இதுவாம். (1924)*

*தமிழ்நாட்டின் பழமையையும் குமரிக் கண்டக் கடல் கோளையும் தக்க சான்றுகளுடன் உரைத்துத் தமிழ்மொழியின் தொன்மை மென்மை ஆயவற்றை எடுத்துரைக்கிறார்.*

*மாந்தர் குழந்தை நிலையில் இருந்து தோற்றுவித்த மொழி தமிழ் ஆதலால், அதில் வல்லொலி இல்லை; சில எழுத்துகள் மொழி முதலாக வருதல் இல்லை என்பவற்றை நன்கு விளக்கிக் கூறுகிறார்.*

*தமிழர் வாழ்வு, அக வாழ்வு என்றும், புறவாழ்வு என்றும் பகுப்பட்ட முறைமையை விளக்கி, அகம் நுண்மை, புறம் பருமை; அகவளர்வே புறம்; ஒன்றை இன்றி ஒன்று இல்லாதவை என்று கூறித் தமிழர் அரசியல் சிறப்பை உரைக்கிறார்.*

*சோறாக்கும் தீயின் வெம்மை, ஞாயிற்றின் வெம்மை என்பவை அன்றி வேறு வெம்மை அறியார். திருவில் அல்லது கொலைவில் அறியார் என மக்கள் வாழ்ந்த அமைவும், வன்மையும் அறமும் பேணிய அரசியல் சீர்மையையும் போரிலும் அறம் காத்த சிறப்பையும் உரைக்கிறார்.*

*பூத பௌதீக ஆய்வு, கலைத்திறத் தேர்ச்சி, வாணிகவளம், மருத்துவ மாண்பு, அறிவியல் நோக்கு, நாட்டுவளம் என்பவற்றை எல்லாம் விரிவாக ஆய்ந்துரைக்கிறார்.*

*தமிழர் பாட்டின் பெருமையை எழுச்சிமிக உரைத்து, சமய மாண்பை உரைக்கிறார். இறைவன் அன்பின் வடிவன் அறிவின் வடிவன் என்று கூறிச் சமய அறிவின் இன்றியமையாமையையும், சமய அறிவு இல்லாமைக்கேட்டையும் நெகிழ்வுறக் கூறுகிறார்.*

*தேவாரம் திருவாசகம் நாலாயிரம் தமிழ் வேதங்கள் என்பதை உரைக்கும் திரு.வி.க. பல பேரூர்களில் கூட, திருவாசக நூல் கிடைக்கப் பெறாமையை வருந்தியுரைக்கிறார்.*

*நம் சமயத்தின் மேல் பற்றுமையோ, நூல் ஆய்வோ, மக்கள் தொண்டோ புரியாமல் வாளா புறக்கணிப்பதை எடுத்துரைக்கும்*

திரு.வி.க. எங்கிருந்தோ வந்த பாதிரிமார்கள் செய்யும் அரிய தொண்டுகளைக் கண்கொண்டு காண ஏவுகிறார்.

சமய நூல்களைப் படியாமலும் பிறர் படிக்கவிடாமலும் தொண்டு எதுவும் புரியாமலும் இருக்கும் சமயவாணர், சமயம் மாறுவார் மேலும், அச்சமயப் பரப்பாளர் மேலும் வன்மங் கொள்வது பழிச் செயலாம் என உணர்த்துகிறார். வன்மங் கொண்டு பழிகூறுவார், பாதிரிமார் செய்யும் தொண்டு போல் தொண்டு செய்யத் தடை என்ன? என்கிறார்.

நம்மவர்க்குப் படமாடும் கோயில் மேல் உள்ள பற்று, நடமாடும் கோயில் மேல் ஏற்படுவது இல்லை. சமயச் சங்கங்களும் அக்கறை காட்டுவது இல்லை. சங்கங்கள் இணைவதோ, இணைந்து தொடர்ந்து அறிவுத் தொண்டும் ஆக்கத் தொண்டும் செய்வதோ இல்லை. அத்தொண்டுகள் எல்லாம் துலங்குவதற்கு இந்து மதாபிமான சங்கம் திட்டமிட்டுக் கடனாற்றுமாக எனப் பொழிவை நிறைவு செய்கிறார்.

சமயச் சால்புடைய தொண்டர் ஒருவர்,
சமயச் சால்புடைய தொண்டர்கள் பெருகி எழுந்து
தொண்டாற்றுமாறு அழைத்த அறைகூவல் இப்பொழிவு
எனச் சுருங்க உரைக்கலாம்.

# சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து

“மூன்று மாநாடுகளின் தலைமையுரைகளைக் கொண்டதே இந்நூல். அம்மூன்றும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொழுதில் கூடப்பெற்றன. இளமையுலகம் மூன்றற்கும் பொதுப்பட நிற்கிறது” என்று திரு.வி.க. இந் நூலமைதி பற்றி உரைக்கிறார்.

பிறப்புவழி உயர்வு தாழ்வு கருதல், மக்களுள் தீண்டாமை கொண்டொழுகல், பெண்ணை அடிமைப்படுத்தல், கண்மூடி வழக்க ஒழுக்கங்களை உடும்பெனப் பற்றிக் கிடத்தல் முதலியவை நாட்டைக் குலைத்து வருதலைக் கடிந்து சீர்திருத்த வேட்கையை இளையர்க்கு ஊட்டுதற்குப் பொழிந்த பொழிவுகள் ஆதலால், அப்பொருளமைதிக்கு ஏற்பச் சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து என்னும் பெயர் பெற்றது.

வாலிப நாடார் மாநாடு, யாழ்ப்பாண மாணாக்கர் மாநாடு, திருச்சி தஞ்சை சில்லாத் தமிழர் மாணாக்கர் மாநாடு என மும் மாநாட்டுத் தலைமையுரையாகிய ‘எழுத்துப் பேச்சே’ இந்நூலடைவாம். இந்நூலின் முதற்பதிப்பு 1937இல் வெளிவந்தது.

இளமையின் சிறப்பு பாண்டி நாட்டின் சிறப்பு என்பவற்றை விரித்துரைக்கும் திரு.வி.க. சமணரைக் கழுவேற்றியதற்குப் போதிய அகச்சான்றோ, புறச்சான்றோ இல்லை என்கிறார். ஞானசூரியன் என்னும் நூலில் (பக்.96) அருகர் திறங்களை என்னும் ஞானசம்பந்தர் உரை, அருகர் சிரங்களை என மாறி இருத்தலைச் சுட்டும் திரு.வி.க.

‘அறிந்தோ அறியாமலோ உறும் மாற்றங்கள் பின்னே சரித்திர உலகிற்குப் பெருந் தொல்லை விளைக்கின்றன” என்கிறார்.

உடலோம்பலை வலியுறுத்தும் திரு.வி.க. மலச்சிக்கல் இன்றிக் காத்தல், வைகறைத் துயிலெழுதல், உடற்பயிற்சி, உணவுமுறை, கெடுக்கும் குடிவகை, நல்லொழுக்கம் என்பவற்றை விரித்துரைக்கிறார்.

“பிறர் வெகுண்டெழுந்து துன்புறுத்தும் போது பொறுத்தலே வீரம்” என்றும் “அன்பினின்றும் வீரம் பிறத்தல் வேண்டும்” என்றும் வீரவிளக்கம் புரிகிறார்.

கல்விக்கும் வாழ்வுக்கும் தொடர்பு இல்லாக் கால நிலையைச் சுட்டிக் காட்டும் திரு.வி.க., தொழிற் கல்வியும் கல்வியே என வலியுறுத்துகிறார்.

கல்வி பெறும் மொழி குறித்து, " நாம் தமிழ் மக்கள். நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும், வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம்" என்கிறார்.

"அறிஞர்கள் காணும் உண்மைகளை அவரவர் தந்தம் (தாய்) மொழியில் பெயர்த்து அறிவு பெறல் வேண்டும். அவ் வழியிலேயே உலகம் இயங்கி வருகிறது" என்கிறார்.

"இளைஞர்களாகிய நீங்கள் 'தாய்மொழியிலேயே கலை களைப் பயிறல் வேண்டும்' என்னும் உறுதி கொள்வீர்களானால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தமிழ்நாடு நாளையே பெற்றுவிடும் " என்கிறார். (5.7.19258)

"நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டது. நாட்டு மொழியை வஞ்சிப்பது பிறந்த நாட்டை வஞ்சிப்பதாகும்" என்றும் வலியுறுத்துகிறார்.

மக்களை விலங்கினின்றும் பிரித்துப் பண்படுத்துவது சமயம் என்று கூறும் திரு.வி.க. போலித் துறவு, வாய்வேதாந்தம், பொய்மைச் சடங்கு, சாதிப்பிரிவு, பெண்ணடிமை, கோவில் நிலை என்பவற்றை விரிவாக எடுத்துரைக்கிறார்.

"இளைஞர் சமரசச் சமயநெறி பற்றி நடப்பாராயின் உலகில் சமயப் போர் தொலையும்; ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகுதலும் ஒழியும்"

இந்நாளில் நமது நாட்டில் நடைபெற்று வரூஉம் சடங்கு களில் சில குருட்டு நம்பிக்கைகள் நுழைந்திருக்கின்றன. அவற்றில் மூன்றைச் சிறப்பாகக் குறிக்கிறேன். ஒன்று, சடங்குகளைச் சமயத்துடன் தொடர்பு படுத்துவது; மற்றொன்று பிறப்பில் குறிக்கொண்டு "நல்வினை தீவினைகட்குப் பண்டாரத்தையோ தேசிகனையோ பார்ப் பானையோ பிறனையோ அழைப்பது; இன்னொன்று குறிப்பிட்ட ஒருமொழியிலேயே மந்திரம் சொல்லவேண்டும் என்பது"

"நமது நாட்டின் விடுதலை சாதி வேற்றுமை அழிவில் இருப்பதை இளைஞர் அறிந்து மனங்கொண்டால் சாதி வேற்றுமையைத் தகர்க்கலாம்"

"சாதி இயக்கங்களால் சாதிகள் வலுப்படலாகாது"

"கலப்பு மணம் நாட்டில் பெருகப் பெருகச் சாதி வேற்றுமை தானே சாய்ந்து படும்" என்கிறார். பெண்மக்கட்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை அடுக்கும் திரு.வி.க. "இவற்றை விதித்தவரின் நெஞ்சைக் கல்லெனக் கழறுவதா? இரும்பென இயம்புவதா?" என வினாவுகிறார்.

நம்கோயில் நிலையைக் குறிப்பிடும் திரு.வி.க. கிறித்து பெருமான் கோயிலைக் 'கள்ளர் குகை' என்றதையும், காந்தியடிகள்

'வேசையர் விடுதி' என்று சுட்டியதையும் கூறி, "நாம் இப்பொழுது வதிவது பேய்நாடு, நோய்நாடு, நரகக் குழியில் நாம் வதிகிறோம்" என இரங்குகிறார்.

யாழ்ப்பாண மாணாக்கர் மாநாடு 1929 ஏப்ரல் திங்களில் (10,11,12) நிகழ்ந்தது. தமிழகத்தின் ஒரு பகுதி யாழ்ப்பாணம் எனத் தொடங்கிக் குமரிக் கண்ட எச்சமே ஈழம் என்பதை வலியுறுத்து கிறார்.

யாழ்ப்பாண மாணவர் மாநாட்டு நோக்காக எவை இருக்க வேண்டும் என்பதை,

1) மானம் பாராட்டும் உயர்ந்த நாடாய் நம் ஈழம் நிலைக்க வேண்டுமாயின் எமக்கு நமது தாய்நாட்டுக் கல்வித் தேர்ச்சி (ஓவியம், சிற்பம், மொழி, இசை, ஞானம்) இன்றியமையாத தென்பதும்;

2) நமது நாட்டுக்குத் தன் அரசை மீண்டும் நிறுவுதல் எமக்குப் பெரியதொரு கடனாம் என்பதும்;

3) நமது நாட்டிலுள்ள பல்வேறு சாதியாருக்கும் அரசியல் நிலையினும், மக்கள் கூட்ட வாழ்வினும் ஒரு வேறுபாடும் இல்லை என்பதும்;

4) சாதி பேதம் பாராட்டுதல் நமது நாட்டாரின் மக்கட்டன்மைக்குப் பெரியதோர் இழிவாம் என்பதும்;

5) பிறநாட்டுப் பொருட்களை வரவழைத்துப் பயன்படுத்துதல் பிறர் பொருட்களுக்கு அடிமைத் தன்மையை நாட்டில் நின்று நிலவச் செய்து வருகின்ற தென்பதும் உமது நோக்கங்களாக் கொண்டு பணியாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். ஆண்டுகள் எண்பது கடந்தாலும் இன்றை நோக்கும் அவையாகவே உள அல்லவோ! இன்னும் மேலும் சிக்கல்தானே பெருக்கெடுக்க லாயிற்று. அதனைத் தீர்க்க, எத்தகு கொடை கொடுத்தாக வேண்டிய நிலையுள்ளது! அன்றே விழிப்புற்றிருந்தால்.. என்று எண்ணச் செய்கிறது திரு.வி.க. கூறிய நோக்கங்கள்.

மாணாக்கர் கொள்ள வேண்டியவெல்லாம் திரட்டி யுரைத்த திரு.வி.க. "யாழ்ப்பாண இளைஞர்களே, வருங்கால உலகம் உங்களை நோக்கி நிற்கிறது; உங்கள் தாய்நாடு உங்களை நோக்கி நிற்கிறது; உங்கள் தமிழ்த்தாய் உங்களை நோக்கி நிற்கிறாள். உலகில் சகோதர நேயம் பெருகல் வேண்டும்; நாடு தன்னரசின்பம் நுகரல் வேண்டும். தமிழ்த்தாய் அரியாசனம் ஏறல் வேண்டும். இத்துணைக் கடன்கள் உங்களைச் சூழ்ந்து நிற்கின்றன; அக்கடன்களாற்ற எழுங்கள்; எழுங்கள்" என முடிக்கிறார்.

மூன்றாம் மாநாடு தமிழ் மாணவர்மாநாடு. துறையூரில் கூடியது. நாள். 6.8. 1932 சோழநாட்டின் பெருமை மாணவர்

உடல்நலம் கல்வி தாய்மொழிப் பயிற்சி கலைகள் சீர்திருத்தம் என்பவை பற்றி நிரலே விரித்துரைக்கிறார்.

கண்ட இடங்களில் எச்சில் துப்புதலும் வாழ்வில் ஒழுங்கீனமும் குறித்த திரு.வி.க. ஒழுங்கு ஊராளும் என்கிறார். மாணவர் ஒழுங்கு முறையைத் தெளிவுறுத்துகிறார்.

தீட்டிய அரிசியைத் தள்க; கொழியல் குத்தரிசியைக் கொள்க.

கீரை காய் கனிகளை உண்க; காப்பி, டீ கோக்கோ முதலிய பானங்கட்குப் பதிலாக நீர், மோர், இளநீர் முதலியவற்றை அருந்துக. சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவற்றைக் கனவிலும் கருதாதேயுங்கள் எனப் பலப்பல நலக்கருத்துகளை நவில்கிறார்.

மனிதன் எண்ணத்தால் ஆக்கப்பட்டவன் என்பதை நயமுற விளக்குகிறார். சமயப் போரிடுவோரினும் நாத்திகர் நல்லவர் என்கிறார்.

தாய்மொழியின் வழியே கல்வி பெறுதலை வலியுறுத்தும் திரு.வி.க. கிரிபத், தாகூர், திலகர், காந்தி ஆயோர் தம் தாய் மொழிப் பற்றைச் சுட்டிக் காட்டுகிறார்.

தமிழ்நாட்டை ஒருமையில் நிறுத்துதற்கு மொழியன்றி வேறொன்று இல்லை என்கிறார். மாணவர் மொழிப்பற்றும் தொண்டுமே மீண்டும் தமிழை அரியணையில் அமர்த்தும் என வலியுறுத்திப் பொழிவை நிறைவு செய்கிறார்.

மூன்றும் இளமையர் முன்னர் பொழிந்தவை.

மூன்றும் சீர்திருத்தம் பற்றித் தெளிவித்தவை.

மூன்றும் விருந்தாய் அமைந்தவை. ஆதலால் மூன்றும் பழநாள் கலித்தாழிசை போல்- ஒரு பொருள் பற்றிய மூன்றாய் - எடுத்த கருத்தை வலியுறுத்துவனவாக விளங்குகின்றன.

# தமிழ்க்கலை

'தமிழ்க்கலைகள் என்னைப் போன்றவர்க் கென்றே தோன்றினவோ' என இறும்பூது எய்தியவர் திருவிக. இயற்கை நாட்டம், இசை வாழ்வு, கலைத்துய்ப்பு, இறைமை நாட்டம் என்பவற்றின் வழிப்பட்ட தொண்டர் பிறவி, திரு.வி.க. பிறவி.

திரு.வி.க. வாழ்நாளெல்லாம் என்ன முழங்கினாரோ அவற்றின் 'சாரம்' இத் தமிழ்க்கலை.

திரு.வி.க. பொழிந்த பொழிவுகள் ஆறு. அவற்றின் எழுத் தாக்கம் பேரன்பர் அன்புப் பழம்நீ. நூலாக்கம் முதுபெரும் புலவர் மே.வி. வேணுகோபாலர்; நூல் ஒப்புகை வழங்கியவர் திரு.வி.க. முன்னுரை பேராசிரியர் க.அன்பழகனார். முதற்பதிப்பு 1953.

தமிழ்க்கலை முதற்கட்டுரை, சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற விழாப்பொழிவு இரண்டாம் பொழிவு பச்சையப்பன் கல்லூரி மாணவர் மன்றப் பொழிவு. மூன்றும் நான்கும் வள்ளலார் பற்றியவை. இராமலிங்க சுவாமிகள், சமரச சுத்த சன்மார்க்க சங்கப் பொழிவுகள். ஐந்தாம் கட்டுரை தொண்டை மண்டல துளுவ வேளாளர் பள்ளிப் பொழிவு. நிறைவு வ.உ.சி. படத்திறப்பு. சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டில் நிகழ்த்தியது. திரு.வி.க. மாநாட்டுப் பொழிவுகள் அவரால் வரையப்பட்ட எழுத்துப் பொழிவுகள், அவை விளக்கம் - பொழிவுத் தொண்டு - நன்றி பாராட்டல் என்பனவற்றைத் தவறாமல் வழங்கும். இக்கட்டுரை கள் செய்தித் தொகுப்பு அளவில் அமைகின்றன. அவை விளிப்புக் கொண்டும்கொள்ளாதும் உள்ளன.

திரு.வி.க. எழுத்துப் பொழிவுக்கும் பேச்சுப்பொழிவுக்கும் வேறுபாடு இரா. இப் பொழிவுக் கட்டுரைகள் திரு.வி.க.வின் உணர்வு மேம்பாட்டையும் உரையடுக்கையும் ஓரளவாலேயே காட்ட வல்லனவாய் அமைகின்றன.

தம் சொந்தக் கலை, 'பட்டினிப் பட்டாளத்தை ஒழிக்கும் கலை' என்று கூறுவது வறுமையிலா வாழ்வின் தேவையைக் காட்டும் கண்ணாடியாம். கலையை வளர்ப்பதே உண்மையான சமயம் என்கிறார். குழந்தைகளின் முகமே ஒரு கலை என்பவர் குழந்தையுள்ளத்தவராகத் தானே இருப்பார்!

பச்சையப்பன் மன்றத்தில் , 'மன்று, மரத்தடி' என்பதை விளக்கிச் செயற்கை மாடி மன்றுகளைச் சுட்டுகிறார். எந்த நாட்டில்

சட்டங்கள் மிகுதியாகின்றனவோ அந்த நாட்டிலே, மக்கள் மனம் பண்படவில்லை என்பது புலனாகும் என்கிறார். "மிகு பொருள் வேட்கை அமைதியை ஆக்காது. மக்களுக்குப் பயன்படாத அறிவியல் அறிவியல் அன்று; என்பவற்றைச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

"தமிழராகிய நாம் இராமலிங்க அடிகளை அணித்தே உள்ள ஆந்திரத்திற்கும் அனுப்பினோம் இல்லை" என்பதில் திரு.வி.க. கொண்ட வள்ளலார் உள்ளம் புலப்படுகிறது. உலகப் பெருமக்கள் வரிசையில் வைத்து வள்ளலாரைக் காணும் உள்ளம் திரு.வி.க. உள்ளம்.

"மார்க்சீயம் இராமலிங்கீயத்துள் அடங்கும்: இராமலிங்கீயம் மார்க்சீயத்தைக் கடந்து விஞ்சி நிற்கும்' என்கிறார். காலமெல்லாம் தொழிலாளர் தொண்டிலே ஊன்றி நின்ற திரு.வி.க. 'வள்ளலார் புத்துலகச் சிற்பி' என்பதை ஆணையிட்டு மொழிகிறார் திரு.வி.க. 'நாஸ்திகத்தைப் பரப்பும் ஆசிரியர்களை நீக்கவேண்டும்' என்று புதுச்சட்டம் ஒன்று பிறந்திருக்கிறது. சட்டத்தால் தடுப்பது அறியாமை - அநாகரிகம் - என்பேன். சட்டம் ஒன்றாலே எதையும் வெல்ல முடியாது. இன்று ஆஸ்திக ஆட்சி சட்டத்தால் தடுக்கிறது. நாளை நாஸ்திக ஆட்சி வந்தால் ' ஆஸ்திகம் கூடாது' என்று சட்டம் போடுகிறது. இது தவறு. கடவுள் இல்லை என்றால் காட்ட வேண்டும். சயன்ஸ் மூலமாகக் காட்டலாமே என்கிறார். 'நல்ல சமயம் நாத்திகம் வெறாது என்னும் கொள்கையர் அன்றிப், போலிச் சமயத்தார் - சடங்குச் சமயத்தார் ஒப்புவாரோ இதனை?

"இருபிடி யூண் வழங்கினால் உழவுக்கு முதல் குறையு மென்று வளர்த்த பொருளைக் கள்ள மார்க்கட்டுக் காசை - பேயின் விழாவுக்கு வீணாக்குகின்றனர். தங்க மயில் வாகனம், வெள்ளி ரிஷபம், புஷ்ப விமானம், பொய்க்கால் குதிரை, மேளக்கச்சேரி, வாண வேடிக்கை முதலான வற்றிற்குப் பணத்தைப் பாழாக்குகின்றனர். இவை யெல்லாம் பேயின் விழா அல்லாமல் வேறென்ன? உயிர்க்கிரங்கும் கடவுள் உண்மையாக இவற்றை யெல்லாம் கண்டு உளம்பூரிப் பாரா?" என வினாவி, 'மழவுக்கும் ஒருபிடி சோறு' என்னும் வள்ளலார் பாடலை எடுத்துக் காட்டு கிறார்.

துளுவ வேளாளர் பாடசாலையில் உயிர்த்தொண்டு என்னும் தலைப்பில் பொழிகிறார் திரு.வி.க.

சிற்றூர் மாணவர், நகர மாணவர் உடல்நலங்களைப் பற்றி ஆய்கிறார். சூரிய வெளிச்சம் பட்டால் அழகொழுகும் என்றும், தலையில் பச்சை வண்ணத் துணி கட்டிக் கொண்டால் கதிரொளியை வாங்கித் தந்து நலம் செய்யும் என்றும் வலியுறுத்துகிறார். நரையை மாற்றிக் கறுப்பாக்கும் முயற்சியைக் கூறி நகையாடுகிறார். தீட்டிய நல்ல வெள்ளைப் பச்சரிசி உணவைப் பூனையும் நாயும் கூடத்

தொடா என்று கூறும் திரு.வி.க. நன்கு தீட்டாத அரிசியை ஆக்கி உண்ண ஏவுகிறார். தயிர் உண்ணும் நலத்தை எடுத்துரைக்கிறார். பதவிப்பித்து அற்ற தொண்டுள்ளத்தை அவாவ உரைக்கிறார். நீண்ட நாள் வாழ்ந்து உயிர்த் தொண்டாற்ற வாழ்த்திப் பொழிவை நிறைக்கிறார்.

நிறைவுக் கட்டுரை வ.உ.சி படத்திறப்புப் பொழிவு. அதில், தாம் எக்கட்சிச் சார்பிலும் இல்லாதவன் எனத் தம்மைச் சுட்டுகிறார். அதனால் ஏற்படும் பழிப்பையும் பண்பாடாக்கி மொழிகிறார்.

“சிலர் நினைக்கிறார்கள், ‘திரு.வி.க.வுக்கு ஒரு கட்சி கிடையாது. ஒரு கொள்கை கிடையாது. எங்கும் போவார்; எவர் படத்தையும் திறப்பார்’ என்று. எனக்குக் கொள்கையுண்டு. என் கொள்கை என் கையில் இருக்கிறது. ஏழை மக்கள் கையில் இருக்கிறது. பாட்டாளி மக்கள் கையில் இருக்கிறது. நான் சாதி, மத, நிற, மொழி, நாடு முதலிய எல்லாப் பேதங்களையும் கடந்தவன். பொதுமக்களின் சுகவாழ்வுதான் எனது குறிக்கோள். ஒவ்வொரு மனிதனையும் சுயேச்சையுடன் வாழ, உயர்த்த, எக்கட்சி பாடுபட்டாலும், அங்கெல்லாம் நான்போவேன், வருவேன், பாடுபடுவேன்” என்கிறார். வ.உ.சி. அறவாள் வைத்திருப்பார். அதுதான் திருக்குறள் வாள். திருக்குறளின் உண்மை களை அறியாத கேட்டால்தான், நாடு தன் சிறப்பை இழந்தது என்கிறார். “வடநாட்டாரால் திணிக்கப்பட்ட போலித் தியாகம், தமிழர்களின் நாகரிகத்தையும் கலைப்பண்பையும் பாழ்படுத்தி விட்டது என்று கூறும் திரு.வி.க. நமது பொக்கிசமான திருக்குறளி லிருந்து காதல் மணவாழ்க்கை ஆகியவற்றை அகற்றிவிட வேண்டும் என்று கூடச் சொல்லும் அளவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. தமிழர்களின் பண்பு நம் மந்திரியாருக்குத் தெரியாது என்றுதான் நினைக்கிறேன் என்கிறார். வ.உ.சி. தன்னம்பிக்கைத் தோன்றல்; நமக்கு வடவர் கண்காணிப்புத் தேவையில்லை என்கிறார்.

வெள்ளையனுக்குத் துணையாய் இருந்துகொண்டு வடநாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப் படைக்கின்றது. அதற்கு இடம் தாராதே! தாராதே! தாராதே! வடநாட்டுப் பாசிசத்தை ஒழிப்பதுதான் எந்தக் கழகமாயிருந்தாலும் அக்கழக்கத்தின் முதல் வேலையாக இருக்க வேண்டும் என்கிறார். மேலும் பாசிசப் படேலிசத்தை முறியடிப்பதே நம்மை முன்னோக்கி யுள்ள மாபெரும் பணியாகும் என முழங்குகிறார்.

பழுத்த தொண்டின் பட்டறிவு விளக்கம் என்னத் தக்க வீறுமிக்க உரையாற்றும் திரு.வி.க, ‘தமிழ்நாடு தமிழருக்கே’ ‘திராவிடநாடு திராவிடருக்கே’ என்பதுதான் முடிவு என்கிறார்.

திருவி.க. கருத்துகள், ‘இளமை விருந்தா?’, ‘முதுமை உளறலா?’ என அவர் நூற்பெயராலேயே சிந்திக்க வேண்டிய சீரிய கொள்கை களாம்!

# தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப்பொழிவு

தெற்கில் இருந்து தவழ்ந்து வந்த காற்றை நினைத்த தமிழன் அதற்கு அத்திசைப் பெயர் விளங்கத் ‘தென்றல்’ எனப் பெயரிட்டான். தென்திசையில் தோன்றிய மொழியைத் தென்மொழி என்றான். அத்தென்மொழிப் பரப்பை ஆட்சி செய்தவனைத் ‘தென்னவன்’ என்றான். அவன் ஆட்சிபுரிந்த நாட்டைத் ‘தென்னாடு’ என்றான்.

தென்திசைப் பெயராக மட்டும் அவனுக்குத் தோன்ற வில்லை. தேனாகச் சுவைத்தது. ‘தென் தேன் = இனிமை’ எனக் கண்டான்.

தென்றல் காற்றின் ஊற்றின்பத்தில் தோய்ந்த தென்னகப் பாவலர் குமரகுருபரர், தமிழொடு பிறந்ததாகக் கண்டார். அது, “தென்னன் தமிழின் உடன்பிறந்த சிறுகால்” எனப் பாடுபுகழ் பெற்றது.

இறைவன் திருநடம் தெற்கு நோக்கி இருப்பதாகக் கண்ட சிவனியப் பெருமக்கள், தென்னாடுடைய பெருமான் தென்றல் தவழும் இன்பம் கருதியே தென்றிசை நோக்கினான் என்றனர். தென்மொழி வடமொழி ஆகிய இருமொழிக் கூட்டில் அமைந்த மணிப் பவழ நடையைப் பெரிதும் உவந்து வரைந்த நாலாயிரப் பனுவல் உரைவல்லாரும் தெற்கை மதித்த மதிப்பு மிகப் பெரிதாம். திருவரங்கப் பெருமான் குடதிசைத் தலையை வைத்துக் குணதிசைப் பாதம் நீட்டித் தென்றிசை நோக்கிக் கிடக்கும் கோலத்தை விளக்கும் போது, “ஆழ்வார் பெருமக்கள் ஈரத்தமிழ் வழங்கும் நிலம் தென்னகம் ஆதலால் அப்பக்கம் முகப்பக்கம் வைத்தான்” என்றும், “ஆழ்வார்களின் ஈரத் தமிழ் வழங்காமையாலும், முரட்டு சமற்கிருதம் வழங்குதலாலும் வடக்கைப் புறப்பக்கமாகக் கொண்டான்” என்றும் கூறினர். இத்தகு சிறப்புடையது தென்புலம்! இத்தென்புலக் காற்றாம் தென்றல், தமிழ்ப் பரப்பில் மற்றொன்றும் உண்டு என்று இருபதாம் நூற்றாண்டில் கண்டது தமிழ் உலகம். அது திரு.வி.க. என்னும் தமிழ்த் தென்றல் என்பது.

திரு.வி.க. வாழ்வே தமிழ்வாழ்வு! தமிழ்வாழ்வாவது அவர் வாழ்வே எனச் ‘சால்பு’ உலகம் போற்றியது. அவர், உலாச் சென்று உரையமிழ்து வழங்காத ‘ஓரவையம்’ இல்லை என்னும் புகழ்க்கு

நிலைக்களமாகத் திகழ்ந்தார். அவர் தலைமை தாங்கி நடாத்திய அவையங்களில் ஆற்றிய தமிழ்ப் பொழிவுகளுள் விரல்விட்டு எண்ணத்தக்க சிலவற்றை அவரே தொகுத்து, "தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப் பொழிவு" எனப் பெயர் சூட்டினார்.

தமிழ்உலகம், 'தமிழ்த்தென்றல்' என, அவரையோ அவர்தம் தமிழ் நடையையோ குறித்ததாக அவர் எதனைத் தமிழ்த் தென்றல் எனக் கொண்டார்?

"தமிழ்த் தென்றல் என்னும் பெயர், எனது தமிழ் நடையைக் குறிக்கொண்டு நிற்பதன்று என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். தமிழ்த் தென்றலுக்கு நிலைக்களனாய் இலங்கும் நமது நாட்டின் பண்டை வளம், கல்வி, அறம், அரசு, வழக்க ஒழுக்கம் முதலியவற்றை மக்கட்கு நினைவூட்டி, இப்பொழுது இன்றியமையாது வேண்டற்பாலதாய உரிமை வேட்கையை அவர்களிடை எழுப்ப வேண்டும் என்பது எனது நோக்கம். அதற்கு அடிப்படை தாய்மொழி என்பது எனது உட்கிடக்கை. அன்பர்கள் நெஞ்சில் தாய்மொழி நினைவு நிலை பெறுதல் வேண்டும் என்னும் கருத்துடன் 'தமிழ்த்தென்றல்' என்னும் முடியை இந்நூலுக்கு அணிந்தேன். தமிழ்த் தென்றலுக்கு உரிய நாட்டின் உரிமை குறிக்கும் ஒரு நூலென இதைக் கொள்க. ஈண்டுத் தென்றல் ஆகு பெயர்" எனத் தமிழ்த் தென்றலை விளக்குகிறார் தமிழ்த் தென்றல் (அணிந்துரை).

மாநாட்டுத் தலைமையுரை - அரசியல் மாநாட்டுத் தலைமை யுரை - கால இட சூழல் நிலைகளால் நிறைபேறாவன இல்லையே! அவை இக்கால நிலையில் பயில்வார்க்குப் பயன்பொருளாக இருக்குமோ எனின், திரு.வி.க. விடைபகர்கிறார்.

"எனது தலைமையுரைகளில் அவ்வப்போதைய அரசியல் நிகழ்ச்சிகளை மட்டும் யான் குறிப்பிடுவதில்லை. அவைகளுடன் வாழ்விற்கு உரிய வேறுபல பொருள்களையும் பொறிப்பதுண்டு. இந்நூற்கண் அத்தகைப் பொருள் பல செறிதல் காணலாம்" என்பது அது.

இக்கட்டுரைகளைப், "பார்வை இட்டுப் பொருந்திய முறையில் ஒழுங்குபடுத்திச் செப்பஞ் செய்திருக்கிறேன்" என்று தாம் செய்த தொகுப்பு நிலையைத் திரு.வி.க. வே கூறுதலால், கால அடைவோ, வேறுவகைப் பொருள் அடைவோ செய்தல் நூலாசிரியர் கருத்துக்கு முரணாம் என அவை மேற்கொள்ளப் பெறவில்லை. அவர் வைப்பு, அவர் வைப்பாகவே அமைந்து வெளியாகின்றது.

இதன் முதற்பதிப்பு ஆசிரியரால் 1928 இல் வெளிப்பட்டது. இதில் 17 பொழிவுகள் இடம்பெற்றுள. பிற்பதிப்புகளும் அம் முறையே முறையாய் வெளிப்பட்டன.

மேலைநாட்டார் சிலர் தமிழ் பயின்றனர். அவர், "பீடும் மிடுக்கும் வீறும் செறியத் தமிழில் எழுதுதல் கூடுமா? பேசுதல் கூடுமா? என்று

என்னைக் கேட்பர். அவர் முன்னிலையில் அவை மலிய எழுதியுங் காட்டுவேன். கூட்டங்களில் பேசியும் காட்டுவேன்" என்றும்,

"தமிழ்த் தென்றலிலும், 'இளமை விருந்தி' லும் ஒல்லும் வகை தமிழர் வீரத்தைப் பிழிந்து வார்த்திருக்கிறேன். அந்நூல் களைப் படிப்போர்க்கு உரிமைக்குருதி பொங்கும் என்பது என் நம்பிக்கை" என்றும் சுட்டுகிறார். (வாழ்க்கைக் குறிப்புக்கள்)

உரிமைக் குருதி பொங்கி நாடு விடுதலை கொள்ள உதவியது திரு.வி.க.வின் வீறு மிக்க தமிழ். நாம் பெற்ற விடுதலை மொழி விடுதலையாகவோ, இன விடுதலையாகவோ இதுகாறும் எழுச்சி கொள்ளவில்லை. பின்னும் தாழ்நிலையிலேயே சென்று கொண்டிருத்தல் கண்கூடு. இந்நிலையில் மொழி இன விடுதலை வீறுக்குத் திரு.வி.க. நூல்கள் அனைத்தும் மீள்பதிப்பாகித் தமிழர் கைகளில் தவழ வேண்டும். எழுச்சியாய்ப் பொங்கி எழவேண்டும். அதற்குப் பெருந் துணையாவது **திரு.வி.க. தமிழ்க்கொடை** என்னும் இவ்வரிசை.

நம் மக்கள் வாழ்வே தமிழ்வாழ்வு. அவர்கள் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ்; உற்றது தமிழ்; அத்தமிழ் அமிழ்தம் கொண்ட நாடு இந்நாடு. ஆ! ஆ! இது நினைவிலுறும் போது உறும் இன்பத்தை என் னென்பேன்! என்னென்பேன்! அவ்வின்பம் நுகர்ந்த இக்காலத் தமிழ்ப் பாவலர் பெருமானாகிய நம்பாரதியார் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று கூறியிருத்தல் காண்க.

இன்பத் தமிழ்நாட்டில் பிறந்த நாம், இது போழ்து தமிழின்பம் நுகர்கிறோமா? இல்லையே! காரணம் என்ன? உரிமை இழந்தோம்; தமிழை மறந்தோம். மீண்டும் உரிமை யுணர்வு பெற யாண்டுப் போதல் வேண்டும்? தமிழ்த் தாயிடம் செல்வோமாக. அவள் சேவையால் உரிமை உணர்வு பெறலாம். தமிழ் மக்களே! சேவைக்கு எழுங்கள்! எழுங்கள்!"

என்று திரு.வி.க 1925இல் காஞ்சி மாநகரில் நிகழ்ந்த தமிழ் மாகாண காங்கரசு 31ஆம் தமிழர் மகாநாட்டுப் பொழிவில் நிகழ்த்திய தலைமையுரையின் நிலைமை, இன்று மாற்றம் பெறத்தக்கதாக நாட்டுநிலை அமைந்து விட்டதா?

தமிழ் உரிமை, ஆட்சி மொழியில் - முறைமன்ற மொழியில் - கோயில் மொழியில் - இசைமொழியில் - பயிற்று மொழியில் - நிலை நாட்டப்பெற்று நிமிர்ந்து நடையிடப் பெறுகின்றதா? தமிழ் மக்களே, உரிமை இழந்தோம்! சேவைக்கு எழுங்கள்! எழுங்கள் என அறை கூவ வேண்டிய நிலையில் தானே நம்மொழி உரிமை உள்ளது! ஆதலால் நம் மொழி இன உரிமை மீட்டெடுப்புக்கு இம்மீள் பதிப்பு அரும் பெருங்கருவியாவதாக! **தமிழ்மண்** பதிப்பகத் தொண்டு சிறப்பதாக.

# தமிழ்ச்சோலை அல்லது
# கட்டுரைத் திரட்டு – 1

*திரு.வி.க. வழங்கும் நூல் தலைப்பே நூலின் உள்ளுறையைத் தெளிவாக்கிவிடும். இந்நூல் ஒரு பொருள் பற்றியதன்று; சில பல பொருள் பற்றிய கட்டுரைத் தொகுதி. அத்தொகுதியும் எல்லாக் கட்டுரைகளையும் கொண்டதன்று என்பதால் திரட்டு எனப்பட்டதாம்.*

*நவசக்தி இதழில் வரையப்பட்ட பொதுநிலைக் கட்டுரை களில் திரட்டப்பட்டவை இவை.*

*தமிழ்ச்சோலை என்னும் பெயரீட்டின் காரணத்தை நூல் முகவுரையில் குறிப்பிடுகிறார் திரு.வி.க.*

*"பலதிறக் கட்டுரைகளால் ஆக்கப்பெற்ற இந்நூலுக்கு எப்பெயர் சூட்டுவது என்று எண்ணலானேன். பலதிற மரம் செடி கொடி முதலியவற்றைக் கொண்ட சோலை மீது எனது எண்ணம் சென்றது. அவ்வெண்ணம் தமிழ்ச்சோலை என்று பரிணமித்தது.*

*தமிழ்த் தென்றலும் கட்டுரைத் தொகுதியே. தமிழ்ச் சோலையும் கட்டுரைத் தொகுதியே. ஏன், தென்றல் என்றும் சோலை என்றும் பெயர் பெற்றன? தென்றல் உலாவுவது; சோலை நிலைப்புற்றது. ஆதலால் தலைமைப்பொழிவு - ஊரூர் தோறும் உலாவிச் செய்யப்பட்டதால் தென்றல் ஆயது.*

*இதழிடத்து இடம்பெற்ற எழுத்து நிலைப்புறு சோலை ஆயது. படைப்பாளர் தரும் பெயரீட்டு நுண்பொருள் விளக்கம் நோக்கற்குரியது.*

*நவசக்தி இதழின் வரவு இக்கட்டுரைகள் ஆதலால், அப்பெயரே முன்மையில் நின்றது:*

*"நவசக்தி என்பது புதிய சக்தி எனப்பொருள்படும். ஐரோப்பாக் கண்டத்தில் நடைபெற்று இப்பொழுது ஓய்வு பெற்றுள்ள மகாயுத்தம், ஒரு புது சக்தியை உலக முழுவதும் எழுப்பியிருக்கிறது"*

*"நீண்ட காலமாக உலகத்தை வதைத்து வந்த அசுர பூத மிருக சுபாவங்களைச் சிதைத்தழித் தொழிக்கவே 'நவசக்தி' உலகத்தில் தோன்றியிருக்கிறது" என்று கூறும் திரு.வி.க. நவசக்தி இதழ்வழியாக ஆற்றப் புகும் ஒன்பான் தொண்டுகளை வரிசைப் படுத்துகிறார். மக்களாட்சி, தொழிலாளர் இயக்கம், உழவுத் தொழில், மகளிர்*

நலம், மொழியாக்கம், சாதிப்பகை ஒழிப்பு, தீமைதரும் கட்சிகளைக் கண்டித்தல், ஓரினமாதல் என்பவை அத் தொண்டுகள்.

தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழினம் என்பவை பற்றிய அமைதியில் ஆறுகட்டுரைகள் முற்பட அமைந்துள. தமிழ் நாட்டுப் பழம் பெருமையையும் பின்னாளைச் சீர்கேடுகளையும், தமிழ்ப் பற்றில்லா மாணவர் நிலையையும் விரியக் கூறும் திரு.வி.க." "ஆந்தரதேசம்" என்னும் அடுத்த கட்டுரையிலே,

"தமிழ்நாடே! உன் சகோதர நாட்டைப் பார்! அங்கே என்னென்ன நிகழ்கின்றன? அத்தேசத்தின் ஒற்றுமையை நோக்கு; உறுதியைக் காண். உனக்கு அந்த ஒற்றுமையும் உறுதியும் என்று வரும்?" என்று வினவுகிறார். விடுதலை பெறுதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்னரே (1922) ஆந்திரம் கொண்ட எழுச்சி நிலை என்பதை எண்ணுக.

1926இல் இலங்கைச் செலவு மேற்கொண்டார் திரு.வி.க. ஆம்: 80 ஆண்டுகளின் முன்னே. அவர் அந்நாள் கண்ட சிங்களவர் காட்சியை, 'அவர்கள் சமயம் பௌத்தமாம். சமயத்திற்கும் அவர்கள் வாழ்விற்கும் பெரிதும் தொடர்பில்லை" என மதிப்பிடுகிறார்.

புத்த பிக்குகளாகிய பொங்கிகள் - சந்நியாசிகள், அருள் நெறி ஓம்ப வேண்டிய அறவோர்கள் - "விலாப் புடைக்கப் புலால் உண்கிறார்கள்" என்கிறார்.

அங்குள்ள தமிழர் நிலையையும் சுட்டத் தவறவில்லை திருவி.க.

"இன்னும் சின்னாளில் கொழும்பிலுள்ள சில தமிழர்கள் ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொள்வார் போலும்! மற்றொரு பால் தமிழ்க்கிளர்ச்சியும் தமிழர் இயக்கமும் முருகி எழுந்து வரலால் பெருங்கவலைக்கு இடமிராது என்று நம்புகிறேன். ஆண்டுள்ள தமிழர்கள் தமிழை வளர்க்கப் பெரு முயற்சி செய்வார்களாக" என்கிறார்.

இந்தியாவின் தலை எழுத்து என்னும் கட்டுரையில் (1926) "பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்தது - மக்களுடல் தாங்கியுள்ள சிலரைத் தீண்டாதாரென வதைத்து ஒதுக்கியது. பெண் மக்களைக் கல்வி பெறாத வழியில் அடக்கியாண்டது கோயில்களில் மக்கள் உரிமை கடியப்பட்டது. இவைகள் குற்றமுடையன என்று சொற்ற அறவோர்களை வதைத்தது இவைபோன்ற கருமங்கள் உருண்டு திரண்டு நாட்டை வருத்துகின்றன" என்கிறார்.

'அணித்தோ? சேய்த்தோ' என்னும் கட்டுரை, விடுதலை பற்றியது. அறநெறிக்கு உட்பட்ட ஒத்துழையாப் போரால் விடுதலை அணித்தாய் அமையும் என்பது.(1925)

வாழ்வு என்னும் கட்டுரையில் இகவாழ்வு பரவாழ்வு எனப் பகுக்கிறார். இகவாழ்வை சமயவாழ்வு, சமூகவாழ்வு, அரசியல் வாழ்வு

எனப் பிரித்து ஆய்கிறார். அடுத்தடுத்து நோயற்ற வாழ்வு, இன்ப வாழ்வு என்பவற்றை விளக்கி யுரைக்கிறார் தனித்தனிக் கட்டுரைகளாய். நலவாழ்வுக்கு வேண்டும்.உணவு,நோய் வராது காத்தல் என்பவற்றையும் தொடர்கிறார்.

அன்பு, அறிவு, தவம், தவநெறி, இறைமை, இறையடியார், பொங்கல், கையறு நிலை என்னும் பல்வகைப் பொருளில் ஆய்வுக் கட்டுரை படைக்கிறார் திரு.வி.க.

மணிமரம் சாய்ந்தது, பெருங்கிழவர் பிரிந்தார்; கற்பகத்தை இழந்தோம்; முடிசூடாமன்னர், தொண்டரின் பிரிவு, ஒரு குலத்துக் கொருமைந்தன், இமயம் சாய்ந்ததோ, பெருநாவலர் பிரிந்தார், யதீந்திரநாத்தாஸ், சிங்கம் வீழ்ந்தது என்பவை கையறு நிலைக் கட்டுரைகள். இவற்றுள் தென்னாட்டுப் புகழர், வடநாட்டுப் புகழர் உளர். திருவிகவின் குடிமைச் செல்வமாகத் திகழ்ந்த பாலசுப்பிரமணியம் மறைவு குறித்தது :

“இற்றைக்குப் பத்தாண்டுக்கு முன்னர், என்மனைவி மக்களை அழைத்து என்னைத் தன்னந் தனியனாக்கிய ஆண்டவன், தமையன் வழிப் போந்து எனக்குப் பல வழியிலும் ஆறுதலளித்து வந்த ஒரு மைந்தனையும் இப்பொழுது அழைத்துக் கொண்டான். எச்செல்வமும் பெறாத வறியேனுக்குத் தமையன்வழிக் கிடைத்த சேய்ச் செல்வமும் போயிற்று” என்பது எவ்வளவு ஆழத்தில் இருந்து புலப்பட்ட செய்தி.

இரங்கல் எப்படி அருவியாகக் கொட்டுகின்றது என்பதற்கு ஒரு சான்று:

“ஆறும், மலையும், கூவலும், குளமும், கலையும், தொழிலும், மக்களும், ஒழுக்கமும் பலபடச் செறிந்த ஒரு பெருந்திருநகரம் திடீரென மறைந்தது போல் எமக்குத் தோன்றுகிறது. ‘அந்தோ’ தியாகராஜமலையும் சாய்ந்ததோ! என்று அழுகிறோம்” என்பது பெருங்கிழவர் பிரிந்தார் என்பதன் ஒரு பகுதி.

எக்கட்டுரை எனினும் திரு.வி.க.வின் உணர்வு தமிழ்வெள்ளப் பெருக்காய் அமைதல் அவர்க்கே அமைந்த தனிப்பேறாம்.

திரு.வி.க நூல்கள் 54. இதில் **இன்ப வாழ்வு** என்னும் நூல் தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்திரட்டு ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

# தமிழ்ச்சோலை அல்லது
# கட்டுரைத் திரட்டு – 2

இதன் முதற்பாகம் கொடையுரையில் தமிழ்ச்சோலை என்பதன் பெயர் விளக்கம் செய்யப்பட்டது. அதனைக் காண்க. இத்தொகுதி முகவுரையையும் காண்க.

இரண்டாம் பாகமாகிய இது 59 கட்டுரைகளைத் தன்னகத்துக் கொண்டது. தேசபக்தர் கடன்களுள் ஒன்றனை ஊடற்கட்டுரை யில் சுட்டுகிறார் திருவி.க. "பல செந்தமிழ்ச் சொற்கள் வழக்காறற்றுப் போயின. காரணம் நமது நாட்டுக் கல்வி அருகியதாகும். வழக்காறற்றுக் கிடக்கும் நம் மொழிக்கண் உள்ள பல சொற்களை ஆட்சியில் கொணர வேண்டுவது தேசபக்தரின் கடன்களுள் ஒன்று" என்பது அது.

பழந்தமிழ் ஊடலை, ஆங்கில அரசுடன் ஒத்துழையாமைக் கொள்கை மேற்கொண்ட காந்தியடிகள் செயலுக்குப் பயன்படுத்து கிறார். இருவர் ஒன்று கூடுதற்கு ஊடாக உண்டாகிய தடையும், அதன் வழியாக இருவரும் பிணங்குதலும் ஊடல். ஆகலின் தமிழ் அகப்பொருட் சொல்லைத் தகவார்ந்த வகையில் புறப்பொருள் போர் முறைக்குப் பயன்படுத்துதல் நல்ல தேர்ச்சியாம். 'ஊடல் என்பது அன்பு காரணமாக நிகழும் பிணக்கு' என விளக்கம் தருவது எண்ணத் தக்கது. ஆள்வோரும் ஆளப்படும் மக்களும் குடும்ப உறவு போல குறை நிறை கண்டு ஊடலும் கூடலும் முறையாய் அமைதலின் நலப்பாட்டைத் தெளிவிக்கிறார்.

பெண்மக்களும் என்னும் தலைப்புடைய கட்டுரையில் உள்ள உம்மை, 'பெண்மக்களும் ஆண்மக்களுக்கு இணையாக அறிவு ஆற்றல் விடுதலை முயற்சி வெற்றிவாய்ப்பு என்பவற்றைப் பெற வல்லவர்களே என்பதை உணர்த்தும் என்கிறார்.

ஒவ்வோர் ஊரிலும் காங்கரசு சபை அமைத்தல், இராட்டை நூற்றல், கதருடை உடுத்தல், நிதி சேர்த்தல், இந்து முசுலீம் ஒன்றுபட்டு நிற்றல் என்பவை இந்திய விடுதலைக்குரிய வெற்றியானவழிகள் என்பது வெற்றிக்கு வழி என்னும் கட்டுரை.

அறியாமை, அடிமை என்பவற்றால் சிறையுண்டு அல்லல் படும் பெண்மக்கள் நிலையை விளக்கி அவர்கள் உரிமை வாழ்வுக்கு

ஆடவரும் பெண்டிரும் மேற்கொள்ள வேண்டும் கடமையை உரைப்பது பெண்மக்கள் நிலை.

அழியா நெறியே சன்(சத்)மார்க்கம். அதனைக் கடைப்பிடிக்கத் தடையாக இருப்பவை ஐயம் திரிபு மயக்கம் என்பவை. வேற்றுமை யுணர்வு அற்றது சமரசம். அச்சமரசம் நோக்கு இல்லார்க்குச் சன்மார்க்கம் புலப்படுவதில்லை; சமரச சன்மார்க்கம் பரவின் உலகில் பகை ஒழிந்து நலம்பெருகும் என்பது சமரச சன்மார்க்கம்.

மேலை நாட்டவர்மேல் நம்நாட்டார் இரக்கம் செலுத்தி அவர்தம் ஆசை, பொறாமை என்பவற்றை அழிப்பது உலகநலம் கருதிய நம்மவர் கடமை என்பது ‘எவர்கடமை?’ என்னும் கட்டுரை.

மனிதவாழ்வில் இன்பம் சந்நியாசத்தில் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்தியவர் புத்தர். நாட்டு நலனுக்காம் உரிமைப் போரில் சந்நியாசிகள் ஈடுபடல்வேண்டும். சக்திவழிபாடு வீரவழிபாடு; அச்சமற்றது சக்தி; அண்டம் இயக்குவது சக்தி; அச்சக்தி வடிவாகிய பெண்டிர் விடுதலைப்போரில் பெரும் பாடுபடவேண்டும் என்பது சக்தியினிடத்தில் சுயராஜ்யம்.

நாட்டுக்கு அஞ்சாமை தேவை; அஞ்சாமையால் உண்மை அரும்பும்; உணர்வு பிறக்கும்; உணர்வால் சுய ஆட்சி கிட்டும்; சுயாட்சியே பேரின்பம் என்பது, ‘அஞ்சாமை.’ உயிர்களின் உரிமைக்காகப் பாடுபடும் காந்தியடிகள் சிறைவாழ்வு, சிறை வாழ்வன்று; நிறைவாழ்வு என்பது சிறையோ? நிறையோ?

காந்தியடிகள் உற்ற ஆறாண்டுச்சிறையைப் பற்றியது ‘ஆறுவருடம்.’ கிறித்துவைக் கொண்டு காந்தியடிகளை நோக்கு என ஆங்கில அரசுக்கு அறிவுறுப்பது அது. உலகம் ஒழுங்குமுறையில் இயங்குவது; மாந்தர்க்கும் அவ்வொழுங்கு வேண்டும் என்பது ஒழுங்கு.

இதிகாச புராணங்கள் உண்டாகிய நோக்கு உலகநலம் கருதியதே. அதன்மேல் உள்ள மாசு என்பவை பார்ப்பவர் கருத்துப் பற்றியதே. இதிகாச புராணப் பயன் பெரிது என்பது அப்பெயரிய கட்டுரை.

மலையின் மாண்பு, நலப்பேறு ஆயவற்றை விளக்குவது மலைவாசம்.

கதராடை, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு என்னும் மூன்றும் காந்தியடிகள் கண்ட ‘திரிகடுகம்’ என்பது அப்பெயரிய குறுங்கட்டுரை.

ஒவ்வோர் உயிர்க்கும் அந்தண நிலை உரியது; அறம், துறவு என்பவை அந்தண நிலை. அதனை அடைய ஒவ்வொருவரும் முயலவேண்டும். இந்நாள் அந்தணநிலை விடுதலைப் போரில் காட்டும் பங்களிப்பே என்பது அந்தண நிலையும் அரசியலும்.

நம்மவர் செய்த பொருளாராய்ச்சி முடிவு இறைமையைக் கண்டது என்பது பொருளாராய்ச்சி.

இந்துமதம் என்பது வேதமதம்; அதன் அடிப்படை தெய்வக் கல்வி; அக்கல்வி அழிந்தது; அதனைக் கற்பிக்கவும் வளர்க்கவும் இருந்தோர் பாவச் செயலராயினர். ஆதலால் அப்பாவம் அகற்ற அரசு சட்டம் (மசோதா) கொண்டு வர முயல்கிறது. இந்து மதத்தார் தகவார்ந்த குழு அமைத்து அதன் கருத்து வழிநிற்கச் செய்தால் ஆக்கமாம் என்பது ஹிந்துமத தர்மஸ்தாபனங்கள்.

காந்தியடிகள், காந்திசமயம் என்பவை அடுத்தடுத்து அமைந்த கட்டுரைகள். காந்தியடிகளின் கொள்ளை வழிபாடாக அவர் சிறை புகுந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்பதும், சத்தியாக்கிரகமே காந்தி சமயம் என்பதும் இக்கட்டுரைகளின் சாரம். மனிதன் தெய்வத்தை மறந்து விலங்கு நீர்மை கொண்ட வேளையில் பெரியவர்கள் தோன்றித் தெய்வ உண்மை உணர்த்துவர் என்பது விலங்கு - மனிதன் - தெய்வம்.

அகக்கருவி ஆற்றலால் நம் முந்தையர் கண்ட இமயச் செலவை, மேலை நாட்டவர் புறக்கருவி யாற்றலால் கண்டு வருவது நம் பாராட்டுக்கும் பற்றுதலுக்கும் உரியது என்பது ‘இமயமலை’; ‘இமயமலை அல்லது தியானம்’ என்பது திரு. வி, க. வின் நூல்களுள் ஒன்று.

கட்சிப்பணம் வெள்ள அழிவு நீக்கத்துக்குப் பயன்பட வேண்டும்; பணத்தால் தானே கட்சிப் பிணக்கு நேர்கிறது என்பது வெள்ளக் கொடுமை! வெள்ளத்தின் அழிவை விரிவாக விளக்கும் கட்டுரை இது.

மனிதன் அழகின் சாயலன்; அழகின் துய்ப்பனாய். அழகிறையாய் இலங்க வேண்டும் என்பது மனிதனும் அழகும்.

வீரம் தெய்வக்குணம்; தீக்குணம் இல்லா இடத்துக் கிளம்புவது வீரம்; அவ்வீரம் பகவன் நிலை என்பது வீரக் கட்டுரை.

மனிதர்களைத் தெய்வமாகக் கொள்வது சிறந்த தேசபக்தி. அவ்வழிபாடு நிகழ்ந்துவரின் தீண்டாமை நிலவாது; சாதி சமய சாத்திரச் சண்டைகள் நிலவா. அன்பு மதம் நம்மதம். இன்பு மத வழியே விடுதலைப்பேறு பெறவேண்டும் என்று நிறைவது, ஹிந்துக்கள் கொள்கையும் அனுஷ்டானமும் என்னும் பொழிவுக்கட்டுரை. பாவம் என்ற கட்டுரையில் அதனைப் பற்றி வினாவி வினாவி விடை கூறும் திரு. வி. க. அறியாமையால் செய்யும் பாவம் குறித்து வருந்தும் மனமுடையான், மீண்டும் அப்பாவம் செய்ய ஒருப்படாது அது குறித்து வருந்துதல் பாவத்தை அழிக்கும் என்கிறார். ஒழுக்கம் என்பது அடுத்தகட்டுரை. அதுவும் பொழிவுக் கட்டுரையே.

இயற்கை நியதியே ஒழுக்கம்; உயிரின் ஆக்கம் ஒழுக்கத்தைப் பற்றியே நிற்பது. மேலை நாட்டுச் சுகாதார முறையும், நம்நாட்டு ஒழுக்க முறையும் இணைதல் நலம் என்கிறார்.

கல்வியாலாய பயன் நாட்டுக்குழைத்தல் என்பதை நாட்டுவது திலகர் பெருமான் என்னும் குறுங்கட்டுரை.

திருக்கோவையாரை ஓதுங்கள்; இறையுளமும் இல்லறமும் உணரலாம். இரண்டன் தொடர்பையும் உணரலாம் என்பது இறையுளமும் இல்லறமும் என்னும் கட்டுரை; இதுவும் பொழிவு வழியதே. நீத்தார் பெருமை என்பது அடுத்தகட்டுரை. உலக ஆசையை நீத்தாரே நீத்தார் என்று பொருள் கூறி வள்ளுவ நீத்தார் பெருமையை உரைக்கும் பொழிவுக் கட்டுரை.

இளைஞர்களுக்கு ஒரு விண்ணப்பம் என்பது, 'உரிமைப் போர்க்கு உரியவர் நீங்களே' என்பதே அவ்விண்ணப்பம். அது காந்தியடிகள் பிறந்தநாள் செய்தி. ஆண்மையும் அடிகளும் என்னும் அடுத்த கட்டுரை. நல்லண்மை இயல் காந்தியடிகள் காட்டும் கைராட்டினத்தில் இருக்கிறது என்கிறார்.

சபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்து நேர்ந்த சீர்கேடு ஒன்றனைத் திருத்த காந்தியடிகள் கொண்ட உண்ணாநோன்பு, ஆங்குளார் அகக்கண் திறக்க வேண்டும் என்பது அகக்கண். காஞ்சி மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தைப் பெரியார் கொணர, அதனை ஏற்காது, திரு.வி. க. தள்ள நேர்ந்த நேர்ச்சிக்குக் குடியரசு இதழ் கடிந்தெழுதிய எழுத்துக்குத் திரு.வி.க. எழுதிய மறுமொழி எனது நிலை என்பது.

பெண்ணினம்என்னும்கட்டுரை,'தேவடியாள்','பொட்டுக்கட்டுதல்' என்பவற்றை விளக்கிப் பெண்ணலன் காணத் தூண்டுவது.

ஹிந்துமதமும் வழிபாடும் என்பது, எட்டு மூர்த்தங்கள் பற்றிப் பேசி, நடமாடுங்கோயில் வழிபாடு வேண்டுகிறது.

மலைப்பொழிவு என்பது காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் அறப்போரில் ஈடுபடத் தூண்டிய தூண்டல் குறித்த கட்டுரை.

காங்கரஸ் காரியக் கூட்டத்தில் அங்கம் பெற்றிருத்தல் அறமாகாது என விலகல் விடுத்தமை 'விலகல்'.

'யான் ஒரு கட்சிபுக விலகவில்லை', 'தொண்டு செய்யவே விலகினேன்' என்பது எனக்கினிய தொண்டு.

பிள்ளைப்பேறு என்பது, உலக வளர்ச்சியின் பொருட்டு இரண்டொரு பிள்ளைப் பேற்றிற்குக் கருவியாகத் திருமணம் ஏற்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்துகிறது.

பாரதியும் தேசபக்தியும் என்பதில் தமிழ்க்காவியமாண்பு, நாட்டுப்பற்று, பெண்ணுரிமை என்பவைபற்றிய பாரதியார் கருத்து களைப் பகர்கிறார்.

சன்மார்க்கம் திரு.வி. க. சமயம். இந்நூலிலேயே மூன்று கட்டுரைகள் உண்டு. இப்பொருள் பற்றிய தனிநூல்களும் வரைந்தவர் அவர். சீர்திருத்தம் என்பதும் திரு.வி. க. உயிர்ப்பே. மாற்றம் என்பது மனமாற்றமே அன்றிச் சமயமாற்றமன்று என்பது மாற்றக் கட்டுரை. உலகவாழ்வு, பின்னை அழியா வாழ்வுக்கு உரியதாதல் என்பதை வலியுறுத்துவது உலகவாழ்வு என்னும் கட்டுரை.

குடியரசின் குதர்க்கம் என்பது மறுப்புக்கட்டுரை. தமக்கும் பெரியாருக்கும் அரசியல், சமூகச்சீர்திருத்தத் துறைகளில் வேறுபாடு சிறிதுமில்லை; சமயச் சீர்திருத்தத்தில் மட்டுமே வேறுபாடு உண்டு என்கிறார்.

வேள்விக் கட்டுரையில் கொலை வேள்வியைக் கடிகிறார்.

திறந்தமடல் என்பதும், தொடர்முடங்கல் என்பதும் குடியரசுக்கு மறுப்புக்கட்டுரைகளே. திரு.வி.க. உள்ளத்தைத் திறந்து காட்டுவன இவை.

ஆன்மசக்தி என்பதில், தமிழ்த்தாய் போரால் பிணக்கால் எரிகிறாள். தாய்முகம் நோக்குங்கள் என்கிறார்.

சமரசம் என்பது பொழிவுக் கட்டுரை. அகக்குற்றம் களைந்து எவ்வுயிரிலும் ஈசன் இருப்பைக் காணல் என்கிறார் அப்பெயர்க் கட்டுரையில்.

'கஸ்தூரிபாய் காந்தி வாழ்க' என்பது காந்தியடிகளைப் பற்றிய மணிவிழாக் கட்டுரை. இயற்கையின் முடிவு, தென்னாட்டை வாட்டிய காற்று மழைக் கேடு பற்றிய கட்டுரை. இவ்வுலக வாழ்வு, என்பது அழுக்காறு முதலிய பொய்யுலகில் வாழாது, அன்பு முதலிய நிரம்பிய மெய்யுலகில் வாழ்ந்து இறையோடிசைந்த இன்பம் அடைதல் என்கிறார். கவிதாகூர் உலகம் இயற்கை இன்பப் பாட்டுலகம் என்பதை விளக்குவது கவிதாகூர். திருநாள் என்பது காந்தியடிகள் பிறந்தநாள் பெற்றியுரைக்கும் கட்டுரை.

மழை என்பது நிறைவுக்கட்டுரை. மழைவளம் சுருங்கியதும், நோய் நொடி வாட்டுதலும் பற்றியுரைத்து இறையருள் வேண்டும் கட்டுரை இது.

பெருமழைக்குப் பின்னே தூறும் தூறல் - சாரல் இது!

# இந்தியாவும் விடுதலையும்

***'இந்தியாவும் விடுதலையும்'*** *என்னும் இந்நூல், 1940 இல் வெளிப்பட்டது. அந்நாளில் இந்தியா விடுதலை பெறவில்லை. இரண்டாம் பதிப்பு 1947 இல் வெளிவந்தது. அப்போதும் இந்தியா முழுவிடுதலை அடைந்திலது. அயலவர் ஆட்சிக்கும் இந்தியர் ஆட்சிக்கும் இடைப்பட்ட அக்கால ஆட்சி, இடைக்கால ஆட்சி எனப்பட்டது. ஆதலால், "இவ்விரண்டாம் பதிப்புக்குப் பின்னர் நாடு முழுவிடுதலை எய்தும் என்று நம்புகிறேன்." என 'ஆசிரியரின் முன்னுரை' யில் திரு.வி.க. எழுதினார். (20.11.1947)*

*"நாட்டு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஒரு விடுதலை நூல் என்று இந்நூலைக் கூறலாம்" என்றும்,*

*"இந்நூல் இந்தியாவைப் பற்றி எழுதப் பெற்றமையான், இதில் இந்தியாவைப் பற்றிய செய்திகளும் பொருள்களுமே பெரிதும் நிரம்பியிருக்கின்றன" என்றும் கூறும் திரு.வி.க.*

*"தமிழ்நாட்டைப் பற்றி ஒரு தனிநூல் எழுத யான் எண்ணி யிருக்கின்றே னாதலின் இந்நூலில் தமிழ்நாட்டு வரலாறும் பிறவும் பெரிதும் விடப்பட்டன" என்கிறார்.*

*திரு.வி.க. எண்ணியவாறு தமிழ்நாட்டைப் பற்றிய தனி நூல் எழுத வாயாமை, தமிழக விடுதலை வரலாற்றில் சில மாறுதல்கள் உண்டாக இடமாயிற்று என்பதைப் பின்னவர் எழுதிய தமிழக வரலாறுகளைக் கற்பவர் எளிதில் உணர்வர்.*

*"இந்தியாவுக்கு என்ன வேண்டும்? விடுதலை வேண்டும். இது பற்றியே இந்நூலுக்கு இந்தியாவும் விடுதலையும் என்னும் தலைப்புச் சூட்டப்பட்டது" என்னும் திரு.வி.க.*

*"இந்தியாவை ஈண்டு முற்கால இந்தியா என்றும், இடைக்கால இந்தியா என்றும், இக்கால இந்தியா என்றும் முத்திறப்படுத்தி நிலைமைகளை ஆராய்ந்து விடுதலைக்குரிய வழிகாண முயல்கிறேன்" என்கிறார்.*

*"முற்கால மக்கள் இயற்கையோ டியைந்த வாழ்வு நடாத்தி வந்தமையால், அவர்களிடம் கூடிவாழும் குணமே பெருகி நின்றது"*

*"மனிதன் கூடிவாழும் இயல்பினன், இதற்கென்று அவனிடம் பலதிறக் கூறுகள் அமைந்துள்ளன. அவற்றுள் இரண்டு சிறப்பாகக் குறிக்கத்தக்கன. ஒன்று மொழி; இன்னொன்று அன்பு நிகழ்ச்சி."*

“மனிதனது கூடிவாழும் இயல்பு வாழ்க்கையாக விரிகிறது; குடும்பமாக விரிகிறது; கிராமமாக விரிகிறது; நாடாக விரிகிறது; உலகமாக விரிகிறது.”

“நமது உடலை நோக்குவோம். உடல் ஓர் அமைப்பு என்பது எளிதில் விளங்கும். உடம்பு இயற்கை அமைப்பா? செயற்கை அமைப்பா? இயற்கை அமைப்பென்று எவரும் சொல்வர். உடம்பைப் போன்று நாடும் இயற்கை அமைப்பு வாய்ந்தது”.

“ஒவ்வோர் உடம்பும் ஒவ்வோர் இயல்பினதாய் இருப்பது போல, ஒவ்வொரு நாடும் ஒவ்வொருவித இயல்பினதாய் இருக்கிறது; அவ்வவ் வியல்புக்கியைந்த முறையில் அவ்வவ்வுடல் ஓம்பப் பெறுதல் வேண்டும்; அங்ஙனமே அவ்வந் நாடும் காக்கப் பெறுதல் வேண்டும்; இல்லையேல் சிதைவு நேரும்.”

“உடலில் ஒரு சிறு விரலுக்கு ஊறுநேர்வதாக வைத்துக் கொள்வோம்.ஊறு எதற்கு? சிறுவிரலுக்கு மட்டுமா? முழு உடலுக்குமா? ஊறு உற்றது சிறுவிரல்தானே என்று வாளா கிடக்கிறோமா? ஒரு சிறுவிரலில் உற்ற ஊறு முழுஉடலையும் தாக்கித் துன்புறுத்தலான், அதைப் போக்க உடனே முயல் கிறோம். அதே போல நாட்டின் ஒரு மூலையில் ஊறு நேரினும் அதை உடனே போக்க முயலல் வேண்டும்; இல்லையேல் சிறு ஊறு நஞ்சாகி நாடு முழுவதும் பரவி நாட்டையே துன்புறுத்துவதாகும்”

- இச் செம்மொழிகளை மீண்டும் பயில்க. ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என மேடையில் முழங்கி - எழுத்தில் பரப்பி - தனித்தனி நாடும், சட்டம் - அறம் - ஒப்புரவு பேணாமல் ஆட்டம் போட்டுக்கொண்டு முட்டலும் மோதலும் ஆயின், இந்திய நடுவண் அரசு அவற்றைக் கண்டும் காணாதும் சார்ந்தும் சரிந்தும் காலம் தள்ளினால் நாட்டுக்குக் கேடு செய்தவை தனித்தனி நாடுகள் (மாநிலங்கள்) மட்டுமல்ல; நடுவண் அரசே முழுத்த பொறுப் புடையதாகும்! வன்முறை தலைதூக்கவும், நாட்டின் ஒருமைப்பாடு சிதையவும் செய்தது நடுவண் அரசே என்பது முழுத்த உண்மையாம்.

நீர்வளம், நிலவளம், கனிவளம், மனிதவளம், உழைப்பு வளம், பங்கீட்டுவளம் என்பவை பொதுமையறத்தொடு பொலிவுறாக்கால் நாடு நாடாக இருக்குமா? அவ்வப்பகுதி வளம் அப்பகுதிக்கே என்னும் முரட்டுப்பார்வை வந்து விட்டால் - வந்துவிடப்பாரா நோக்குக் கொண்டு விட்டால் - என்ன ஆகும்?

திரு.வி.க. மொழிப்படி, “அது நாடு என்னும் பொரு ளுடையது ஆகாது. அது காடு; சுடுகாடு”

நாட்டை உடலொடு ஒப்பிட்டுக் காட்டிய திரு.வி.க . அதன் தொடர்ச்சியாக ஒன்றைக் குறிக்கிறார்:

“உடலில் அந்நியம் (Foreign Matter) கலந்தால் அது பிணி பட்டு நோய்வாய்ப்படுகிறது. நாட்டிலும் அந்நியம் நுழைந்தால் அது பிணிபட்டு நோய்வாய்ப்படுவதாகும்.

"ஒரு நாட்டில் அயலவர் புகநேர்ந்தால், அவர் தமது வழக்க ஒழுக்கங்களைக் கொணர்ந்து அந்நாட்டில் நுழைக்க முயலுதல் கூடாது. அயலவர் நாளடைவில் தாம் புகுந்த நாட்டைத் தாய்நாடாகக் கொண்டு, அதன் இயற்கைவழி வாழ்வு நடாத்த உறுதி கொள்வது அறம். அதனால், நாட்டின் வாழ்க்கை, அரசு, கலை, வழக்க ஒழுக்கம் முதலியன கேடுறா. நாடு பிணியுடைய தாகாது என்று சுருங்கச் சொல்லலாம்" என்கிறார்.

இப்பகுதியின் பொருள் என்ன?

வாழுரிமை தந்த நாட்டின் நலக்கேட்டுக்கு, வாழ்வுரிமை பெற்றவர் தந்நல நோக்கராகச் செயலாற்றினால் நாட்டுக்குக் கேடு சூழ்பவரும் நன்றி கொன்றவரும் ஆவர் என்பதாம். இதனை விளக்கி எழுதினால் இக்கொடையுரையே தனிநூலாகி விடும் அளவு உள்ளீடு உடையதாம். எண்ணவல்லார் எண்ணித் தெளிவாராக.

அறம், உலகியலுக்கென நான்காகவும், உயிரியலுக்கென நான்காகவும் பிரிந்து வாழ்க்கையை வளர்த்து வந்தது என்னும் திரு.வி.க. அப்பிரிவுகள் எவை எனவும் விளக்குகிறார்.

ஆசிரியர், இல்வாழ்வர், அறவர், துறவர் என்னும் பிரிவு உயிரியல் வளர்ச்சிப் பிரிவு என்றும் கூறுகிறார்.

இப்பிரிவுகள் பிறப்பை ஒட்டி நிகழவில்லை; சிறப்பை (குணத்தை) ஒட்டி நிகழ்ந்தவை என்று கூறும் திருவிக. "நாளடைவில் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டன. அதனால் மக்கள் நலனுக்கு என்று ஏற்பட்ட பிரிவுகள் தீமைக்குப் பயன்படுவன வாயின" என்கிறார்.

தீமையின் அளவு திரு.வி.க. கூறிய நாளினும் இந்நாளில் தீமை பன்மடங்காதல் வெளிப்படை. மொழி இன மானம் என்பவை அற்று, சாதிவெறியும், சாதிச் சங்கங்களும், சாதிக் கட்சிகளும், சாதி அரசியலும் நாட்டை உருக்குலைத்து வருதல் கண்கூடு! சாதிப் பெயர் கேட்கவும், கூறவும் நாணியவர், இந்நாள் பெருமைப்பட்டங் களாகப் பயன்படுத்தத் தொடங்கியிருத்தல் நாட்டுக்கு உண்டாகிய புற்றுநோய் அல்லவோ!

"பழநாளில் பொதுவேலைகட் கென்று கூலியாள் அமைக்கும் முறையே கிடையாது; கூடிவாழும் அறமே கிராம மாகக் காட்சி யளித்தது"

"முற்கால இந்தியாவில் 'மக்கள் கதவுகட்குப் பூட்டிடுவ தில்லை' என்னும் குறிப்பு, ஆட்சியிலும் மன்பதையிலும் அறக் கடவுள் ஒருங்கே கோயில் கொண்டதை உணர்த்துவ தென்க" என்கிறார்.

பழங்கால அரசு, கல்வி, கலை, தொழில் பற்றி எடுத்துரைத்து இடைக்கால இந்தியாவைத் தொடர்கிறார்.

இடைக்கால இந்தியாவின் முற்பகுதியில் மன்னர் ஆட்சியில் கலைகள் உச்சநிலை அடைந்தன. பின்னாளில், கலை இந்தியாவில் கலகம் நுழைந்தது. கலகம் தர்மத்தைச் சாய்த்தது. தர்மச் சாய்வால் மதவெறி எழுந்தது. கலகம் வெளிநாட்டி னின்றும் வரவில்லை. கலகம் பிற்கால மன்னர் மனத்தினின்றும் பிறந்தது. அது நாட்டையே கெடுத்தது என்னும் திரு.வி.க. "மனித னிடத்துள்ள மூர்க்கத்தைப் போக்கவே மதம் தோன்றியது. அம்மதத்தை மூர்க்கத்துக்கு இரை யாக்குவது அறமன்று" என்கிறார்.

மும்மதம் என இந்து, சமண, பௌத்த மதங்களை விளக்கி ஆய்கிறார்.

" இந்துமதம் சாதிமதம் ஆகிவிட்டது."

"சமணத்தில் வருணபேதம் இல்லை. சமணம் திகம்பரத்தால் ஆக்கம் பெறாது அருகலாயிற்று."

"புத்தம் அறத்தில் கருத்திருத்தாதனால் தான் பிறந்த நாட்டிலேயே ஆக்கம் பெறாது ஒழிந்தது."

"மும்மதங்களும் அறத்தை மறந்து புன்மைத் தத்துவ வேற்றுமை யில் மூளையைப் புகுத்தி முட்டி மோதிப் போரிட லாயின."

இவ்வாறு கூறும் திரு.வி.க.

***"சாதிக் கொடுமை ஒருபக்கம்!***
***சம்பிரதாயக் கொடுமை இன்னொரு பக்கம்!***
***சாமியார் கொடுமை மற்றொரு பக்கம்!***
***பாரதமாதா எரிகிறாள்!"***

என்கிறார்.

முகமதியரும் அயலார்; ஆங்கிலர் முதலியவரும் அயலார். எனினும் முகமதியர் சிறப்பொன்றைச் சுட்டுகிறார் திரு.வி.க.

"மகம்மது கோரியின் காலத்தில் இருந்து இந்தியா புகுந்த முஸ்லீம் மன்னர் பலரும் இந்தியாவையே தாய் நாடாகக் கொண்டு ஆட்சிபுரிந்தவர். அதனால் இந்தியச் செல்வ நிலைக்குப் பழுது நேரவில்லை" என்பது அது.

அடுத்து அசோகர், அக்பர் ஆட்சிச் சிறப்புகளை விரித் துரைக்கும் திரு.வி.க. ஔரங்கசீப் தம் ஆட்சியைத் தாமே கெடுத் ததைச் சுட்டுகிறார்.

"அவுரங்கஜீப்பின் மதவெறி என்செய்தது பாருங்கள்! ஒரு ராஜ்யத்தையே சாய்த்தது. அதிகாரத்தாலும் சேனாபலத்தாலும் குடிமக்கள் மனத்தைப் புண்படுத்தும் அரசு, நீடுழி நிலவுங் கொல்" என்கிறார். இச்செய்தி, எந்நாளுக்கும் எவ்வரசுக்கும் எவ்வமைப்புக்கும் பொதுமையறச் செய்தியாம்.

தற்கால இந்தியா பற்றித் தொடங்கும்போதே, "இடைக் கால இந்தியா, நோய்வாய்ப் பட்டுக் கிடந்தபோது அதனின்றும் பிறந்தது

*தற்கால இந்தியா; நோயின் சேய் எப்படி இருக்கும்? தற்கால இந்தியாவின் நிலைமை வெள்ளிடை மலை" என்கிறார்.*

*"சாதிவெறியும் மதவெறியுமே இந்திய சுயராஜ்யத்தை அழித்த கொலைக் கருவிகள்" என்னும் திரு.வி.க. சிவாசி, அவுரங்கஜீப் என்பாரை நினைகிறார்:*

*"அவுரங்கஜீப் மனத்தில் முஸ்லீம் உலகே நின்றது; சிவாஜி மனத்தில் ஹிந்து உலகே நின்றது; இருவர் மனத்திலும் இந்தியா என்னும் தாய்நாடு நிற்கவில்லை. தமது பிணக்கால் அயலவர் ஆதிக்கம் நாட்டில் பெருகி, முடிவில் சுய ஆட்சியை வீழ்த்தும் என்பதை இருவரும் உணர்ந்தார் இல்லை. அவர்தம் உணர்வை மதவெறி விழுங்கிவிட்டது. சுதேச ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணர் அவுரங்கஜீப் மட்டுமல்லர்; சிவாஜியும் ஆவர். உள்ளூர்ப் பிணக்கு வெளியூரை அழைத்தல் இயல்பன்றோ?"*

*என்கிறார். குடியாட்சி என்ன, கோனாட்சி என்ன, குடிக்கோன் ஆட்சி என்ன, எவ்வாட்சி எனினும் அதற்கு இப் பாடம் நற்பாடம் அல்லவோ!*

*இந்தியா எப்படி அடிமையாயது?*

*"ஒரு பெரிய மல்லன் நோயாளியாய் நாடி நரம்பு தளரப் பெறுவனேல், அவனை வீழ்த்துதற்கு அவன் அனைய வேறு ஒரு மல்லன் வேண்டுவதில்லை. அவன் ஒரு சிறு புல்லனால் எளிதில் வீழ்த்தப்படுவன். பெரிய இந்தியா சாதிமத நோயால் - ஹிந்து முஸ்லீம் வேற்றுமை நோயால் - பீடிக்கப்பட்ட ஒரு நாடாகியது. அதன் சுய ஆட்சியைக் கிளைவ் எளிதில் கவரலாயினர்" என இந்தியா அடிமையான வகையைச் சுட்டுகிறார்.*

*அடிமை ஆக்கிய கிளைவின் இறுதிநிலை என்ன?*

*"கிளைவ் நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டார். கிளைவ் முற்றும் மனச்சான்று அற்றவரல்லர் என்றே தெரிகிறது" என அவர் மனச்சான்றை எடைபோடுகிறார் திரு.வி.க.*

*"குறைபாட்டை அயலாரிடம் சுமத்தாது நம்மீது சுமத்தி நல்லுணர்வு பெற முயல்வதே அறிவுடைமை" என்னும் திரு.வி.க.,*

*"இந்தியா ஒன்று பட்டுப் பிரிட்டிஷாரை எதிர்த்ததே இல்லை; சாதி இந்தியா - மதவெறி இந்தியா - நோய் இந்தியா - கோழை இந்தியா - தானே வலிந்து பிரிட்டனுக்கு அடிமை யாகியது, இந்தியாவின் குறைபாடுகளை அடிக்கடி குறிப் பிடுவது, வருங்கால இந்தியா வாதல் திருந்தி நலம் பெறும் என்பது என்கருத்து" என்கிறார்.*

*அறவோர் கடமையுரை அல்லவோ இது!*

*கவர்னர் செனரல்கள், போர்கள், ஆட்சி மாற்றங்கள் சிப்பாய்க் கலகம், தொழிற்புரட்சி என்பவற்றை உரைத்து விடுதலைப் பகுதிக்கு வருகிறார் திரு.வி.க.*

"அரசியல் - பொருளாதார - விடுதலையே விடுதலை" என்கிறார்.

"மேல்நாட்டு ஆசை நாகரிகத்தால் விளைந்துள்ள தீமையை, அந்நாட்டுப் பித்துக் கொண்டு திரியும் இந்திய மக்கள் ஆராய்ச்சி யால் தெளிந்து நடப்பார்களாக" என்று அறிவுறுத்தும் திரு.வி.க.,

"கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிக்கும் கலையை நம் நாட்டவர் மேல்நாட்டவரிடமிருந்து பயின்று கொள்வது நலம்" என்கிறார்.

அரசியல் விடுதலையும் பொருளாதார விடுதலையும் வேண்டும் என்னும் திரு.வி.க. காங்கரஸ் தோற்றம் - வளர்நிலை - மாநாடுகள் - தீர்மானங்கள் - தேர்தல் - பதவி ஏற்பு - இந்து முஸ்லீம் பிணக்கு - தொழில் இயக்கம் ஆயவற்றை விரித்துரைக்கிறார். "அறப்புரட்சி யால் முழு விடுதலை பெறுதல் வேண்டும்" என்னும் திரு.வி.க. , " அவ்விடுதலை வேட்கையை எழுப்புவது இந்நூல் " என நிறைவு செய்கிறார்.

திரு.வி.க. நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பயன் பாட்டால் அவர்தம் நூல்கள், கட்டுரைகள் ஆகிய அனைத்துப் படைப்புகளும் **'திரு.வி.க. தமிழ்க் கொடை'** என்னும் வரிசையில் வெளிப்படுகின்றன.

திரு.வி.க. நூல்களையும் கட்டுரைகளையும் ஒருமொத்தமாகப் பெறும்பேறு இதுகாறும் தமிழ்மண்ணுக்கு வாய்க்க வில்லை. அவர்வாழ்ந்த நாளிலேயே சிலநூல்கள் கிட்டும்; சிலநூல்கள் கிட்டா! 'தேசபக்தன்' 'நவசக்தி'யில் வந்த கட்டுரைகளுள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றையன்றி முற்றாகப் பெறும் பேறோ அறவே வாய்த்திலது. திரு.வி.க. வழங்கிய வாழ்த்து, அணிந்துரை முதலியனவும் தொகுத்தளிக்கப் பெறவில்லை. இவற்றையெல்லாம் தனிப்பெருஞ் சீரிய பதிப்பில் ஒருமொத்தமாக வழங்கும் பெருமையைக் கொள்பவர் **தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ.இளவழகனார் ஆவர்.**

பாவாணர் நூல்கள், ந.சி.க.நூல்கள், அப்பாத்துரையார் நூல்கள், இராகவனார் நூல்கள், அகராதிப் பதிப்புகள் எனத் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டு, அவ்வெளியீட்டுத் துறையின் வழியே தமிழ்மொழி, தமிழின மீட்சிப் பணிக்குத் தம்மை முழுவதாக ஒப்படைத்துப் பணியாற்றும் இளவழகனார் திரு.வி.க. தமிழ்க் கொடைத் தொகுதிகளை வெளியிடுதல் தமிழகம் பெற்ற பெரும் பேறேயாம். வாழிய அவர்தம் தொண்டு! வாழியர் அவர்தம் தொண்டுக்குத் துணையாவார்!

# சைவ சமய சாரம்

காரைக்குடி சிவனடியார் திருக்கூட்டத்தார் வெளியிட்ட குறுஞ்சுவடி சைவ சமய சாரம் என்பது.

சைவசமயம் தோற்ற முற்ற காலம் அளந்து கூற முடியாப் பழமையது. பழைய மறையாம் இருக்கு வேதத்திலும் பழந்தமிழ் நூல்களிலும் இடம் பெற்ற பெற்றியது. அதன் தொன்மை ஒன்று கொண்டு மட்டும் போற்ற வேண்டுவதில்லை. அதன் சமரசநிலை அருமைமிக்கது. அன்பும் அருளும் கெழுமிய சமயம் அது. சைவ சமயத்துள்ள சமரசமே தாயுமானவர் முதலானவர்களை ஈர்த்தது. நால்வர் உரையும் சமரச உரையேயாம் என்பவற்றைப் பற்பல பாடல்களைக் காட்டி நிறுவுகிறார் திரு.வி.க.

சைவ சமயத்தை 'அன்பு சமயம்' என வழங்கலாம் என்னும் திரு.வி.க. 'அன்பே சிவம்' என்பதைத் திருமூலர் மணிவாசகர் வாக்குகளைக் காட்டி உறுதி செய்கிறார். இறை, அன்பு வடிவாக இருத்தலால் அடியாரும் சாதி பேதம் பாராட்டாது எவ்வுயிர் மாட்டும் அன்புடையராகத் திகழவேண்டும் என்பதன் அடையாளமே திருநீறு உருத்திராக்கக் கோலம் முதலியவையாம் என்கிறார். அன்ப ராவார் அனைவரும் சிவனடியாரே என்கிறார்.

வழிபாடு இருவகைய. அவை ஆலய வழிபாடு, உயிர் வழிபாடு என்பவை. அவை படமாடுங்கோயில், நடமாடுங் கோயில் என்பன. இவற்றுள் நடமாடும் கோயில் வழிபாடே சிறப்புடையது என்பதைச் சான்று காட்டி நிறுவுகிறார்.

ஆடு கோழி முதலிய உயிர்கள் தாங்கியுள்ள உடல்களும் சிவாலயங்களே. இச் சிவாலயங்களுக்கு ஊறு செய்வார் சிவனடியார் ஆகார் என்பதை வள்ளலார் அருள் மொழியால் நிறுவுகிறார்.

சைவ அன்பர்கள் நெறிக்கு மாறுபட்டு நிற்பாரைத் திருத்தி நலப்படுத்துவதை நெறியாகக் கொள்ள வேண்டும் என்பதைச் 'சேரவாரும் செகத்தீரே' என்னும் தாயுமானவர் மொழியால் அழைக்கிறார்.

அறச்சாலைகள் அருள் நிலையங்கள் அமைக்கவும், சைவ நெறிபரப்பவும் வேண்டிக் கட்டுரையை நிறைவிக்கிறார்.

இக்குறிப்புகள் திரு.வி.க. பொழிவுகள், எழுத்துகள் ஆயவற்றில் பொதுமை ஊடகமாய்த் திகழ்வனே யாம்.

# நாயன்மார் திறம்

கட்டுரையாய் இருந்து நூலாக்கம் பெற்ற சுவடி இது.

'தொண்டினிடத்து ஆர்வமுடையார்க்கு இந்நூல் பெருந் துணை செய்யும்' என்பது 'வீடும் வேண்டா விறலின் விளங்கி', 'தொண்டுக்காகவே பிறவி வேண்டும்' என வேட்கை வரைந்த திரு.வி.க. முகவுரை வரைவு இது.

'ஆண்டவன் அடிக்கு அன்பு செலுத்தித் தலைமைப் பேறு எய்தினவர் நாயன்மார்' என நாயன்மார்க்கு விளக்கம் தருகிறார்.

இடம் மரபு சாதி தொண்டு தொழில் கோலம் ஆயவற்றில் நாயன்மார் வேறு பட்டவர் ஆயினும் அன்பால் ஒன்றுபட்டவர் என்று அடியார் திறத்தைத் திரட்டாக்கி வைக்கிறார் திரு.வி.க.

பல்வேறு சாதியராகிய நாயன்மார் 'அடியார்' என்னும் ஒருமையில் கோயிலில் இடங்கொண்டு தெய்வநிலை எய்தியமையைச் சுட்டும் திரு.வி.க. 'இந்நாயன்மார்களைப் போல இந்நாள் வாழும் பாமர மக்களும் தேசசேவையில் ஒன்றிய அன்பு கொள்வராயின், உலக இன்பம் எளிதில் கிடைக்கும் எனத் தம் காலச் சூழலுக்குப் பயனாக்க அறை கூவுகிறார்.

சுந்தரமூர்த்தியார் வாழ்வு சாதிப்புன்மை நொறுக்கியதை எடுத்துக்காட்டால் விளக்குகிறார். பக்கம் பக்கம் எழுதும் செய்தியைப் பத்தியளவில் முடிக்கிறார். நாவுக்கரசர் அப்பூதியார், அப்பர் சம்பந்தர், சேரமான் வண்ணார், நமிநந்தி திருநீலநக்கர் ஆயோரை எடுத்துக் காட்டிச் சாதிமை ஒழிப்புத் தொண்டை நயனுறச் செய்கிறார். "கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்" என்றும் அப்பரடிகள் வாக்கால் தாமும் கேட்கிறார் திருவிக.

உண்மை, உறுதி, அஞ்சாமை, ஒழுக்கம், வீரம் முதலிய வற்றிற்கு ஊற்றாயுள்ள ஓர் அறநெறி பற்றி ஒழுகியவர் நாயன்மார் என்பதைத் திருநீலகண்டர், இயற்பகையார், மெய்ப் பொருளார், திருநாவுக்கரசர், சுந்தரர், செருத்துணையார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், கண்ணப்பர், எறிபத்தர், ஏனாதியார் வரலாறு களின் வாயிலாகச் சுருக்கியும் பெருக்கியும் சுட்டியும் காட்டி நிறுவு கிறார். நிறைவில் திருத் தொண்டத் தொகையை வைக்கிறார்.

“இறைவன் ஒருவன்; பிறப்பு தொழில் கோலம் பால் என்பவை இறையைச் சார்தற்குத் தடையில்லை; அன்பு நெறியே இறை நெறி; அதற்கு அடியார் வரலாறு வழிகாட்டி” என்பதை இச்சுவடியில் நிறுவுகிறார் திரு.வி.க.

விடுதலை வேள்விக்கு நாயன்மார் வரலாறு துணைப் படுதல், பாஞ்சாலி சபதம் கிளர்ந்த பார்வையொடு ஒப்பதாம்.

நாயன்மார் திறம் முதற்பதிப்பு 1922 செப்டம்பர் 4.

# தமிழ் நாடும் நம்மாழ்வாரும்

*தமிழ்நாடென்பது ஒரு தனிநாடு. அந்நாட்டுக்கெனத் தனிமொழி, தனி வழக்கு ஒழுக்கங்கள் முதலியன உண்டு. பிறநிலங்கள் நாடாதற்கு முன்னரே, தமிழ் நாடு தன்முயற்சியால் தனக்கெனச் சிறப்பாக இலக்கியம் இலக்கணம் மருத்துவம் சோதிடம் வேதம் முதலிய வகுத்துக் கொண்டது. ஈண்டுத் தமிழ் நாட்டுக்கு வேதம் - மறை சிறப்பாக இருந்தது என்பது கருதற்பாற்று. இக்கருத்து திரு. வி. க. வுக்கு 1923 இல் ஏற்பட்டுள்ளது. இன்றும் இவற்றைத் தமிழர் உணர்ந்துளரோ? இன்றேனும் உணர்ந்தால் பலப்பல சிக்கல்கள் தாமே அவிழ்ந்து போய்விடும் என்பதை எண்ணிப் பார்ப்பவர் அறிந்து கொள்ள முடியும். எண்ணுவதும், கண்டு கொள்வதும் அவற்றின்படி நிற்பதும் தானே நெட்ட நெடுங்காலமாகத் தமிழர் அறியாப் பொருளாக உள. தோற்றுவாய் இறுவாய் என்பவைக்கு இடையே பதின்தலைப்புகளில் நம்மாழ்வார் கமழ்கிறார். அனைத்தும் ஆழ்வார் வாக்கையே அடிப்படையாகக் கொண்டவை.*

*"ஆழ்வாய் என்ற சொல்லுக்கு ஆண்டவன் அருள் வெள்ளத்தில் ஆழந்து கிடப்பவர் என்பது பொருள்" என்கிறார்.*

*நம் ஆழ்வார் என்னும் பெயரருமை காணும் திரு. வி. க. "என் ஆழ்வார் என்று வணங்கி என்னளவில் இன்புறாது உலகவரையும் உளப் படுத்தி அவரோடு 'நம் ஆழ்வார்' என்று வணங்குகிறேன்" என்கிறார்.*

*மாறும் தன்மைய உலகில் மாறா ஒன்று இருத்தல் வேண்டும்: அது கடவுள் என்பது ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வித்து இருக்கிறது. அவ்வித்து எவ்வித மாறுதலும் இல்லாததாய் இருத்தல் வேண்டும். மாறுதல் உடையதாயின் அதற்கொரு வித்து வேண்டியிருக்கும். ஆகவே எவ்வித மாறுதலும் இல்லா வித்து இறை. அதனை மெய்யுணர் வால் உணர்ந்தவர் நம்மாழ்வார். எப்பொருட்டும், வேர்முதலாய் வித்தாய்ப் பரந்து தனி நின்ற கார் முகில்" என்கிறார்.*

*எல்லாவற்றுக்கும் வித்தாயுள்ள ஒன்று எல்லாவற்றிலும் இருத்தல் வேண்டும். அவ்வித்தின் உண்மையை உணர, தம் உயிரைப் போல் மற்ற உயிர்களைக் கருதும் சகோதர நேயம் தானே பிறக்கும்.*

*எவ்வுயிரியிலும் இறைமையைக் காண்பவர் அகம் புறம் என்னும் வேற்றுமை உணர்வு கெடப் பெற்ற மெய்யறிவாளர். அந்நிலை எய்தியவர் நம்மாழ்வார். எங்கும் கடவுள் எனக் கண்ட அவர், மண், புனல், தீ, காற்று, வெளி, திங்கள், ஞாயிறு, உயிர் என்னும் எண்வகை வடிவுகளில் கண்டு பிறர் வழிபாட்டுக்கு வழிகாட்டினார்.*

மண் புனல் முதலியவை இயற்கையின் கூறுகள். இயற்கை உடல்; இறை உயிர். இரண்டன் தொடர்பு நம் உடலுக்கும் உயிர்க்குமுள்ள தொடர்பு. இயற்கையைப் பாடி இறைமையைப் பாடும் பாடல்கள் இயற்கை இறைமணம் கமழ்வன. இயற்கையில் உள்ள பெண்மையும் ஆண்மையும் இறைமையுள்ளும் இருத்தலைக் கண்டவர் ஆழ்வார். ஆதலால் இறையை உருவங்கள் தத்துவ நுட்பம் உடையவை. கதைகளின் உள்ளுறை என்ன?

பாரதம், பாவிசும், குருச்சேத்திரம் - கிளர்ச்சி பொருந்திய மனம். நூற்றுவர் - தீய எண்ணங்கள். ஐவர் - நல்ல எண்ணங்கள்; மனச் சான்றொலி - கண்ணபிரான் கீதை உபதேசம்.

கண்ணபிரான் லூதிப் பச்சை மரத்தடியில் பசுக்களும் பெண் களும் சூழ நிற்கும் திருக்கோலம்.

பச்சைமரம் - இயற்கை; கண்ணபிரான் - இறை. குழலோசை - இசையொலி. பசுக்கள் - சாந்தம்; பெண்மக்கள் - அமைதி நிலை.

அவதாரங்களின் கருத்து என்ன?

மீன் - நீரில் வாழ்வது: நிலத்தில் நகர்தலும் செய்யாது.

ஆமை - சிறுகால் கொண்டு ஊர்ந்து செல்வது.

பன்றி - நன்றாக நடக்க வல்லது.

நரசிம்மம் - விலங்கினமும் மனித உருவும் கலந்தது.

வாமனன் - முழு மனிதம் விளங்கா நிலை.

பரசுராமன் - முழுமனிதன்; சாந்தமில்லான்.

இராமன் - அழகன்; சாந்தன்; ஒவ்வொருபோது பூர்வஞானம் உடையவன்.

கண்ணன் - மனித உடலும் தெய்வு நிலையும் எப்போதும் பூர்வ ஞானமும் உடையவள். ஒவ்வோர் அவதாரமும் உயிர் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலை.

இது தார்வின் (Darvin) கண்ட உள்ளது சிறத்தல் (பரிணாமம்).

நம்மாழ்வார், மும்மூர்த்திகளுக்கு மேம்பட்ட பரம் பொருளைத் திருமால் என்னும் பெயராலே வழிபட்டவர்.

வழிபாடு மனிதனை விடாது. அது இயல்பாக நிகழ்ந்து வரும்.

தற்பயன் கருதாமையே வழிபாடு.

வழிபாடு இருவகை: அக வழிபாடு, புற வழிபாடு என்பவை.

ஆழ்வார் பாடல்கள் சமரச ஞானம் கொண்டவை.

ஆழ்வார் நாட்டைத் தமிழ்ப் பாட்டால் ஓம்பினார்.

இவற்றின் விளக்கமும் சான்றுமாக இலங்குவது தமிழ்நாடும் நம்மாழ்வாரும். ஆழ்வார் பாடல்களில் எவ்வளவு ஆழங்கால் பட்டவர் திரு. வி. க. என்பதன் சான்றாக விளங்கும் நூல் இது. அத்தனை சான்றுகள் உள.

# சைவத்தின் சமரசம்

தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையில் நாற்பத்தோராம் ஆண்டுவிழாத் தலைமையுரையாகத் திரு.வி.க. பொழிந்த பொழிவின் எழுத்துரு 'சைவத்தின் சமரசம்' என்னும் இச்சுவடி யாகும்.

"சைவம், பல சமயங்களாகவும் முடிவில் தனித்த பெருஞ் சமயமாகவும் நிற்றலால், அதன்கண் சமரசமுடைமை அறிஞர்க்குப் புலனாகாமல் போகாது. எனத் தம் அணிந்துரையில் திருவி. க. கூறுகிறார்.

"உயிர்களின் இயற்கை, 'இன்ப விருப்பு துன்ப வெறுப்பு' துன்பக்கடல் கடந்து இன்பக்கரையேற வாய்த்த செவ்விய நாவாய் சமயம்" என்கிறார்.

சமயப் பெயரால் போரிடுவோர் சமயஞானிகள் அல்லர். ஆன்ம நேயத்தை வலியுறுத்துவதே சமயம்.

ஒரு ஞாயிறு படம் பிடிப்போர் படப்பிடிப்பில் பல்வேறு தோற்றமுடையதாகத் தோன்றினும் அஞ்ஞாயிறு ஒன்றே என்பது போல் இறையும் எச்சமயத்தார்க்கும் ஒன்றேயாம். எச்சமயம், எல்லாச் சமயங்களையும் சகோதர சமயங்களாகத் தழுவுகிறதோ, அது சமரச நோக்குடைய சன்மார்க்க சமயம் என்று போற்றப்படும்.

மக்களுள் மிகத் தொன்மை வாய்ந்த தமிழ் மக்களால் காணப் பட்டது சைவ சித்தாந்தம். தமிழர் இயற்கையில் விளங்கும் முருகை முழுமுதற் பொருளாகக் கொண்டவர். இயற்கைச் சமரச அன்பில் சமரசம் அன்றிச் சண்டைக்கு இடமேது? தமிழர், தம் மெய்யுணர் வால் கட்டுடையது உயிர் என்றும், கட்டு அற்றது முருகு என்றும் கண்டமையால் அதனைக் கந்தழி என்றனர். இறையை அடைதற்கு இல்லற நெறியே இறைநெறி எனத் தெளிந்தனர்.

முருகு, கந்தழி என்று போற்றப்பட்ட இறை, பின்னே சிவம் எனப் பெற்றது. நால்வரும், திருமூலரும், சேக்கிழாரும், பிற்குரவர் களும் பிறரும் சைவம் வளர்த்தனர். சாதி பேதம் முதலிய பேதங்களைக் கடந்து சிவமாய் நின்ற பெரியோரைப் பற்றி அப்பேதங்களை உடையவர் ஆயும் ஆய்வு பொருளுடைய தாகாது. பன்மையில் ஒருமை காணலே அறிவுடைமையாம். மூல நூல்களுக்கு வாய்த்த உரைமயக்கிலே ஈடுதல் வேண்டா. தன்னந் தனியராயத் தமிழ்மக்கள் கண்ட சமயம், முதல்முதல் சமணம், பௌத்தம், முதலிய சமயங் களோடு கூட்டுறவு கொண்டு, பின் வடமொழிக் கலைகளோடு

நட்புப் பெற்று, ஏகான்ம வாதம் முதலிய சமயங்களோடு உருவடைந்து உலகில் அருள்நெறியாகி வளர்ந்து வருகிறது. சைவ சித்தாந்தத்தில் வேற்றுமைக்கு இடமில்லை. உருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு, அருவவழிபாடு, இவைகடந்த பெருநிலை என வழிபாட்டு முறை நான்கடையது. சைவம், உலகு, உயிர், இறை என்னும் முப்பொருள் உண்மையது சைவம். யான் இயற்கை அன்னையை மாலை என்னேன். பிறப்பு இயல்புடைய உயிர் களைச் சைவ சமயம் தத்துவங்கடந்த தனிப்பரம் பொருளாகக் கொள்வது இல்லை.

உண்மையைக் குறிக்கொண்டு ஆய்வோர்க்கு வேதாந்த சித்தாந்த வேற்றுமை தோன்றவே தோன்றாது. அஞ்ஞானி உலகை நோக்கும் பொழுது உலகும், மெய்ஞ்ஞானி உலகைப் பார்க்கும் பொழுது சிவமும் தோன்றும். சிவம் தோன்று வோர்க்கு உலகம் தோன்றாது. பிறர்க்குழைக்கும் பெருந்தகைமை, கைம்மாறு கருதாத தொண்டு, வேற்றுமை பாராட்டாமை வாழ்வதே சைவ வாழ்வு. அதுவே நடமாடும் கோயில் வழிபாடு.

இறைவன் அருளாளன்; பிழையை நினைந்து கசிந்து உருகுவோரை மன்னிப்பவன். சிவநெறி பரப்புவதும், சமரச உணர்வைப் பெருக்குவதும், மடங்களும் கோயில்களும் சீலத்துடன் திகழப் பாடுவதும், அவற்றுக்கென அயராது தொண்டாற்றும் தொண்டர் கூட்டம் உண்டாக வேண்டும், இவற்றை மெய்யுறப் பரப்புவார் அவையம் வேண்டும். இவை நம் முன்னணி வேலைகள். இவற்றை வித்துக் கூறும் நூல் சைவத்தின் சமரசம்.

# முருகன் அல்லது அழகு

இயற்கை உடல்; அதன் உயிர் முருகு என்னும் அடிப்படையில் கிளர்ந்த ஆய்வு நூல் முருகன் அல்லது அழகு.

"பழந்தமிழர் முருகை மணமும் இளமையும் கடவுட்டன்மையும் அழகுமுடைய செம்பொருளாகக் கொண்டனர்" எனத் தமக்குத் தோற்றமுற்றதை நூன்முகத்தில் குறிக்கிறார்.

முருகன் எனக்கட்டுரையாக வெளிப்பட்டதும் பின்னே விரிவாக்கம் பெற்று நூலுருக் கொண்டதையும் நூற்பெயர் விரிவுற்றதையும் நூன்முகத்தில் காண்க. நூல்வடிவில் முருகன் வெளிப்பட்ட ஆண்டு 1925.

நூல் பன்னிரு தலைப்புகளில் இயல்கின்றது. பன்னிருகை என்னும் உள்ளீடு ஆகலாம். முருகின் பொருளையும் முருகன் பொதுமையையும் விளக்குவது முதற்கட்டுரை. மணமும் இளமையும் கடவுட்டன்மையும் அழகும் எவருடைமை? இவை எல்லார்க்கும் உரிய உடைமை அல்லவோ? .. என்பதில் பொருளும் பொதுமையும் பொலிதல் காண்க. அழகு அழிவற்றது; ஆதலால் 'அழியா அழகு' ஆகும்; அழகு கையால் செய்யப்படும் செயற்கை அல்லதாய் இயற்கையுடையதாய் இருப்பதால், 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' ஆகும். அழகின்மேல் ஆராக் காதலுடைய உலகம் 'அழகு எப்படி இருக்கிறது?' என வினாவின் விழிக்கிறது. புலன்களுக்குப் பொருளாகாத அது இல்பொருளோ எனில், உணர்வில் உறுதல், வினையாற்றல், துன்பம் நீக்கி இன்பமாக்கல் முதலியவற்றை உடைய அது உள் பொருளேயாம்.

அழகு இயற்கை வாயிலாக உணரக் கிடக்கிறது. அழகு புறத்தே நிற்பது போல அகத்தும் நிற்கிறது. தோற்றம் ஒடுக்கம் அற்றது அழகு; இயற்கை அழகில் தோயும் உள்ளம் இன்ப உலகமாகின்றது; அழகில் தோயா வாழ்வு வாழ்வு அன்று; அழகில் தோய்ந்த வாழ்வு மனமாசற்றுப் பொலிகின்றது; முருகன் அழகன்; சொக்கனும் அழகன் என்பவற்றின் விளக்கமே அழகு என்னும் கட்டுரை.

முருகு பழந்தமிழ்ச் சொல். அதன் பழமை, தமிழ்க்கடவுள் என்பதாலும், குறிஞ்சி நிலக் கடவுள் என்பதாலும் விளங்கும். பழமை மிக்க தொல்காப்பியர்க்கு முற்படவே முருகு வழிபாடு ஏற்பட்டு விட்டது.

இயற்கைக்கும் முருகுக்கும் தொடர்புபோல், முருகுக்கும் உயிர்கட்கும் தொடர்புண்டு. இத் தொடர்பை உணர வேண்டும். உணரின் உயிரும் முருகாகி விடலாம். இயற்கைமணம், மாறா இளமை, கடவுட்டன்மை, அழியா அழகு எய்தலாம். யோகம் யோகம் எனப் புலன்களை அடக்கி அடக்கி அவற்றைக் கெடுத்தல் மடமை. புலன்கள் வாழ்வுக்கெனப் படைக்கப் பட்டவை. ஆற்றுப் படுத்தும் புலவர்கள். அவர்களை அடக்குவதும் ஒடுக்குவதும் இயற்கைக்கு மாறானவை. புலன்களை அவற்றின் வழியே போக விடாமல் நெறிப்படுத்தலே முறைமை. இயற்கை எழிலைத் துய்க்க எழுந்தவை ஓவியம், இசை முதலாம் கலைகள். இறையுறை கோயில்கள், இக்கலைவிளக்கக் கூடங்கள். இறையை நம்மவர் ஏழிசையாய் இசைப் பயனாய்க் கண்டனர்! அவ்வழியே இயற்கை வழி!

இயற்கையில் படிந்த உள்ளம் முனைப்பு உறாது; அழுக்காறு அவா முதலாம் கேடுகளுக்கு இரையாகாது. முனைப்பும் பிறமாசும் அற்ற நிலை முருகு உறைநிலை. முருகெனும் அழகு நல்லொழுக்க நங்கையர் மாட்டு உறைவது. அல்லொழுக்க முடையார் மாட்டு உறையாதது. அருணகிரியார் பழித்தது அல்லொழுக்கத்தவரையே அன்றி முருகனையும் நங்கையரையும் அன்று என்று கொள்ளல் முறை.

உறுதி இரட்டை உணர்வை அழித்து ஒருமைப்படுத்துவது. அவ்வொருமையால் அடைய விரும்பும் எல்லாமும் அடையலாம்; உறுதியில்லானுக்கு இறையும் துணையுறாது. அவ்வுறுதிக்குக் கொள்ளவேண்டுவ இரண்டு. ஒன்று, நோன்பு; மற்றொன்று வழிபாடு.

இடைக்காலத்தில் தமிழர்கள் முருகனைச் சிவமாக் கொண்டு போற்றும் நெறிபற்றினார்கள். தமிழ் முருகனைத் தமிழாகக் கண்டு தமிழால் போற்றுதலே தகவாம்.

பின்னாளில் சமயவாணர் தங்களுக்குள் போரிட்டுத் தூற்றி எழுதிய ஏட்டுச் சுவடிகள் பல. அவற்றுள் சில ஒழுக்க நூலெனப் பிடிவாதத்தால் கொள்ளப்படுகின்றன. இயற்கை முருகன் பலப்பல கட்டுக்கதைகளுக்கு உரியவன் ஆக்கப்பட்டு நாடு சீர்குலையலாயிற்று. குலைவு ஏற்படுத்திய குழப்பக் கதைகளுக்கும் காரணம் கூறுவாரும் எழுந்தனர். பழந்தமிழ்க் கொள்கை பாழ்படலாயிற்று. புராணங் களுக்கு வழிகாட்டி புத்த சாதகக் கதைகள்.

தமிழ்மக்களை நோக்கி, முருகன் எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்தவன். அவனுக்குப் புதிய கோயில்கள் எழுப்புதல் வேண்டா. இருக்கும் கோயில்கள் போதும். அவன் செந்நெறி வளர்க்கும் கழகம், கல்லூரி, அறநிலையங்கள் முதலிய கோலுங்கள்! நீங்கள் முருகாகத் திகழ்வீர்கள் என நூலை நிறைக்கிறார். இப்பொருட் சுருக்க விரிவு என விளங்குவது, முருகன் அல்லது அழகு.

# கடவுள் காட்சியும் தாயுமானாரும்

*கடவுள் ஆய்வுக்கு முடிவு இல்லை. சுட்டுணர்வு கொண்டு கடவுளை முற்றுணரற்கியலாது. ஆதலால், கொலை களவு கள் காமம் பொய் முதலிய மனமாசுகளை நல்லறிவால் கழுவி உண்மையில் மூழ்கி நிற்பின், அவர்கட்குக் கடவுள் முழுநிலை புலனாகும் என்று அநுபூதிமான்கள் அறிவுறுத்தியிருக்கிறார். அவ்வநுபூதிமான்களுள் தாயுமானாரும் ஒருவர். முன்னுரையில் கடவுளைக் காணும் நெறி காட்டுகிறார் திரு.வி.க.*

*குமரன் ஆண்டுமலரில் (1928) திரு.வி.க. எழுதிய 'கடவுள் காட்சி' என்னும் கட்டுரையே இப்பெயரிய சுவடியாக வெளிப் பட்டுள்ளது.*

*தாயுமானார் அருளிய "ஐவகை யெனும் பூதம்" என்னும் பாடலின் பொருள் விரிவாக்கமே கட்டுரையாய், நூலாய் உருக் கொண்டது என்க. (1928)*

*உயிர்கள் அறியாமைக்கட்கு விலகி ஒளியுற இறைவன் உடலம் தந்தான்; உலகு தந்தான்; உயிரின் பொருட்டு அடியார் வாயிலாக அருள்நூல்களை வழங்கினான். சான்றோர்களால் சமயங்கள் உருவாக்கப்பட்டன. அச்சமயங்கள் அனைத்தும் ஒரு கடவுளையே அடையும் வழிகள் என்னும் பொதுநிலை உருவாகச் செய்தான். இறைவன் செயற்பாடுகள் இவை எனின், உயிர்களின் கடமை என்ன? இறையருளைப் பெற உயிர்களுக்குத் தடையாக இருப்பவை பொய் முதலாம் மாசுகள். உண்மையே கடவுள். உண்மையாலேயே கடவுளை அடைய முடியும். ஆதலால் பொய் முதலாம் மாசுகளை உயிர்கள் தம் பகுத்தறிவு கொண்டு விலக்குதல் வேண்டும். பொய் முதலியவை அகன்ற மெய்யர் அறிவில் இறைவன் புலப்படுவான்.*

*அம்மெய்யறிவால் அடையும் பேறு சமரச அறிவு; பொய்யிலா மெய்யன் சமரச அறிவால் இறையோடு இரண்டறக் கலந்து பிறவா இறவா நிலையை எய்துகிறான்.*

*"நல்லியல்பை விழையும் ஒருவன் சத்துணவு உண்டு வருவானாக. அவ்வுணவுடன் அவன் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பானாக. அவைகளுடன் அவன் அழிவிலாச் சத்தியத்தை - உண்மையை - கடவுளை- இடையறாது எண்ணி வருவானாக. அவ்வாழ்வுடைய மக்களுக்கு ஆண்டவன் அருள் கூடும். அருளால் சமரச ஞானம்*

உண்டாகும்; சமரச ஞானத்தால் அவன் கடவுள் காட்சி பெறுவன்" என நூலை நிறைவு செய்கிறார்.

ஒருபாடலின் ஆழிய எண்ணம் இந்நூலாக்க மூலம். இதன் விளக்க உருவாக்கம் கூடிய இடமும் காலமும் எவை?

"இயற்கை வளம் செறிந்த இடங்களிலும் வெட்ட வெளி களிலும், இன்னோரன்ன சில இடங்களிலும் அந்திவான் கூடும் பொழுது யான் பாடி இன்புறும் பாடல்களில் இஃதும் ஒன்று" என்கிறார். இடமும் காலமும் முதற்பொருள்கள்! ஆதலால் மூலம் தந்த மூலம் இவ்விளக்கம் என்க.

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

பொழிவு இதழில் ஏறி நூலுருக் கொண்டவற்றுள் இந்நூல் ஒன்று. 26.1.1929இல் (தைப்பூசம்) நிகழ்ந்த சன்மார்க்க மாநாட்டில் திரு.வி.க. பொழிந்த தலைமையுரை வழி வெளிப்பட்ட நூலே இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் என்னும் இந்நூலாம்.

“அருள் ஒளி” பரப்ப வந்த எழுஞாயிறாக வள்ளலாரைக் காண்கிறார் திரு.வி.க. “இற்றைக்கு ஒருநூற்றாண்டுக்கு முன்னர் நாட்டில் இருள் படரலாயிற்று. அவ்விருள் கடிய எழுந்த ஞாயிறு இராமலிங்க சுவாமிகள் ” என்கிறார்.

திருவுள்ளம் காணும் வழியை, “ஒருவரது உள்ளக் கிடக்கையை யுணர அவரது உரைகளைக் கருவியாகக் கோடலே அறம்” என அறுதியிடும் திரு.வி.க. அவ்வழியே வழியாகக் காண்கிறார்; காட்டு கிறார்.

“திருவள்ளுவரை உணர அவர் அருளிய திருக்குறளை யான் கொள்வேனேயன்றிப் பிறரால் எழுதப் பெற்ற அவர்தம் வரலாற்றைக் கொள்ளேன். அவ்வழக்கை ஒட்டியே இராமலிங்க சுவாமிகளைக் காண அவர் அருளிய திருவருட்பா என்னும் கண்ணாடியை உறுகருவி யாகக் கொள்வேன்” என உறுதி மொழிகிறார். மேலும், “படங்கள் உருவத்தை உணர்த்துமே யன்றி உள்ளத்தை உணர்த்தமாட்டா. உள்ளத்தை உணர்த்தும் படங்களும் உண்டோ? உண்டு. அவைகள் யா? அவைகளே நூல்கள். ஒருவரது உள்ளநிலையை அவர் எழுதிய நூல்கள் வாயிலாக உணர்வதே சால்பு” என்கிறார்.

தம் பொழிவை நாற்பகுப்பாக்கிக் கொள்கிறார். அறிவுறுத்தல், முறை, பேறு, இளமை முயற்சி என்பவை அவை.

பொழிவுப் பொழுதினும் பெருக்கமான முழுமையான பாடல்களை நூலுருவின் போது கொண்டதையும் புலப்படுத்து கிறார். அதனால், மேற்கோள் சான்றொப்பப் பாடல்கள், நூலளவில் செம்பாதிக்கு மேலும் இடம் பெறுகின்றன. திரு.வி.க.வின் அருட்பாத் தோய்வையும், வள்ளலார் வாக்கை வைத்து மெய்ப்பிக்கக் கருதும் கருத்தையும் விளக்கிக் காட்டுகின்றன இவை.

வள்ளலார் அறிவுறுத்தியதை ‘அருட்பெருஞ்சோதி - தனிப்பெருங் கருணை’ எனச் சுருங்க உரைக்கலாம் என்னும் திரு.வி.க. அருட்பா வழியாக, ‘யோகாந்த கலாந்த நாதாந்த போதாந்த வேதாந்த

சித்தாந்தம்' என்றும் வள்ளலார் அறிவுறுத்தியதை வரிசைப்படுத்தி உரைக்கிறார். ஒவ்வொன்றையும் பொருள் விளக்கம் செய்து, அவை அருட்பாவில் சொல்லப் படும் வகையையும் காட்டி நிறைவிக்கிறார்.

தம்கால அளவில் ஏற்பட்டு வரும் மாறுதலையும் அவர் எண்ணாமல் இல்லை. "யோகாந்தம் கலாந்தம் முதலிய குறியீடுகளைக் கேட்கும் போதே சிலர்க்கு வெறுப்புத் தோன்றுவதுண்டு. இவ்வந்தங் களைத் தெரிந்து கொள்வதால் இக்கால வாழ்விற்கு என்ன பயன்? என்று கருதுவோருமுளர். இது காலத்தின் கோலம்! என் செய்வது!" என இரங்குகிறார்.

ஒன்றுவித்தல் (யோகாந்தம்), ஆணவநீக்கம் (கலாந்தம்), ஒலியுறுதல் (நாதாந்தம்), அறிவுறுதல் (போதாந்தம்), அறிவு விளக்கம் (வேதாந்தம்), இரண்டறல் (சித்தாந்தம்) என விளக்கம் தந்து சான்று காட்டுகிறார்.

யோகாந்தம் கூறும் போது, "அடயோகம் என்னும் பெயரால், சில கயவர் நிகழ்த்தும் அடாத செயல்களால் யோகக் கல்விக்கே இடையூறு நேர்ந்திருக்கிறது.

"யான் இளமை தொட்டுக் கல்லூரி விடுத்த நாள் முதல் - உண்மை யோகிகளைத் தேடித் தேடித் திரிகிறேன்; எனது வாணாளில் யோகிகள் என்று சொல்லப்படுவோர் பலரைக் கண்டிருக்கிறேன். அவருள் இரண்டொருவர் தவிர ஏனையோ ரெல்லாரும் அசட்டு யோகிகளாவர். அவர்தம் மோசங்களையும் ஏமாற்றங்களையும் ஈண்டு விரிக்கிற் பெருகும். அப்பேய்களைப் பற்றிய நினைவும் ஈண்டு வேண்டு வதில்லை. மேற்குறிப்பிட்ட இரண்டொரு நல்லாரும் இல்லறத் திருப்பவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்கிறார்,

ஆறந்தங்களை விளக்கிய திரு.வி.க. சமரசம், சன்மார்க்கம், சங்கம் என்பவற்றையும் முறையாக விளக்குகிறார்.

உலகில் தோன்றிய அறிஞர் அனைவரும் சமரசத்தை அறிவுறுத் தினர் என்றும் இப்பொல்லா உலகம் சமரசத்துக்குச் செவி சாய்த்திலது என்றும் வருந்தும் திருவிக.

"சமரசம், வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின், உலகில் போர் ஏது? பூசல் ஏது? புரட்சி ஏது? சமரசம் பரவின் அரசு எற்றுக்கு? சட்டம் எற்றுக்கு? நீதிமன்றம் எற்றுக்கு? இவை யாவும் உலகில் சமரசம் பரவாமைமயை அல்லவோ விளக்குகின்றன! என வினாக்களைத் தொகுத்து ஏங்குகிறார். நாடு, மொழி, சமயம், சாதி முதலியவற்றால் சமரசம் கெடுவதையும் சீர்திருத்தம் என்னும் பெயரால் சீரழிவு நேர்தலையும் எடுத்துரைத்து ஆன்மநேயச் சமரசத்தை வள்ளலார் வழியில் பெற்றுய்ய வேண்டுகிறார்.

சமரசத்திற்குரிய மார்க்கம் சன்மார்க்கம் என்றும் அது இயற்கையோடு இயைந்த இறைமார்க்க மென்றும் அது பிற

உயிரைத் தம் உயிர்போல் கருதும் நிலை என்றும் விளக்குகிறார். அருளாளர் கூட்டமே சங்கம் என்றும், எந்நாட்டவராயினுமாக; எவ்வகுப்பினராயினுமாக; எச்சமயத்தவராயினும் ஆக அவர் அருளாளரேல் சங்கத்தார் என அறிவுறுத்தலை நிறைக்கிறார்.

முறை என்பதில், கடவுள் உறுதி, இயற்கை வாழ்வு, முறையீடு, அருளொழுக்கம் என்னும் நாற்பொருள் பற்றி விளக்குகிறார். கடவுளிடத்துறுதியே - அதன் வெளிப்பாடே அருட்பா என்கிறார். அடிகள் கொண்ட இயற்கைத் தோய்வு, பொருந்திய இயற்கை உணவு முதலியவற்றை இயற்கை வாழ்வில் விளக்குகிறார்.

அடிகளார் முறையீட்டை உருகி உருகி உரைக்கும் திரு.வி.க. வுக்குத் தம் இளமை எண்ணம் புகுந்தது. "அழுகையின் திறன் எனக்கு இளமையில் விளங்கா தொழிந்தன; இலக்கணங்களைக் கட்டியழுதேன்; இலக்கியங்களைக் கட்டியழுதேன்; தர்க்கத்தில் புரண்டேன்; தத்துவத்தில் புரண்டேன்;வாதத்தின் வீழ்ந்தேன்; ஆண்டவனை நோக்கி முறையிடக் கற்றேனில்லை; அழுக்கற்றேனில்லை; முறையீட்டை முனிந்தேன்; அழுகையை வெறுத்தேன்; பாவியானேன்" என்கிறார்.

"முறையீட்டின் நுட்பமும் அழுகையின் திறமும் விளங்கிய பின்னரே திருவாசகத்தின் மாண்பும், அதைப் போற்றிய இராமலிங்க சுவாமிகளின் மாண்பும் ஒருவாறு எனக்கு விளங்கின. இப்பொழுது முறையீட்டில் முனைந்து நிற்கிறேன்" என்கிறார். அவர்தம் முறையீடு எத்தனை எத்தனை பாடல்களாயின! நூல்களாயின! என்பதை அவர்தம் நூல்களை அறிவார்,அறிவர்.

அருளொழுக்கம் பற்றிக் கூறும் திரு.வி.க. " முறையீடும் அழுகையும் முனைப்பைச் செகுத்து மாசைக் கழுவி அருளைக் கூட்டும்" என்பதை விளக்கி, "இராமலிங்கருக்கு இரக்கமே உயிர்: இரக்கமே உடல்; இரக்கமே அவர்" என்கிறார். சான்றுகள் பலப்பல (25 பாடல்கள்) காட்டுகிறார்.

உறுதிநிலை, திருவருள் நிலை, சாகாநிலை என்னும் முப்பகுப்பில் பேறு, பேசப்படுகிறது.

"குறைபாடுகளை முறையிட்டுத் தன்னை ஆண்டவனிடம் ஒப்புவிக்கும் மகன் திருவருட் பயன் எய்துதல் ஒருதலை"

'யான்' என்னும் நினைவே அற்ற அவ்விடத்தில் திருவருள் புகுந்ததும் அவன் செயல்களெல்லாம் திருவருள் செயல்களாகும். அந்நிலையில் துன்பமென்னும் நச்சு எரிந்து கொண்டிருந்த இடத்தில் இன்பத்தேன் பிலிற்றும்;நாளடைவில் அத்தேன் பெருக் கெடுத்தோடும். அப்பெருக்கில் அன்பர் தோய்வர்; ஆடுவர்; பாடுவர்" என்று கூறி விளக்குகிறார்.

இளமை முயற்சி என்னும் நான்காம் பகுதி குரு, நூல், வழிபடுகடவுள் என்னும் மூன்று உட்பிரிவு கொண்டது.

அடிகள் திருஞானசம்பந்தரை ஞான குருவாகக் கொண்டவர் என்பதையும் தம் உயிரெனப் போற்றிய ஒரு நூல் திருவாசகம் என்பதையும், தம் வழிபடு கடவுளாக முருகப் பெருமானைக் கொண்டார் என்பதையும் தெளிவிக்கிறார். மேலும், கடவுள் அருள் உருவம் கண்டு, காம வெகுளி மயக்கங்களைப் போக்கி, யாண்டும் கடவுள் நீக்கமற நிறைந்திருத்தலை உணர்ந்து, எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை என்னும் அருளறத்தை வளர்த்து, அவ்வருள் நெறியே சமரச சன்மார்க்க மென்று தெளிந்து அம்மார்க்கத்தை உலகிற்கு அறிவுறுத்தி, இறுதியில் சாகாநிலை யெனும் பெருவாழ்வு பெற்றார்" என்று கூறி நிறைவு செய்கிறார்.

அடிகளார் வாழ்விலும் வாக்கிலும் ஆழப்பதிந்து அவராகத் தாம் மாறித் திரு.வி.க. அடிகளார் திருவுள்ளம் கண்டுரைத்த சீர்மை ஈதெனக் கேட்டவர் மகிழ்ந்தமை போலக் கற்பாரும் மகிழ்வர் என்பதாம். இராமலிங்க சுவாமிகள் நெஞ்சத் திரட்டு இந்நூல் என்க.

# தமிழ் நூல்களில் பௌத்தம்

*6. 4. 1928இல் தென்னிந்திய பௌத்த சங்கச் சார்பில் சிந்தாதிரிப் பேட்டை உயர்பள்ளி நிலையத்தில் ஒரு மணி நேர அளவு செய்த பொழிவே இச்சுவடியாக வெளிப்பட்டுள்ளது.*

*சுவடிக்கு ஏற்பப் பொழிவு சில மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அம்மாற்றத்தில் மற்றைச் சில பொழிவு நூல்கள், கட்டுரை நூல்கள் போல இச்சுவடி விரிவாக்கம் பெற்றிலது. பொழிவும் காலக் கட்டிலேயே அமைந்திருக்கிறது என்பது பொழிவுக் குறிப்பு களாலே புலப்படுத்துகின்றது. சமயங்கள் பல எனினும் அவற்றின் உள்ளீடாம் உண்மை ஒன்றே என்பதை முன்னுரையில் "உண்மை, என்றும் ஒருபெற்றியா இலங்குவது. முறைப்பாடுகள் கால தேச வர்த்தமானத்தை ஒட்டிக் கோலப்படுவன. அவைகளில் வேற்றுமை இருத்தல் இயல்பு. அவைகள் மாறுந்தகையன. மாறத் தக்க முறை களையே அடிப்படையான உண்மை என்று கோடல் அறியாமை. இந்நுட்பம் விளங்கப்பெறுவோர்க்கு" "உண்மையில் பன்மை உணர்வு தோன்றுதல் அரிது" என்கிறார்.*

*புத்தர் தோன்றிய தோற்றத்தை, "உண்மையை உணர்த்தும் அறிவெனும் கருவியை 'வேதம்' என்னும் ஒரு நூலாகக் கொண்டும், உண்மையை விளங்கச் செய்யும் தியாகத்துக்குரிய 'யக்ஞம்' என்னும் யாகத்தைக் கொலைக்குழியாக்கியும், பிறப்பில் சகோதரர்களாகத் தோன்றிய மக்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்தும் உண்மைக்கு மாறுபட்ட இழிவுகள் இன்னோரன்ன பல நிகழ்த்தியும் சமயத் துறைகட்குச் சிலர் சூழ்ந்த கேட்டால் மன்பதை இருளில் மூழ்கி இடுக்கணுற்ற வேளையில், புத்தர் என்னும் பெருஞாயிறு தோன்றிற்று" என்கிறார். புத்தர் பூதவாதி அல்லர் என்றும், அறம் என்றும் கடவுளைச் சீலாமன்று அறிவுறுத்தினார் என்றும், புத்த சமயத்தின் மேல் சொல்லப்படும் குறைகளுக்குத் தீர்வு வழங்குகிறார் திரு.வி. க.*

*வேதம் யாகம் என்பவற்றைத் திரித்த பொல்லா உலகம் பௌத்த அறத்திற்குக் கேடு சூழ்ந்தது என்றும், அறத்தில் பெரிதும் ஒற்றுமை வாய்ந்த சமண பௌத்தங்களே பின்னாளில் ஒன்றோடு ஒன்று மலைந்து போரிட்டன என்றும் 'பௌத்தர்' எனப்பட்டார். தங்களுக்குள் சீலத்தை மறந்து சினத்தைக் கொண்டார் என்றும் கூறுகிறார்.*

திருஞான சம்பந்தர் சமண பௌத்தங்களின் பெயரால் படர்ந்த மாசுக்களைக் கழுவப் போந்தாரே யன்றி அவற்றை அழிக்கப் போந்தாரல்லர் என்பதையும் முன்னுரையில் சுட்டுகிறார்.

சமய குரவர் என்று சொல்லப்படும் அனைவரும் அண்ணன் தம்பிமார் போல எனக்குத் தோன்றுகிறார் என்னும் திரு.வி. க. வின் சன்மார்க்க ஒப்புரவுப் பார்வையுடையார் எவரேனும் சமயச் சார்பினருள் உண்டேயோ உண்டேயோ என்று வினாவி, விடை காண இயலா நிலையே இருத்தல் கண்கூடு. முதற்கண் பௌத்தர் களேனும் இச்சால்பைக் கொள்வரோ எனின் நிலைமை மிக இரங்கத்தக்கதாகவே உள்ளமையும், தம் சமயத்தைத் தாமே புதை குழிக்குள் தள்ளும் வெறியராய்ப் பெரிதும் விளங்குவதும் கண்கூடு. தமிழ் நூல்களில் பௌத்த நெறி விரவிக் கிடப்பதுடன், பௌத்த இலக்கியங்களில் தலைமணியாம் மணிமேகலை தமிழ்வளமாக அமைந்துள்ளது. புத்தமித்திரர் என்பார் இயற்றிய வீரசோழிய இலக்கணம் உண்டு. தமிழ்க் காப்பியங்களில் ஒன்றாகத் திகழ்ந்து ஒரு சில பாடல்கள் அளவில் வைத்து மறைந்த குண்டலகேசி என்னும் காவியம் உண்டு. விரிவு மிக்க வரலாறாம் இது, கால இடச் சூழலால் சுருக்கத்தில் சுருக்கமாகப் பொழிவுற்றுச் சுவடியாக்கம் பெற்றுள்ளது.

நாலடியாரும் திருக்குறளும் ஊன்வேள்வியையும் கொலை யையும் கண்டித்திருக்கும் குறிப்புகளால், புத்தர் பெருமான் செந் நெறியின் வெற்றி விளக்கமாகிறது என்கிறார். பத்துப்பாட்டு முதலியவற்றில் கொலை கொல்லாமை, கள்ளுண்ணல் கள்ளுண்ணாமை, ஊன் வேள்வி ஊனமில் வேள்வி, பௌத்துப் பள்ளி என்பவை உண்மை, பௌத்தச் சார்புகாட்டும் என்கிறார். மணிமேகலையார் சமயக் கணக்கர்களிடம் அவரவர் சமயம் பற்றிக் கேட்கும்போது பூதவாதியையும் கேட்கிறார். பௌத்தம் பூதவாதமன்று. நல்வினை, தீவினை, இம்மை, மறுமை, நிர்வாணம் என்பவற்றையுடையது பூதவாதமாகாது என்கிறார்.

திருமுறைகளில் பௌத்தம் உண்டு என்பதை, "நீதி பலவும் தன்னவுருவாமென மிகுத்ததவன்", "தாயமூல தர்மன்", "சீலமே", "பண்பே" என்பவற்றை மூவர் பாடல்களிலிருந்து எடுத்துக் காட்டி உரைக்கிறார்.

மணிவாசகர் ஊமைப் பெண்ணைப் பேச வைத்துப் பௌத்தர் களை வாதில்வென்றதற்கு அப்பதிகத்தில் சான்று இல்லை என்றும், பௌத்தத்தை மணிவாசகர் கண்டித்தது கொண்டு புனையப்பட்டது அது என்றும் கூறுகிறார். சமணரைக் கழுவேற்றியதையும் சான்று காட்டி மறுக்கிறார்.

சீதையாரை இராவணன் தூக்கிச் சென்ற முறை வான்மீகத்தி லிருந்து மாற்றம் பெற்றதும், இராமன் சீதை முதலியோர்

புலாலுண்ணாமை மேற்கொண்டதுமாகிய கம்பர் செய்தி, பௌத்த அறத்தின் வழிப்பட்டது என்கிறார். புத்த சாதகக் கதைகளே தமிழ்ப் புராணங்களுக்கு மூலம் என்றும், முப்பத்திரண்டு அறம் கூறியதற்குப் பௌத்தமே மூலம் என்றும் புராணங்களில் பௌத்த முண்மை குறிக்கிறார். தாயுமானவர் பாடல், வள்ளலார் பாடல் ஆகியவற்றில் பௌத்த நெறியுண்மையும், சிரார்த்தச் சீர்திருத்தம், இந்துக் கோயி லமைப்பு, விழாக்கள் ஆகியவற்றிலும் பௌத்தம் புகுந்துள்ளமையும் உரைத்துப் பொழிவை நிறைவு செய்கிறார்.

பௌத்தம் என்பது பகைமை பொறாமை முதலிய பேய்மை யற்றது. அவ்வகையில் தொண்டாற்றும் அறவர் வேண்டும் என்று முடிக்கிறார்.

தமிழில் உள்ள பௌத்த நூல்களைக் கோடிட்டுக் காட்டும் நூல் இது எனின் தகும்.

# சைவத்திறவு

சைவ உண்மை உணர வழிகாட்டுவது கொண்டு இச்சுவடி 'சைவத்திறவு' ஆகியது. இந்நூற் கடமையின் இன்றியமையாமையை, "கடையாயார் கூற்றுக்களான், இடையாயார் கேடுறாதவாறு காக்க வேண்டுவது, தலையாயார் கடன்" என்னும் 'அணிந்துரை' நூலியற்றிய நோக்கைத் தெளிவிக்கிறது.

திரு.வி.க. அவர்கள் 28.12.1928, 29.12.1928 ஆகிய இரண்டு நாட்களில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் ஆற்றிய தலைமை உரையே சைவத்திறவாகியது. "உருவ வழிபாடு பற்றிய ஐயங்கள் பல இந்நூலால் அகலும்" என்கிறார். (அணிந்துரை)

"தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் மணிவாசகத் தொடரை முன்வைத்துப் பொழியும் திரு.வி.க. முதற்கண் "நினைப்பற நினைத்தல்" என்பதை விரிவாக விளக்குகிறார்.

நினைப்பு அற நினைத்தால், இறையை அல்லாமல் பிறிதொன்றும் இல்லாமை அல்லாது எங்கும் எல்லாமும் இறையாதல் தோற்றமுறும் என்பதைப் பல்வேறு வரலாறு உவமை வழியாக நிறுவுகிறார். தன்நினைவு தற்சார்பு அற்றுப்போன மனத்தில் முற்றும் இறைமையே விளங்கும் என்பதைத் தெளிவிக்கிறார்.

மாணிக்க வாசகர் ஆனந்த வடிவான மாதவர். அன்புருவம் அருளுருவம் ஆகிய பெற்றபின் இன்புருவம் ஆனவர். அந்நிலையை அந்நிலையடைந்த இராமலிங்க அடிகளார் கண்டு கொண்டார்.

"தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் தொடர் 'இறைவன் ஒருவனே' என்பதாம். இயற்கை இறைவன் உடல்; இயற்கையின் உயிர் இறைவன்.

நம்நாடு வெப்புமிக்க நாடு. இந்நாட்டுமக்கள் இறையை வெப்பாகக் கொண்டனர். வெப்பின் சான்று தீ. தீவண்ணம் செம்மை; சேய், சிவம் என்பவை தீயின் செவ்வண்ணம் குறிப்பவை.

ஆண்டவன் அருள் நிலை கூடப் பெற்றவர்க்கு இறைவன் ஒருவனே என்னும் எண்ணம் புலப்படும். அப்பரடிகள் பிறப்பால் சைவர்; ஆய்வால் சமணர்; பின்னைத் சைவர். ஆனால் அவர் கொண்ட தெளிவு சமயப் பெயர் பல எனினும் இறைமை ஒருமையை வேறுபடுத்துவதில்லை என உணரச் செய்தது. அதனால்,

***“சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்***
***தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்***
***நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்***
***என்னாவில் உன்நாமம் மறந்தறியேன்”***

எனத் தம்நிலையை எடுத்தோதினார். அதனால்,

***“யாதோர் தேவர் எனப்படு வார்க்கெலாம்***
***மாதேவன்லால் தேவர்மற் றில்லையே”***

என்னும் முடிவுகண்டார்.

இன்னஉரு இன்னநிறம் ஒன்றுமில்லான் என்று நினையும் போது உள்ளத்தில் ஒன்றும் படிவதில்லை. தோடுடைய செவியன் விடையேறி என்னும் போது உள்ளத்தில் ஒருருவம் படிகிறது. உணர்வு கடந்த ஒன்றை உணர்வு கடந்து உணரும் நிலை கூடும் வரை உருவ வழிபாடு இன்றியமையாது வேண்டத்தக்கது. அதற்கே உருவ வழிபாடு உண்டாயது. இது சைவத்திறவு என்கிறார்.

திருவுருவ விளக்கம், ஓங்காரம் என்பவற்றை மேலே விளக்கி, நெஞ்சம் நிலைத்து நிற்றற்கு ஒரு கொழு கொம்பு வேண்டற்பாலதே; அஃது உருவழிபாடு என்று கூறும் திரு.வி.க.

“இயற்கை வடிவங்களையோ நடமாடுங் கோயில்களாகிய உயிர்களையோ வழிபடுவோர்க்கு வேறு எவ்வழிபாடும் வேண்டு வதில்லை. என்று பொழிவை நிறைவு செய்கிறார்.

உளவியல் வழியே விளக்கும் உருவ வழிபாட்டு நெறி இந் நூலால் அறியக் கிடக்கின்றது என்க.

# நினைப்பவர் மனம்

*'நினைப்பவர் மனம்' - திருக்கோயிலில் பொழியப் பட்டதா? சமயம் சார்மன்றிலே - மாநாட்டிலே பொழியப் பட்டதா?*

*இல்லை! திருமிகு நாராயணசாமி என்னும் நம்பி திருமிகு அலர்மேல் அம்மாள் என்னும் நங்கையை வாழ்க்கைத் துணையாக் கொண்ட திருமணப் பொலிவு கொலுவீற்றுள்ள வேளையில் நடைபெற்றது.*

*மீண்டும் படியுங்கள் - நினையுங்கள்! தாலி பூட்டிக் கொண்டு இருக்கும்போதே எழும் கூட்டத்தை - வாழ்த்துரைக்குத் தானும் செவி சாயாத கூட்டத்தைக் காணும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். 29.8.1930 இல் தென்னார்க்காடு மாவட்டம் கிழக்கு மருதூரில் நிகழ்ந்த சைவ சித்தாந்த சமச வெள்ளிவிழாவே, மணவிழாவொடும் ஒன்றி நிகழ்ந்தது! 'நினைப்பவர் மனம்' எத்தகையதாக இருந்தது என்பதை நாம் எண்ணலாம்.*

*பொழிவு செய்தவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அல்லரோ என்பார் நினைவும் தோன்றவே செய்கிறது! இப்பொழுதும் நினைப்பவர் மனமே விடை காண வேண்டும்.*

*"நினைப்பவர் மனமே கோயிலாக் கொண்டவன்" என்பது நாவுக்கரசர் வழங்கிய நன்மொழி.*

*இத்தொடரமைந்த பாடல் விளக்கம், ஒருபாடலை எப்படி யெல்லாம் நயம் காணவும் திறனாய்வு செய்யவும் வேண்டும் என்பதை ஆய்வு மாணவர்க்குப் பண்பட்ட பேராசிரியர் விளக்கிக் காட்டினும் காட்டற்கரிய சிறப்பில் திரு.வி.க. பொதுமக்கள் அவையில் பொழிகிறார் என்றால், அந்நிலையைத் தமிழுலகம் மீளவும் எய்துமோ? என்னும் நினைவே கிளர்கின்றது.*

*நினைப்பவர் மனமே கோயிலாக் கொள்ளும் இறை என்றால், நினையார் மனத்தில் கோயில் கொள்ளாதோ? கொள்ளாது எனின், 'வேண்டுதல் வேண்டாமை இலான்', 'நீக்கமற நிறைந்தான்' என்னும் இறைமை இலக்கணங்களுக்கு மாறாகாதோ? என வினாக்களை எழுப்பி, அரிய வாழ்வியல் காட்சிகளை எடுத்துக்காட்டாக்கி மெய்ப்பித்தல் திரு.வி.க. புலமைச் சிறப்பை அன்றிச் சால்பையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.அப்பரடிகள் எக்கருத்துப்பற்றி இத்தொடரைக் கூறினார் என்பதை " எல்லா உயிர்களிலும்*

ஆண்டவன் கோயில் கொண்டிருத்தலை உணர்த்துவது ஆண்டவன் நினைவே ஆகும். ஆண்டவனை ஓர் உருவின் வாயிலாக நினைந்து, பின்னை இயற்கையின் வாயிலாக நினைந்து, பின்னைத் தன் வாயிலாக நினைந்து அவ்வாண்டவன் உள்ளங்கோயில் கொண்டதை உணர்தல் வேண்டும். இம்முறை பற்றி யொழுகாது 'நெஞ்சில் ஆண்டவன் இல்லையே! என்று கருதுவது தவறு. ஆண்டவன் கோயில் கொண்டிருத் தலை உணர நெஞ்சைப் பண்படுத்துதல் வேண்டும். அதற்கு ஆண்டவன் நினைவே உறுகருவி போன்றது. இக்கருத்துப் பற்றியே 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' என்று நினைத்தலை அடிகள் வலியுறுத்திக் காட்டியுள்ளார்" என்கிறார்.

நினைந்துருகும் அடியவர் உள்ளமே ஆண்டவனுக்குரிய சிறந்த கோயிலாகும் என்பதை விரிவாகக் கூறும் திரு.வி.க. "நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால், நனைந்து நனைந்து" என்னும் வள்ளலார் அருள்மொழியாலும், "நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே மஞ்சனநீர்" என்னும் தாயுமானவர் தண்மொழியாலும் பொழிவை நிறைவிக்கிறார்.

# இமயமலை அல்லது தியானம்

சைவசித்தாந்த சமாச இருபத்தைந்தாம் ஆண்டு விழா பண்டிதமணி தலைமையில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் திரு. வி. க. செய்த பொழிவு நூல் இந்நூலாகும். பொழிவு நிகழ்ந்த நாள் 27. 12. 1930.

இந்நூல் நடையிட்டுச் செல்லும் வகையை முன்னுரைக் குறுந்தலைப்புகளால் இனிதே காட்டுகிறார்.

'இமயமலை' பருப்பொருள்; அதன் நுண் பொருள் 'தியானம்' இரண்டும் நூற்பெயரால் பயில்வார் பெறச் செய்கிறது.பேசிய தலைப்பு 'இமயமலை' என்பதை அறிய முடிகிறது. நூலின் சுருக்கம் 'அமைதி வாழ்வு' என்கிறார். இமயமலை பனிமலை எனக் குறிக்கும். திரு.வி.க. அப்பனியின் வெண்மை, தூய்மை பற்றி உரைக்கிறார்.

குமரிக்கண்ட வீழ்ச்சி, இமய எழுச்சி, கடலாயிருந்து கிளர்ந்த சான்று என்பவற்றைக் கூறி, 'விந்தியத்தை நோக்க இமயம் குழந்தை' என்பதைச் சுட்டுகிறார்.

பசுமையில் தொடங்கி, கருமையில் நடந்து, வெண்மையில் தவழ்ந்து, நீலவானில் நிறுத்தும் இமயக் காட்சியை வியந்து கூறுகிறார்.

பசுமைக்காடு; கருமலை; வென்பனி; நீலவான் என வண்ணச் சிறப்பு மட்டுமா? காட்டின் பயன், ஆற்றுவளம், மூலிகைப் பேறு, வாழ்வுத் தோற்றம், இயற்கை நலம் இறைமைத் தோற்றம் என்பவற்றை நிரலே விளக்குகிறார்.

மலை முகடு நிமிர்பார்வையும், பள்ளத்தாக்கு தணி நோக்கையும், மலைமுகடு கோயில் கோபுர மூலமாதலையும், மலை காலம் காலமாக அறிவரையும், கலைவல்லாரையும் கவர்ந்த கவர்ச்சியையும் விரித்துரைக் கிறார்.

இமயம் பெண்ணொருபாகம், கரியுரி, பொன்னார்மேனி, நீலகண்டம், செஞ்சேய் ஆகிய காட்சிகளைக் கலை வல்லார்க்கு வழங்கிச் சிவக்கோலம் காட்டியதையும், இருபாகங்களிலும் உள்ள தொடர்களும் எட்டுக்கைகளாகவும் அவற்றில் உள்ள பொருள் களாகவும் பாறைத் தொங்கல்கள் தாழ்சடைகளாகவும், மேக மண்டலங்களைக் கங்கை நீர்த் தேக்கமாகவும் அந்திவான்பிறை முடிப்பிறையாகவும் தோற்றந் தந்திருக்கும் என அகக்கண் கொண்டு அருமையாகச் சுட்டுகிறார்.

*சிவவுருவைப் பற்றிய ஐயப்பாடுகள் இளமையில் தோன்றியதையும், கதிரைவேலரால் ஒருவாறு களையப் பட்டதையும், பின்னே திருமூலரால் தெளிவுற்றமையையும் குறிக்கிறார்.*

*இமயத்தை அக நோக்கில் ஆய்ந்தால், நாமும் ஓர் இமயமாய் இருத்தல் உணரலாம். பசுமை மாயை; கருமை ஆணவம்; வெண்மை மெய்யறிவொளி என்பதை விளக்கித் தெளிவிக்கிறார்.*

*இராவணன் இமயம் அகழ்ந்தது; அப்பர் கயிலை நோக்கியது; சுந்தரர் கயிலை சென்றது; காரைக்காலம்மையார் கயிலை சென்று மீண்டது என்பவற்றைத் தம் நுண்ணாய்வு நோக்கின் வழியே தீட்டிக் காட்டுகிறார். மலையை மௌன குருவாக - தக்கணாமூர்த்தியாகக் கொள்ளும் திரு.வி.க. தியானத்திற்கு வேண்டும் குறிகளுள் 'மலையே சிறந்த குறி' என்கிறார். "மலை, தியானம், போலவா, தியானமாகவே நிற்கிறது" என அழுத்திக் கூறுகிறார்.*

*"அமைதி நம் பெருஞ்செல்வம். அதுவே அழியாச் செல்வம்; இமயச் செல்வம் " எனப் பொழிவை நிறைவு செய்கிறார்.*

*மலைக்காட்சி எத்தனை எத்தனை பேர்களை வயப்படுத்தி யுள்ளது! அதன் மாண்பு என்னே என்னே வியப்புறுத்துகிறது!*

***"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்***
***மலையினும் மாணப் பெரிது"***

***"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே***
***பேரா இயற்கை தரும்"***

*என்னும் குறள்மணிகள் நம்முள் பளிச்சிடுகின்றன.*

# ஆலமும் அமுதமும்

ஆலமும் அமுதமும் முரண்பட்டவை. முரணிலும் அரண் உண்டு. அரிய அமுதமாம் மருந்தொடும் உரிய அளவாம் ஆலமும் (நஞ்சும்) உண்டு என்பது மருத்துவ உலகம் நன்கு அறிந்தது. "பாடாணங்களில் மருந்து செய்தல் பண்டைத் தமிழர் மருத்துவச் சிறப்பு" எனப் பாராட்டுவார் திரு.வி.க.

'ஆலமும் அமுதமும்' பேசப்பட்டது ஆலவாய் எனப்படும் மதுரை மாநகர்க் கண்ணேயாம். ஆலமென அச்சுறுத்தும் உலகப் போர் மூண்டிருந்த காலம் (*1943) அமுதப் பொழிவெனத் திரு.வி.க. பொழிய அமைந்த சைவ சித்தாந்த சமாச மேடை. தலைமைப் பொழிவுச் செய்தி, நூல் தலைப்புப் பெயராயிற்று. நூல் அணிந்துரையில் ஆல அமுதங்களைச் சுட்டுகிறார்: " ஆலம் எது? அமுதம் எது? ஆலம் மக்கள் நிகழ்த்தும் பாவம். அமுதம் ஆண்டவன் திருவருள்" என்பது அது. மதுரையின் மாண்பினை எடுத்துரைக்கும் திரு.வி.க. "சங்கம் வளர்த்த மாண்பு இக் கூடற்பதிக்கு உண்டு. அன்று சங்கத்தில் வளர்ந்த தமிழ் இன்றும் தமிழ்நாட்டின் தனிமையைக் காத்து வருகிறது. தமிழ்நாடு தனிநாடு என்று தமிழன் வீறுடன் கூறிப் பீடுடன் நடக்கும் ஏக்கழுத்தம் நல்கிய மதுரை - நான்மாடக் கூடல் - வாழ்க; வாழ்க" என வாழ்த்துகிறார். தமிழ்நாடு என்பதன் பொருள் என்ன? தனிநாடு என்பதன் அடையாளம் என்ன? தமிழ்தானே! 'தண்டமிழ் வேலித் தமிழ் நாட்டகம்' என்பது தமிழ் மதுரைப் பரிபாடற் செய்தி அல்லவோ!

சித்தாந்தக் கொள்கையின் சிறப்பை முன்வைக்கிறார் திரு.வி.க: "உலக வாழ்க்கையைச் சித்தாந்தம் வெறுக்கவும் இல்லை; துறக்கவும் இல்லை; உயிர்களின் விடுதலைக்கு உலகவாழ்க்கை இன்றியமையாக் கருவி என்பது சித்தாந்தத்தின் உட்கிடக்கை" என்றும்,

உலக வாழ்க்கையை நீத்தல் வேண்டும் என்னும் கொள்கையும், உலகமே பொருள் என்னும் கொள்கையும் மன்பதையின் நலத்துக்கு உரியனவாகா. மன்பதையை முன்னையது ஒருவழியில் பாழ்படுத்தியது; பின்னையது வேறு வழியில் பாழ்படுத்தியது. அது கீழ்நாட்டைப் பெரிதும் பாழ்படுத்தியது; இது மேல் நாட்டைப் பெரிதும் பாழ்படுத்தியது. சைவம் அதையும் விலக்கி இதையும் விலக்கி' உயிர்களின் விடுதலைக்கென்று ஆண்டவன் அருளிய

கொடை உலகம். அவ்வுலகைக் கொழு கொம்பாகக் கொள்வது அறம்' என்று உலகை ஏற்கிறது" என்றும் கூறுகிறார்.

உலகப்போர் கனன்று கொண்டிருந்த நாளில் உலகைப் பற்றி எண்ணும் திரு.வி.க. பொழிவு, அதன் மேல் தாவுகிறது. அதனை ஆலமாகக் கருதுகிறது.

"உலகம் இப்பொழுது எப்படி இருக்கிறது? எக்காட்சி வழங்குகிறது? அந்தோ! பொல்லாக் காட்சி! உலகம் குண்டு - குண்டு - மயமாயிருக்கிறது. எங்கே குண்டு இல்லை? குண்டு இல்லாத இடமுண்டோ? நிலத்திலே குண்டு! நீரிலே குண்டு! வானிலே குண்டு! எங்கும் எங்கும் குண்டு! குண்டுமழை! குண்டு வெள்ளம்! உலகம் எரிகிறது! ஆலகாலம் பொங்குகிறது!" என்கிறார்.

குரோசிமா நாகசாகி குண்டுக்கு இரையாகாத காலம்! ஆம்! அணுக்குண்டு அறியாக் காலம்! ஆனால் அதன்பின் அறுபான் ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் பொங்கும் குண்டு ஆலகாலத்தை அவர் இருந்து கண்டிருந்தால்! நாம காணவைத்து அமுதம் நாடிச் சென்றுவிட்டார்!

ஆல அமுதக் கதையை - புராணத்தை - அறிவுக் கண் கொண்டு திரு.வி.க. பார்க்கிறார். அப்படி எவர் பார்த்தார்; பார்த்ததையும் பாராத கண்மூடிக் கதையர் கண்ணையா திறப்பர்! பிறர் எவ்வகையாலும் கண்ணைத் திறந்து விடக் கூடாது என்று கட்டுக் கோப்பாகக் கண்ணை மூடிக்கொண்டிருப்பவர் அல்லரோ அவர்! எந்த அருச்சகராவது- புராணப் பொழிவராவது - திரு.வி.க.வின் இத்தெள்ளுரையைக் கொள்பவர் ஆவரோ?

"இக் (கதைக்) கூற்றின் உள்ளுறை என்ன? மனிதர் எவ்வாறோ பாவம் செய்வோராகிறார். பாவம் ஆலமாய் அவரை எரிக்கிறது. எளிய மனிதர் மனம் திரும்பித் தம் குறைகளையும், தவறுதல்களையும் ஆண்டவனை நோக்கி முறையிட்டு அழுகின்றனர். அழுகை - உண்மையான அழுகை - ஆண்டவனைப் பாவமாகிய ஆலத்தை ஏற்கச் செய்யும்; அருளமுதத்தைப் பொழியச் செய்யும். ஆல ஒடுக்கத்துக்கும் அமுத எழுச்சிக்கும் மனம் திரும்புதலும் முறையீடும் அழுகையும் தேவை. இவ்வழுகையில் கூர்ந்து விளங்குவது சமய உண்மை" என்கிறார்.

சமதர்மம் என்னும் பொதுவுடைமையையும் சமயக்கண் கொண்டு பார்க்கிறார் திரு.வி.க. "சமதர்மம் எற்றுக்கு? எல்லார்க்கும் பொதுவில் நடமிடும் செம்பொருளை உணர்தற்கு என்று அறுதியிட்டுக் கூறலாம். அவ்வுணர்வுக்குப் பயன்படாத சமதர்மம் உலகாயதமாகும். இது பற்றியே யான் சமதர்மத்தைச் சன்மார்க்க முற்ற சமதர்மம் என்றும், சன்மார்க்கம் அற்ற சமதர்மம் என்றும் சொல்வது வழக்கம். சன்மார்க்க மற்ற சமதர்மம் ஓரளவில் புற அமைதியைக் காப்ப

தாகும். வாழ்க்கைக்குப் புற அமைதி மட்டும் போதாது. அதற்கு அக அமைதியும் வேண்டும். அகஅமைதிக்குச் சன்மார்க்க முற்ற சமதர்மம் தேவை" என்கிறார்.

காலப்போக்கு மாற்றத்தை எண்ணி மகிழ்கிறார். அம்மகிழ்வு கொள்ளும் வகையில் காலப் போக்கு மாறியதா? நினைத்துப் பார்க்க அவர் உரை அளவு கோலாம்.

"காலப்போக்கு இனிச் சாம்ராஜ்யங்களும் மடங்களும் பிறவும் தங்கள் ஆட்சியைச் செலுத்த விடுதல் அரிது. காலப்போக்கு மாறிவிட்டது. சாம்ராஜ்யங்களெல்லாம் சமதர்ம ராஜ்யங்களாகும் காலம் இது. மடங்களும் பிறவும் மாறுதல் அடையும் காலம் இது. பலதிறச் சீர்திருத்த இயக்கங்கள் ஆங்காங்கே தோன்றி ஆக்கம் பெற்றுப் பரவிவரும் காலம் இது. கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகும் காலம் இது. புறக்கோலங்களே சமயம் என்று போற்றாத காலம் இது. 'எல்லாரும் ஓர் உயிர்; எல்லாரும் ஓர் குலம்' என்னும் கொள்கை வீறுகொண்டு பெருகி வரும் காலம் இது. இக்காலமா சமயப் பன்மைக்கும் வெறிக்கும் போருக்கும் இடம் தரும்? வருங்காலத்தில் சமயப் போலி ஒழிந்து, சமய உண்மை நிலவும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. உள்ளுவ எல்லாம் உயர் வுள்வோமாக" என்பது அவருரை. திரு.வி.க. இன்றிருந்து இக்காலப் போக்குகளைக் காண்பாரேயானால் இங்கே சொல்லியவாறு மகிழ்ந்திருக்க முடியுமா? அம்மகிழ்வு அண்மையில் தோன்றும் அறிகுறியாவது நமக்குப் புலப்படுகிறதா?

அவ்வாறானால் திரு.வி.க. கூறியது? திரு.வி.க. கூறியது அவரால் அவ்வாறு அல்லாமல் கூற முடியாது! ஏனெனில், உள்ளுவ எல்லாம் உயர்வுள்ளல் என்கிறார் அல்லரோ! அவர் வேட்கை உரைத்ததாகக் கொண்டு, அவர்தம் உள்ளம் மகிழும் பணியை ஒவ்வொருவரும் தம் பொறுப்பாகத் தாங்கிச் செயலாற்றுதல் நம்கடன் எனக் கொள்ளலே சால்பாம்! நம் கடனுமாம்!

இதனையும் அவர் மொழியாலேயே காண்போம்: "மனம் திரும்பலைச் சாற்றினேன்; முறையீட்டை முறையிட்டேன். அழுகையை அழுதேன்; அன்புப் புரட்சியை அறைந்தேன். அப்புரட்சியை நாடோறும் நீங்கள் செய்யலாம்" என்கிறார் அவர். நமக்கு கடமை உண்டு அல்லவோ!

# சன்மார்க்க போதமும் திறவும்

"உலகிலுள்ள மார்க்கங்கள் பலவாகத் தோன்றும். அவைகளின் உள் நுழைந்து ஊன்றி நோக்கின், அவைகள் யாவும் ஒன்றாகவே விளங்கும். அவ்வொன்று சன்மார்க்கம் என்பது." என்னும் முன்னுரை சன்மார்க்கப் பொருளை விளக்கும்.

"சன்மார்க்கத்தில் நின்று நாடு, மொழி, நிறம், வகுப்பு, மதம் முதலியவற்றை நோக்குவோர்க்குப் பிரிவு உணர்வு தோன்றுதல் அரிது. அவர்க்குச் சமரச உணர்வே தோன்றும்" என்று சமரசப் பொருள் விளக்குகிறார். அதனால் சன்மார்க்கம் சமரச சன்மார்க்கம் என்றாயதைத் தெளிவிக்கிறார். 1933 இல் சமரச சன்மார்க்க போதம் எனநூல் இயற்றியதையும் அந்நூலே 'சன்மார்க்க போதம்' எனப் பட்டதையும் குறிக்கிறார். 'சன்மார்க்க போதம்', 'சன்மார்க்கத் திறவு' என்னும் தனித்தனி நூல் 1944இல் பொருளியைபு கருதி இணைக்கப் பட்டு இப்பெயர் கொண்டுள்ளது.

சன்மார்க்க போதம், தோற்றுவாய், சத், மார்க்கம், குருமார், சீர்திருத்தம், சங்கம் இறுவாய் என்னும் ஏழுதலைப்புகளில் இயல் கின்றது.

சன்மார்க்கத் திறவு, தோற்றுவாய், குருமார் விளக்கம், வழிபாடும் அமைப்பும், சமரசமும் சீர்திருத்தமும் என்னும் நான்கு தலைப்புகளில் இயல்கின்றது.

நூல் நிறைவில், "திருவாரூர் வி. கலியாணசுந்தரன், சன்மார்க்க ஊழியன்" எனத் தம்மைப் பதிவு செய்துள்ளார்.

இந்நூல் இரண்டும் பொருளமைதியில் இசைந்து நடப்பவை போலவே நூல் இயலும், நடையிலும், இசைந்து நடப்பன. சிறிதும், பெரிதுமான தொடர்கள் விளக்கங்கள் ஆகியவை எண்ணிக்கை யிட்டு ஒவ்வொரு தலைப்பும் இத்தனை குறிப்புகள் எனக் காணு மாறு அமைந்துள்ளன. இவற்றுள் மார்க்கம் என்பதே விரிவானது. அது, 354 குறிப்புகளையுடையது. அடுத்து சீர்திருத்தம். அது 164 குறிப்புகளைடையது. தம்பட்டறிவு கொண்டே இந்நூலை இயற்று வதாகத் தோற்றுவாயில் கூறுகிறார் திரு. வி. க. (11)

### சன்மார்க்க போதம்

மாறுதல் இல்லாத அறிவு சத். அதற்குக் கருவி கரணங்கள் இல்லை. எல்லாவற்றையும் கடந்த இறைநிலை வழிபாட்டுக்கு

உரியதாகாது. எல்லாவற்றிலும் கலந்த இறைநிலையே வழிபாட்டுக்கு உரியது. இயற்கைக்கும் இறைக்கும் உள்ள தொடர்பு பிரிவற்றது. இயற்கையை அன்னை என்றும் இறையை அப்பன் என்றும் கூறுவது கவிமரபு.

இறை பிறப்பதும் இல்லை; இறப்பதும் இல்லை.

அவதாரம் செய்வோர் குருமாரே ஆவர்.

வீரரைக் குருமார் இனத்தில் சேர்த்தல் மரபாகியது.

குருமார் இறைவழி நிற்பவர்; ஆனால் அவர் இறையல்லர்.

இயற்கையோடியைந்த வாழ்வு நடத்துவோர் ஆத்திகர்; அவ்வாழ்வு நடத்தாது வேறு வழியில் செல்வோர் நாத்திகர்.

இயற்கையோடு இயைந்து வாழ்வது என்பதும் இறையோடு இயைந்து வாழ்வது என்பதும் ஒன்றே.

துறவு என்பது செயற்கைக் குணத்தை நீப்பது.

உடல் இறை கோயில். அதை நோய்க்குடில் ஆக்குவது தவறு.

நல்லுடலுக்கு அறிகுறி மலச்சிக்கல் இன்மை.

மலச்சிக்கல் போக்கும் பேராற்றல் நோன்புக்கு உண்டு.

நாட்டின் உயிர்ப்பு காடு.

பசுமைக் காட்சி வழங்கா ஊர் பாழ்.

மொழி பெயர்ப்பில் காவிய இன்பம் நுகர்தல் இயலாது.

காவிய இன்பத்திற்குத் தாய்மொழிப் பயிற்சி இன்றியமையாதது.

பெண்மையினின்றும் தாய்மையும், தாய்மையினின்று இறைமையும் மலர்கின்றன.

இயற்கையின் விளைவை எல்லார்க்கும் பொதுமையில் பயன்படுத்துவது இயற்கை அரசு.

உயிரில் எவ்வித வேற்றுமையும் இல்லை.

புரோகிதர் குருமார் அல்லர்.

புரோகித மதங்கட்கும் கடவுள் நெறியென்னும் சமயத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

சன்மார்க்கம் மன்பதைக்குப் பொதுவானது; சமயம் என்பது சன்மார்க்கமே. குருநாதன் அருள் கூடாதபோது மனமே குருவாகி வழிகாட்டி மறையும் நிலையும் உண்டு. அற்புதத்தால் மட்டும் ஒருவரைப் பெரியவரென்று எண்ணுதல் தவறு. குருமார்க்கு வழங்கப்படும் பெயர்கள் சில, சில இடங்களில் இறைக்கும் வழங்கப்படுகின்றன. அப்பெயர்களைக் கொண்டு கடவுள் அவதாரக் கதைகள் புனையப்பட்டன.

புரோகிதர் உபதேசம் குருடருக்குக் குருடர் வழி காட்டு வதைப் போன்றது. எச்சீர்திருத்தத்திற்கும் இடம் தராத நாடு சமூகம் முதலியன இயற்கை அன்னையின் மறக்கருணைக்கு ஆளாகி அழிந்து படும். மேல்நாடு அரசியல் வெறியால் கெடுகிறது. கீழ்நாடு மதவெறியால் கெட்டது. ஆங்கே அவ்வெறியும் இங்கே இவ்வெறியும் தணிதல் வேண்டும்.

எண்ணமே மனிதன்.

சீர்திருத்தரிடம் நிந்தனை தலைகாட்டல் ஆகாது.

தொண்டு என்பது முனைப்பில்லா இடத்தில் நிகழ்வது.

நிதியுள்ள இடத்தில் பெரிதும் நீதி இருப்பதில்லை.

சன்மார்க்க ஊழியர்க்குப் பயன்கருதாத தொண்டே வீடுபேறாகத் தோன்றும்.

**சன்மார்க்கத் திறவு**

தனித்த இறைநிலைக்கு எவ்விதக் குறியும் அமைத்தல் கூடாது. குருமாரையும் அவர்தம் போதனைகளையும் ஒன்றாகவே கொள்ளுதல் வேண்டும். புரோகிதத்தால் உலகம் பட்டது போதும்! போதும்!

சன்மார்க்க விளக்கத்துக்கு குருவழிபாடு இன்றியமையாதது. வழிபாடற்ற இறைநிலையைப்பற்றி மன உணர்வினர் மல்லாட வேண்டியதில்லை. வழிபாட்டுக்கு அமைப்பு வேண்டும்.

அமைப்புக்குரிய இடம், இயற்கை வளஞ்செறிந்ததாய் இருத்தல் வேண்டும். தன்னலத்துக்கு மட்டும் செய்யும் எதுவும் வழிபாடாகாது.

சகோதரநேயம் பெருகுவதற்குக் கலப்பு மணம் உடன் உண்ணல் இன்னபிற நற்றுணை செய்யும். பகுத்தறிவு கொண்டு, ஒன்றை ஆராய்ந்து கொள்ளுதற்கோ தள்ளுதற்கோ ஒவ்வொருவர்க்கும் உரிமை உண்டு.

பொருட் பொதுமை கருணையை அடிப்படையாகக் கொண்டது. மதப்பித்து புரோகிதத்தின் பிள்ளை.

தீமையைத் தீமையால் போக்க முயலலாகாது. அம்முயற்சி தீமையையே பெருக்கும்.

பகைமை அறத் தம்மைப் பண்படுத்திக் கொள்ளாதவர் சீர்திருத்தத் தொண்டில் இறங்குதல் ஆகாது.

- சன்மார்க்க போதமும் திறவும் 'வாழ்வியல் அறநூல்' எனத்தக்கது. அவற்றில் திரட்டிய சிறுதிரட்டு முன்னே சொல்லப் பட்டவை; பன்னூற் பிழிவுச் செய்திகள் இவை.

# சமரச தீபம்

*தீபம் - விளக்கு; விளக்கும் நூல். சமயப் பொதுமையை விளக்கும் நூல் சமரச தீபம் எனப்பட்டது.*

*சால்பிலே ஓங்கும் ஒருவர் பார்வையில், சமரசம், சன்மார்க்கம், பொதுமை, ஒப்புரவு என்பவையே விளங்கும். திரு.வி.க. சால்பர்; ஆதலால் அவர் பொழிவும், எழுத்தும், வாழ்வும், தொண்டும் எல்லாம் எல்லாம் பொதுமை மணம் கமழ்வராகவே திகழ்ந்தன.*

*மாயவரத்தில் (மயிலாடுதுறையில்) கூடிய சமரச சன்மார்க்க மாநாட்டில் திரு.வி.க. பொழிந்த தலைமையுரையே சமரச தீபம். இதன் முன்னுரை சுயமரியாதை இயக்கத் தோற்றத்தின் வரலாறு கொண்டு சிறக்கிறது. நட்பின் நயன் விளக்கம் பெறுகின்றது. மறத்துறைகளை வீழ்த்தி அறத்துறைகளை நிலைபெறுத்தது சமரச சன்மார்க்கம் ஒன்றே எனப் பொழிவைத் தொடங்குகிறார்.*

*உடல் உறுப்புகள் பன்மை; உடல் ஒன்று; மரம் செடி கொடி பன்மை; காடு ஒன்று. ஆதலால் பன்மையில் ஒருமை காணவேண்டும் என்கிறார். சமரச அடிப்படை பன்மையில் ஒருமைகாணல் எனத் தெளிவிக்கிறார். வேற்றுமை இடையே ஒற்றுமை காணல் இன்பம் என்று உலகியல் ஒருமையுற வழிகாட்டுகிறார்.*

*இயற்கையோடு இயைந்த வாழ்வு உலகியல் நடைமுறைக்கு நான்குதுறையும், கடவுள் நெறிக்கு நான்கு துறையும்கொண்டது என்பதைச் சுட்டிக் காட்டி விளக்குகிறார். முதற்பிரிவு, மக்கள் தொழிலாளர், வணிகர், அரசினர், பார்ப்பனர் (ஆசிரியர்) என்றும், அடுத்த பிரிவு கல்வி, இல்வாழ்வு, அறம் வளர்ப்பது. விடுதலைப் பேறு என்னும் பிரித்துக் காட்டுகிறார். இவ்விருவகையிலும் நேர்ந்த வீழ்ச்சியும் கேடுகளுமே நாட்டைக்குலைத்தமையை விளக்குகிறார்.*

*நாம், நிகழ்ந்துள்ள கேடுகளை அகற்றுதற்குப் பாடுபட வேண்டிய துறைகள் எவை என்பதை நிறைவில் விளக்குகிறார். அவர் இவர் என்னாமல் எல்லாரும் பாடுபடுதல், பெண்ணலன் காத்தல், பிறப்பால் சாதிகருதாமை, தீண்டாமை விலக்கல், கோயில் திருத்தம் பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்கு நீக்கம் என்று நாம் செய்ய வேண்டும் கடமைகளை வற்புறுத்துகிறார். அதற்கெனச் 'சன்மார்க்க சங்கம்' பற்றி வரைகிறார்.*

“கடவுள் பிள்ளைகள் அனைவரும் சன்மார்க்க உறுப்பினர்” என்றும், உறுப்பினர் கட்டணம், உயிர்களிடத்துச் செலுத்தும் அருள் என்றும் கூறுவது அருமை மிக்கதாம். வீடுதோறும் சங்கம் அமைக்கலாம். சங்கத்திற்கெனத் தனிநிதி சேர்த்தலாகாது என்று கூறும் திரு.வி.க. “பெருநிதியால் இக்கால மடங்களும் கோயில்களும் பேயுறையும் இருட்குகைகளாக மாறிய தொன்றே நமக்கு எடுத்துக் காட்டு என்கிறார்.

வள்ளலார் அறிவுறுத்தும் சன்மார்க்க நெறியை அவர் கூறும் பாடல்களைக் காட்டி அச்சங்கத்தில் சேர அழைக்கிறார்.

***“மார்க்கமெலாம் ஒன்றாகும் மாநிலத்தீர் வாய்மையிது***
***தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே - ஏக்கம் விட்டுச்***
***சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்***
***நன்மார்க்கம் சேர்வீர்இந் நாள்”***

என அமைகிறார்.

# சித்தமார்க்கம்

“உள்ளொளிக்கென்று பண்டை மக்கள் கடைப்பிடித் தொழுகிய மார்க்கம் சித்தமார்க்கம்” என்றும், “சித்த மார்க்கத்தில் புகுவார்களாயின், அவர்களிடை, ஒருதெய்வ வழிபாடு சமரச நோக்கு சகோதர நேயம் முதலிய நல்லியல்புகள் நிலவுதல் ஒருதலை” என்றும் முன்னுரையில் திரு.வி.க. கூறுவது இச்சுவடியின் உட்கிடையை உணர்த்தும். சித்தமார்க்கம் பற்றி உரையாற்றிய இடம் திருவதிகை ஆதலின் தென்னார்க்காடு மாவட்டப் பெருமையும், திருவதிகையில் திருத்தொண்டாற்றிய திலகவதியார் பெருமையும் விரித்துரைக்கப் படுகின்றன.

“திருவதிகை நினைவு தோன்றும் போது நமது சைவச் செல்வம் - தவவிளக்கு - திலகவதியார் நினைவும் தோன்றுகிறது. திலகவதியாரை நினைப்போமாக.

அனைத்துயிர்க்கும் தாங்கிய அருளினின்றும் மலர்ந்த சிவப் பொலிவும், தவக் கோலமும், திருவலகும், திருமெழுக்குத் தோண்டியும் கொண்ட ஓர் அற்புதத் தெய்வ வடிவம் புலனாகிறது. அத்தெய்வ வடிவை உன்னுவோம்; வாழ்த்துவோம்; வணங்குவோம்.

திலகவதியாரது ‘தயா’ அன்றோ அப்பர் அருந்தமிழாகி நமக்குத் துணை செய்கிறது. அவர்தம் வேண்டுதலன்றோ ஆண்டவன் அருளாய் அப்பரை ஆண்டது? அம்மையார் உள்ளொளித் திறத்தை என்னென்று கூறுவது? ஒரு பெண் தெய்வத்தின் வேண்டுதல் எவ்வளவு காரியங்களை நிகழ்த்தியது! பெண்மையின் பெருமை என்னே! என்னே!” என்று அவர் கூறும்போது அவர் இயற்றிய ‘பெண்ணின் பெருமை’ நம் கண்முன் களிநடம் செய்கின்றது!

அம்மட்டோ! திலகவதியார் திருத்தொண்டின் மேற் கொண்ட பேரன்பு அல்லவோ திரு.வி.க. தம் மகளார்க்குத் ‘திலகவதி’ என்னும் பெயர் சூட்டிப் பேருவகை கொள்ள வைத்தது!

சைவம் வேறு; சித்தாந்தம் வேறு என இரண்டு இல்லை. சித்தாந்தமே சைவம்; சைவமே சித்தாந்தம் என்பதை விளக்கி, சித்தாந்தம் என்பது ‘சித்தர் கண்ட முடிவு’ எனத் தெளிவிக்கிறார்.

உலகில் காணும் சமயங்கள் யாவும் சித்தமார்க்கம் என்னும் ஒன்றினின்று பிறந்தனவே என்கிறார்.

சித்தன் என்னும் சொல்லுக்கு உலகில் வழங்கும் பெயர்கள் நந்தி, நாதன், அருகன், புத்தன், குமரன், தீர்த்தங்கரன், தீர்க்கதரிசி, கிறிஸ்து, நபி, குரு, ஆசாரியன் முதலியன. இப்பெயர் வேற்றுமையைக் கருதாது, பொருள் ஒற்றுமையில் கருத்துச் செலுத்துவது சிறப்பு என்று சித்தமார்க்கப் பொதுமையைப் புகல்கிறார்.

சித்தாந்தம் எவருடைமை? என வினாவி, "சித்தாந்தம் இன்னாருடைமை என்று யாண்டாயினும் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? அதனை ஓம்பவந்த பெரியோர் அனைவரும் அதனை உலகுக்குரிய பொதுவுடைமை என்றே வலியுறுத்திச் சென்றனர்" என்கிறார்.

"உரிமை நமது உயிர்"

"சமரச நோக்கு, உரிமை உணர்வின் சேய்"

" சாதி முதலிய பேய்கள் தலைவிரித்தாடிய போது, நாயன் மார்கள் தோன்றி அப்பேய்களை ஓட்ட முயன்றார்கள்.

"மனிதரை மனிதராகப் பாவியாத இடத்தில் சிவனருள் எங்ஙனம் நிலவும்?"

"சமரச நோக்கு வளர வளரப் பிறர்க்குழைக்கும் பேறு கிடைக்கும். பிறர்க்குழைப்பதன்றோ பிறவிப் பயன்?"

"தன்னிலும் பிற உயிரிலும் உள்ளது சிவம் என்று உணரும் எவனும், தன்னைப் போலவே பிறவுயிரையும் கருதுவன்; எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யான்; நலமே செய்வன்."

"நாம் தமிழர்கள்; தமிழ்மொழியிலும் மறைகள் பிறந்துள்ளன. அவைகளிற் கலந்து பொருளுணர்ந்து ஓதினால் கன்னெஞ்சும் கரைந்துருகும். உருகுஞ் செயல் முதிர முதிர உள்ளொளி பெருகும். உருகுஞ் செயலும் உள்ளொளிப் பெருக்கத்திற்குத் துணை செய்யும்"

இக்கீற்றுகளின் மின்னொளியே சித்தமார்க்கமாய்ச் சிறக்கின்றது.

சித்தமார்க்கம் வெளிவந்தது 12.11.1935.

# பரம்பொருள் அல்லது வாழ்க்கைவழி

***'பரம்பொருளே வாழ்க்கை வழி, வாழ்க்கைவழியே பரம்பொருள்'*** என்னும் ஒருமை சுட்டும் நூல் இது.

'இந்நூலில் இன்னது கூறுவேன்' என்றும், 'இவ்வியலில் இன்னது கூறுவேன்' என்றும் முதற்கண்கூறி, கூறிய வரன்முறையில் நூலையும் இயலையும் கொண்டு செல்லுதல் நூன்முறையாம். இதனைத் தொல்காப்பியத்தில் காணலாம். சிலம்பு, மேகலை, சிந்தாமணி முதலிய பதிகங்களும் இந்நெறியில் இயங்குவனவே.

"இந்நூற்கண் - மனித இயற்கை, அமைதி, அமைதி வீழ்ச்சி . . . . அமைதி உலகம், புது உலகம், முன்னோர் உரைகள் முதலிய பொருள்கள் ஓதப்பட்டுள்ளன" என்னும் முன்னுரைப்பகுதி இவ்வழிப்பட்டதாம்.

திரு.வி.க.வின் பொழிவு, பொழிவின் நிறைவில் "இதுகாறும் இவை இவை கூறப்பட்டன" என நிறைதல் வழக்கம்.

இவ்விரு முறைகளையும் நூல் செய்வாரும், பொழிவு செய்வாரும் மேற்கொள்ளல் நல்ல நெறி முறையாகும். திருவி.க. சொல்லி எழுதப் பட்ட நூல்களுள் இதுவும் ஒன்று. "எழுதியதை நண்பகலில் ஞாயிற்றொளி நன்கு படரும் இடத்தில் அமர்ந்து எனது இடக்கண் காலும் சிற்றொளித் துணையால் பார்வை யிட்டுப் பார்வையிட்டுச் சில கூட்டல் - கழித்தல் - திருத்தல் முதலியன செய்தேன்" என்பதால், அவர்தம் எழுத்துத் தொண்டின் அழுந்திய நோக்கு நன்கு புலப்படும். ***'இருளில் ஒளி'*** முதலிய நூல்கள் இவ்விடரொடு வெளிப் பட்டவையேயாம்.

எடுத்த பொருளை விரித்துக் கூறவேண்டும் அளவால் கூறிய தாக நமக்குத் தோன்றினும், "இந்நூலை **ஒருகுறிப்புத் திரட்டு** என்றே சொல்வேன்" என்பதால், இன்னும் விரிவுடன் வரையவே எண்ணினார் என்பது விளங்கும். முதற்பதிப்பு 1949 இல் வெளி வந்தது.

"உலகம் அமைதியை விரும்புகிறது. மனித இயற்கை அமைதி" என்று நூலைத் தோற்றுவாய் செய்கிறார். தாம் எடுத்துக்கொண்ட பொருள், கருத்து வேற்றுமைக்கு உரியது என்பதைத் தாமே உணர்ந்து கற்பார்க்குத் தெளிவூட்டும் வகையில்,

'கருத்து வேற்றுமை இன்றியமையாதது. அதை எழுப்புவது இயற்கை. கருத்து வேற்றுமை இயற்கையின் பாற்பட்டது; அதற்கு

மாறுபட்டதன்று. அவ்வேற்றுமை அறிவை விளக்கும்; வாழ்க்கையை வளர்க்கும்; அமைதியை நிலை பெறுத்தும்; சமூகத்தைப் பெருக்கும்; நாட்டைப் பேணும்; உலகை ஓம்பும்" என்கிறார்.

'அஃறிணையின் அமைதி என்னே' என வியக்கும் திரு.வி.க., 'ஆதிமனிதன் வாழ்விலும் அமைதி' நிலவியதை உரைத்து, இந்நாளில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு அமைதி குன்றி விட்டது.எஞ்சி நிற்பது பத்தே, பத்து! என இரங்குகிறார்.

"பத்து, நூறு ஆகுமோ?" என வினாவி, "ஆகும்! அமைதியை நினைக்க; பேசுக; எழுதுக. எல்லாம் ஆகும்" என்கிறார்.

"அமைதி குறைந்து வரும் உலகம் அமைதி நிறை உலகமாமோ?" என்று எழும் ஐயம் அகற்றும் வகையால், வித்தில் இருந்து மீண்டும் வித்து உண்டாவதை எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

பிறப்பு வழி அநுபவம், கல்விவழி அநுபவம், இயக்கவழி அநுபவம், சமயவழி அநுபவம், வேறுபல அநுபவம் ஆகிய எல்லாம் கூடிய அநுபவத்தால் 'வாழ்க்கைப்பேறு அமைதி' என்னும் உண்மை புலப்பட்டது என்றும், அமைதியை அடைவதற்குரிய வழி தியானம் என்றும் கூறும் திரு.வி.க., "தியானம் மனிதனைத் தெய்வ மாக்கும் - அமைதித் தெய்வம் ஆக்கும்" என்கிறார்.

தியானத்திற்குரிய கொழுகொம்பு மனத்தைப் பண்படுத்து வதாய், அன்பை விளைப்பதாய், அமைதியை ஊட்டுவதாய் இருத்தல் வேண்டும். அத்தகைய பொருள் ஒன்று உண்டா? உண்டு. அஃது எது? அதுவே **பரம்பொருள்; வாழ்க்கை வழி** என்கிறார்.

பொருள், வழிபாடு, சேர்க்கை, வாழ்க்கை வழி, புரட்சி, பெருவாழ்வு என ஆறுபகுப்பில் நூலை விரிக்கும் திரு.வி.க., தோற்றுவாய், இறுவாய் என்று முன்னும் பின்னும் கொண்டு நூலை எண்பகுப்பாக்குகிறார்.

"பொருள், மாறுதல் அடைவது ஒன்று; மாறுதல் அடையாதது மற்றொன்று; முன்னது சடம்; பின்னது சித்,, முன்னது அறிவு இல்லாதது; பின்னது அறிவுள்ளது; **அறிவுப் பொருளே பரம்பொருள்**" என்கிறார்.

"ஞாயிறும் கோள்களும் சுழல்கின்றன. ஒன்றற்கும் ஒன்றற்கும் உள்ள தொடர்பு சுழற்சியை நிகழ்த்துகிறது. இந் நிகழ்ச்சிக்கு அடிப்படை ஒன்று இருத்தல் வேண்டும். அவ் வொன்று சுழற்சியற்றதாய் இருத்தல் வேண்டும். அது பரம்பொருள்" என்கிறார்.

பரம்பொருள் பாழ் - சூந்யம்; சூந்யம் உள்பொருள். பாழ் மனத்துக்கு எட்டாதது; வாக்குக்கு எட்டாதது; அண்ட பிண்ட சராசரங்களுக்கெல்லாம் மூலமாய் முதலாய் இருப்பது. எல்லா வற்றுக்கும் தாய்மைப் பீடம் அது. அதன் ஆற்றலைச் சொல்வதற்குச் சொல் இல்லை. அப் பாழ் - சூந்யம் - பரம் பொருள் எனப்படுகிறது.

*பரம்பொருள் இயற்கையைத் தன் உடலாகவும், தன்னை உயிராகவும் கொண்டது. " பரமும் இயற்கையும் வேறாகத் தோன்றும்; கலப்பாகவும் தோன்றும்; ஒன்றாகவும் தோன்றும் இம்மூன்றும் அறிஞரால் - பேரறிஞரால் - காணப் பெற்றவை" என்று கூறிப் பொருட்பகுதியை நிறைக்கிறார். இந்நூலுடன்* **உள்ளொளி** *நூலையும் கற்குமாறு தூண்டுகிறார்.*

*"ஒருவன் தன்னை வழிப்படுத்துவது வழிபாடு" என்று பொருள் கூறும் திரு.வி.க., " இயற்கை பரம்பொருளின் உடல்; பரம்பொருள் உயிர். உடற்கருவி கொண்டே உயிருண்மை காண்டல் வேண்டும். இயற்கை உடலை வழிபட்டால், அஃது உயிராகிய பரத்தில் சேரும் எனக்கூறி, உடலை ஓம்புவதும் ஒருவித வழிபாடு என்று எனது அறிவு எனக்கு உணர்த்துகிறது" என்கிறார்.*

*காலையில் எழுதல், கடன்களை முடித்தல், காற்றில் உலவல், ஞாயிற்றொளியில் மூழ்கல், நீரில் ஆடல், செபம் செய்தல், பொருந்திய உணவருந்தல், நற்றொழில் புரிதல், காவிய ஓவியங்களோடு உறவு கொள்ளல், ஆடல் பாடல்களில் ஈடுபடல், வேளையில் உறங்கி எழல் முதலியன உடலை நன்முறையில் ஓம்பும். மலச்சிக்கல் உறாதவாறு காப்பதும் உடலை வழிபடுவதாகும் என்னும் திரு.வி.க.,* **வழிபாடு** *என்னும் பகுதியில் சில கருத்துமணிகளைப் பொறிக்கிறார்.*

*"பரம்பொருளின் கோயில்களைச் சாய்ப்பதற்கென்று துப்பாக்கி, பீரங்கி, குண்டு முதலிய கொலைக்கருவிகள் வடிக்கப் படுகின்றன."*

*"வறுமையும் அறியாமையும் மலிவதற்குத் தலையாய காரணம் தேவைக்கு மேல் பொருள் ஈட்டிக் களியாட்டயர ஆசைப்படுதல்."*

*"குடும்பம் ஒரு கோயில். ஒவ்வொரு குடும்பமும் அன்புக் கோயிலானால் உலகம் அமைதி வண்ணமாகும்."*

*"அமெரிக்க அணுகுண்டு ஜப்பானில் இரண்டோர் இடத்தை எரித்தது. பத்திரிக்கை எழுத்துக் குண்டோ உலகையே எரிக்கிறது."*

*"பேசும் மனிதன் ஓவியமானால், பேசா ஓவியம் பேசும் போலும்."*

*"நோய் போக்கும் சக்தி ஓவியத் தியானத்துக்கு உண்டு"*

*"சமயங்களின் சமரசத்தைத் தெளியச் செய்வது தொண்டு நெறி."*

*"உயிர்த் தொண்டு செய்யப் புகுவோர் முதலில் தம்மைத் தொண்டராக்கிக் கொள்வது நல்லது."*

*"வழிபாட்டு முறைகளை நம்முன்னோர் முத்திறமாகப் பிரித்துள்ளனர். முதலாவது பரம்பொருளையே புகழ்ந்து நிற்பது; இரண்டாவது குறைபாடுகளை முறையிட்டு முறையிட்டு அழுது அழுது மன்னிக்குமாறு பரத்தை வேண்டுவது; மூன்றாவது தன்னலம்*

கருதி கோயிலுக்குப் போவது. இம் மூன்றும் முறையே உத்தமம், மத்திமம், அதமம் என்று முதியோரால் சொல்லப்பட்டன"

"சேர்க்கை வழிபாடு செகத்தையே ஒன்றுபடுத்தும்" என்பவை சில.

சேர்க்கைப் பகுதியில், "சேர்க்கை இயற்கை" "சேர்க்கை செறியாத இடமில்லை"; "பிரிவை நினையாதே; சேர்க்கையை நினை; நீ வாழ்வாய்; உலகமும் வாழும்" " சேர்க்கை இன்றி உலகம் நிலவாது; வாழாது" , "உலகை ஒரு குலக் குடும்பமாக்கத் திருவள்ளுவர் காட்டியது காதல் வழி. காதல் இயற்கைச் சேர்க்கை;பிரிவன்று; "நீ அணிந்துள்ள ஒரு கோவணம். இத்தனைபேர் துணையைப் பெற்றிருக் கிறது! அஃது உலகச் சேர்க்கையைப் பெற்றிருக்கிறதா? இல்லையா? ஆதலின் சேர்க்கை இன்றி உலகில் எவரும் வாழ்தல் இயலாது" என்பவற்றை நிரலே விளக்குகிறார்.

இலெளகிகம் (உலகியம்) வைதிகம் என்னும் வாழ்க்கை வழியை ஆய்கிறார். "வெறும் இலெளகிகம் உலகாயதம்;வெறும் வைதிகம் ஆன்மார்த்தம். வாழ்க்கைக்கு இரண்டும் வேண்டும். இரண்டில் ஒன்று உயர்ந்ததுமன்று; மற்றொன்று தாழ்ந்ததுமன்று" என்கிறார்.

எனது ஆராய்ச்சியிலும் சிந்தனையிலும், "வாழ்க்கை, தொடக்கமும் முடிவும் இல்லாதது என்பதும், அது தொடர்ந்து தொடர்ந்து செல்வது என்பதும் படிப்படியே விளங்கின. கடவுள் உயிர் உலகம் ஆகிய இம்மூன்றும் தொடக்கம் முடிவு இல்லாதன. இவற்றால் மலரும் வாழ்க்கையும், தொடக்கம் முடிவு இல்லாதது" என்று கூறுதற்கு இடமுண்டு.

"வாழ்க்கையை நடத்துவது பரம்பொருள் என்னும் உணர்வுடன் நடப்பது நேரிய வழி. அவ்வுணர்வு அற்று நடப்பது வேறு வழி. 'வாழ்க்கை வழி பரம்பொருள்' என்பது நல்லுணர்வு அல்லது மெய்யுணர்வு என்றும்,'வாழ்க்கை வழி என்னுடையது' என்று நினைப்பது தீய உணர்வு அல்லது பொய்யுணர்வு என்றும் குறிக்கும் அளவில் இங்கே நின்று விடுகிறேன்." என்கிறார். "பரம்பொருள் என்வாழ்க்கையை நடாத்துகிறது அதுவே வாழ்க்கை வழி என்னும் உறுதியில் நின்று வாழ்பவனே பாரமார்த்தகன். பாரமார்த்திகம் தன்னலத்தைச் சிதைத்துப் பரநலத்தைக் காக்கும் பண்புடையது. இதற்குக் காரணம் என்னை? பாரமார்த்திகம் எல்லா உயிரிடத்தும் பரம்பொருள் இருப்பதை உணர்த்துவது." பரத்தினிடம் நம்பிக்கை உடையாரை அணுகுண்டோ பிறவோ என் செய்யும்?

குழந்தை பிறக்கும்போது மடமை - அறியாமை - உடைய தாகப் பிறக்கிறது; பின்னர் அது வளர்கிறது; அறிவு ஆராய்ச்சித் துறையை அடைகிறது; அடைந்து இறுதியில் அறியாமையை

அணைகிறது. அணையாவிடின் ஆராய்ச்சியால் விளையத் தக்க பயன் விளையாது. அல்லல் விளையினும் விளையும்.

"முதல் மடமை அஞ்ஞானம்; இறுதி மடமை மெய்ஞ் ஞானம்; இந்த மடமையாகிய மெய்ஞ்ஞானம் பெற்றவரே சான்றோர் - ஆன்றோர் - பெரியோர் என்று போற்றப்படுகின்றனர். இவற்றை என் அநுபவ ஊற்றினின்றும் பொங்குவது என்று நேயர்கட்கு வணக்கத்துடன் அறிவிக்கிறேன்" என்பது திரு.வி.க. கூறும் வாழ்க்கை வழித் தொகுப் பாகும்.

"புரட்சி இயற்கை நெறிக்கு அரண் செய்வது" என்னும் திருவிக, "குறைபாடுகள் உள்ளவரை புரட்சியும் நிகழ்ந்து கொண்டிருக்கும்" என்கிறார்.

"மனம் திரும்புதலும் புரட்சியே" என்பவர், புரட்சியை அறப் புரட்சி மறப்புரட்சி எனப்பகுத்து ஆய்கிறார். உணவில், பொருந்திய உணவுப் புரட்சி, உடையில், பொறாமை எழுப்பாப் புரட்சி, மயிர்க்கும் மலர்க்கும் பழமை புரட்சி, வாழ்வில் இனிமைப் புரட்சி, சாதி நிறம் சாராப்புரட்சி, தொண்டுச் சமயப் புரட்சி, காதல் மணப்புரட்சி, அமைதிப் புரட்சி என்பவற்றை விரிவாகக் கூறிப் பெருவாழ்வில் புகுகிறார்.

"உயிர் உரிய காலத்தில் பிரிவது மரணமாகாது" என்கிறார். பரத்தில் படிந்த மனமுடைய மகன் 'பரம்பொருள் வாழ்க்கை வழி' என்று உணர்ந்து நடப்பன். அவனை மரணம் அணுகாது; அவன் வாழ்வு பெருவாழ்வு - மரணமிலாப் பெருவாழ்வு என்பதை விளக்கி இறுவாய் வரைகிறார்.

தோழர்களே என விளிக்கும் திருவி.க. தோழமைப் பொதுமையை விளக்கி உரைக்கிறார்.

"தோழமை உயர்வு தாழ்வு அற்றது; பெண் ஆண் வேற்றுமை அற்றது; எல்லா உயிரிலும் ஒரு பொருள் பொதுமையில் சேர்ந்திருப்பதை உணர்த்துவது; இவ்வுணர்வில் எல்லா உயிரும் சகோதரம் என்பதை விளங்கச் செய்வது. இத் தோழமை வளர வளர உலகிலுள்ள பலவிதக் குறைபாடுகள் குலையும். உலகம் விடுதலை பெறும்" என்கிறார்.

இதுகாறும் பொது உலகம் பூக்கவில்லை; இனிப் பூக்கும் அதுவே புது உலகம். புது உலகைக் காண எழுக! எழுக! என நூலை நிறைவுறுத்துகிறார்.

மாந்தர், பரம்பொருள் இயல்புணர்ந்து, அப்பொருளாகத் தாம் மாறித் தம் வாழ்க்கை வழியை அமைத்து, எல்லா உயிரும் இன்புற்றிருக்க வாழும் வாழ்வே, **'பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி'** எனச் சுருங்க உரைக்கலாம்.

# உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்

*நாட்டுப்பற்று, உரிமை வேட்கையே உயிர் எனக் கொள்ளும். விடுதலை வேட்கை அடிமைப்பட்டுக் கிடக்க விடாது. மூச்சும் விடுதலை, பேச்சும் விடுதலை, செயலும் விடுதலை எனக்கிளரும். வேட்கை உரையாய்க் கிளர்வதிலும் பாட்டாய் வெடிப்பதே பரப்புதற்கு ஏற்ற கருவியாகிச் சிறக்கும். இவ்வுள்ளீட்டின் வெளிப் பாடு இந்நூல்.*

*விடுதலை வேட்கை வேக்காட்டில் இருந்தாலும் அவ்வேக்காடு பாட்டாகும்போது பொங்கலாகச் சுவைக்கின்றது. " பாட்டென்பது சொல்லடுக்கன்று; அணிச்செறிவன்று; யாப்புக்கட்டுமன்று; இயற்கை யொடு இயைந்த மனத்தினின்றும் விரைந்தெழும் மகிழ்ச்சியின் பொங்கல் பாட்டாகும்" என்னும் திரு.வி.க. முன்னுரையால் பாட்டுப் பொங்கல் விளக்கமுறும்.*

*பாட்டு அமைதியை அருளும் கொடைவள்ளல் என்பது எவ்வளவு பட்டறிவுச் செய்தி. அமைதி குன்றும் மனம், அமைதி குன்றும் நிலையில் இயற்கையே அமைதியூட்டும்; இயற்கைக் காவியமும் ஊட்டும். அங்கேயும் கிட்டாத போது ஒருமைப் படுத்த உறுதுணை யாவது பாட்டு என்றால் பாட்டின் திறம் என்னே என்னே என வியப்பில் ஆழ்த்தும். அந்நிலையில் பிறந்த பாடல்களே இந்நூல் என்கிறார் பாட்டாளர் திரு.வி.க.*

*தம் இதழ்களிலும் நூல்களிலும் வந்த பாடல் திரட்டே இந்நூல் என்கிறார் ஆசிரியர் (1931)*

*வாழ்த்து முதல் வேண்டுதல் ஈறாகப் பதினான்கு தலைப்பு களில் இயல்கிறது இத்தொகை நூல்.*

*விடுதலையையே இறைமை வடிவில் காணும் திரு.வி.க. விடுதலைப் பேற்றை இயற்கை உவமைகளாலேயே காட்டுகின்றார். இறப்பு நேரினும் மறக்கக் கூடாத ஒன்று விடுதலை என்பதைச் சுதந்தரச் சிறப்பாகக் காட்டுகிறார்.*

*பாரதநாடு பற்றிய பாடலை 'குறவஞ்சி' யாப்பிலே இசை பெருகப் பாடுகிறார். பாரத இயற்கைச் சிறப்பும் பண்டு முதல் தம்நாள் வரை வாழ்ந்துள்ள பெருமக்கள் தொண்டுச் சிறப்பும் விரித்துக் கூறும்*

**பெட்டக**மாகத் திகழ்கிறது அது. பொன்னொளி மண்டபம் ஒன்றைக் கற்பனையால் காண்கிறார். அரியணையில் அரசியர் பலர் அமர்ந்துள்ளர். சப்பான், அமெரிக்கா, செர்மன், பிரான்சு முதலாம் அரசியர் இருக்கும் உலகப் பேரவையில் **'என் அன்னை இல்லையே'** என ஏங்குகிறார். 'என் அன்னை எங்கே? எங்கே?' என அவள் சிறப்பெல்லாம் திரட்டிக் கூறி அலமருகிறார். அன்னை தன் நிலையை எடுத்துரைத்து அழுங்குகின்றாள். அவளை அரியணையில் அமரவைக்க நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுகிறார். எண்சீர் விருத்தம் 13 பாடல்களை யுடையது இத்**தாயின் காட்சி.** எண்சீர் விருத்தம் 15 பாடல்களைக் கொண்டது **தமிழ்நாடு**. அதன் இயற்கை எழில், பொருள் வளம், ஆட்சி, அறிவர், வீரம், நூல், உரைவல்லார், அயல்நாட்டார் தமிழ்ப்பணி, பண்பாடு என்பவற்றை அடைவுற அமைத்துப் பாடியது அது.

**'தமிழ்த்தாய்'** இருபத்தேழு கண்ணிகளாய் இயலும் பகுதி.

***'இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடிவெடுத்துச்***
***செயற்கைகடந் தியலிசையில் செய்நடமே வாழியரோ'***

எனத் தொடங்கும் அது, தமிழினிமை உரைத்து,

***"தமிழினைப்போல் இனிமைமொழி சாற்றுதற்கு இல்லை இந்நாள்***
***தமிழரைப்போல் மொழிக்கொலையில் தலைசிறந்தோர் எவருளரே?"***

என வெதும்பி வினாவுகின்றார்.(9)

***'சாதிமதச் சண்டையெலாம் தமிழின்பம் நுகரார்க்கே"***

என்னும் திரு.வி.க. மொழியை மெய்ப்பித்தால் கூடத் தமிழகம் உய்யும் (23) . **சத்தியாக்கிரக விண்ணப்பம்** 24 கண்ணிகளை யுடையது. பஞ்சாப் படுகொலையின் இரண்டாம் ஆண்டு விழாவில் பாடிய பாடல் அது (1921). "பெறவேண்டும் சுய ஆட்சி; பெற வேண்டும் இப்பொழுதே" என்கிறார் (22)

"உலகமெலாம் கலக்குறினும் உறுதிநிலை கலங்காத **திலகமுனி**" இங்கிலாந்துச் செலவு பற்றியது **திலகர் பாட்டு.** கண்ணிகள் 14. இங்கிலாந்து சென்றார் திலகர் என்பதறிந்து பாடிய பதிகம் **இங்கிலாந்தும் திலகரும்.** கலிவிருத்தம். அடுத்தது **திலகர் வாழ்த்து.** கலித்தாழிசை ஒன்றும், அறுசீர் விருத்தம் ஒன்றும், **காந்தி** பற்றிய அகவல் 89 அடிகளால் ஆயது.

"உற்ற யாக்கையின் உறுபயன் யாது?" என வினாவி அதற்கு விடையாக, "இல்லற நல்லறத்து நின்று தனக்கென வாழாத் தன்மையன் ஆய காந்தியின் அடிபற்றிக் கடனாற்றல்" என்கிறார். கலித்தாழிசை ஒன்றும், அறுசீர் விருத்தம் ஒன்றும் ஆகிய இரண்டு

***காந்தி வாழ்த்து***. காந்தியார் பாடும் **'வைணவன் எவன்'** என்னும் பாடல் பொருள் விளக்கம் அப்பெயரால் ஐங்கண்ணிகள் ஆகின்றன. ***சுதந்திரநாமாவளி*** சிந்தடிக் கண்ணி 43 கொண்டது.

***"சாதிப் பேயை ஓட்டுவமே***
***சமநிலை எங்கும் நாட்டுவமே"*** *(21)*
***"இயற்கை நெறியே சன்மார்க்கம்***
***இயைந்தால் அழிவது துன்மார்க்கம்"*** *(23)*
***"வாழ்க உலகம் அன்பினிலே***
***வளர்க என்றும் இன்பினிலே"*** *(43)*

எல்லாக் கண்ணிகளும் இயைபு கொண்டவை. **'வேண்டுதல்'** எண்சீர் விருத்தம் ஐந்து கொண்டது.

நாட்டுக்கு வேண்டும் நலங்களை எல்லாம் திரட்டி, **வள்ளலார்** 'அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்' என்று வேண்டிய யாப்புரவில் அமைந்த **ஐந்தகம்** இது.

# முருகன் அருள் வேட்டல்

"இயற்கை வழிபாடு முருகன் அருள் வேட்டலை எழுப்பிற்று" என்னும் திரு.வி.க. 'முருகன் அல்லது அழகு' என்னும் தம்நூலில் விரிய, விரிய விளக்கியுள்ளார். இயற்கையைக் கொண்டே இறையாம் முருகனை உணர்தல் கூடும். "இயற்கையும் முருகனும் பிரிவின்றி இயைந்து நிற்கும் அழகை என்னென்று கூறுவது?" என்று வியப்புறு கிறார் திரு.வி.க.

இந்நூல் 'பாட்டு வழிபாட்டு நூல்' என்பதை முன்னுரையில் குறிப்பிடும் திரு.வி.க. "வாக்கு மனங்கட்கு எட்டாத ஒரு பொருளை நினைப்பதற்கும் வாழ்த்துதற்கும் வணங்குதற்கும் கோயில்கள் துணைக்கருவிகளாக நின்று வருகின்றன" என்று தம்நூல் இயங்கு நிலை முறைமையைச் சுட்டுகிறார்.

திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், கதிர்காமம், கழுகுமலை, குன்றக்குடி, சென்னிமலை, திருச்செங்கோடு, வேளூர், திருமயிலம், திருப்போரூர், இளையனார் வேலூர், குமரகோட்டம், திருத்தணிகை, கந்தமாதனம், பொது, காத்தல், வாழ்த்து என்னும் தலைப்புகளில் நடையிடும் இந்நூல் 1932 இல் முதற்பதிப்புக் கண்டது.

அகவல் வெண்பா தாழிசை கட்டளைக் கலித்துறை விருத்தம் என்னும் யாப்புகளில் நூல் நடையிடுகின்றது. அகவல் அன்றி மற்றவை பதிகங்களாக அமைகின்றன. காத்தல் நான்கும், வாழ்த்து ஒன்றுமாக ஐந்து பாடல்கள். காத்தலில் இரண்டாம் பாடல் பதிப்புப்பிழையுற்றுள்ளது.

திருச்செந்தூர் அகவலில் "செந்திலோ நின்னிடம்? சிந்தையோ நின்னிடம்?" என அருமையாக வினாவித் தொடங்குகிறார். "சிந்தையில் நீங்காச் செந்தமிழ்ச் செந்திவாழ்" வாய்ப்பாடலை முடிக்கிறார்.

திருப்பரங்குன்றப் பதிகத்தில் "குன்றெறிந்த கோமானே! குற்றமுடைச் சாதிநெறி என்றெறிந்தின்பருள்வாய் இங்கு" என்று காலத்தால் எறிய வேண்டியதை வேண்டுகிறார். பதிகமுழுவதும் அக்குன்றச் சூழல் படம் பிடித்துக் காட்டப் பட்டுள்ளது. மேலும்,

***"தீண்டாமை எண்ணுநெஞ்சம் தீண்டுமோ நின்னடியைத்***
***தீண்டாமை மன்பதைக்கே தீட்டு"***

என்பவை முரண்நயம் மட்டுமா? முரண்டர் மனம் மாறுதல் இல்லையே! என்னும் வேக்காட்டின் வெளிப்பாடு அல்லவோ!

பழமுதிர்சோலையின் பெயர் என்ன செய்கிறது?

**'பண்ணிலே மூழ்கும் பழமுதிர் சோலை'**

**'பள்ளு முழங்கும் பழமுதிர்சோலை'**

**'பற்றெனக் கொண்ட பழமுதிர்சோலை'**

**'பாழ்தரு நோய்தீர் பழமுதிர் சோலை'**

எனப் பதிக ஈற்றடி முழுவதும் நயங்கொழிக்கின்றது. பழனிப் பதிகம் 160 சீர்களில் இயல்வது. ஆனால் பழனியும் மலையும் அறுபத்தொரு சீர்களில் (50+11) இடம்பெறுகின்றன. "எண்ணமெலாம் பழனியிலே" என்னும் தோற்றுவாய் விளக்கமாய் அமைகின்றது. மெய்யியல் ஆழம் பொதிந்தது பொதினி (பழனி) போலும்!

ஏரகம் என்பதை 'எண்ணிலா ஏர்கள் சூழ்ந்த ஏரகமாக'க் காண்கிறார். அவர் காணும் ஏரகம் 'சுவாமிமலை'யேயாம். ஏரகம் தரும் அமைதியால் 'ஏலவார் குழலியானேன்' என்பது பெண்ணின் பெருமை யர்க்கே உரிமை பூண்ட தொடராம். தனிப்படை வீடுகளாம் ஐந்தனையும் கூறி, குன்றுதோறாடல் தொடர்கிறார். தொடரைக் 'கொக்கி போற்றொடர்' என அரிய உவமையாக்குகிறார். 'கூற்றைக் கொல்வது' என்பது மரணமிலாப் பெருவாழ்வை நல்குவது என வள்ளலார் உள்ளம் தோய்ந்து குறிப்புரை வரைகிறார்.

படைவீடுகள் எனப்படாவேனும் தம் உளத்துப் படைவீடு களாகத் திகழ்ந்த கதிர்காமம் முதலியவற்றைப் பாடுகிறார். இங்கு நின்று பாடினார் அல்லர் திருவி.க. அங்குச் சென்று பாடிய பேறுடையது அது. தமிழகத்துக் கோயில்களும் கண்டு கண்டு பாடப் பெற்றவை யேயாம்.

கடலெல்லாம் கதிரையென்று கைநீட்டி வழிகாட்ட,

காட்டின் முடியெல்லாம் கதிரையென்று வரவேற்ப.

விலங்கு, பறவை தாமும் கதிரை என்றே கடிதணைந்து உடன் தொடரும் என இயற்கையெலாம் இசைந்து நிற்கும் இறைமை நிலையைப் பாடுகிறார்.

கழுகுமலை முருகனிடம் "கற்றல் கேட்டல் கண்திறவா; கண்ணைத் திறக்கக் குருவாக" எழுந்தருள வேண்டுகிறார். "உலகம் பொல்லா தென்கின்றார்; உளமே பொல்லா தென்றுணர்ந்தேன்" என்கிறார். மேலே என்ன மெய்யியல்?

குன்றக்குடி என்பது இயற்கையேனும் குன்றாக்குடி யாக்குவது இறைமையெனக் காணும் பெருமையது குன்றாக்குடி. முருகன் குன்றாக்குடித் தமிழனாகிறான். சுந்தரர் முதலோர் பாடிய

"தன்னாதன தன்னாதன தன்னாதன தனனா' ச்சந்த விருத்தமாய் அமைந்தது இப்பதிகம்.

சென்னிமலை வேலனிடம்

***" என்பொருட் டுலகில் வாழ்தலுக் கிசையேன்;***
***எழிலுடல் ஓம்பலும் வேண்டேன்;***
***மன்பதைக் குழைக்க மாணுடல் வேண்டும்***
***மலரடி வழிபெறல் வேண்டும்"***

என்பது தம்பிறவி நோக்குப் பிறங்கும் வேண்டுதல் அல்லவோ!

இதன் விளக்கம் போல் திருச்செங்கோட்டுப் பதிகத்தில்,

***"தொண்டினைத் துறவேன்;***
***துறவெனக் காட்டினுக் கோடேன்;***
***மூக்கை மூச்சினை அடக்கேன்;***
***பாரினைப் பாழெனக் கொள்ளேன்;***
***உருகிய உயிர்கள் உயர்பணி செய்ய வேண்டுவனே"***

என்கிறார். அடுத்து வரும் வேளூர் புள்ளிருக்கும் வேளூர்; முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் குமரகுருபரர் பாடிப் பரவிய பெருமையது. அழுதும், அரற்றியும் அழுங்கும் பதிகம் இதுவாம். வேளூர், வைத்தீசுவரன் கோயில் என வழங்கப்படுகிறது.

திருமயிலைப் பதிகம் அடுத்தது. உள்ளூறும் அச்சம் அவலம் ஆதிகளை அகற்றிப் பிறவி வேரறுக்க வேண்டுமென முறையிடுவது இப்பதிகம்.

***"பலகலைகள் கற்றாலும் பன்னெறிசேர்ந் தாலும்***
***பற்றுநெறி கூடவில்லை" (2)***

என வருந்தி,

***"மலையேறி மீதமர்ந்தேன் மனவமைதி கண்டேன்" (5)***

என மகிழ்கிறார்

***"நால்வருணம் பிறப்புவழி நாட்டியநாள் தொட்டு***
***நாவலந்தீ வழிந்தொழிந்து நாசமுற லாச்சே"***

என முறையிடுகிறார்.

அடுத்த பதிகம் இளையனார் வேலூர் இறைக்குரியது; இதனை இறையனார் வேலூர் என்றும் ஆள்கிறார் திரு.வி.க.(3,4). இப்பதிகம், விளியாக இயற்கைநெறி கமழ யாக்கப்பட்டுளது. கோழிகளே, காகங்காள், புறவினங்காள், குருவிகளே, தும்பிகளே, வண்டுகளே, அன்றில்காள், குரற்குயிலே, பசுங்கிளிகாள் பூவைகளே என்பவை விளி உயிரிகள்; பறவை வகைகள். வழி கூவீரே! கரையீரே! முழங்கீரே என்னும் யாப்புரவில் முடிவன. பாலாறும் சேயாறும் சூழியற்கையும் சுட்டுகிறார்.(8)

*குமர கோட்டம் அடுத்துவருவது. காஞ்சி உயர் குமரகோட்டம் என இடம் சுட்டுகிறார்; தென்மொழி வட மொழிப் புலமையர் வாழ்ந்த பதி என்கிறார்(7) பல்சமயப்பதி என்பதைப் பகர்கிறார்(8) முருகனைச் சிவகுருவாகப் பூரிக்கிறார். (1,3,5,10) திருத்தணிகைப் பதிகம் அடுத்தது. தணிகை சாந்தக் காட்சி வழங்குகிறது. (6) கல்வி கேள்வி தருக்கம் ஆயவை இறைமை இன்பம் சேர்க்கா என்கிறார். தணிகை வலம்வரின் தழல் அகலும் என்கிறார். (7)*

*தலவரிசையில் இறுதியது கந்தமாதனம். இறைமை யாவும் இறையடியார் யாரும் முருகாகத் தோன்றும் தோற்றம் உரைக்கிறார் (3) முருகின் பொருளாம் அழகு, இளமை, மணம், தெய்வம் என்பவற்றை அடுக்குகிறார்.(5)*

*பொதுப்பதிகமாம் இறுதிப் பதிகத்தில்,*

***"வெங்கதிரும் தண்மதியும் வேலவநின் கோயில்***
***வேலைமலை காடுவயல் வெண்மணல்நின் கோயில்"***

*என்னும் பாடல் (7) பொதுமைக்குப் பொதுமை.*

*முருகன் அருள்வேட்டல் பதிகங்கள் அனைத்திலும் பொதுமை யாகப் பாயும் கருத்தோட்டம், கோயில்கள் சாதி சமயம் வருணம் என்பவை அற்ற நிலையங்களாகத் திகழ வேண்டும் என்பதே. முருகன் அருள் வேட்டல் 1932 இல் வெளிவந்தது. செய்யுள் நூல்களுக்கு வழக்கமாக எழுதும் குறிப்புரைகளையும் கொண்டது. பதிக வரம்பு போற்றப்படும் பெற்றியது.*

# திருமால் அருள் வேட்டல்

முன்னுரையில் "சமயம் ஒன்றா? பலவா?" என்பதை விரிவாக ஆய்ந்து ஒன்றே என்றும், இறையும் ஒன்றே என்றும் தெளிவிக்கிறார்.

பன்மார்க்கம் உடையாரும் பழுத்த ஆய்வால் சன்மார்க்கமே மார்க்கமெனக் கொள்வார் என்பதையும் கூறுகிறார். தாம் தம் ஆய்வு பட்டறிவு என்பவை கொண்டு தெளிவுற்றதைத் தெரிவிக்கிறார்.

எவரும் தாம் விரும்பும் மதத்தைக் கொள்ளலாம். பிறர் மதத்தை நிந்தித்தல் ஆகாது. பிறர் மதத்தை நிந்திப்பது தம்மதத்தைத் தாம் நிந்திப்பதேயாம் என்கிறார். இக்கருத்து தேவையான காலம் இதுவாம்.

இறைநிலைகள் பல எனினும் அவற்றுள் மூன்று சிறந்தவை எனக்கூறும் திரு.வி.க. "வாக்குமனம் கடந்தது ஒன்று; இயற்கையைக் கோயிலாக் கொண்டது மற்றொன்று; குருவின் உள்ளத்தைக் கோயிலாக் கொண்டது இன்னொன்று" என்கிறார். "இவற்றுள் பின்னவை இரண்டுமே வழிபாட்டுக்கு உரியன" என்றும் கூறுகிறார்.

"மால், பெரியன். எல்லார்க்கும் பெரியன் இறைவன். அவன் அருட்டிரு உடையன் ஆதலால் திருமால்" எனச் சொற்பொருள் விளக்கம் தருகிறார்.

"யான் ஆண்டவன் அருள் பெறாதவன்; அதுபற்றியே அவன் அருள் வேட்டு நிற்கிறேன்." என்று தம்மொடுக்கமாகக் கூறுவது, "யான் ஆண்டவன் அருள் வேண்டி நிற்பவன்; அதுபற்றியே அவன் அருள் வேட்டு நிற்கிறேன்" எனினும் தகுதொடரேயாம்! ஏனெனில் திருவிக. அத்தகையர். இவ் 'வேட்டல்' பொருள், அவர் கூறிய வேட்டல் நூல் களுக்கெல்லாம் பொது விளக்கமாம். இந்நூல் 1938இல் வெளிவந்தது. இருபது தலைப்புகளில் இவ்வேட்டல் நடையிடுகிறது. திருவரங்கம் நான்கு பதிகங்களையும், திருவல்லிக்கேணி மூன்று பதிகங்களையும், திருமலை மூன்று பதிகங்களையும் கொண்டுள்ளது. தென்திருப்பேரை (அகவல்) ஆழ்வார் திருநகரி (வெண்பா) திருமாலிருஞ்சோலை (கண்ணி) ஸ்ரீவில்லிபுத்தூர் (விருத்தம்) சீர்காழி (விருத்தம்), தில்லை (கலித்தாழிசை) திருக்கோவலூர் (விருத்தம்) திருக்காஞ்சி (கலித்தாழிசை) என்பவை தனித்தனி ஒன்றுடையவை. நிறைவில் நாமாவளியும் வாழ்த்தும் உள. நாமாவளிக் கண்ணிகள் 54. நூற்றெட்டு எண்ணை நினைந்து போலும். வாழ்த்து விருத்தம் ஒன்று.

தென்திருப்பேரை அழகனைக் கண்டால் துறவாத் துறவே தூய துறவெனப் புலப்படலை விரிய விளக்குகிறார். போற்றி இசைக்க ஏற்ற பாட்டாய் இசைக்கிறார்.

தென்திருப்பேரையும் ஆழ்வார்திருநகரும் தென் தமிழகம் சார்ந்த பொருநைக் கரையவை. ஆதலால் இரண்டையும் பொருநை வளத்தொடு பொருத்திப்பாடுகின்றார்.

ஆழ்வார் திருநகர்க்கமைந்த 'குருகூர்' என்னும் பெயரையும் சுட்டுகிறார். திருமால் கொண்ட பத்துப் பிறப்புகள் கூர்தல் அறவிளக்கம் (பரிணாம வளர்ச்சி) எனச் சுட்டுகிறார். மேலும், செத்துப் பிறவாத்திறம் விளக்குவது என்றும் காண்கிறார்.

திருமாலிருஞ்சோலையின் இயற்கைவளம் திருச்சோலை, பெருஞ்சோலை, பழச்சோலை, பூஞ்சோலை, கனிச்சோலை, பொற் சோலை, தேன்சோலை என்றெல்லாம் பாடவைக்கின்றது. தமிழ் வளர்த்த மதுரை சார்ந்த சோலை என்பதை மறவாமல், ஏழிசையாய் நிற்கும் இருஞ்சோலை, தமிழாய்த் தழைத்து நிற்கும் தண்மை இருஞ்சோலை என்று பாடுகிறார்.

திருவில்லிபுத்தூர் பெருமானை, பெருமாளை - ஆண்டாள் பெருமாளாகவே பதிக முழுவதும் பாடுகிறார். தம் நிலையை, "கல்லை மண்ணைச் சோறாக்கிக் களிக்கும் பிள்ளை என வாழ்ந்தேன்" என இரங்கி உரைக்கிறார்.

திருவரங்கப் பெருமானை "காவிரி நங்கை கொள்ளிட மங்கை கைகளால் தைவர அறிதுயில் செய்யும் மரகதமலையாகக்" காண்பவர், "அறிதுயில் நுட்பம் உணர்ந்திடில் கலகமோ பாழாம்," என்றுரைத்துத் தமக்கு அறிதுயில் நுட்பம் அருள வேண்டுகிறார். பொருட்டொடர் நிலைப்பாட்டென (குளகமென)த் திகழ்கின்றன. இவை (5,7,8) பொன்வேண்டேன் பொருள் வேண்டேன் என வேண்டாமை கூறியவர், "சொன்மேவு கவிகடந்து துயிலுகின்ற இன்பம் சுரக்க "வேண்டுகிறார். பேசரிய துயிலின் பெற்றியருள்; துயிலின் மாண்புணர்ந் தால் உய்ந்திடுவேன்" என்று அறிதுயிலருளவே வேண்டுகிறார்.

திருவரங்க மூன்றாம் பதிகம் திருவரங்கப் பெயரிலேயே திளைப்புறுகின்றது. 160 சீர்களைக் கொண்ட இப்பதிகத்தில் 60 சீர்கள் திருவரங்கப் பெயரேயாம். முருகன் அருள் வேட்டலில் உள்ள 'பழனிப்பதிகம்' இப்பதிகத்துடன் ஒப்பிட்டுக் காணத் தக்கதாம். திருமாலைப் பற்றிய தொன்மச் செய்திகளை யெல்லாம் அடுக்கடுக்காகக் கூறி, "திருவரங்கத் தெய்வமென்று சென்றுதொழு மனமே" என்னும் பாடல்களைக் கொண்ட பதிகம் இது.

இராம காதையை உள்ளீடாகக் கொண்டது சீர்காழிப் பதிகம். அவ்வுள்ளுறைக் கேற்ப,

**"ஆவியாம் அணங்கு தன்னை ஐம்புல அரக்கர் கோமான்**
**மேவியே பற்றிக் கொண்டான் மேலவ அவனைக் கொன்று**
**பாவியை மீட்ப துண்டோ?"**

என்பது நயமிகக் கொண்டதாம். அதேபோல்,

"நங்கையின் உரிமை நாடி நாமநீர் கடந்த வீரா" என்று விளித்து, தாம் செய்யும் பெண்ணியத் தொண்டுக்குத் திருவருள் கூட்ட வேண்டும் என்பதும் அருமைமிக்கதாம்.

தில்லைப் பதிகத்திலே பாரதப் போரை அறப்போராக்கக் கண்ணன் முனைந்த முயற்சியைச் சுட்டி, இக்கால அரசியல் கேடுகளை அடுக்கடுக்காய்க் கூறி அவற்றை அழித்துதவ வேண்டுகிறார்.

"கற்றவர்கள் எனும் பெயரால் காசினியில் அரசியலார்
செற்றமிகு புலிகரடி சிங்கமெனத் திரிகின்றார்"
"கல்லூரி என்றென்றே கட்டுகின்றார் பழிபாவம்
மல்லூரு நூல்களிலே மதிவளர்ச்சி பெறுகின்றார்"
"கொள்ளையிலும் கொலையினிலும் கொடும்புரட்சி வெறியினிலும்
உள்ளமுறும் அரசியலால் உலகுபடும் பாடென்னே"
'கல்வியெலாம் போருக்கே கருத்தெல்லாம் போருக்கே
செல்வமெலாம் போருக்கே செய்கையெலாம் போருக்கே"
இவை அயலார் ஆட்சிக் காலநிலை. (1938)

நம்மவர் ஆட்சி நிலையோ - ஆட்சி என்றா சொல்வது? பெண்ணையாற்று வளங்கொழிக்கும் கோவல்பெருமானுக்குத் தாம் கண்ட புத்தாழ்வார் ஒருவர் புகழை இயைத்துள்ள பேறு குமாரசாமியார் பெற்ற பேறு.

பள்ளியிளம் பிள்ளைகளே, வளைக்கரத்து மதிநல்லீர், ஆலரசு வேம்பினங்காள் என அழைத்து அழைத்து, திருக்காஞ்சி வரதர் கோயிலிடம் வினாதலாய், வரதன் புகழ்பாடும் பதிகம் திருக்காஞ்சி.

"பள்ளியிலே யான் படித்த பருவமதிலுன்றன்; பசுங் கோயில் வலம்வருவேன் பத்திவிளைவாலே" என்னும் அந்நாள் பத்திமை, அலைக்கழிவை எண்ணிப்பாடும் பதிகம் திருவல்லிக்கேணி "உலக மெல்லாம் ஒருமையிலே ஒன்றின் துயருக்கிடமில்லை" என்பதை விரித்துப் பேசுகிறது அடுத்த பதிகம்.

திருமலை ஏழுமலையாய், ஏழாய் ஏழாய் எழுகின்றது முதற் பதிகம். நகரவாழ்க்கை கொடுமை கேடு செயற்கை என்பவற்றை உரைத்துத் திருமலை மாண்பில் தோய்கிறது இரண்டாம் பதிகம்.

*மீளவும் ஏழுமலைப் பெயரும் எழிலுமே ஆட்கொள்ளப் பதிகம் ஓங்குகின்றது.*

*நாமாவளி இயைபு (முடிநிலை) நயம் கொண்டது.*

***"ஆழ்வார் தமிழில் ஆழ்வோமே
அன்பில் என்றும் வாழ்வோமே"***

*என நாமாவளி நிறைகிறது. வாழ்த்தில்,*

***"திருமலை முதலா வுள்ள திருப்பதி பலவும் வாழ்க"***

*என எல்லாம் திருப்பதியாகக் கொண்டு வாழ்த்துகிறார்.*

# பொதுமை வேட்டல்

'வேள்' என்னும் அடிச்சொல்லில் இருந்து பிறந்தது வேட்டல். வேள் என்பதன் பொருள் விருப்பு, மண், மண்ணாட்சி, மண்ணாட்சியர், உதவி என விரிவன. வேட்டம், வேட்டை, வேட்கை, வேள்வி, வேளாண்மை முதலியனவும் அவ்வழிவந்த சொற்களே. திருவிக. வேட்டல் பெயரில் சிலநூல்கள் யாத்துள்ளார். அவற்றுள் இப் பொதுமை வேட்டல் அளவால் பெரியது. பொதுமை பெரியது தானே!

திரு.வி.க. இயற்றிய பா நூல்களுள் ஈதொன்று. உலகப் போர்ப் பருந்து பறந்து அச்சுறுத்திய போதில் எழுந்து வீறியது இப்பொதுமை வேட்டல். இதனைத் திருவிக. முன்னுரையில் காண்க.

திரு.வி.க. நூல்களின் பொதுமை ஊடகம் எனக் கொள்வ தொன்றுண்டு. அஃது 'இயற்கையோடு இயைந்த வாழ்வு' என்பது. மற்றொன்று, சமரச சன்மார்க்கம் என்பது. இவ் விரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த இணை மலர்மாலை. துணைமலர்ப் பிணையல் - இப் பொதுமை வேட்டல்.

இந்நூல் வெளிப்பாட்டை, "உலகப் போரிடை - போர் மேகம் சென்னை நகரைப் பலவழியிலும் கலங்கச் செய்துள்ள இவ்வேளையில் - காகிதப் பஞ்சம் நெருக்கும் இந்நேரத்தில் (1942)- விரைந்து விரைந்து அச்சிடப்பட்டது" என்கிறார்.

உள்ளுறை தெய்வ நிச்சயம் முதலாக, போற்றி ஈறாக நாற்பத்து நான்கு தலைப்புகளைக் கொண்டது. இவற்றுள், சன்மார்க்கம் (2) சமரசம் (1) சமரச சன்மார்க்கம் (1) சன்மார்க்க வாழ்வு (1) எனச் சன்மார்க்கம் ஐந்து தலைப்புகளையும், முறையீடு ஐந்து தலைப்பு களையும், தியானம் மூன்று தலைப்புகளையும் பெறுகின்றன. மற்றைத் தலைப்புகளும் தொடர்நிலை போலவே ஒரு கட்டொழுங் குறுகின்றன. உள்ளுறை காண்க.

தலைப்பு ஒவ்வொன்றும் பதிகமென (பத்துப்பாடல்) நடையிடு கின்றது. எண்மர் என்னும் தலைப்பு ஒன்பது பாடல்களையும், வாழ்த்து என்னும் தலைப்பு ஒருபாடலையும் கொண்டுள்ளமையால் நூல் 430 பாடல்களைக் கொண்டதாகின்றது. இவற்றுள், அகவல்பா 1, கலிவிருத்தம் 2, கலித்தாழிசை 113, அறுசீர்விருத்தம் 72, எழுசீர் விருத்தம் 71, எண்சீர் விருத்தம் 171 ஆக 430 பாடல்களாம்.

இயற்கைப் பொதுமை வழியாக இறைமைப் பொதுமையை நிலைநாட்டச், சமரச சன்மார்க்கம் பற்றி நிற்றல் வேண்டும் என்னும் உட்கிடை திரு.வி.க.வுக்கு உண்மையின் அதன் விளக்கமாகவே நூல் எழுவாய் முதல் இறுவாய் வரை இயல்கின்றது. இயற்கை இறைமை குருவன் வழி இறங்கி அருள் சுரத்தலையும் தெளிவிக்கிறார்.

இயற்கை இறைமைச் சார்பின்றி உலகம் உய்யாது என்பதை உறுதிப்படுத்துகிறார். செயற்கைச் சடங்குகளாலும், செயற்கைத் துறவுக் கடைப்பிடிகளாலும் எப்பயனும் இல்லை என்பதைப் பலப்பல இடங்களில் பொழிகின்றார்.

***"உய்யுநெறி உழைப்பாலே உறும்" (1:2)***

***"தொண்டினிலே ஈடுபட்டுத் தோயத் தோயத்,***
***துணைவரும்" (1:3)***

என்று தெய்வ நிச்சயத்தில் சொல்கிறார்.

***"ஒப்புரவே உள்ளொளியே உண்மைநிலைப் பேறே"***

என்று இயற்கைத் தெய்வத்தைக் காணும் அவர்,

***"கடபட மென் றுருட்டுவெறிக் கடுவாதத் தர்க்கம்***
***கருத்தற்ற கிரியைகளும் கட்சிகளும் போரும்***
***நடனமிடும் நெஞ்சறியா நாயகன்"***

என்கிறார் (2)

***"காலையில் எழுந்து கடன்களை முடித்துக்***
***காற்றிலும் கதிரிலும் குளித்துச்***
***சோலையில் உலவிச் சுரக்குநீ ராடித்***
***தொழுதுனைச் சிந்தனை செய்து***
***சீலமும் நலமும் சேருண வருந்திச்***
***சீர்தொழில் பிறர்க்கென ஆற்ற***
***மேலவர் கொண்ட வேர்நெறி ஓங்க***
***வேண்டுவன் கருணைசெய் இறையே"***

என இயற்கை நெறியில் வேட்கையுரைக்கிறார்(8) சன்மார்க்கத்தில் போலிமை மதங்களின் பட்டியலைக் கூறி அவை தொலைய வேண்டும் என்பதை வேட்டலாக்குகிறார்.

***"சாதிமதம் மரபுமதம் சார்புமதம் சாகச்***
***சமயமதம் வழக்குமதம் சழக்குமதம் சாய***
***வாதமதம் பேதமதம் வட்டிமதம் வீழ***
***மடங்கள்மதம் கோயில்மதம் மாயமதம் மாயச்***
***சூதுமதம் வேடமதம் சூழ்ச்சிமதம் குலையத்***
***தொன்மை அறம் அன்பழிக்கும் துயர்மதங்கள் தொலைய"***

வேட்கிறார் (11:5)

***"அண்டையன் பசியால் வாட***

***அணங்கொடு மாடி வாழ்தல்***
***மண்டையன் குற்ற மன்று***
***மன்னிடும் ஆட்சிக் குற்றம்***
***தண்டனை கர்மம் என்னல்***
***தயையிலார் கூற்றே அப்பா" (13:8)***

*எனச் சமரசத்தில் கூறுகிறார். அதே சமரசத்தில்,*

***"உலகினில் துன்பம் நீங்க***
***உண்டனை நஞ்சை; அன்பே***
***சிலுவையில் நின்று செந்நீர்***
***சிந்தினை, அரசை நீத்து***
***விலகினை, மாடு மேய்க்க***
***விரும்பினை, அடியும் தாங்கி***
***இலகினை, சமர சத்தை***
***எண்ணினால் துயரம் போமே"***

*என்கிறார். (13:9) ஒருவனே எல்லாம் என்னும் சமரசத்தை எண்ணினால் துயரம்போம் என்றபடி எனக்குறிப்புரையும் வரைந்துள்ளார்.*

*எண்மர், வாழ்த்து என்னும் தலைப்புகளிலும் இச்சமரசத் தையே பொருளாக்கிப் புகல்கிறார். தம் இளமையில் செயற்கையில் உழன்றதை,*

***"கண்ணினை மூடக் காற்றினை அடக்கக்***
***கருத்தினை ஒடுக்கிடச் சொல்லும்***
***பண்ணிலா யோகர் படிகளில் உழன்றேன்***
***பாழினில் கழிந்தது காலம்;***
***மண்ணிலே பிறந்த பயனினை இழக்க***
***மனமிலை"***

*என்கிறார் (25:6) இச் செயற்கை என்ன ஆட்டம் போடுகின்றது; எப்படி எப்படிக் கொள்ளைக் கோலம் போடுகிறது; எவ்வளவு 'பெரிய இடங்கள்' தலைமை தாங்கிப் பேருவகை கொள்கின்றன; கண்ணுள்ளார் காண்பாராக! கருத்துள்ளார் சிந்திப்பாராக! திருவி.க. அறைகூவலை மேலும் காண்பாராக:*

***"காற்றினை மூக்கால் ஈர்த்தல்***
***கனலினை மூலக் காலால்***
***ஏற்றிடல் இறக்கல் மாற்றல்***
***இளமதி ஒளியைக் காண்டல்***
***ஊற்றுள நாடி நிற்றல்***
***உடல்முகம் சிவத்தல் எல்லாம்***
***ஏற்றநன் முறைகள் அல்ல***
***என்றருள் குருவே போற்றி"***

என்கிறார் (34:2). இவையெல்லாம் பயின்று நின்று பாழ் எனக் கண்ட பின்னர்ப் பகர்மொழி இஃதாம்.

ஆனந்தம் 42ஆம் தலைப்பு.

தொன்மைமிகு தமிழ்ச்சொல் ஆனந்தம். தொல்காப்பியத்தில் வரும் 'ஆனந்தப் பையுள்' 'மூதானந்தம்' என்பவை காண்க.

குறையாதது யாது? அது, அல்நந்தல் = அனந்தல். கடல் என்னும் பொருள். அனந்தல் ஆடேல் என்பது ஔவை வாக்கு.

குறையா இன்பமாம் மூதின்பமாம் ஆனந்தம் அதன் அடிப் பொருள் விளங்க, பதிகம் முழுவதும் அடி, மடக்கடி, உட்சீர் ஆகிய இடங்களில் எல்லாம் பொதுளி நிற்கின்றன. வள்ளலார் வழிஞர் திரு.வி.க. என்பது காட்டும் சான்றுகளில் ஈதொன்று என்க.

திரு.வி.க. தம் தொண்டே, தமக்குவரும் தொல்லை நோய்க்கு மருந்து எனக் கண்ட தோன்றல். அக்குறிப்பு விளங்க,

**"தொல்லையை நீக்கும் தொண்டில்**
**துணைசெயும் தோன்றல் போற்றி"**

என நூல் நிறைவாம் போற்றி நிறைவில் இசைக்கிறார். (44:10)

# கிறிஸ்துவின் அருள்வேட்டல்

*திரு.வி.க. கிறித்தவர் அல்லர்; ஞானமுழுக்குப் பெற்றவரும் அல்லர்; “ எனது மார்க்கம் சமரச சன்மார்க்கம்” என்பவர் அவர்.*

*திரு.வி.க. கிறித்தவ சமயத்தராக இருந்திருந்தால் இந்நூல் இவ்வகையில் எழுந்திராது. அவர் சிவனியராகவோ மாலியராகவோ இருந்திருப்பின் இந்நூல் எழுந்திருக்கவே செய்யாது. அவர் சன்மார்க்கியாக இருந்ததால்தான் இந்நூல் இவ்வகையில் எழுந்தது.*

*கிறிஸ்துவின் அருள்வேட்டல் என்னும் பெயரிய இந்நூல் பாநூல். குறட்பா, கட்டளைக் கலித்துறை, கலித்தாழிசை, எண் சீர்விருத்தம், எழுசீர் விருத்தம், அறுசீர்விருத்தம் என்னும்* ***அறு வகைப் பாவால், வகைக்குப் பத்துப் பாடலாய்*** *அமைந்தது; வாழ்த்துடன் நிறையவும் செய்தது. பின்னே இசைக் கண்ணியாய் இயைபுத் தொடையில்* **இருபது** *எழுதி அதனை இணைத் திருக்கக்கூடும் என நூலமைதி கூறுகின்றது. ஆசிரியர் குறிப்பு அன்று இது.*

*கிறித்தவப் பள்ளியில் பயின்றவர் திரு.வி.க. கிறித்தவப் பள்ளியில் பணி செய்தவரும் அவர். கிறித்தவப் பெருமக்கள் அன்பிலும் நண்பிலும் திளைத்தவர். அவர்தம் வாழ்க்கைக் குறிப்புக் களில் சான்றுகள் மிகப்பல.*

*கிறித்துவின் அருள் வேட்டல், தமிழ்ச் சமய மணம் கமழ்வது. கிறித்தவப் பிழிவாகத் திகழ்வது. கிறித்தவம் அன்று; கிறித்து பெருமான் சால்பு ஓவியம் இஃது என்க.*

*‘சித்தம் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்’ என்பதன் ‘உள்ளூறை’ என்ன? கிறித்துவின் மலைப் பொழிவும் சிலுவைப் பாடுமேயாம்!*

*இந்நூல் பிறந்த மூலம் என்ன? பரிசுக்காகப் பயின்ற விவிலியப் பயிற்சியா? பின்னைப் பயின்ற பயிற்சியா? கிறித்தவச் சார்புகளா? இல்லை! இல்லை! இல்லை! ஒன்றே ஒன்று. அது,*

> ***“என்னுள்ளே நீபிறந்தாய் ஏசு பெருமானே***
> ***உன்னுள்ளே யான்இறந்தேன் உற்று”***

*என்பது. ‘தான் இறந்து’ அவனாம் பிறப்பெய்திப் பாடிய பாட்டு முனைப்பர் பாட்டாகவோ இருக்கும்?*

*அருள் வேட்டல் உள் தலைப்புகள் மாசுமனிதம், அறத்தின் இயல், அலகிலொளி, உலகமெலாம், பொய்யிலே, உலகெலாம், ஏசு கிறிஸ்து என்பவை. இப்பெயரீடு எடுத்த பாடலின் முதல் தொடர்கள். இவ்வாறு அமைக்கும் உத்தி எவ்வகையில் வாய்த்தது? தமிழ் இறைமை வழியர் தந்தவை அல்லவோ! நாலாயிரப் பனுவல் பதிகப் பெயரீடுகளைக் காண்க.*

*அலகிலொளி வினாவும் விடையுமாய்த் தொடர்வதன் மூலம் எது? திருவாசகத் திருச்சாழலையும், தனிப்பாடல் வினாவிடை வெண்பாக்களையும் காண்க.*

*அருள் வேட்பார், அவன் திருப்பெயரை ஒருமுறையோ ஓதுவர்? விளிப்பர்? அண்மை, சேய்மை, பெயர், அணிநயம் கெழும அழைத்து அழைத்து வேட்பர் அல்லரோ! வாரம், வாசகம், திருப்புகழ், நாலாயிரம் சான்றுகள் அல்லவோ!*

*கற்பகமே, அப்பா, பெரும, வள்ளல், தெய்வமே, திருக்குமரா, ஆருயிரே, மாணிக்கமே, தயாபரனே, முன்னவனே, இளங்குமரா, கோவடிவே, அன்பே, இறையவனே, பர ஒளியே, சேயே, ஐயா, அருட்கடலே, குருநாதா, குமரகுருவே, கருணை மாநிதியே, மூர்த்தியே, முன்னவா, பரம, அரசே, ஐயனே, நாதனே, ஈசனே, விமலனே, எந்தையே - இவ்விளிகள் சன்மார்க்கியாக இருப்பார் வழியன்றிப் பிறர்பால் வருவனவோ?*

***"வெள்ளை உடையும் மலைப்பொழிவும் என்னுள்ளக்கள்ளம் அழிக்கும் கலை" என்றும்***

*"சிலுவையும் ஆணியும் செந்நீரும் சேர்ந்த திருவுருவம் பாவப் பொருப்பு (மலை) அழிக்கும்" என்றும் காணும் திரு.வி.க.,*

***"மலரைப் பறிக்கிலென்; மாலை புனைந்திலென்;***
***மந்திரத்தின்***
***ஒலியைப் பெருக்கிலென்; ஓவெனப் பாக்களை ஓதிலென்"***

*என்னும்,*

*"வாக்கை அடக்கின், வயிற்றை ஒடுக்கின், மயிர்வளர்த்து*
*மூக்கைப் பிடித்திடின் மூச்சைத் தடுத்திடின் முத்தியின்பம்*
*தேக்குமோ?" என்று வினாவுகிறார்.*

***"ஒழுக்கம் விழுப்பம் உயிரினும் ஓம்பென்று***
***உரைத்திருந்தால்***
***கொழிக்குமோ"***

*என வினாவி, கிறித்து வாழ்ந்து காட்டியதைச் சுட்டுகிறார்.*

*"அன்புடைய அறவோர் என்பும் பிறர்க்கு உரியரென" எழுந்த மொழிக்கு உகந்த இலக்கியமாய் இலங்கி நிற்பவர் ஏசுநாதர் என்கிறார்.*

*"யான் மாணாக்கனாய் இருந்தபோது பைபில் படித்தேன். அப்பொழுது கிறிஸ்துவத்தில் என்னுள்ளம் படியவில்லை. பின்னே என் உள்ளம் அதில் ஈடுபட்டது. இதுபற்றி என் 'வாழ்க்கைக் குறிப்பில்' விளக்கம் செய்துள்ளேன்"* என இந்நூல் அணிந்துரையில் வரைந்துள்ளார். நூலில்,

***"பள்ளியில் உன்றன்பான் மொழி பயின்றேன்***
***பரிசிலை உளங்கொடு; நாயேன்***
***எள்ளினேன் உன்னை; இன் மொழி பின்னை***
***இரங்கவும் வருந்தவும் செய்யக்***
***கள்ளனேன் அழுதேன்; பிழைபொறுத் தாண்டாய்"***

என்கிறார். அறத்தின் இயல்பிலும்,

***"ஏசினேன் உன்னை இனிய மொழியை இளமையிலே***
***கூசினே னில்லை குறையினைப் பின்னே குறித்தழுதேன்***
***ஏசுவே! உன்னருள் என்னுளம் எய்திய தெப்படியோ?"***

என்கிறார்.

***"வாளேந்திப் போர்புரிந்த வாகையரும் மாண்டுவிட்டார்;***
***வாளேந்தாக் கிறிஸ்துவேநீ மரித்தெழுந்தாய் வீரவள்ளால்!***
***வாளேந்தும் வழியுழன்றேன் வழிகண்டேன் மரித்தெழுவேன்***
***வாளேந்தா நெறிவளர்க்க மலரடியில் அடைக்கலமே."***

என்கிறார். திருவி.க. எங்கேனும் வாளேந்தினாரா? கூறி முறையிடுவது பொய்மையா? ஒப்புக்கா? போலிமைக்கா? உலகுக்கா?

இல்லை! 'பொருநரையும் நேசித்தல்', 'வெட்டுபவர் வெட்டுண்பர்;'

'கொலைஞரின் தீச்செயலைப் பொறுத்தருள் செய்த புனிதம்' என்னும் இன்னாசெய்யாமை நெறியைத் தாம் உணர்ந்து போற்றி யமையைக் குறிப்பதே இஃதாம்.

***"தீயரைச் சேர்தல் தீமையென் றெண்ணிச்***
***சிந்தையில் ஒதுங்கியே நின்றேன்;***
***நாயினேன் என்றன், நலன்களை நாடி***
***நயந்தனன்; பாவியாய் வளர்ந்தேன்;***
***பேயினை யொழித்த பெரியனே! ஜெபத்தில்***
***பித்தினைக் கொண்டபின் ஐயா!***
***தீயரை நண்ணித் திருப்பணி செய்தேன்***
***தீமைகள் அணுகவும் இலையே"***

என்று தம் முந்தை நிலையையும் பிந்தை நிலையையும் குறித்தல் நோக்கின் உண்மை விளக்கமாம்!

இனி இரு குறிப்புகளைக் குறிக்கலாம்; தமிழ் நெறி தவறா வகையில் பிறசொல் செய்யுளிலும் உரையிலும் ஆளப்பட்டு வந்த நெட்ட நெடுங்கால ஆட்சி, மணிப்பவழ நடையால் சிதையத் தொடங்கியது.

உரைநடையைப் பற்றிய அந்நோய் 17ஆம் நூற்றாண்டின்பின் பாடலையும் பற்றியது. திரு.வி.க. தம் பாடல்களிலும் பிறமொழி எழுத்துச் சில அமைய நூல்யாத்தமை ஒன்று. தனித்தமிழ் இயக்கம் தோற்றிய பின்னரும் அதனை முற்றாக ஏற்றாரில்லை என்பது அது.

பாவலர் பாரதியார் பாடல்களில் ஆயிற்று போயிற்று என்பவை ‘ஆச்சு’ ‘போச்சு’ என இடம் பெறலுண்டு. திருவி.க., “பெரு கலாச்சே”, “சார் பழிந்து போச்சு”, “அமுதமாச்சு” என வழு வழக்கு களைக் கொள்ளுகிறார்.

“பிற சொற்களை விலக்க விலக்கத் தமிழ் வளம் சிறக்கும்” என்னும் கொள்கையும், “பிறசொல் தமிழொடு புணர்ந்த சொல்லாக இடம் பெறலே மரபுக்காப்பு” என்னும் கொள்கை யும், மாறுபடுதல் கொண்டு இக்காலப் படைப்பாளர் இவற்றைத் தம் வழியாக மேற்கொள்ளல் ஆகாது என்பதைச் சுட்டிக் காட்டவே இக்குறிப்புகள் எழுதப் பட்டனவாம்.

# புதுமை வேட்டல்

*"பழமையின் சேயே புதுமை" ஆதலால், "புதுமையின் தாய் பழமை." என்பது விளக்கமாம். உலகம் மாறுதல் உடையது. அவற்றை அளவிட முடியாது. அறிஞர் மார்க்சு கண்டது 'புது உலகம்' எனப் படுகிறது. ஆனால், அது முழுமையானதன்று. அது சன்மார்க்க வழிப் படுவதாயின் முழுமையாம் என்று அணிந்துரையில் குறிப்பிடும் திரு.வி.க. அந்நோக்கில் 'சன்மார்க்க சமாஜம்' என்று ஒன்றமைத்து அதன்வழியில் தொண்டாற்றுவதைச் சுட்டுகிறார். புதுமை வேட்டல் 1945 இல் வெளிவந்தது.*

*சன்மார்க்கக் கொடி, பழமையும் புதுமையும், தெய்வப் புதுவுலகம், இயற்கைத் தெய்வம், ஒளி, வெங்கதிர், காளம், அறப்புரட்சி, திருப்பணி, சன்மார்க்க ஆட்சி, சன்மார்க்கச் சாத்து, தாய்மைப்பெண் என்னும் பன்னிரு பகுப்பில் நூலை நடைப்படுத்துகிறார். பாடல்கள் இசைப்பா, கண்ணி, அகவல் என்னும் வகையின.*

*சன்மார்க்கக் கொடி வெண்ணிறமானது என்றும், சன்மார்க்கக் குருவர் எண்மர் என்றும் அவர்தம் போதனை எட்டு என்றும் கூறும் திருவி.க. சன்மார்க்கத்திற்கு மாறாம் தன்மையை விரித்துக் கூறுகிறார். சன்மார்க்க முரச முழக்கமும் செய்கிறார்.*

*பகை முரண் கொலை குண்டு இல்லா நெறி சன்மார்க்க நெறி என்பது இதன் உட்கிடை. மனத்துக்கண் மாசின்மை அறம் என்னும் குறளும், வள்ளலார் ஒளி வழிபாடும், வெள்ளுடையும் ஆகிய வெண்மையைக் கருதலாம். திரு.வி.க. உள்ளம் உடை நடை யாவும் சன்மார்க்கமேயாம்.*

*பழமை புதுமை என்பவை நடைமுறையில் இல்லை பழமைக்குப் பழமையும் புதுமைக்கும் புதுமையுமாம் ஒன்றைப் பழமை என்பதா? புதுமை என்பதா? பழமையே புதுமையாய்த் தோற்றமுறல் இல்லையா? வடக்கு தெற்கு முதலிய குறியீடு இயற்கையில் மாறாததா? மின்னல் ஒருமை; நிறங்கள் பன்மை; பன்மை ஒருமை நிலைபேறானவையா? பழமைப் பகுப்பு, புதுமை ஒருமை பெறல் நலம் அல்லவோ* **என்பது பழமையும் புதுமையும்.**

*தெய்வம் என்பது வித்தில்லா ஒன்று. அதனை வேர்கண்டு ஆய்வது எப்படி என வினாவி ஆய்வுக்கு எட்டாப்பொருள் என்கிறார் தெய்வப் புது உலகத்தில்.*

*ஆழாக்கால் உழக்களத்தல் அறிவுடைமை ஆமோ?*

*அகண்டிதத்தைக் கண்டத்தால் அளக்கும் அறிவென்னே?"* என எள்ளுகிறார். அன்பாகி அருட்குரவர் வீரரிடம் தெய்வம் அமர்ந் திருக்கும் என எடுத்துக் காட்டுகிறார்.

இயற்கை தாண்டிய இறைநிலை எட்டாதது. இயற்கையாகி இருக்கும் நிலை எட்டக்கூடியது. எண்ணுவார் உணரக் கூடியது என இயற்கை இறைமையை எடுத்தெடுத்துரைக்கிறார்.

காற்றை உட்கால் என்றும் மூச்சுக் காற்றென்றும் பிரித்துக் காட்டுகிறார் ஒளிப்பகுதியில். உட்கால் பற்றியே திருமூலர் கூறினார் என்றும், அதனை மூச்சுக் காற்றுக்குக் கொண்டு "சோற்றுத் துருத்தியை ஓம்பும் - தூய சோதி உயிரொளி சூழலும் ஆகா" என்கிறார். மெய்ஞ்ஞானி உட்காலை, விஞ்ஞானி ஏலான் அவன் சட ஆய்வாளன்: சத்தென்னும் சித்தாய்வாளன் அல்லன்" என்கிறார்.

சாவா நிலையென்று சாற்றல் ஒரு சம்பிரதாயம்; சாகாநிலை பிறவாமை; என்றும் சாந்த ஒளியாகித் தற்பரமாதல் என்கிறார்.

**வெங்கதிரில்** வெளிப்படு பாடல்கள் நாற்பதும், காப்பியக் கவிவல்லார் காட்சிகளின் தொகுப்பெல்லாம் ஒருங்கே தொகுப் பினும் விஞ்சுவதாய் அமைந்துளது.

***காளமாவது*** ஊது கொம்பு; வளைந்து நீண்ட குழற்கருவி; பேரொலி செய்வது; உலகம் இயற்கையானது; என்றும் இருப்பது; முயற்சிக்கு மூலமானது; மூடம் அழிப்பது - என்பவை முதலாகக் காளம் ஊதேடா என முழங்கும் எண்பாடல்களை யுடையது.

அறப்புரட்சி, அமைதிப்புரட்சி வேண்டும்; மற்றைப் புரட்சி வேண்டா என்பது ***அறப்புரட்சி***.

***"நகைக்கும் பூவை நறுக்கெனக் கிள்ளல்***
***நடுங்கப் பச்சை மரத்தினைச் சாய்த்தல்"***

முதலியவை 'சீவக்கோயில் சிதைப்பு'

***"குண்டு கூடம் பெருக்கும் அரசு***
***கொல்லும் கல்வி வளர்க்கும் அரசு"***

- தயவு மார்க்கத்தை எங்ஙனே ஓம்பும்? - என்பவை முதலியவை **திருப்பணி**. சாந்தமளிக்கும் சமதர்ம ஆட்சி சன்மார்க்க ஆட்சி என்பதை விரிப்பது சன்மார்க்க ஆட்சி. இறையைக் கடந்த நிலையில் காணல் எட்டா. கலந்த நிலையில் காணல் முறை.

***"கலந்த நிலைஎது கண்முன் - நிற்கும்***
***காட்சி இயற்கை கருதல் எளிதே***
***புலன்களில் நன்கு படியும் - அதில்***
***புகப்புக ஆனந்தம் பொங்கி வழியும்"***

என்கிறார்.

சன்மார்க்கச் சாத்து என்பது கல்வி, உலகம், உடல், உணவு, இசை, காதல், குழவி, இல்லம், தொழில், அரசு, எளிமை, பொதுமை, தொண்டு, சோதரம் (சகோதரம்), அறம், வாழ்த்து என்னும் பதினாறு உட்பகுதிகளைக் கொண்டது. 425 அடி அகவலாய் அமைந்தது. தனிச் சுவடித் தகைமையது. வாழ்வின் பிழிவாகச் சிறப்பது. சாத்து என்பது சாற்று. சாற்றுக்கவி சாத்துக்கவி எனப்பட்டது அறிக. இனி, சாத்து என்பது பல்பண்டம் பகர்ந்து விற்கும் உள்நாட்டு வணிகமுமாம். அச்சாத்து வணிகன் கோவலன் தந்தை மாசாத்தன் என்பதையும் சீத்தலைச் சாத்தன் என்னும் பெருமையனையும் நினைக.

***"ஆசையைச் சுருக்கி அன்பைப் பெருக்க"***
***"இல்லறக் கல்வி இயற்கைக் கல்வி"***
***"உள்ளம் திருந்தின் உலகம் திருந்தும்"***
***"உடல்நலம் மற்றவர்க் குழைக்க ஊக்கும்"***
***"பல்லும் நாவும் மெய்காப் பாளர்"***
***"சீறி விழுந்தால் ஏறும் கொதிப்பு"***
***"குயிற்கும் மயிற்கும் கூலி இல்லை"***
***"பெண்மையில் தாய்மை தாய்மையில் இறைமை"***
***"குழந்தை ஆடும் குடிலே வீடு"***
***"ஊரின் பசுமை உள்ளப் பசுமை"***
***"நாஞ்சிலும் இராட்டையும் நாட்டின் ஈரல்"***
***"பட்டினி இன்மை நாட்டின் தன்மை"***
***"எளிமைப் பொதுமை எவர்க்கும் இனிமை"***
***"பொதுமை குலைந்தது புரோகித அரசால்"***
***"ஊறுசெய் யாமை உண்மைத் தொண்டு"***
***"எல்லாம் ஒருயிர் அவ்வுயிர் இறையே"***
***"கருத்து வேற்றுமை திருத்தும் உலகை"***
***"தொண்டு செய்யின் துலங்கும் அறமே"***

சன்மார்க்கச் சாத்தில் வருவன சில இவை.

இயற்கையே தாய்மையாய் இலங்குதலைக் கூறும் திரு.வி.க.

***"பாவை தாலி அறுத்திடல் மூர்க்கம்***
***பட்டம் முண்டை என்றீதலும் மூர்க்கம்"***

என்கிறார். இவற்றை வீழ்த்த இளைஞர் எழுக என்கிறார்.

புதுமை வேட்டலில் சன்மார்க்கச் சாத்து எவரும் பல்கால் பயின்று பற்றுக்கோடாகக் கொண்டு வாழத்தக்க பெற்றியது.

# சிவனருள் வேட்டல்

*சிவம் என்னும் செம்பொருளைப் 'பாழ்' எனக் கண்டு தெளிந்து, அப்பாழில் இருந்து இயற்கைக் கூறுகள் கிளர்ந்து, அவ்வியற்கைக் கூறுகளில் இருந்து காவியம் ஓவியம் முதலாம் கலைகள் வடிந்து பெருகிய பெற்றியைக் கூறுவது சிவனருள் வேட்டல்.*

*"பாழ் ஆராய்ச்சி சிவத்திற் சென்றது; சிவம் தன்னைப் பாட என்னைத் தூண்டியது; பாடல் எப்படி அமைந்தது? தத்துவப் பாடலாக அமைந்தது. பாட்டுப் பாடலாக அமையவில்லை" எனத் திருவி.க. தம் அணிந்துரையில் கூறுகிறார். நூல் 1947இல் வெளிவந்தது.*

*நூல் 'கடந்த நிலை' முதலாக, 'சிவநாமம்' ஈறாக இருபத்தொரு தலைப்புகளைக் கொண்டுள்ளது.*

*'பாழ்' என்பதைப் பரிபாடல் வழங்கும். 'வளியிடை வழங்கா வானம்' எனனும் கழக நூற் காட்சி. அதனைக் கடந்த நிலை என்பதில் விளக்குகிறார் திருவி.க. அறிவு ஆய்வு தவம் என்பவற்றில் தோயத்தோய இறுதியில் தோற்றமுற்றது பாழ். அப்பாழ், வெறுமை சுட்டும் சுழி (சைபர்). அச்சுழி,*

***"ஒன்றிரண்டாய் மேன்மேலும் உயர்ந்து செலல் மரபே***
***ஒன்றுதிக்கும் இடமெங்கே ஒன்றுமிலாச் 'சைபர்'***
***ஒன்றுடனே அதுசேரச் சேரஒரு பத்தாய்***
***ஒருநூறாய்ப் பெருகுமுறை உள்ளங்கைக் கனியே"***

*என விளக்குகிறார். 'பாழ்' விரிவாக்கம் 'பார்' என்பது கடந்தநிலை.*

*கலந்த நிலை என்பது 'பரிதிமுதற் குலங்களெல்லாம் குலவி ஒளிபெறக் கலந்துகூடி' நிற்கும் நிலையாகும். சுடர் - ஒளி, கடல் - ஒலி, வயல் - பசுமை எனக் கலந்து நிற்கும் நிலையை விரித்துக் கூறும் பகுதி இது.*

*இயற்கைக்கு அசைவில்லை; இறைமைக்கும் அசைவில்லை; இரண்டும் கலந்த நிலையில் அசைதல் வியப்பினும் வியப்பாம் 'திருக்கூத்து' என்பது மூன்றாம் பகுதி. கூத்து விளக்கம் 'கூர்தலறம்' என்கிறார். 'சொற்பதம் கடந்த வெளி'யை நேரிடைக் காண உதவியது எது? அது,* **சிதம்பரம்** *என்பது நாலாம் பகுதி. "மதங்கலவாத் திருக்கூத்து ஞானவெளி காட்டும்" என்கிறார். அன்னை இயற்கை; அதனுடன் அப்பன் கலந்து ஆடுவது கூத்து என்பதை விரிப்பது* **கூத்தன்.** *"ஆடவில்லை கடந்தநிலை; ஆடல் நிலையே அருள்வைப்பு"*

என்கிறார். 'சீலமே சிவம்' என்பது ஆறாம் பகுதி. திருமூலர் மந்திரமொழியென இலங்குகிறது சிவப்பாடல் கலிவிருத்தம் ஐந்தும்.

மின் ஒன்று; அதன் குவை, நிறங்கள் பலபொருந்துதல் போலச் சிவமொன்றே பலவுருவாய் விளங்கும் என்கிறது **உருவம்.**

கலை உருவப் பயன் கண்ணையும் கருத்தையும் கவரும் மாட்சியைக் காட்டுவது என்கிறது கலை உருவம்.

**உருவப் பயன்** என்பதில் செஞ்சடை, கங்கை முதலியவற்றால் அறியவரும் உண்மைகளை விரித்துரைத்து, "உள்ளுறை கோலம் கொண்ட உத்தமா போற்றி போற்றி" என முடிக்கிறார். புராணக் கலைகளில் உள்ளுறை உண்டு; அவற்றை உணராது கதைகளாக மட்டும் கொள்ளல் பாழாம் என்னும் திரு.வி.க. கதைகளின் நுட்பங்களைக் குறிப்பது புராணக்கலை. "மும்மலம் அழிக்கும் நுண்மை முப்புரம் எரித்த காதை" "நம்முயிர் சிவமாம் தன்மை நாடுதல் வள்ளிக் காதை" என்பவை அவற்றுள் இரண்டு. சாதிப்பிரிவு, பெண்ணிழிமை முதலியவை கூறும் மூடக் கதைகளைக் கடியும் திரு.வி.க. நற்பயன் விளைக்கும் காவியக் கதைகளை வரவேற்கிறார். இது புராணக் கலையின் இரண்டாம் பகுதி. நூலை ஐந்தகப் பாவாகவே கொண்டு செல்லுதலால், வேறு சில தலைப்புகளிலும் இரட்டை காண்கிறோம்.

அடுத்துவரும் இரட்டை, **வழிபாடு.** ஒன்றாத மனம் ஒன்றச் செய்வது வழிபாடு . அது திருத்தொண்டர் வழிபாடாய், திருநாட்டு வழிபாடாய்த் திகழக் குன்றை முனி (சேக்கிழார்) அருளியதைச் சுட்டுகிறார். சன்மார்க்கம் பெருகவும், தொண்டு புரியும் வாழ்வே மல்கவும் வேண்டுகிறார். அடுத்த பகுதி **'மன அடக்க'** இரட்டை. மனம் மந்தி என்பர்; மனம் ஐந்தின் தளை அறுத்தால் மந்தி என் செய்யும்; சிவத்தை நினைந்தால் மறக்குறும்புகள் மாயும்; சிவ நிலையாவது தவநிலை; செருக்கு அழிநிலை எனத் தெளிவிக்கிறார்.

ஒருமை வழிபாடாய்ப் பண்டு இருந்தது; பின்னே பலர் என வழிபாட்டில் இருக்குகள் ஆயின. பால்திக் நாடு, நீலாற்றுப் பகுதி களிலும் பண்டு சிவ வழிபாடு திகழ்ந்தது. அவ்வழிபாடு பெருகுதல் அமைதிக்கு வழியாம் என்பது உலகப்பாட்டு. பாரத இயற்கை எழில் வழங்கும் இறைமையை விளக்குவது பாரதப் பாட்டு. சிவத்தை நினைத்தால் நரைதிரை மூப்பின்றி வாழலாம்; உயிர்ச்சமநிலை, பெண்ணுரிமை, அகத்தழுக்கு நீக்கம், பொதுமையறம் என்னும் சீர்திருத்த மூலம் சிவமென்பது சீர்திருத்த இரட்டையாம்.

அன்புருவாம் இறையை அன்பால் அடைந்த அடியார்களை அடுக்கி யுரைப்பது அன்புப்பாட்டு. சிவநாமம் சொல்லல், சிவவுருவம் எண்ணல், நிகழின் கல்லால் மரத்துக் காட்சியைக் காணலாம். அது, கல்லாக் கலைபயில் பள்ளி எனச் சிவநாமா வளியை நிறைக்கிறார். உருவமாட்சியில் ஒன்றி அருவ இறையை உணரச் செய்விப்பதற்கு அமைந்த நூல் சிவனருள் வேட்டல்.

# கிறிஸ்து மொழிக்குறள்

*கிறிஸ்து பெருமான் மொழிந்த செய்திகளைக் குறள் யாப்பால் கூறும் சுவடி கிறிஸ்து மொழிக்குறள் என்பது பெயராலேயே விளங்கும்.*

*"கிறிஸ்து பெருமான் மொழிகளைத் தழுவியே பாடிச் சென்றேன்" என்று தம் முன்னுரையில் குறிப்பிடுகிறார் திரு.வி.க.*

*கிறிஸ்து பெருமான் நற்செய்திகளைத் தமிழில் வடிக்க நெடிய காலத்திற்கு முன்னரே வேட்கை உண்டாகியதையும் அதனை நிறைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுப் பயின்றதையும் பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டத்தின்போது வீட்டுக் காவலில் வைக்கப் பட்ட நிலையில் நூல் இயற்றியதையும் முன்னுரையில் சுட்டுகிறார்.*

*"இந்நூற்கண் திரட்டப்பட்டுள்ள மணிமொழிகள் அப்படியே அடுக்கப்படவில்லை. அவை, கருத்துக்கு இயைந்த முறையில் ஒவ்வொரு தலைப்பின் கீழ் ஒல்லும் வகை ஒழுங்கு செய்யப் பெற்றன. இதனால் சில இடங்களில் தொடர்பின்மை காணப்படும்" எனப் பொருள் வைப்பு முறை பற்றிக் கூறுகிறார்.*

*காந்தியடிகளின் பருவுடல் வீழ்ச்சி நூல் வெளியீட்டை உந்தியமையைச் சுட்டும் திரு.வி.க., தோற்றுவாய்க்கு முன்னர்க் 'காந்தியடிகட்கு' ஒன்பான் கண்ணிகளைப் பெய்துள்ளார். இறுதிக் கண்ணியில்,*

***"ஏசுநாதன் இசைத்த மலைமொழி***
***ஏனை வாய்மொழி ஏந்தி ஒழுகினை***
***நேச அம்மொழி நேர்ந்தஇந் நூலினை***
***நினைவுக் காக்கினன் நின்னடி வாழ்த்தியே"***

*என்கிறார்.*

*தோற்றுவாய், மலைமொழி, மணிமொழி, இறுவாய் என்னும் நாற்பகுப்பில் நூல் நடையிடுகின்றது. குறட்பா எண்ணிக்கை 541.*

*'அரசற்ற சமூகப் புதிய நல்ல அமைப்பே'*

*என்றும்,*

*'அரசற்ற ஒன்றே மக்களாட்சி அல்லது முழுப் பொதுமை'*

*என்றும்,*

'மார்க்சினுடையது சடப்பொதுமை; கிறிஸ்துவினுடையது தெய்வப் பொதுமை இரண்டுக்கும் பொதுவில் பொலிவது பொதுமை' என்றும்,

கிறித்து மொழி வழியாகத் தோற்றுவாயில் தம் உள்ளீடு களைப் பதிவு செய்கிறார்.

***"ஒல்லும் வகைதழுவி ஓதவும் வான்மலையை***
***இல்லை தகுதி எனக்கு"***

***"ஐயன் அருள்மொழியை அன்பால் உளறுகின்றேன்***
***வையம் பொறுக்க மறு"***

இன்னவை **அவையடக்கம்** என்ன அமைந்த நூனெறியாம்.

***"என்னுள்ளே நீபிறந்தாய் ஏசு பெருமானே***
***உன்னுள்ளே யானிறந்தேன் உற்று"***

என்று கிறிஸ்துவின் அருள் வேட்டலில் குறிப்பிடுவார் திரு.வி.க. 'என்னுள்ளே நீ பிறந்தது' என்பது ஏசுபெருமான் வாழ்வாலும் வாக்காலுமேயாம் என்பதைத் தெளிவிப்பதே மலைமொழியும் மணிமொழியுமாம்.

பாடலின் இயல்பான ஓட்டம், எளிமை, இனிமை, பொருள் விளக்கம், பாவாக்கம் என்பவற்றுக்குக் காண்க.

***"போக்க வரவில்லை போந்தேன் நிறைவேற்ற***
***ஏக்கமுற வேண்டா இனி"*** (18)

***"காணிக்கை ஏந்திக் கடவுள் திருக்கோயில்***
***பேணினுளச் செம்மை பெறு"*** (29)

***"நேயரையே நேசித்தால் நேர்பயன் என்னையோ***
***ஆயரும் செய்வ தது"*** (66)

இங்கே வரும் ஆயர் 'மக்களைத் தொல்லைக்குட்படுத்தி நெருக்கிப் பறித்துண்ணும் ஒரு கூட்டத்தினர்' என்பது திரு.வி.க. குறிப்புரை.

***"தேவை இதுவென்று செம்மொழியால் வேண்டுமுனம்***
***தேவன் உணர்ந்துள்ளான் தேர்"*** (85)

***"நாளைக் கெனக்கவலை நண்ணாதீர் நாளைக்கு***
***நாளை கவலையுறும் நாள்"*** ***(122)***

***"மற்றவர்க்கு நீரளத்தல் எவ்வளவோ அவ்வளவே***
***உற்றிடும் நுந்தமக் கூர்ந்து"***

இவை மலைமொழிகளுள் சில.

***"ஆக்கையைக் கொல்வோருக் கஞ்சற்க; ஆன்மாவைப்***
***போக்கஅவர்க் குண்டோ புலம்"*** (8)

***"அப்பன் மகனை அனுப்பினன் இவ்வுலகை***
***ஒப்புர வாக்க உவந்து"*** (28)

***"குழந்தைகள் என்பால் குலவ விடுக***
***விழுந்துதடை செய்யாதீர் வேர்த்து"*** (141)

***"எங்கிருவர் மூவரோ என்பெயரால் கூடினால்***
***அங்கிருப்பேன் நடுவில் ஆர்ந்து"*** (172)

*இவை மணிமொழிகளுள் சில.*

*நூல் முன்னுரையில் 'குணம் கிறிஸ்துவின்பாலது; குற்றம் என் பாலது' என்று திரு.வி.க. கூறுவது அவர்தம் சான்றாண்மைச் சான்று.*

# இருளில் ஒளி

'இருளில் ஒளி' சுவடிப் பெயர். இருட்போதில் 'ஒளி' வந்தால், இருள் நிற்குமா? ஒளி வரும்போதே இருள்தானே அகன்று விடல் கண்கூடு.

உயிரியாம் மாந்தர்க்குப் புறவொளிக் கண்கள் உள; அவற்றொடு உள்ளொளி பெருக்கும் அகக்கண்ணும் உண்டு. அகங்கண் - அங்கண்; உள்ளொளியாம் அகம்கண்.

திரு.வி.க. வின் கண்கள் படலத்தால் ஒளி இழந்த போதில் உள்ளொளியால் பாடப்பட்ட நூல் இந்நூல்.

"இந்நூலுக்கு எத்தலைப்பு வேயலாம் என்று சிந்தித்தேன். முதலில், 'முதுமை உளறல்', 'காலக்குறள்', 'கட்டில் காற்று' முதலியன தோன்றின. அவற்றிடை 'இருளில் ஒளி' என்று ஒலித்தது. அதையே தலைப்பாக வேய்ந்தேன். புற இருளில் அக ஒளியால் ஆக்கப்பெற்ற ஒரு நூலுக்கு 'இருளில் ஒளி' என்னும் தலைப்புப் பொருந்தியதே; சாலப் பொருந்தியதே" எனத் திருவி.க. தம் முன்னுரையில் குறிக்கிறார்.

முன்னுரைக்கு முற்பட பார்வை இழந்த மில்தனார், சுந்தரர் பாடல்களை வைக்கிறார். முன்னுரை நிறைவிலும் கசிந்துருகு பாடல்களை வைக்கிறார். தாம் பலதிறத் தொண்டுகளில் ஈடு பட்டமையால் நூல்தொண்டு இரவிலேயே செய்ய நேர்ந்ததையும், உறக்கம் கெட்டதையும், உடல் கெட்டதையும், கண்ணொளி குன்றி யதையும் கற்பார் உளம்கொள உரைத்து, அவர்க்கு உடலோம்பல் வழியைத் தெளிவிக்கிறார்.

உள்ளொளி, படுக்கையில் பிதற்றல், முதுமை உளறல் முதலிய சுவடிப் பெயரீடுகளையும் உணர உணர்த்துகிறார். படுக்கையில் கிடந்து சொல்லி எழுதிய வகையால் கிடைத்த நூல்களுள் ஒன்று இருளில் ஒளி. ஒரு நல்ல பிறவி இறுதிமூச்சு வரை தொண்டாற்றலைக் கைவிடாது என்பதற்குச் சீரிய எடுத்துக்காட்டு திரு.வி.க. வாழ்வும் இத்தகு நூல்களுமாம்.

பரம், படைப்பு, கல்வி, அரசு, உடல், எண்ணம், வாழ்க்கை, உலகம், அறம், சமயம், தீர்க்கர், வாழ்த்து என்னும் பன்னிரு குறுந்தலைப்புகளில் நூல் அமைந்துள்ளது. இதில் அமைந்துள்ள குறட்பாக்கள் 652 ஆகும்.

தலைப்புக்குப் பொருள் வரம்பை அன்றி, எண்வரம்பு கொள்ளப்படாமையால் 12 குறள் கொண்ட தலைப்பும் (12) 80 குறள் கொண்ட தலைப்புகளும் (3, 5) இடம் பெற்றன. வேண்டும் குறிப்புரையும் அடிக்குறிப்பாக உண்டு.

***"எப்பொருளும் கோயிலே எவ்வுயிரும் கோயிலே***
***ஒப்பில் பரத்துக் குணர்"***

***"உள்ளம்உரைக் கெட்டா உயர்பரமென் றஞ்சறக***
***உள்ளுக சூழியற்கை உற்று"***

பரத்திற்கு இலக்கணமும் பரத்தை அடையும் வகையும் கூறியவை இவை.

உள்ளது சிறத்தலாம் கூர்தலறமே படைப்பு என்பதை,

***'கூர்தலறத் தத்துவம் கூறும் படைப்புநுட்பம்***
***தேர்தல் அடைதல் திறம்"*** என்கிறார்.

உயிர்கள் என்னும் இறை உலகைப் பலவிதமாய் உண் டாக்குதலை நண்டு வளைஎடுத்தல், சிதல் புற்றெடுத்தல், வண்டு ஈடுகட்டடல், பறவை கூடு கட்டடல், விலங்கு குகை தேடல், குரங்கு கிளையேறல் வழியாக,

***"குடிசையும் மாடியும் கோபுரமும் மக்கள்***
***படியில் எழுப்பினர் பார்"***

எனப் படைப்புத் தூண்டலைக் குறிக்கிறார்.

***"கல்லூரிக் கல்வி கழகத்துக் கல்வியெலாம்***
***மல்லூரும் கல்வி மயக்கு"***

***"ஒருகுண்டால் பாரழிவை உன்னுவதோ கல்வி***
***பெருகுபுயல் வேண்டாவே பேசு"***

***"கல்வி கொனலயாகும் காலமும் வந்ததே***
***அல்லல் அகல்வழியை ஆய்"***

என நிகழும் கல்விமுறையைக் கடியும் திரு.வி.க,

***"குருகுலக் கல்வியைக் கூர்ந்துகூர்ந் தாய்க***
***பெருகும் அறிவொளிப் பேறு"***

***"தாவரம் கற்பிக்கும் சார்புயிர் கற்பிக்கும்***
***பாவுகதிர் கற்பிக்கும் பார்"***

***"உள்ளத்தை உள்ளம் உணர்கல்வி மக்களிடைக்***
***கள்ளம்பொய் நீக்கும் கடிது"***

என வேண்டத்தக்க கல்வி மாண்பைத் தூண்டி எழுப்புகிறார்.

இற்றைக்கு ஐம்பத்து ஆறு ஆண்டுகளின் முன்னை இருந்த கல்வியே இக்குறைகளுக்கு இடமாயின், இற்றைநிலை இதன் நூறுமடங்கு இழிவுடையதாம் எனல் வெளிப்படை.

***“வறுமை மடமை வளர்க்கும் அரசு***
***சிறையைப் பெருக்கல் சிரிப்பு”***

***“வறுமை பசிநோய் மடமை முதலாம்***
***சிறுமை ஒழிஅரசைத் தேடு”***

***“ஆண்பெண் உரிமையுடன் அன்பாய் உலவிவரப்***
***பேண்பெரிய ஆட்சியே பேறு”***

இன்ன அடிப்படை கொண்ட அரசை அவாவுகிறார் திரு.வி.க.

***“காற்றின் மகவாகிக் காலம் கழிப்பவரைக்***
***கூற்றம் அணுகாது கூர்ந்து”***

***“கீரையும் மோரும் கிளர்குடல் மாசுகளின்***
***வேரைக் களையும் விரைந்து”***

***“உணவு செரியாமுன் உண்டுண் டடைத்தல்***
***பிணவுடலம் ஆக்கும் பிணித்து”***

***“உடம்பிறை கோயிலெனும் உண்மை உணர்ந்தோர்***
***திடம்பட மெய்யென்றார் தேர்ந்து”***

என்பவை உடல்நலக் குறிப்புகளுள் சில.

எண்ணத்தால் சிறந்த மக்களையும் எண்ணத்தால் இழிந்த மக்களையும் இவர் இவர்என எடுத்துக் காட்டிய அருமையது எண்ணப்பகுதி.

***“எண்ணம் உடலோம்பும்; எண்ணம் உயிரோம்பும்;***
***எண்ணம் உலகோம்பும்; இன்பு”***

என எண்ணநலம் கூறும் திரு.வி.க.

***“செல்வத்துட் செல்வமெது? தீயெண்ணர் ஆகாமை;***
***கல்வியில் கல்வியது கல்”***

என்று நல்லெண்ணக் கல்விச் செல்வத்தைக் கற்கத் தூண்டுகிறார்.

தேவைக்கு மேலெண்ணாச் சீரிய வாழ்க்கையை விரித்துரைக் கிறார்; ஏழ்மைக்கு உதவுதல் ஏழ்மையை வளர்ப்பது; ஏழ்மை பெருகா வளவாழ்வு வேண்டும் எனத் தேர்ந்துரைக்கிறார்.

பொதுமை உலகையும் புதுமை உலகையும் எதிர்நோக்கிப் பாடுவது உலகம். ஈருலகப் பெருமக்களையும் கொள்கைகளையும் விரித்துரைக்கிறார்.

***“உலகமே ஒருடலாய் ஒத்துயிரோர் அன்புக்***
***குலமுகிழ்த்தால் என்னகுறை? கூறு”***

என வினாவுகிறார்.

வள்ளுவ அறம், விவிலிய அறம், காந்திய அறம் ஆயவற்றை நறுக்குத் தெறித்தாற் போல் கூறுகிறது அறம்.

*சமயங்களில் சார்ந்துள்ள அழுக்குகளை விரித்துரைக்கும் திரு.வி.க. சமயச் சால்புகள் எவையெனவும் காட்டுகிறார். சன் மார்க்கச் சிறப்பை,*

***"பன்மார்க்கத் தீங்குகளைப் பாரில் ஒழிக்க எழு***
***சன்மார்க்கம்"***

*எனப்பாராட்டுகிறார்.*

*தீர்க்கர் என்பார் குருமார். தீர்க்கச் சிறப்பை,*

***"மக்களின் துன்பமும் மற்ற உயிர்த்துன்பமும்***
***ஒக்கநினை தீர்க்கம் உயர்வு"***

*என்று கூறி, வாழ்த்துடன் நூலை நிறைவு செய்கிறார்.*

# இருமையும் ஒருமையும்

இருமை என்பது இரண்டு. இது பன்மையின் அடையாளம்; பன்மை என்பதன் இலக்கணம், ‘ஒன்றல்ல பல’ என்பதாம்.

வடமொழியர் ஒருமை, இருமை, பன்மை என மும்மைப் படுத்துவர். தமிழரோ ‘ஒன்றல்லது பல’ (பன்மை) எனக் கண்டனர்.

உலகம் இருமைப்பட்டது; ஒவ்வொன்றும் இருமைப் பட்டவை. இருவேறு ‘உலகத்து இயற்கை’ என்பது வள்ளுவம். ஆக்கமும் கேடும் என்பவை அவை.

கொடுப்பதும் மழை; கெடுப்பதும் மழை;

சோறாக்கும் தீயே, சுட்டெரிக்கவும் செய்யும்.

மூச்சுக் காற்று, தென்றல் நிலையும் ஆகும். மலையைச் சாய்க்கும் நிலையும் ஆகும்.

ஒழுக்கம் இழுக்கம்; அவா, துன்பம்;

நோய், நலம்;

தண்மை, வெம்மை;

எல்லாமும் இருமையாய் நிற்றல் வெளிப்படை.

கடிகையாரம் பன்மை;அப்பன்மை உறுப்புகளின் இயக்கம் ஒருமை.

உடல் பன்மை; அப்பன்மை உறுப்புகளின் இயக்கம் ஒருமை;

இருமை ஒருமையாதல் - ஏன்? பன்மை ஒருமையாதல் வேண்டும்!

பன்மையுள் ஒருமை காணும் பான்மையே ஆக்கம்.

ஒருமையைப் பன்மையாக்கல் அழிப்பு, சிதைப்பு.

உடற்கூறு - உடலியக்கம் - உள இயக்கம் - அறிவியக்கம் என்னும் இயக்கம் அனைத்தும் இருமையில் ஒருமையாய் இயல்பவை.

மாந்தன் இரண்டு காலால் ஒருமுக நடையிட்டால், விலங்கு நான்கு காலால் நடையிடுகிறது; அறுகால் பூச்சி, எண்கால் பூச்சி என்பவை ஒரு முக இயக்கம் கொள்கின்றன; ஆயிரம் கால் பூச்சியும் அப்படியே ஒருமுக இயக்கம் கொள்கின்றது. ஆயிரம் ஆறுகள் ஒரு கடலாய் ஒருமா கடலாய்ப் பெருக்கம் காட்டுகின்றன.

ஆயிரம் தெய்வம், ஆயிரம் சமயம் எனினும் அவை ஒருமையான வையே " தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத்தீயை வளர்ப்பவர் மூடர் " என்பது பாரதி பாடல்.

"ஒருருவம் ஒரு நாமம் ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம் நாமம் சொல்லல்" என்பது மணிவாசகர் மொழி.

இருமையில் ஒருமை காணும் உலகம் உய்யும்!

ஒருமையைப் பன்மையாக்கும் பார்வை, கெடுத்தொழிக்கும் உலகை. இருமையில் ஒருமை கண்ட திரு.வி.க. தம் காட்சியை உலகுணர வைக்கிறார். இருமையும் ஒருமையும் என்பது நூலின் பெயராயிற்று.

"இச்சிறு நூலில் பல பொருள்கள் செறிந்து கிடக்கின்றன. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று இருமை; மற்றொன்று ஒருமை" என்கிறார் திரு.வி.க.

இச்சுவடி 1930 இல் வெளிவந்தது. அகவல் நடையது. அடியால் 405 கொண்டது.

கண்ணொளி இழந்து படுக்கையில் இருந்த நிலையில் நினைவில் இருத்தித் தக்கார் ஒருவர் எழுதச் சொல்லியது ஆகும்.

எதுகை மோனை எங்கெங்கும் விஞ்சி நிற்கின்றன. தொடர் தொடராகப் பொருள் விரிகின்றது.

"கடவுளே! கடவுளே! கண்ணளி கடவுளே எனத் தொடங்கி, அதே தொடராலேயே நிறைவு கொள்கின்றது.

கண்ணொளி குன்றுங்கால்

உள்ளொளி விஞ்சும் என்பதை,

" முதுமையில் எனது கண்களைப் படலத்தால் மறைப்பித்துச் சிந்தனா சக்தியைப் பெருக்கி, என் மனத்தில் எழும் கருத்துக்களை உளறுமாறு செய்துள்ளதை" என்னும் முன்னுரையால் சுட்டுகிறார். இதன் விளக்கம் 'உள்ளொளி' யில் காணவும் ஏவுகிறார்.

கடவுள் நிலை இரண்டு, என்பதை "இயற்கையைக் கடந்தும் கலந்தும் நிற்றல்" என்கிறார். கடந்த நிலையினும் கலந்த நிலையே அருள்நிலை எனத் தெளிகிறார்.

உலகம் இருமையாய் இயக்கமுறுதலை நூற்றுக்கணக்கான சான்றுகள் காட்டி வளர்ச்சி பெருகப் பெருக அழிவு பெருகுதலும், ஆசைப் பேய் ஆட்டிப் படைத்தலும் ஆசையை ஒழித்து,

'இருமை மடிய ஒருமை படிய' (200) நேர்தலைக் காட்டுகிறார்.

ஒருமைத் திருவை அடையாமையே அலைக்கழிவு என விளக்குகிறார்.

'ஐந்து பூதம் உந்தியது ஆவி' (236) எனும் கொள்கை அறிவிய லால் விளக்கம் பெறும்.

***"ஆவியின் உண்மை அறிந்தவன் வீரன்"*** *(252)*

***"அவனே நற்றவன்; மற்றவன் பாவி"***

***"தன் குறை மறைக்கப் பிறர்குறை பேசுவன்;***
***தன் புகழ் நாடிப் பிறர்தமை இகழ்வன்;***
***தன்னலம் கருதிப் பிறரை வதைப்பன்;***
***பருத்த உடலைத் திருத்தவே முயல்வன்;***
***உள்ளம் திருத்த உள்ளவே மாட்டான்"*** *-258-262*

***"உள்ளம் திருந்தின் கள்ளம் போமே"*** *306*

***"ஒழுக்கத் தொண்டுகள் பழுக்க ஆற்றுவர்;***
***அவரே அந்தணர் அவரே முனிவர்***
*அவரே சித்தர் அவரே புத்தர்*
*அவரே பெரியர் அவரே தொண்டர்*
*அவரே இனியர் அவரே மனிதர்" - 370-374*

***"ஒருமை, பன்மையில் மருவித் திகழும்*** *- 290*
***மக்கள் எல்லாம் ஒக்கல் ஆவர்.***
***மற்ற உயிர்களும் சுற்றம் ஆகும்***
***உலகம் ஒருமைக் குலமாய் இலங்கும்"*** *394 - 396*

என இறையருள் வேண்டி நூலை நிறைக்கிறார்.

திரு.வி.க. நூல்களின் ஊடகம் பொதுமை! பொதுமை நலம்! பொதுமை நலப்பேறே!

என்பது இச்சுவடியாலும் விளங்கும்.

# அருகன் அருகே அல்லது விடுதலை வழி

திரு.வி.க. நூல்கள் பெரிதும் அவர் முன்னுரை கொண்டே அமையும். அரிதாகப் பிறர் முன்னுரை பெற்ற நூல்களுள் ஒன்று இந்நூல். அருக சமயத்தரும் அச்சமயத்தில் ஆழங்கால் பட்ட குடிவழியும் ஆய்வுவழியும் கொண்டவருமாகிய சக்கரவர்த்தி நயினார் முன்னுரை அதுவாம்.

"யான் எம்மதச் சார்புடையவனும் அல்லன்; மதவெறியனும் அல்லன். எவ்வித வெறியும் என்னை அலைப்பதில்லை. சமயங்களிலுள்ள ஒருமையை வலியுறுத்துவது எனது வழக்கம். அவ்வொருமை 'சன் மார்க்கம்' என்று விளக்கப்படுகிறது" என்று நூல் முகவுரையில் தந்நிலை விளக்கம் செய்கிறார் திரு.வி.க. அவர் வரலாற்றையும் அவர் நூல் களையும் கற்றார் எவர்க்கும் பளிச்சிட்டுத் தோன்றும் ஒளி ஈதாம்.

முதல் தீர்த்தங்கரர் விருசபதேவர்; இன்னா செய்யாமைக் கொள்கையை உலகுக்கு அருளியவர். அக்கொள்கையே உலகை உய்விக்கும் எனத் தேர்ந்து தெளிந்தவர். அக்கொள்கையில் அழுந்தி நின்ற சன்மார்க்கர் திரு.வி.க. ஆதலால் போருலகம் ஒழிந்து அமைதிப் பேருலகம் தோன்ற வேண்டும் என்னும் அவாவில் இந்நூலை இயற்று கிறார். சொல்லி எழுதிய நூல் இது. ஓடும் ஓட்டத்தில் தட்டுத் தடையின்றி எடுத்த கருத்துகளை இயம்ப ஏற்ற நடை அகவல்நடை. அவ்வகவல்பா ஒன்றே நூலாகின்றது. அதன் அடி 425.

**பெருமன்** என்பான் ஒருவன்; **தவனன்** என்பான் ஒருவன்; இருவரும் உடன் பயின்றவர். நெடுநாள் கழித்து இருவரும் கடற்கரை மணற்பரப்பில் சந்திக்கின்றனர். அமைந்து பேசுதற்காக அலைவாய்க் கரையை அணுகி அமர்ந்தனர்.

இயற்கை எழிலும் இயக்கமும் அமைந்த அவ்விடத்துக் காட்சிகளில் ஆர்வம் இல்லாமல் பெருமன் இருத்தலைக் கண்ட தவனன் "என்ன நண்ப! உன்றன் கவலை இன்னல்" என்றான். "என்னிலையை எப்படி உணர்ந்தாய்? எங்கே உளநூல் கற்றாய்?" என்றான் பெருமன்.

"உன்னைத் தழுவிய போது நழுவியது உன்கை; நடந்து வந்த போது உன் கால்கள் பின்னிட்டன; இயற்கையைக் கேட்க இசைந்தில காதுகள்; இவை உன்னிலை உணர்த்தின" என்றான் தவனன்.

பெருமன் கண்ணீர் வடித்து மண்ணில் சாய்ந்தான். தவனன் தன் மடியில் கிடத்தித் தேறுதல் கூறினன். "கவலையுறாதே; கவலை சவலை ஆக்கும்; நரம்புக் கட்டை அழிக்கும்; அல்லல் ஆக்கும்; தவநெறி நின்றால் கவலை ஒழியும்" என்றான்.

விழுந்த பெருமன் எழுந்தான், " என்னிலை கேட்க என்று சொல்லலானான். 'படிப்பு விடுத்தேன்; பணம் பெற்றேன்; கள்ள வணிகம் புரிந்தேன்; குடித்தேன்; களித்தேன்; கயமையன் ஆனேன்; ஒதுங்க ஓரிடமில்லை. அரசியலில் புகுந்தேன்; சட்டமன்றும் சென்றேன்; பொய்க்கலை கற்றேன்; வறுமையும் நோயும் கவலையும் வாட்டலாயின; உலகம் வெறுத்தது; முடிவு காணக் கடலை அடுத்தேன்; கண்டேன் உன்னை" என்றான் பெருமன்.

உயிரின் விடுதலைக்காகவே உடலைத் தாங்கினோம்; தவத்தை அழிப்பது கவலை; அதனை விடுக. கவலையை ஒழிக்க வழிகள் சில உள. ஒன்று: வள்ளுவர் கூறியது. 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு மனக்கவலை இல்லை' என்பது; 'அவனைப் பற்றுக' என்று தவனன் சொல்லவும், 'அவன் யார், அருள்க' என்றான் பெருமன்.

கோசலநாட்டு அயோத்தியில் கதிரொளி தோற்றிய தோற்றம் போலத் தோன்றி இல்லறம் ஏற்று பல்வகை அறங்களும் பாலித்து வளர்த்தவன். 'அகிம்சை மேலாம் அறமென முதல் முதல் அருளியவன்; மன்னுயிர் ஓம்பி எல்லா உயிரிலும் இருக்கை பெற்றவன்; ஆட்சி துறந்து ஐம்புலம் வென்று அசோகின் நிழலமர்ந்து அறமுரைத்தவன்; உயிரிகள் அனைத்தும் ஒன்றாய்ப் பரிவு கூரத் தவத்தில் ஓங்கிப் பரகதி அடைந் தவன்; அவனே அருகன்; அவனை அடைந்தால் விடுதலை வழியைக் கடிதில் பெறலாம்" என்றான்.

அறக்கூறுகள் அனைத்தும் அருகம்; அகிம்சை அறமே அருகம்; அருக அருளறம் உலகச் சமயங்களாய் விரிந்தது; கலக உலகம் உய்ய அருக அறப்பணி வேண்டும்; மிகுபொருள் விரும்பாச் சீலம் தோன்றின் போர்கள் ஒழியும் என்று கூறினான்.

"என்னவோ நினைந்து இங்கே வந்தேன் என்னை ஆள இங்கே குருவாய் எழுந்தனை" என்ற பெருமனைத் தவனன், " உன்னுவம் பணியென" உரைத்து அருட் பணியாற்றக் கிளர்ந்தனர்; பிறர்க்கென வாழும் வாழ்வில் பிறங்கினர். கூறவிரும்பும் கருத்தை கதை வடிவாலும், உரையாடல் வகையாலும்வெளிப் படுத்துதல் திரு.வி.க. கொண்ட உத்திவகைகளுள் ஒன்று என்பதற்கு இந்நூல் ஒரு சான்று.

# பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்

"பொருள் மார்க்ஸியம்; அருள் காந்தியம்" என நிரல் நிறை அணிநயம் பெறும் தலைப்பு இது. "மார்க்ஸியத்தின் உயிர்நாடி பொருள்; காந்தியத்தின் உயிர்நாடி அருள்" என்பது திரு.வி.க. முன்னுரை.

அருளிலாப் பொருள் வளம் ஆக்கம் ஆகாது; அவ்வாறே பொருளிலா அருளும் பொருந்திய நலம் ஆக்காது. இரண்டன் ஈட்டமும் கூடின் வீட்டு நலமும் நாட்டு நலமும் உலகிலும் ஓங்கும்.

***"அருள்என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்***
***செல்வச் செவிலியால் உண்டு"***

என்னும் பொய்யா மொழி மெய்யாம் நெறி விளக்கம் இந்நூல் எனலாம்.

திருவிக. தொண்டில் பெரிதும் கவர்ந்து கொண்டது தொழிலாளர் தொண்டு. அத்தொண்டு பொருளியல் வழிப் பட்டது என்பது வெளிப் படை. பொருளியல் ஆய்வு விளக்கம் மார்க்சியம். அதில் மட்டும் தோய்ந்தார் அல்லர் திரு.வி.க. காந்தியத் தொண்டையும் உயிர்ப் பாகக் கொண்டவர். இரண்டன் இணைவே உலகநலமாக்கும் என்பதைத் தம் ஆய்வு வழியாலும் இயக்க வழியாலும் தேர்ந்து தெளிந்த பட்டறிவே அவர் யாத்த எந்நூற்கண்ணும் பொதுளி நிற்கக் காணலாம். அதன் சிறப்புத் தனிவெளிப்பாடு இஃதாம்.

இந்நூல் அகவல் நடையது; ஒன்பான் பகுப்புடையது. புனைவுக் காட்சியும் பொருந்திய விளக்கமும் பொலிவது; இயற்கைக் கொழுமைச் செறிவு மிக்கது; வரலாற்று வளமும் தேக்கியது. 1284 அடிகளால் நடைநயம் புரிவது.

இரண்டாவதாம் குருகுலக் காட்சியில் 'வடலை' என்றொரு நாடும் 'திடலை' என்றொரு நாடும் விரித்தோதப்படுகின்றன. வடலை வளமும் திடலை வளமும் தனித்தனி ஓதப்படுகின்றன. இரண்டற்கும் இடையே இயற்கைக் குருகுல ஆட்சியும் மாட்சியும் உரைத்து அமைதி உலகம் அரும்ப ஆற்ற வேண்டும் தொண்டை உரைக்கிறார்.

ஆதிமனிதன் நீதியில் வாழ்ந்ததும் வர்க்கப் பிரிவு இல்லாமையும் இயற்கை இன்பம் எய்தியதும் பேசி, ஆசைப் பேய் அரசுக்கேடு அணுஆய்வு அறிவியல் வெறி இன்னவை பேசி, 'ஆதி நீதி' இயற்கைச் சூழலால் எய்தும் என்கிறார்.

வளர்ச்சி வகை, கருத்து வேற்றுமைக்கு இடம் தரல், திருந்திய உணவு, அறிவியல் ஆக்கம், பொருளும் அருளும் என்பவை 'வளர்ச்சியும் விஞ்ஞானமும்' என்னும் பகுதியில் ஓதப் படுகின்றன. ஐந்தாம்பகுதி 'பொருள்' என்பதாம். பொருள் நூல், காவியம், பொருளும், சீலமும், அருளாளர் உரைகள் அதில் இடம்பெறுகின்றன.

அடுத்தபகுதி அறப்புரட்சி என்பதாம். 'நரம்பிநாடு', 'விரும்பிநகர்' 'கொள்ளி' என்பான் ஆட்சியன் எனப் புனைந்து அவன் கொடுங் கோன்மை, 'மரணநாளில் புங்கவன் ஒருவன் உரையால் இரத்தம் சிந்தாப் புரட்சி நிகழ்ந்தது' 'அறத்துப் புரட்சியைக் கருத்தில் கொள்க' என்கிறார்.

அடுத்த பகுதி அறம் (8) 'பொன்னன்' 'வள்ளல்' என்பார் அன்புப் பதியில் இரட்டையராய்ப் பிறந்தனர். அவர்தம் ஆட்சி அறப்பணி என்பவற்றைக் கூறி அருளறம் வேண்டுமென நூலை நிறைக்கிறார்.

இந்நூல் மணிமொழிகள் சில:

***"உழவும் தொழிலும் விழவா நடக்கும்"***

***"இல்லார் இல்லை; கல்லார் இல்லை"***

***"மாந்தர் கைகள் ஏந்தி நில்லா"***

***"கூட்டறம் தன்னலம் ஓட்டல் இயற்கை"***

***"கலகம் எழுப்பாக் கருணை விடுதலை"***

***"ஈர நெஞ்சில் வீரமும் தியாகமும்"***

***"கருத்து வேற்றுமை பொருத்தும் வளர்ச்சியை"***

***"மிகுபொருள் விரும்பா மேன்மை ஒழுக்கம்"***

***"சீலம் அழிக்கும் ஆலம் தன்னலம்"***

***"மாசில் மனத்தில் நேசம் நிலைக்கும்"***

"இந்நூற்கண் மார்க்ஸியச் சாரம் பிழியப்பட்டிருக்கிறது. அதனுடன் காந்தியத்தேனும் கலந்துள்ளது" என்னும் திரு.வி.க. முன்னுரை, 'இக்காலப் பொருளியல் நோய்க்கு மருந்து இதுவே' என்பதை உட்கொண்டு உரைக்கும் தொடராகும்.

# சித்தம் திருந்தல் அல்லது செத்துப்பிறத்தல்

தமிழுக்கு வாய்த்த பாவகையுள் இயல்பும் எளிமையும் ஓடும் ஓட்டமும் அமைந்த பா அகவற்பா. அதன் ஒலியை மயிலின் 'அகவல்' ஒலியாகக் கூறுவர். ஆசிரியர் தம் கருத்துகளை மாணவர்க்குத் தந்து மனத்தில் பதித்து எளிதில் வரப்படுத்த வாய்த்த பா அகவல் ஆயிற்று. அதனால் அதற்கு ஆசிரியப்பா என்றொரு பெயரும் வாய்த்தது.

அகவலாம் ஆசிரியப்பாவின் இலக்கணம் மிகச் சுருங்கியது. "ஈரசை நாற்சீர் அகவற் குரிய " என்பது அதன் இலக்கணம்.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பவை ஈரசைச் சீர்கள். இச்சீர்கள் நான்கு கொண்டது ஓரடி. மூன்றடிச் சுருக்கமாகவும், பாடுவோர் எண்ணம் போல் பெருகுவதாகவும் அகவல் அமையும்.

மூன்றடிச் சுருக்கத்தையும் நாற்சீர் அளவையும் வாய்ப்புப் போல் குறைத்து அதே அகவல் பா வகையில் நூல்கள் இயற்றல் மேலும் எளிமையும் இயல்பும் சுருக்கமும் ஆதலைக் கருதி, ஒருவகைப் பா இயற்றினர். அது நூல் இயற்றுதற்கெனச் செய்யப் பட்டது. ஆதலால், நூற்பா என்றும், சுருங்கிய சொற்களால் விரிந்த பொருள் தர நுட்பமாக அமைக்கப்பட்டது கொண்டு சூழ்த்திரம் என்றும் கூறினர். அதுவே சூத்திரம் எனலாயிற்று.

மடக்கு, திரிபு, ஓரடி (ஏகபாதம்) எனக் கடும்பா இயற்றுதலே புலமைத் தலைக்கோல் என வாழ்ந்தவர் படைப்புகளை ஒதுக்கித் தள்ளும் வகையில், வள்ளலார், பாரதியார், பாவேந்தர் முகிழ்த்தனர். அதில் திரு.வி.கவும் பங்களிப்புச் செய்தார். தென்றல் நடை கண்ட திரு.வி.க. மேடைத் தமிழும் இதழ்த் தமிழும் ஒடுங்கிக் குன்றிப் படுக்கைக் கிடப்பும் ஒளி இழப்பும் ஆகிய நிலையில், உள்ளொளி கொண்டும் நினைவுத் திறம் கொண்டும் இம் மண்ணுக்குத் காலமெல்லாம் வள்ளியராகத் திகழ வாய்த்த பா, அகவற்பாவாம்.

படுக்கையில் இருந்து எண்ணி, நினைவேட்டில் எழுதி வைத்து, தக்கார் ஒருவர் வாய்க்கும் போது எழுத்துருவாக்கி அச்சிட்ட அருமையும் பெருமையும் வாய்ந்தன சில நூல்கள். அவற்றுக்கெல்லாம் இச்செய்தி பொதுமைப் பட்டதாம்.

“படுக்கையில் கிடந்து கொண்டு சிற்சில வேளைகளில் சிறு சிறு நூல்களைப் பாக்களால் - பெரிதும் அகவற்பாவால் - சொல்லி வருகிறேன். அந்நூல்களுள் இந்நூலும் ஒன்று” என்று சித்தம் திருந்தல் அல்லது செத்துப்பிறத்தல் என்னும் நூல் முன்னுரையில் வரைகிறார். இதனை இயற்றுங்கால் அவர்தம் அகவை அறுபத்தாறு (1951)

இந்நூல் 369 அடிகளைக் கொண்ட ஓர் அகவலால் அமைந்த நூல். திருவி.க. தம் நூல்களில் பெரும்பாலானவற்றுக்கு இருபெயரிடல் வழக்கு. அவ்வழக்குக் கொண்டது இந்நூலும்.

இந்நூற்பெயர், இந்நூலின் ஓரடியில் அமைந்து சிறக்கிறது. அது,

***“சித்தம் திருந்தினன் செத்துப் பிறந்தனன்”***

என்பது (188) “சித்தம் திரும்பல் செத்துப் பிறத்தலே” என்பது மேல் தெளிவு (197). சுருங்கிய எளிய இந்நூல் கருத்தோ அருமையுடையது. பற்பல சிக்கல்களுக்குத் தீர்வு வழங்குவது. பல்வேறு வாழ்வியல் அறமணிகளை ஆங்காங்கே பதித்துச் செல்லும் அருமையது.

எடுத்துக் கொண்ட கருத்தை விளக்க ஒரு கதையைப் புனைந்து கதைபொதி பாநூல் ஆக்கிவிடுகிறார். காதை என்பது அதுவே என்பது சிலப்பதிகாரத்தால் விளங்கும். மனையறம் படுத்த காதை, அரங்கேற்று காதை முதலிய காதைப் பெயர்களையும் காதை என்பது கதைபொதி பாட்டு என்பதையும் சிலம்பில் அறியலாம்.

வெள்ளி என்பான் ஒரு மன்னன். அவன் ஆட்சி புரிந்த ஊர் சித்தம்; அவன் செய் தீமைகளால் தொழுநோய் உண்டாயது. அவன் வாழ்ந்த உருக்குச் சித்தன் ஒருவன் வந்து அவனுக்கு மருந்து தந்தான். மன்னன் நோய் அகன்றது. சித்தன் தன் கடமை முடிந்ததால் அயலூர் செல்ல விரும்பினான். வெள்ளி மன்னன் தன் குறைகளைச் சித்தனிடம் கூறி அழுதான். உன் அழுகை பாவத்தை ஒழித்தது; அழுகை பாவம் கழிக்கும் மருந்து; நாளும் நொடியும் பிறப்பும் இறப்பும் நிகழும். கேள்:

கொந்தி என்பான் கொலைஞன்; கொள்ளையன்; அவன், ஒரு புலவன் கூறிய மலைப்பொழிவுச் செய்தியை ஒரு நாள் கேட்டான். கூட்டம் முடிந்து புலவனைக் கண்டான்; அன்பன் ஆனான். பழங்கொந்தி இறந்தான்; புதுக்கொந்தி பிறந்தான். இன்னும் கேள்:

ஒரு மன்னன் குடும்பத்தில் மகன் ஒருவன் பிறந்தான். அவனால் இன்னல் பெருகியது; ஆட்சி, அமைச்சுகுடி, நாடு ஆயவற்றால் கவலை இல்லை; மகனால் கவலை பெருகியது; சிறந்த ஆசான் ஒருவன் வழியாய் மகனைத் திருத்த முயன்றான் மன்னன். மகன் ஆசானை அறைந்தான்; அவன் வருதல் ஒழிந்தான்; மகன் செய்யாதன

வெல்லாம் செய்து வந்தான். ஒருநாள் அவ்வூர்க்கு நந்தி என்னும் முனிவன் ஒருவன் நண்ணினான். அவனுரை கேட்டான் ஒருநாள்; மேலும் கேட்டான்; மனமாற்றம் உற்றான்; பொல்லான் ஒருவன் நல்லான் ஆகும் வழியும் உண்டோ? என வினாவினான் முனிவனிடம். முனிவன், "நல்லான் பிறர்குறை சொல்லான்; நல்லார் இணக்கம் வல்லமை தரும்" என்றான். பிறர்குறை பேசா அறம் பேணினான்; தன்குறை உணர்ந்தான்; சித்தம் திருந்தினான்; செத்துப் பிறந்தான். பெற்றவர் மகிழ்ந்தார். இந்நிகழ்ச்சிகளை எண்ணுக! அழுகின்ற நீ இறந்து பிறந்தாய்! புதியனாய் வாழ்க! வன்மை பிறர்க்கு நன்மை செய்வதே. "ஜெப தப தியானம் செய்தல் நன்று; செய்யும் தொண்டால் வையம் வளரும்" என்று கூறிப் புறப்படலானான் சித்தன். வெள்ளி மன்னன், 'வீடும் வேண்டேன்; பீடும் வேண்டேன்' எனச் சித்தனைத் தொடர்ந்தான். சித்தன்,

***"வீர வழிபா டென்னும் பேரால்***
***தனித்தனி மனிதனைத் தலையில் தூக்கி***
***வெறிகொண் டாடல் அறிவா காது;***
***கொள்கை வளர்க்கக் கொள்க அன்பை"***

என்று கூறி மேலும் பேசினார்.

"புது வெள்ளிப் புலமையரே, கேளும்: சிலுவையில் அறைந்த கொலைஞரிடத்தும், அருளைப் பொழிந்த பொறுமை வள்ளல், போதனை வாழ்வில் சாதனை செய்க; என்று கூறிப் பலப்பல நல்லறங்களை நவின்று சித்தன் புறப்பட்டான். வெள்ளி கதறினான். நலமார்குருவின் சொல்வழி நில்லெனச் சித்தன் கூற வெள்ளி அமைந்தான். சித்தன் சொல்வழி நின்றான்! இதுவே கதைச்சுருக்கம்.

இதில் அமைந்துள்ள அருமணிகள் சிலவற்றை எண்ணுக:

| | |
|---|---|
| ***'உயிரின் அழுகை ஒழிக்கும் பாவம்'*** | *- 34* |
| ***'முறையிட் டழுதால் கரையும் பாவம்'*** | *- 45* |
| ***'இன்ப துன்ப இருப்பிடம் பிள்ளை'*** | *- 111* |
| ***'வன்மை பிறர்க்கு நன்மை செய்வதே'*** | *- 208* |
| ***'தொண்டால் மூர்க்கம் அண்டா தொழியும்'*** | *- 288* |
| ***'மூத்த அநுபவம் மாக்கலை நிதியே'*** | *- 306* |
| ***'விளம்பர நோன்பு களங்கம் ஆகும்'*** | *- 330* |

எவை எவை பொல்லானை நல்லான் ஆக்கும் என்ற திரு.வி.க. எவை எவை பொல்லானை நல்லான் ஆக்கா என்பதை விரித்துரைத்தல் தனிப்பெருஞ் சிறப்பினதாம். (162-173)

மீள் பிறப்பு உண்டு என்பார்; இல்லை என்பார்; மீள்பிறப்பு ஏழு என்பார்; ஏழேழு என்பார்; எண்ணற்ற தென்பார்; ஒரு

பிறப்புள்ளே எழுபிறப்பென்பார்; நாளும் நாளும் இறப்பும் பிறப்பும் என்பார் "திருந்திய வாழ்வு புதுவாழ்வு: புதுப்பிறவி கொண்ட வாழ்வு " என்பது இந்நூல். இதன் சிறப்பை எண்ணுக.

**பெயரீடு:**

நாட்டின் பெயர் சித்தம்

மன்னன் பெயர் வெள்ளி

குருவன் பெயர் சித்தன்

கொலைஞன் பெயர் கொந்தி

முனிவன் பெயர் நந்தி

பிள்ளைத் தீயனுக்குப் பெயரீடு இல்லை.

இப்பெயரீடுகள் உள்ளீடு உடையவை அல்லவோ! நூற்பெயரே. நூற்பொருள் திரட்டுத்தானே!

# முதுமை உளறல்

***"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு***
***பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டா அங்கு"***

*என்னும் திருமுருகாற்றுப்படை இரண்டடிகளுக்கு 'கருமுகில் சூழல்; பெரும்புயல் தாக்கல்; கருமுகில் இரிவு; பரிதித் தோற்றம்; உலக உவப்பு" எனப் பொருள் கொள்ள வாய்க்கும்.*

*"கருமுகில் - ஏகாதிபத்தியம் ; பெரும்புயல் - புரட்சி; கருமுகில் இரிவு - ஏகாதிபத்திய முறிவு; பரிதித் தோற்றம் - சுதந்திர உதயம் ; உலக உவப்பு - பொதுமை இன்பம்" என உவம உருவகக் காட்சி யாக்கல் முதுமை உளறலா? மூதறிவுப் பேறா?*

*வறட்டு முதுமை, செருக்கு முதுமை, தந்நல முதுமை, ஒத்ததறியா முதுமை, உளறும்; உதறும்; உதைக்கும்; உருக் குலைக்கும். ஆனால் பண்பட்ட முதுமை, விரிய விரிய விரியும் பொது நலச் சுரப்பாகி உலகுக்கு வழிகாட்டும். அது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வப் பேறுறும் திருநெறிச் செல்வம் கொண்டது. அதற்கொரு சான்று இந்நூல்.*

*எனக்கொரு பயிற்சி இளமை தொட்டே உண்டு. பாடலை இரவுப் பொழுதில் விளக்குப் போடாமலே எழுதும் பயிற்சி. பின்னே விடியல் வெளிச்சத்தில் படியெடுத்துக் கொள்ளல். இதிலும் இடர் உண்டு. எழுத்துப் படிந்திராது: எழுத்தின்மேல் எழுத்து, வரிமேல் வரி இருக்கும். ஆனால் திரு.வி.க. தாம் இயற்றும் பாடல் அடிகள் எத்தனை எனினும் நெஞ்சக் களனில் சிதையாது நிறுத்தி, எழுதத் தக்கார் கிட்டியபோது சொல்லி எழுதுவித்தல் எத்தகு அருமை மிக்கது! இத்தகு முதுமைத் தொண்டு உலகுக்குப் புதுமைத் தொண்டே! இப்படிக் கிளர்ந்த நூல்களைத் தோற்றுவாயில் காட்டுகிறார் திரு.வி.க.*

*கடவுள் பற்றிய பகுதியில்,*

***"கடவுள் ஆய்வில் மேய்தல் வேண்டா***
***கடவுள் நிலையை அடைதல் நன்றே"***

*என்கிறார்.*

***"என்னைக் கிள்ளின் எனக்குத் துன்பம்***
***உம்மைக் கிள்ளின் உமக்குத் துன்பம்***
***துன்பம் விழையும் அன்பரும் உளரோ?***
***துன்பம் நீங்க வாழ்தல் இன்பம்"***

*குழந்தையும் உணரக் கூறும் முதுமை நயம் இது.*

*அம்மா அப்பாவின் பிழிவு என்ன?*

***"கைம்மா றெண்ணா அம்மா! அப்பா!"***

*வையம் எப்படி?*

***"முதுமை அறியாப் புதுமை உடையவள்"***

*பிள்ளைப் பேற்றின் பேறென்ன?*

***"இருவரை ஒருவர் ஆக்கிய காதல்***
***பிள்ளை ஆகும் 'கள்ளம்' காண்க"***

*மனிதன் நிலை என்ன?*

***"விலங்கி னின்றும் வெளியே வந்தும்***
***விலங்கை மனிதன் விலக்க வில்லை"***

*மலைநலம் என்ன?*

***"கொலைவதை நீங்க மலைமருந் தாகும்"***

*தூக்குத் தண்டனை ஆமா?*

***"தூக்குத் தண்டனைப் போக்குக் கெட்டது"***

***"காட்டு மிராண்டி நாட்களில் தோன்றிய***
***தண்டனை இந்நாள் கொள்வது தவறே"***

*கண்ணகியார்க்கு ஒரு பாராட்டு*

***"மாதவி மீதும் தீதெணாக் கண்ணகி"***

*எந்த வாழ்க்கை வேண்டும்?*

***"வறுமை செல்வம் இரண்டும் அற்ற***
***வாழ்க்கை தேவை; வாழ்த்துக அதனை"***

*ஒழுக்கம் நிலைப்பது எப்படி?*

***"ஒழுக்கம் பொதுமை ஒழுங்கில் நிலைக்கும்"***

*நட்பு என்பது என்ன?*

***"உள்ளம் உள்ளம் நள்ளல் நட்பே"***

*குற்றம் குறைக்கும் வழியாது?*

***"முறையிடும் பயிற்சி குறைக்கும் குற்றம்"***

*எதுவீரம்?*

***"குறைகள் குற்றம் முறையிடல் வீரம்"***

*சாதி மத வெறி:*

***"சாதி அன்பு நீதி அன்று"***

***"மதப்பிடி வாதம் அதட்டும் அறிவை"***

*நிறைவு*

***"முன்னோர் மொழியைப் பொன்போல் போற்றுக***
***என்றும் போற்றுக; என்றும் போற்றுக"***

*என நூல் நிறைகிறது.*

# வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்

*நூலுக்கு இடப்பட்டுள்ள இரண்டாம் பெயரே, நூல் எழுதப் பட்ட வகையைத் தெரிவிக்கும். சொல்லி எழுதப்பட்ட நூல் இது. அகவல் நடையது. 16 தலைப்புகளைக் கொண்டது. நூலின் முதற்பெயர் அதன் உள்ளுறையைச் சுட்டும் வகையால் அமைந்தது.*

*"இந்நூல் ஒருவிதத் தத்துவத்தை அடிப்படையாக் கொண்டது. அது வளர்ச்சித் தத்துவம், வளர்ச்சித் தத்துவக் கூறுகள் பலவிதத் தலைப்பில்- பலவகையில் - சுருங்கிய முறையில் -இந்நூற்கண் ஓதப்பட்டுள்ளன. அக்கூறுகளை ஒன்றுபடுத்திப் பார்த்தால் தத்துவ ஒருமைப்பாடு நன்கு புலனாகும். இந்நுட்பம் தொகுப்பில் இனிது விளங்கும்" என முன்னுரையில் இந்நூல் பொருளமைவு குறித்துக் கூறுதல் எண்ணிப் பயிலத் தக்கதாம்.*

*வளர்ச்சி இல்லாமல் வாழ்வு இல்லை. அவ்வளர்ச்சியைத் தாம் நோக்கிய வகையால் பதினாறாக்கிச் சொல்கிறார் திரு.வி.க.*

*"உலகை நோக்கினால் வளர்ச்சி இயல்கள் கடவுள் உண்மையில் நிலைக்கும்" என்பது கடவுள் பற்றியது. (1)*

*"ஆய்ந்து ஆய்ந்து கண்டால் எந்தப் பொருளும் அழிதல் இல்லை; மாறுவது இயற்கை புலப்படும்" என்பது வளர்ச்சி. (2)*

*"வளர்ச்சிக் கல்வி பயில, உள்ளம் உருகும்; பாவம் அருகும்; இருள் இரியும்; அருள் விரியும்;" இது உருகல். (3)*

*"நூல் நுண்ணியது; மன்பதைப் பொதுவை உணர்த்துவது நூல்; அன்பும் தெய்வமும் நூலே; நூலைப் பயில்க; நூலைப் பாடுக" என்பது நூல். (4)*

*"மரத்தடியாவது பரத்தடி; மாசு நீக்கி அற ஒளி பரப்பும் மரத்தடி" என்பது மரத்தடி. (5)*

*"வேட்டை தவிர்க; நாட்டு வளம் மல்கும்; வேட்டை நாட்டம் வேண்டா; உள்ளத்துள்ளே உள்ளது காடு; ஆங்குள விலங்கை ஓட்டுக" என்பது வேட்டை. (6)*

*"பற்பல கலைகள்; பற்பல மதங்கள்; போரை ஒழிக்கப் போர்; குண்டைத் தொலைக்கக் குண்டு; மூர்க்கம் வீறி மூண்டது கண்டோம்;*

*பொதுமை அறத்தைப் போற்றுக;ஒருமை நாட்டம் பெருமை கொள்ளும்" என்பது தவநெறி. (7)*

*"இயற்கை, சமயம்; அது பொதுமை வாய்ந்தது; சமயம் இன்றி அமையாதுலகம்; வள்ளுவம் சொல்லும் வழிபாடுள்ளது; கடமை புரிதல் திடவழிபாடு; முறையிட்டழுதலும் நிறை வழிபாடு; உயிரிக்கிதம் செய்தல் உயர்வழிபாடு; வெறியைக் கடந்தது அறிவுச்சமயம்; உலக மெல்லாம் ஒரு குலம் ஆக்கச் சமயம் வேண்டும்;" இது சமயம். (8)*

*"தொண்டால் மலரும் பண்டை வாழ்வு; இளமை தொட்டே வளமைத் தொண்டைப் பயிற்சி செய்க; நல்ல தொண்டைத் தந்தை ஆற்றின் மைந்தன் ஆற்றுவன்; சுற்றம், உலகம் ஏற்கும்; கலகம் விலகும்; தொண்டு செய்க" என்பது தொண்டு. (9)*

*"அன்பே தெய்வம்; அன்பே வையம்; இன்பக் காதல் அன்பின் திறவு; காதல் நெறியே இருமை கெடுத்து ஒருமை கூட்டும்; அன்பு வாழ்க" என்பது அன்பு. (10)*

*"நல்லுடல் உள்ளம் பல்கலை உலகம்; நல்லன படைக்க நல்ல எண்ண ஊற்றெழல் வேண்டும்; இயற்கை நாட்டமும் இறைமை உறவும் இடையீடின்றி நடையில் கொண்டால் நல்ல எண்ணச் செல்வம் சுரக்கும்" என்பது எண்ணம். (11)*

*"வாழ்வு வளர்வது; தேய்வது அன்று; கல்வி பயிலாச் செல்வம் மாந்தன் பெற்றான்; சுரண்டல் வாழ்வில் புரண்டான் இல்லை; பின்னே கெட்டான்; அச்சோ! மனிதன் செத்தே போனான்; கட்டிடப் படிப்பு பட்டப்படிப்பு; கூடை கூடையாய் மேடைப் பொழிவு; போதனை என் செயும்? வேதனை நீக்குமோ? குறையை முறையிட்டிறையை வேண்டின் இனிது வளரலாம்; இனிது வாழலாம்" என்பது வாழ்வு. (12)*

*"அறவோர் தொண்டின் உறவோர்; நன்னயர் அறவர்; அவருயிர் தொண்டே; அறவர் வழிஞர் பழிகள் நிகழ்த்தினர்; கலகமூட்டி உலகைக் கெடுத்தனர்; குருகுலக் கல்வி தருமே அறவரை; பகைமை அறியாத் தகைமையர் அறவர்;" என்பது அறவோர். (13)*

*"மன்னவர் ஆட்சி மன்பதை ஆட்சியாய் விளங்கும்; சிற்சில இடங்களில் கொடுங்கோல் நடுங்க வைத்தது; மன்னர் ஆட்சி பின்னம் உற்றது; கெட்டவரிடத்தும் கிட்டிய தரசே; மேடைகள் நஞ்சின் ஓடைகள் ஆயின; மாற்றம் செய்ய ஆற்றுக கடனே; மன்னர் ஆட்சி துன்ன வேண்டும்; அறவோர் மன்றம் உறவால் அமைக்கலாம்; நல்ல ஆட்சியே அல்லல் களையும்; மன்னருள் பொதுமையை இந்நிலம் ஏற்றல் உறுதி; அருளின் ஆட்சி அதுவாம்" என்பது பொதுமை. (14)*

*"உள்ளத்துள்ளே வள்ளல் உள்ளான்; அவனை நினைத்தே முறையிட்டழுதால், உருகும் பாறை; ஈரநெஞ்சில் கோரம் படியாது; பாவம் பறக்கும்; ஆவி நலமுறும்" என்பது முறையீடு. (15)*

"இம்மண் என்றோ செம்மையுற்றிருக்கும்; வளர்ச்சிக் கிடையிடை தளர்ச்சி நேர்ந்தது; வளர்ச்சிக்கு ஒழுக்க வளப்பம் தேவை; வளர்ச்சித் தத்துவம் வாளா கிடவா; தீய குணமெலாம் நல்லன ஆகும்; விளைவு பெருகும் வளமை கொழிக்கும்; ஒன்றே குலமும் ஒன்றே உலகமும் ஒன்றே தெய்வமும் என்றே வாழ்வர்; என்பினுள்ளும் அன்பு நிலவும்; இதுவே பொதுமைப் புதுமை மலர்ச்சி" என்பது தொகுப்பு. *(16)*

தலைப்பு ஒழுங்கில் வளர்ச்சியும் வாழ்வும் விளங்குதல் அறிக

❖ ❖ ❖